

4607



# இவர்தான்
# லெனின்

(கட்டுரைகள், கதைகள், குறிப்புக்கள்)

புரோகிரஸ்
பதிப்பகம்
மாஸ்கோ

**РАССКАЗЫ О В. И. ЛЕНИНЕ**

*(На тамильском языке)*

மொழிபெயர்ப்பாளர்: பூ. சோமசுந்தரம்

## பொருளடக்கம்

அ. லுனச்சார்ஸ்க்கிய்
*பாட்டாளி வர்க்கப் புரட்சியின் தலைவர்* 6

அ. கொலன்தாய்
*ஊக்கத்திலும் உளத் திண்மையிலும் மாவீரர்* 12
*லெனினது குரல்* 14

வா. வரோவ்ஸ்க்கிய்
*வி. இ. உல்யாஞெவ்-லெனின்* 22

ம. கோர்க்கிய்
*வி. இ. லெனின்* 32

வி. போன்ச்-புருயேவிச்
*விளாதீமிர் இல்யீச் நிலம் பற்றிய ஆணைப் பத்திரத்தை எழுதியது எவ்வாறு* 70
*சோவியத் அரசு இலச்சினை* 78

அலெக்ஸாந்தர் பேக்
*லெனினது கடிதம்* 84

செ. அன்தோனவ்
*கிரெம்ளினில் சந்திப்பு* 110
*பிரதிநிதி* 124

ஸாவா தன்கூலவ்
*நம்பிக்கை* 146
*நண்பர்* 170

யெ. திராப்கிஞ
*அல்யோஷா கலியோனவின் படங்கள்* 188

ஸ்தெபான் கில்
*லெனினைக் கொல்ல முயற்சி* 202

இவான் அராமிலெவ்
*பொழுதுபோக்கு* 220

லெனினைப் பற்றித் தொழிலாளர்களின் குறிப்புக்கள் 253

லெ. ரதீஷ்சேவ்
*வெற்றுக் காமிரா* 270

ஸோ. வினகிராத்ஸ்காயா
*ஆண்டுவிழா* 284

வி. இ. லெனின் பள்ளி ஆண்டுகளில் குடும்பத்தினருடன். ஸிம்பீர்ஸ்க், 1879

அடுத்த பக்கங்களில்:

வி. இ. லெனின் நான்கு வயதுப் பருவத்தில் சகோதரி ஓல்யாவுடன். ஸிம்பீர்ஸ்க், 1874

வி. இ. லெனின் பள்ளிப் படிப்பை முடித்த ஆண்டில். ஸிம்பீர்ஸ்க், 1887









# அ. லுனச்சார்ஸ்க்கிய்

அ. வ. லுனச்சார்ஸ்க்கிய் (1875-1933)—அகாதமீஷியன், சோவியத் பண்பாட்டுத் துறையில் சிறந்த செயலாற்றியவர். தமது 17வது வயதில் சோஷல்-டெமாக்ரடிக் ஸ்தாபனத்தில் சேர்ந்தார். ''வ்பெர்யோத்'' (முன்னே), ''புரோலித்தாரிய்'' (பாட்டாளி) என்னும் போல்ஷெவிக் செய்தித்தாள்களில் வி. இ. லெனினது தலைமையில் உடனுழைத்தார். அக்டோபர்ப் புரட்சியின் வெற்றிக்குப் பின் ருஷ்ய சோவியத் கூட்டாட்சி சோஷலிஸக் குடியரசின் கல்வித்துறை மக்கள் கமிஸாராகப் பல ஆண்டுகள் பதவி வகித்தார்.

லுனச்சார்ஸ்க்கிய் தலைசிறந்த சொற்பொழிவாளர், கட்டுரையாளர். ருஷ்ய, மேற்கு ஐரோப்பிய இலக்கிய வரலாற்று ஆசிரியர். பல நாடக நூல்களும் சோவியத் இலக்கியம் பற்றிய சிறந்த விமர்சன நூல்களும் இயற்றியவர்.

வி. இ. லெனினும் அ. வ. லுனச்சார்ஸ்க்கியும் ''விடுதலை பெற்ற உழைப்பு'' என்ற நினைவுச் சின்னத்துக்குக் கடைகால் நாட்டிய பின் தோழர்கள் குழுவில். மாஸ்கோ, 1920, மே 1

# பாட்டாளி வர்க்கப் புரட்சியின் தலைவர்

வரலாற்றை ஆக்குபவர்கள் மாபெரும் தனி நபர்களே, அதிலும் முதன்மையாக அதிகாரப் பதவியில் உள்ள அரசர்களும் மந்திரிகளுமே என்ற கருத்தை, திரளான பாமர மக்கள் போலவே ஆதர்சவாதி வரலாற்று அறிஞர்களும் ஆதரித்து வந்தார்கள், ஆதரித்து வருகிறார்கள். கீழிருந்து அதிகாரத்தின் உச்சத்துக்கு உயர்ந்துவிட்ட மாண்புமிக்க புரட்சி வீரர்கள் அவர்களுக்கு எதிர்ப்பட்டால், இந்தத் தலைவர்களின் மேதை, ஆற்றல், தந்திரம், திறமை இவையே புரட்சிக்குப் பெருமளவு காரணம் என்று கூறவும் அவர்கள் தயங்கவில்லை.

மார்க்ஸீய வரலாற்று ஆசிரியர்கள் வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு எவரது விருப்பாற்றலையும் சாராத மாபெரும் சமூக நிகழ்முறைகளையே காரணமாகக் காட்டுகிறார்கள். இந்த நிகழ்முறைகள் முடிவாகப் பார்க்கையில் வர்க்கங்களின் போராட்டத்தில் ஏற்படும் திடீர் மாற்றங்களையே பொறுத்திருக்கின்றன என்றும், வர்க்கங்களின் ஒப்பு வலிமையும் அவை அடைய விரும்பும் குறிக்கோள்களும் எந்தக் குறித்த காலத்திலும் சமூக உற்பத்தியில் அவை ஆற்றும் பங்கினால் நிர்ணயிக்கப் படுகின்றன என்றும் அவர்கள் விளக்குகிறார்கள்.

மார்க்ஸீயம் மாபெரும் தனிநபர்களுக்கு வரலாற்றில் எவ்விதப் பங்கையும் அளிக்க மறுக்கிறது, மாபெரும் தனி நபர்கள் நிலவுவதையே அது ஏற்கவில்லை என்று இந்த விளக்கம் காரணமாகச் சிலர் முடிவு கட்டிவிடுகிறார்கள்.

மார்க்ஸீயத்தின் பெயரே ஒரு மாபெரும் மனிதரின் பெயரிலிருந்து தோன்றியுள்ளது. அப்படியிருக்க, மார்க்ஸீயம் மாபெரும் மனிதர்களின் முக்கியத்துவத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் அது விசித்திரமாக இருக்கும் அல்லவா?

இல்லை, மார்க்ஸீய வரலாறும் இன்னும் சிறப்பாக மார்க்ஸீய நடைமுறையும் தனிநபர் பால் மிகுந்த கவனம் செலுத்துகின்றன. எந்த நபரையும் மிகச் சிறு பொறுப்

புள்ள பதவியில் அமர்த்துவதற்கு முன்னுல் நமது கட்சியின் மத்தியக் கமிட்டி அவரது ஆற்றல், ஒழுங்கமைப்புத் திறனின் தன்மை ஆகியவற்றின் நோக்கிலிருந்து அவருடைய தனித்தன்மையை மிக ஆழ்ந்த கவனத்துடன் ஆராய்கிறது.

மார்க்ஸீயவாதிகள் தற்செயல் நிகழ்ச்சிகளை நம்புபவர்கள் அல்ல. புரட்சியைச் செயற்கையாக உண்டாக்க முடியாது, அது தானுகவே தோன்ற வேண்டும் என்பதை நாம் அறிவோம். அதே சமயம், புரட்சி ஒழுங்கமைப்பு அற்றதாக, தாறுமாருனதாக இருக்க முடியும், அல்லது திட்டமிட்ட தடத்தில் பெருமளவுக்கு இயக்கப்படுவதாகவும், அதில் பங்கு கொள்வோர் எல்லருடையவும் அறிவினுல் இல்லாவிடினும் அதை ஒழுங்கமைக்கும் முன்னணியினரின் அறிவினுல் ஒளியுறுத்தப்படுவதாகவும் இருக்க முடியும் என்பது நமக்குத் தெரியும். புரட்சிகர வர்க்கம் என்ற முறையில் பாட்டாளி வர்க்கத்தின் ஆற்றல், இதில் தான் அடங்கியுள்ளது. அதாவது அது ஒழுங்கமைப்புக்குச் சிறப்பாக இசைகிறது, தன் இடையிலிருந்து ஒழுங்கமைப்பாளர்களை அதிக எளிதாகத் தோற்றுவிக்கிறது. உதாரணமாகக் குடியானவர்களிலிருந்து பாட்டாளி வர்க்கத்தைத் தனிப்பிரித்துக் காட்டுவது இந்த ஆற்றல் தான்.

பாட்டாளி வர்க்கமே ஒழுங்கமைக்கும் வர்க்கம் ஆகும். முதலில் அது நாட்டை வென்று பெற வேண்டியிருந்தது, இப்போது அதைச் சீரமைக்க வேண்டியிருக்கிறது.... இத்தகைய வேலையை ஒரு தலைமை அலுவலகம் இன்றி அதனுல் நிறைவேற்ற முடியாது. எல்லாப் புறங்களிலுமிருந்து வரும் விவரங்களை ஒன்று சேர்ப்பதும் பரஸ்பரம் இசைவுள்ள உத்தரவுகளை எல்லாப்புறங்களுக்கும் அனுப்புவதும் இந்த அலுவலகத்தின் பணி. எல்லா மிக மதிப்புள்ள அனுபவங்களும் இங்கே திரட்டப்படும். செயல்படுத்தப்பட வேண்டிய திட்டம் இங்கே தெளிவாக வரையறுக்கப்படும். இன்னும் விவரமாகப் பார்த்தால், தவிர்க்க

இயலாதவாறு பல பணியாளர்கள் கொண்ட இந்த அலுவலகத்தை முழுமையாக முறைப்படுத்துவதற்கு ஒன்றிணைக்கும் அறிவும் ஒன்றிணைக்கும் உளத்திண்மையும் தேவை. இத்தகைய அறிவுக்குச் சட்டபூர்வமான அதிகாரம் எதுவும், அரசன் அல்லது சர்வாதிகாரிக்கு உள்ளது போன்ற அதிகாரம் எதுவும் இராது. ஆனால் வளமான அனுபவம், தன்னடக்கம், ஊடுருவி நோக்கும் அறிவுக் கூர்மை ஆகியவை காரணமாகக் கிடைத்துள்ள மதிப்பு அதற்கு இருக்கும்....

மக்களது புரட்சி அதுவரை ஆட்சி அதிகாரத்திலிருந்து பிரித்து ஒதுக்கப்பட்டிருந்த ஜன சமுதாயத்தின் பெருத்த படிவுகளை மேல் மட்டத்துக்குக் கொண்டுவருகிறது. இந்த மக்களுக்கிடையே உயர் மேதை வாய்ந்த குறித்த தொகை நபர்கள் தேர்வு முறையில் மேல் வருவார்கள் என்று இயல்பாகவே எதிர்பார்க்கலாம்.

இத்துடன், புரட்சி இயக்கம் இன்னும் மறைமுகமாகவே இருக்கும்போது, அதற்குத் தலைமை வகிப்பவர்கள் மிகச் சிறந்த செயல்முறையான, வெல்ல முடியாத துணிவு வாய்ந்தவர்கள்; மறைமுக நடவடிக்கைகள், கடும் போராட்டம் என்னும் கண்டிப்பான பள்ளியில் பயின்று கீழிருந்து மேலே உயர்ந்தவர்கள் என்பதையும் சேர்த்துக் கொண்டீர்களானால், விரிவான புரட்சி பெருத்த தலைவர்களைத் தோற்றுவிக்காமல் ஏன் இருக்க முடியாது என்பதற்கு உரிய விளக்கம் உங்களுக்குக் கிடைத்து விடும்.

ருஷ்யாவில் நடந்த சமூகப் புரட்சி போன்று அவ்வளவு விரிந்து பரந்த, அவ்வளவு நீண்ட காலப் போராட்டத்தின் மூலம் முன்னேற்பாடு செய்யப்பட்ட புரட்சி எதையும் உலகம் கண்டதில்லை.... எனவே, இத்தகைய புரட்சிக்கு, உயர்ந்த அரசியல் மேதையும் அசாதாரண உறுதி வாய்ந்த இயல்பும் கொண்டவர்கள் தலைமை தாங்குவார்கள் என்பதை முன்னுரைக்க முடிந்திருக்கும்.

நமது கட்சியின் தலைவராக ஒரு மாண்புயர் மனிதர் விளங்குவது தற்செயல் அல்ல. இது இவ்வாறு நிகழ்ந்தே தீர வேண்டியிருந்தது. அவரது மேதைகளின் பெருமை யும் அவரது விருப்பாற்றலின் அசையா உறுதியும் நமது புரட்சியின் விரிவையும் பேரளவையும், சிறப்பாக அதன் பிரதான இயக்கு சக்தியான தொழிலாளி வர்க்கத்தின் முன்கண்டறியாப் பண்புகளையுமே பிரதிபலிக்கின்றன.

கிரெம்ளினில் நடந்த கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் முதலாவது காங்கிரஸ் தலைமைக்குழுவில் வி. இ. லெனின். 1919, மார்ச்


ДА ЗДРАВСТВУЕТ III- ИНТЕРНАЦИ
Es lebe die III Internatio
VIVE LA IIIME JNTERNATION
LONG LIVE THE IIIrd INTERNAT



# அ. கொலன்தாய்

அலெக்ஸாந்திரா கொலன்தாய் (1872-1952) — சோவியத் அரசாங்க தூதர். புரட்சி இயக்கத்தில் அவர் 1890க்களில் சேர்ந்தார். 1917 அக்டோபர்ப் போராட்டங்களில் ஊக்கத்துடன் பங்காற்றினர். வி. இ. லெனினை நன்கு அறிந்திருந்தார்.

புரட்சிக்குப் பிறகு அவர் அரசாங்கச் சமூக இன்ஷூரன்ஸ் மக்கள் கமிஸாராகவும், கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் சர்வதேச மாதர் அலுவலகத்தின் செயலாளராகவும், நார்வே, மெக்ஸிக்கோ, ஸ்வீடன் ஆகிய நாடுகளில் சோவியத் அரசாங்க தூதராகவும் பணியாற்றினர்.

# ஊக்கத்திலும்
# உளத் திண்மையிலும்
# மாவீரர்

சில மனிதர்கள் இருக்கிறார்கள், திடீர் விபத்து நிறைந்த பெருமாற்றம் உருவாகும் போது தோன்றி ஒரு யுகம் முழுவதன் மீதும் தங்களது சுவட்டைப் பதித்துச் செல்கிறார்கள் அவர்கள். மனித குல வரலாற்றில் இத்தகையோர் வெகு சிலரே. ஊக்கத்திலும் உளத்திண்மையிலும் மாவீரர்களான இவர்களில் ஒருவர் விளாதீமிர் இல்யீச் லெனின்....

வரலாற்றின் இத்தகைய மாவீரர்கள் எவ்வளவுதான் விறல் மிக்கவர்கள் ஆயினும் அவர்களிடம் உள்ள குறுகிய தனித்தன்மைகள் யாவும் அவர்களது உருவகத் தன்மையில், அவர்களால் மூர்த்தீகரிக்கப்படும் ஒன்று திரண்ட பொதுக் கொள்கையில் கலந்து கரைந்துவிடுகின்றன. அதே யுகத்தைச் சேர்ந்த மக்களுக்கு உரிய குணங்கள், குறைகள், விழைவுகள் ஆகியவற்றின் பொது அளவுகள் அவர்களுக்குப் பொருந்த மாட்டா. முக்கியமானவை விளாதீமிர் இல்யீச் லெனினது சொந்த இயல்புகளும் குணங்களும் அல்ல, அவர் எதை உருவகப்படுத்துகிறாரோ அதுதான் முக்கியமானது.... புரட்சியில் எவையெல்லாம் உளத்திண்மையும் விறலும் நிர்த்தாட்சிண்ணியமான அழிவுத் திறனும் விடா முயற்சியுள்ள படைப்பு ஆற்றலும் வாய்ந்தவையோ அவற்றை எல்லாம் அவர் குவிமுனையில் போன்று தமக்குள் ஒருங்கு திரட்டிக்கொண்டுவிட்டார். தொழிலாளர் புரட்சி என்னும் தூய்மைப்படுத்தும் சூறாவளியால் கொண்டுவரப்பட்டவற்றை உயர்வாக மதிப்பவர்கள் எல்லோருக்கும் அதன் உருவகமும் பருவடிவுமாக விளங்கும் விளாதீமிர் இல்யீச் லெனின் உயர் மதிப்புக்கும் அன்புக்கும் உரியவர்.

# லெனினது குரல்

ஏகாதிபத்தியப் போர் 1914ம் ஆண்டில் தொடங்கி விட்டது.

இரண்டாவது கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனல் மார்க்ஸின் கட்டளைகளைப் புறக்கணித்து, தொழிலாளி வர்க்க நலன்களைக் காட்டிக்கொடுத்துவிட்டது. இரண்டாவது கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் இயக்கு சக்தியான ஜெர்மன் சோஷல்-டெமாக்ரடிக் கட்சி தனது சந்தர்ப்பவாத உள்ளியல்பை வெளிப்படுத்திவிட்டது. தனது நாட்டின் ஆளும் பூர்ஷ்வா வர்க்கத்துடன் அது ஒத்துழைத்தது. வர்க்கங்களுக்கிடையே சமாதானம் நிலவ வேண்டும் என்ற போக்கை முழுமையாக மேற்கொண்டுவிட்டது.

புரட்சிகர வர்க்கப் போராட்டத்தை ஜெர்மன் சோஷல்-டெமாக்ரடிக் கட்சி வெட்கக்கேடான முறையில் கைவிட்ட நாளை நான் நேர்முகமாகக் கண்டு அனுபவித்தேன். 1914 ஆகஸ்டு 4ந் தேதி நான் ஜெர்மன் பாராளுமன்றத்தில் இருந்தேன். ஜெர்மன் சோஷல்-டெமாக்ரடிக் கட்சித் தலைவர்களின் வீழ்ச்சி என்னும் அருவருக்கத்தக்க காட்சி, யுத்த பட்ஜெட்டுக்கு ஆதரவாக அவர்களது வாக்களிப்பு, பெத்மன்-ஹோல்வெக் சர்க்காரை ஆதரிப்பதாக அவர்கள் உறுதிமொழி கொடுத்தது—எல்லாம் என் முன்னர் நிகழ்ந்தன.

ஏகாதிபத்திய யுத்தத்தின் கரிப்புகை பலரது மூளைகளை மங்கச் செய்துவிட்டது. நிலைமை எந்த அளவுக்குப் போய்விட்டது என்றால் சமரசப் போக்கு, சந்தர்ப்பவாதம் என்னும் உள மயக்கம் அரசியல் காரணங்களுக்காகத் தாய்நாட்டுக்கு வெளியே இருந்த சில ருஷ்யர்களையும் ஆட்கொண்டுவிட்டது. தங்களது அரசியல் பாவங்களுக்காகப் பச்சாத்தாபம் கொண்டு, இரண்டாம் நிக்கொலாய், அவனது கொத்தடிமைகள் ஆகியோரின் கொள்கைக்கு ஆதரவு அளிப்பதன் மூலம் ஜாராட்சித் தாய்நாட்டுக்குத் தொண்டு செய்யும் நோக்கத்துடன் அவர்கள் ருஷ்யாவுக்கு விரைந்தார்கள்.

நான் அச்சமும் மனச்சோர்வும் கொண்டு உழன்றேன். எல்லாம் பாழாகிவிட்டன என்று எனக்குத் தோன்றியது. சூழ்நிலை மூச்சு முட்டச் செய்வதாகவும் நம்பிக்கைக்கு இடமற்றதாகவும் இருந்தது. என் எதிரே ஒரு சுவர் எழும்பிவிட்டது போலவும் மேலே செல்ல வழி இல்லை போலவும் பிரமை உண்டாயிற்று. லீப்க்னெஹ்ட்டின் உதவியால் நான் ஜெர்மனியிலிருந்து வெளியேறி ஸ்டாக்ஹோம் சேர்ந்தேன். உலக இரத்தக் களரியை எதிர்ப்பதற்கு இரண்டாவது கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலைத் தூண்டி ஊக்க முடியும் என்று நான் இன்னும் நம்பினேன். ஆனால் எங்கள் கொள்கைகள் எத்தகையவையாக இருக்க வேண்டும், எதை ஆதாரமாகக் கொள்ள வேண்டும் என்பது எனக்கோ மற்றவர்களுக்கோ தெரியவில்லை. திக்குத் தெரியாத காட்டில் போல நாங்கள் வழி கெட்டு அலைந்தோம்.

ஒரே குழப்பமும் இரண்டாவது கம்யூனிஸ்ட் இன்டர் நேஷனலின் வீழ்ச்சியும் நிகழ்ந்த அந்தச் சமயத்தில், வர்க்க ஒற்றுமைக்குப் புகழ்பாடிய பூர்ஷ்வா முதலாளித்துவக் கட்சிகளின் எக்களிப்பு ஆரவாரத்துக்குஇடையே ஆர்த்தது லெனினின் இடிக் குரல். உலகு அனைத்துக்கும் எதிராகத் தன்னந்தனியே நின்று அவர் ஏகாதிபத்திய யுத்தத்தை நிர்த்தாட்சிண்ணியமாகப் பகுத்தாய்ந்து, அதன் உள்ளியல்பை உள்ளங்கை நெல்லிக்கனிபோலத் துலக்கமாக அம்பலப்படுத்தினர். இதை விட முக்கியமாக, இந்த யுத்தத்தை உள்நாட்டுப் போராகவும் புரட்சியாகவும் மாற்றுவதற்கான வழி துறைகளை அவர் தெளிவாகக் கோடிட்டுக் காட்டினர். அமைதியை விரும்புபவர்கள் சந்தர்ப்பவாதத்தின்மீது போர் தொடுக்க வேண்டும், சொந்த நாட்டு பூர்ஷ்வா வர்க்கத்துடன் சமரசம் செய்து கொள்ளும் போக்கை நிராகரிக்க வேண்டும் என்றார் அவர்.

கட்சியின் மைய வெளியீடான ''ஸோத்ஸியால்-டெமாக்ராத்தின்'' பல இதழ்கள் சுவிட்ஸர்லாந்திலிருந்து ஸ்டாக்ஹோம் வந்து சேர்ந்தன. யுத்தத்தைப் பற்றியும் எங்கள் கடமைகளைப் பற்றியும் லெனினது கொள்கைகள்

அவற்றில் அடங்கியிருந்தன. எனது வாழ்க்கையின் மிக முக்கியமான கணங்களில் அது ஒன்ருக விளங்கிற்று. எந்தச் சுவற்றில் நான் தலையை மோதிக் கொண்டிருந்தேனே, அதை லெனினது கட்டுரைகள் சுக்கு நூருகத் தகர்த்து விட்டன. இருள் அடர்ந்த ஆழ் கிணற்றுக்கு உள்ளிருந்து மறுபடி வெயிலொளிக்கு வந்து விட்டதுபோல எனக்குத் தோன்றியது. மேலே செல்வதற்கான பாதையை நான் கண்டேன். அது தெளிவாக, துலக்கமாக இருந்தது. நான் செய்ய வேண்டியதெல்லாம் புரட்சிகரத் தொழிலாளி வர்க்க அணிகளில் சேர்ந்து விளாதீமிர் இல்யீச் லெனினைப் பின்பற்றுவது மட்டுமே. ருஷ்யாவில் இருந்த மத்தியக் கமிட்டி பீரோ விளாதீமிர் இல்யீச் லெனினின் கருத்துக்களை ஏற்கனவே செயல்படுத்திவந்தது என்பது எங்களுக்கு வெகு காலத்துக்குப் பின்னரே தெரியவந்தது.

லெனின் மனிதகுலம் அனைத்துக்கும் மேலே நிற்கிருர், நமக்குப் புலப்படாத உண்மைகளைத் தமது அசாதாரணச் சிந்தனைத் திறன் காரணமாகவே அவரால் காண முடிகிறது என்று எனக்குத் தென்பட்டது. அவரது கங்கு கரையற்ற மன, ஆன்மிக அஞ்சாமையை அப்போது தான் நான் புரிந்துகொண்டேன். சந்தர்ப்பவாதிகளான காவுத்ஸ்க்கியும் அவரது நெருங்கிய கூட்டாளிகளும் எவ்வளவு இழிநிலையில் வீழ்ந்தார்களோ, இந்த இரத்தக் களரிக் குழப்பமனைத்திலும் திட்டவட்டமாக வழிகாட்டிய மனிதரின் அச்சமற்ற, வளையா உறுதி வாய்ந்த உருவம் அவ்வளவு மேல் நிலைக்கு உயர்ந்தது.

*1914*, அக்டோபரில் நான் விளாதீமிர் இல்யீச்சுக்கு எனது முதல் கடிதத்தை எழுதினேன். அவருடைய பதில் ஒரு ருஷ்யத் தோழர் மூலம் எனக்குக் கிடைத்தது. உடனே வேலை தொடங்கும் படியும், தொழிலாளி வர்க்கத்தின் அடுத்த போராட்டம் பற்றிய தமது கொள்கையைச் செயல்படுத்த உதவக்கூடிய ஸ்காண்டினேவிய சோஷலிஸ்டுகளுடன் தொடர்பு கொள்ளும் படியும் அதில் லெனின் எனக்குக் கட்டளை இட்டிருந்தார். அந்தச் சமயம் முதல்

நான் லெனினின் நேரான தலைமையில் வேலை செய்யலானேன்.

அதேசமயம், லெனினுக்கும் ருஷ்யாவிலிருந்த மத்தியக் கமிட்டி பீரோவுக்கும் ஸ்காண்டினேவியா வழியே நிலையான தொடர்பு ஏற்படுத்தும் பொறுப்பு எனக்கும் வேறொரு தோழருக்கும் கொடுக்கப்பட்டது. இந்தத் தொடர்பு உரிய முறையில் ஏற்படுத்தப்பட்டது, ஹாமர்ஷேல்டின் கன்சர்வடிவ் சர்க்கார் ''போல்ஷெவிக் மைய நிலையத்தை'' மூடிவிடத் தீர்மானிக்கும் வரை தொடர்ந்து இயங்கியது. நான் கைது செய்யப்பட்டு குங்ஸ்ஹோல்மன் என்னும் இடத்தில் சிறைவைக்கப்பட்டேன். பின்னர் ஸ்வீடனிலிருந்து வெளியேற்றப்பட்டேன். சில நண்பர்களின் உதவியால் நார்வேயில் ஓஸ்லோ நகரின் புறத்தே ஹோல்மென் கோலென் என்னும் வட்டாரத்தில் தங்கி வசிக்க எனக்கு வாய்த்தது. குறுங்குடாவுக்கு மேலே மலைமீதிருந்த எனது சிறு சிவப்பு வீட்டிலிருந்து எனது கேள்விகளும் உத்தரவுப்படி எழுதப்பட்ட பிரசுரங்களும் கட்டுரைகளும் விளாதீமிர் இல்யீச்சுக்கு அனுப்பப்பட்டன. நண்பர்களின் முகவரியிட்டு எனக்கு அனுப்பப்பட்ட விளாதீமிர் இல்யீச்சின் கடிதங்களை இந்த வீட்டில்தான் நான் திறந்து பார்த்தேன். இதே சிறு சிவப்பு வீட்டில்தான் நார்வே இடதுசாரியினரின் தீர்மானம் உருவாக்கப்பட்டது. இடதுசாரி ஸிம்மெர்வால்டை ஆதரிக்கும் இந்தத் தீர்மானம் லெனினால் அங்கீகரிக்கப்பட்டது.

அந்த ஆண்டுகளில் நான் விளாதீமிர் இல்யீச்சைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் அவர் எனக்கு வெறும் மனிதராக அல்ல, மனித குலத்தின் ஆயிரமாண்டுக்காலச் சமூக-பொருளாதாரப் படிவுகளைப் பெயர்த்துத் தள்ளும் இயற்கை விண்வெளி ஆற்றலின் உருவமாகவே என் கற்பனையில் காட்சி அளித்தார். சமூக உறவுகளில் யாவற்றிலும் பெரிய புரட்சிக்கு, புதிய கொள்கைகளின் அடிப்படையில் சமூகத்தை மாற்றி அமைப்பதற்கு உரிய திட்டம் முழுமையடைந்து வரையறுக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

ஏகாதிபத்தியப் போர் மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. அது மட்டுமல்ல, லெனினது முயற்சியாலும் சமூகத்தின் சமுதாய அமைப்பில் பிளவுகள் ஏற்படத் தொடங்கிவிட்டன.... இரண்டாவது கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனல் துணுக்குகளாகச்சிதறிவிட்டது. எனினும் லெனினை மையமாகக் கொண்டு புதிய, பசிய முளைகள் கிளம்பலாயின. இந்தக் காரணத்தால் தான், பழிகேடு அடைந்த இரண்டாவது கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலிலிருந்து புரட்சி மனப்பான்மை கொண்ட சோஷலிஸ்ட் இளைஞர்களைத் தேடிப் பொறுக்கி இடதுசாரி ஸிம்மெர்வால்டைச் சுற்றி அணிதிரட்டுமாறு 1915லும் 1916லும் லெனின் எனக்கு உத்தரவிட்ட போது, இந்த வேலை எதிர்பார்த்ததைக் காட்டிலும் எவ்வளவோ எளிதாக எனக்குப் பட்டது.

ஏகாதிபத்திய யுத்தத்தை எதிர்த்துப் போராடுவதற்கும் இடதுசாரி ஸிம்மெர்வால்டின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு ஆதரவு அளிப்பதற்கும் போஸ்டனிலிருந்து ஸான்பிரான்ஸிஸ்கோ வரையிலும் பிலடேல்பியாவிலிருந்து ஸீட்டல் வரையிலும் சக்திகளைத் திரட்டும் பொருட்டு நான் அட்லான்டிக் மாகடலை இரண்டு தடவை கடக்க நேர்ந்தது.

கிரெம்ளினில் உள்ள தமது அலுவலறையில் புத்தக அலமாரி அருகே வி. இ. லெனின். மாஸ்கோ, 1918, அக்டோபர்





# வா. வரோவ்ஸ்க்கிய்

வாத்ஸ்லாவ் வரோவ்ஸ்க்கிய் (1871-1923)— தேர்ந்த புரட்சிவீரர், போல்ஷெவிக் கட்சியின் பிரபல உறுப்பினர், சோவியத் அரசாங்க தூதர், கட்டுரையாளர், இலக்கிய விமர்சகர்.

1890க்களின் முடிவில் அவர் புரட்சி இயக்கத்தில் சேர்ந்து பங்காற்றலானுர். ''இஸ்க்ரா'' (தீப்பொறி) என்ற செய்தித்தாளுக்கு விஷயதானம் செய்தார். லெனினது நம்பகமான துணேவராக விளங்கினுர். அக்டோபர்ப் புரட்சிக்குப் பின் ஸ்காண்டினேவிய நாடுகளிலும் அப்புறம் இத்தாலியிலும் பிற தேசங்களிலும் ருஷ்ய சோவியத் கூட்டாட்சி சோஷலிஸ்ட் குடியரசின் முழு அதிகாரம் பெற்ற பிரதிநிதியாகப் பணியாற்றினுர். ருஷ்யப் பேரிலக்கிய நூல்களேயும் மக்ஸீம் கோர்க்கியின் படைப்புக்களேயும் பற்றிச் சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளும் அழகுக்கலே பற்றிய சித்தாந்த நூல்களும் எழுதியுள்ளார்.

# வி.இ. உல்யாநொவ்-லெனின்

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திடீர் மாற்றங்கள் நிகழும் மாண்புமிக்க காலக்கட்டங்கள், அந்தக் காலத்தின் உணர்வே உருவானவர்கள் போன்ற மனிதர்களைத் தோற்றுவிக்கின்றன. போராடி முன்னேறி வாழும் உரிமையை வென்று கைப்பற்றிக்கொள்ளும் புதிய, வருங்கால, உயரிய தத்துவத்தின் குவிமுனைகளாகவும் அதை எடுத்துச் செல்பவர்களாகவும் இவர்கள் விளங்குகிறார்கள். நமது காலக்கட்டத்தில், முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்துக்கு மாறும் இந்தத் திருப்பத்தில் இத்தகைய மனிதராகத் திகழ்கிறார் விளாதீமிர் இல்யீச் உல்யானொவ்-லெனின்.

அவர் ஒரு கற்பனை மரம் போன்றவர். அது தனது வலிமை மிக்க வேர்களை ருஷ்யாவின் உழைப்பாளி மக்களிடையே ஆழச் செலுத்தியுள்ளது. அதன் முடி முகில்களுக்கு அப்பாலுள்ள தெளிந்த வானத்தில் சென்றிருக்கிறது. ஆயிரமாண்டுகளாக மனிதகுலம் திரட்டிச் சேர்த்துள்ள விஞ்ஞான, பண்பாட்டுச் செல்வங்கள் அங்கே செறிந்திருக்கின்றன. இந்தச் செல்வங்களின் பூசாரிகளும் காவலர்களும் கலவரம் அடையுமாறு, அது அவற்றை மரியாதையோ சடங்கோ இன்றி கீழே, தனது வேர்களுக்கு உணவூட்டும் மக்கள் திரளிடம் கொண்டு செல்கிறது. மாற்றாக, இந்தப் பூசாரிகளும் காவலர்களும் இன்னும் அதிகக் கலவரம் அடையும்படி அவர்களது நீல மணிவண்ண வானகத்தில் பாட்டாளி மக்களின் துணிவுள்ள, அதிகார தோரணையான கோரிக்கைகளை வீசுகிறது.

அவரது பெயர் ருஷ்யாவிலோ ஐரோப்பாவிலோ மட்டும் அல்ல, உலகம் முழுவதிலுமே தொழிலாளி வர்க்க விடுதலையின் சின்னமாக விளங்குகிறது என்றால் ஆச்சரியமில்லை. உலகின் உழைப்பாளி மக்களது கோடிக்கணக்கான பார்வைகளும் எண்ணங்களும் உணர்ச்சிகளும், கிரெம்ளினின் எந்த மூலையில் கோடானுகோடி மக்களின் இந்த எண்ணங்களும் உணர்ச்சிகளும் ஒரு தனி மனிதருடைய அறிவாலும் விருப்பாற்றலாலும் மக்கள் திரளின் போராட்ட

கோஷங்களாக, விறல் மிக்க இயக்கங்களின் வழிகாட்டும் தாரகைகளாக மர்ம முறையில் மாற்றப்படுகின்றனவோ, அந்த மூலையையே நோக்கிச் செல்கின்றன என்ருல் அதில் வியப்பில்லை.

தெரிந்தெடுக்கப்பட்ட இந்த மனிதருக்குள் எத்தகைய சக்தி மறைந்திருக்க வேண்டும்! அவரைத் தங்களது நம்பகமான தலைவராக ஏற்றுக்கொண்டிருப்பவர்கள் அவரை எவ்வளவு அருமையாக மதித்து நேசிக்க வேண்டும்!

மிகப் பெரிய சிந்தனை, விறல்மிக்க விருப்பாற்றல், மாபெரும் உணர்ச்சி ஆகியவை ஒரு மனிதரிடம் இதை விட முழுமையாக ஒன்று சேர்ந்திருப்பதைக் கற்பனை செய்வது கடினம். விளாதீமிர் இல்யீச் ஒரே பாளத்திலிருந்து, பிளவு ஒன்றுகூட இன்றி, முற்ருகச் செதுக்கி உருவாக்கப்பட்டவர் போன்றவர். ஒரே ஒரு பெரிய பொது நோக்கிற்குப் பொருந்தும் வகையில் அவரிடம் எல்லாம் ஒருமுனைப்படுத்தப்பட்டிருக்கின்றன. பாட்டாளி மக்களின் குறிக்கோளுக்குத் தொண்டு செய்வதும் அவர்களை சோஷலிஸத்துக்குச் செல்லும் பாதையில் வழிநடத்துவதுமே அந்தப் பொது நோக்கு. அவரை எந்தப் புறத்திலிருந்து அணுகினுலும் சரியே, வேறு அக்கறைகளுக்கு இடமே இல்லாதபடி அவரை முழுமையாக ஆட்கொண்டிருக்கும் ஒரே ஒரு மாட்சி மிக்க கருத்தையே எப்போதும் எதிர்ப்படுவீர்கள்.

விளாதீமிர் இல்யீச்சின் அறிவு பெருத்த சித்தாந்த நுட்பம் வாய்ந்தது. ஆனுல் முக்கியமானது என்னவென்ருல் அறிவாராய்ச்சியையே தொழிலாகக் கொண்டவர்கள் போல அவர் சித்தாந்தத்தைத் தன்னிறைவு உள்ளதாக ஒருபோதும் மதித்ததில்லை. பாட்டாளி வர்க்கம் எதில் வாழ்கிறதோ, எதனுடன் போராடுகிறதோ, எதை மாற்றி அமைக்க ஆர்வத்துடன் முயல்கிறதோ, அந்த உலகை அறிந்து உணர்வதற்கான சாதனமாகவே அவர் சித்தாந்தத்தை எப்போதும் கருதிவந்திருக்கிருர். சித்தாந்தக் கருத்துக்களை விறல்மிக்க புரட்சிகர வர்க்கத்தின்

நடைமுறைச் செயல்களுடன் நெருக்கமாக இணைக்கும் இந்தத் திறன்தான் லெனினது கருத்துக்களுக்குச் சிறப்பான கூர்மையையும் குறிதவறுமையையும் அளிக்கிறது. பார்வைக்கு அருவத் தன்மை கொண்டவை போலத் தோன்றும் எல்லாவகை வரையறுப்புக்களிலிருந்தும் போர்க் கருவியை வடித்தெடுத்து அதைக் கொண்டு எதிரியைத் தோற்கடிக்க இவற்ருல்தான் அவருக்கு முடிகிறது. இங்கே துலக்கமாகச் செயல்படுவது வர்க்கத்துக்கும் அதன் தத்துவாசிரியருக்கும் இடையே நிலவும் உளத் தொடர்பு. உதயமாகிக் கொண்டிருக்கும் இளம் புரட்சிகர வர்க்கத்தின் தத்துவாசிரியன் அதை உளப் படைப்புக்குத் தூண்டி ஊக்கும் வற்ருத ஊற்ருகப் பயன்படுத்திக்கொள்வது இந்தத் தொடர்பு காரணமாகவே சாத்தியம் ஆகிறது.

லெனினது சித்தாந்தச் சிந்தனையின் விவகாரரீதியான, ஆழ்ந்த உயிரோட்டமுள்ள இந்தத் தன்மை காரணமாக, பொது மக்கள் திரளுடன் அவர் கொண்டுள்ள இந்த உளத் தொடர்பு காரணமாக, வியப்பூட்டும் அரசியல் முன்னேக்கு மேதை, அதாவது, அணித்தான வருங்காலத்தில் வரலாற்று நிகழ்ச்சிகளின் போக்கை அனுமானிக்கவும், இயக்கத்தின் வருங்கால வாய்ப்புக்களைத் தீர்மானிக்கவும், வருங்காலத்தின் ''உய்த்தறிய முடியாத நிகழ்ச்சிக் கோவைகளை'' ஊகிக்கவும் உள்ள திறன் அவருக்கு வாய்த்திருக்கிறது. பார்வைக் கோபுரத்தின் மேலுள்ள காவலன் போன்று அணுகிவரும் நிகழ்ச்சிகளை அவர் தொலைவிலிருந்தே கண்டுகொண்டு தமது சக ஊழியர்களுக்கு அவற்றைப் பற்றி முன்னரே எச்சரிக்கை கொடுத்து விடுகிருர்.

வரலாற்றை முன்னறியும் இந்த மேதையும், பொது மக்கள் திரளின் எண்ணங்களையும் விழைவுகளையும் உய்த்துணரும் ஆழ்ந்த இயற்கைத் திறனும் பெற்றுள்ள விளாதீமிர் இல்யீச் லெனின் இயல்பாகவே சுடர்விடும் செயல்முறை ராஜதந்திரியாக விளங்குகிருர். குறித்த சந்தர்ப்பத்தின் தேவைகளை ஏதேனும் ஒரு தெளிவான கோஷத்தில் அடக்கிவிடுவதிலும், அப்போதைய அவசியக் கோரிக்கை

களைச் சமாளிப்பதற்கு ஏற்ற எளிய, விளங்கக் கூடிய கடமைகளைப் பொதுமக்கள் திரளுக்கு முன்வைப்பதிலும் அவர் மிகக் கைதேர்ந்தவர். அனுபவசாலியான கப்ப லோட்டி சுக்கானை லாகவமாகத் திருப்பிக் கப்பலை அபாய கரமான நீர்க்கீழ்ப் பாறைகள் செறிந்த கடல்வழியில் பத்திரமாகச் செலுத்துவது போன்று அவர் இந்த விவகார ரீதியான கோஷங்களாலும் கடமைகளாலும் மக்களின் எதேச்சையான இயக்கத்தை வழிநடத்துகிருர். அதே சம யம் இந்த நடவடிக்கைகளை மக்கள் எவ்வாறு வரவேற் கிருர்கள் என்பதையும் இயக்கத்தின் தனித் தனிக் கட்டங் கள் பொதுப் போக்குக்களுக்கும் நோக்கங்களுக்கும் எவ் வளவு தூரம் இசைகின்றன என்பதையும் அவர் கூர்ந்து கண்காணிக்கிருர். ஒரு கோஷம் எதிர்பார்த்த பயனை விளைவிக்கவில்லை என்ருலோ, அல்லது அதன் வேலையைச் செய்து முடித்துவிட்டது என்ருலோ, கப்பலோட்டி சுக்கானைச் சட்டென்று திறமையுடன் மீண்டும் திருப்பி, மக்களது சிந்தனையையும் விருப்பத்தையும் வேறு புறம் செலுத்துவதற்கேற்ற புதிய கோஷத்தை உருவாக்கிவிடு கிருர். சுக்கானின் இந்தத் துணிகரமான திருப்பங்கள் சில வேளைகளில் மிகவும் எதிர்பாராதவையாக இருப்பதால் லெனினது நெருங்கிய கூட்டாளிகள்கூட அவற்றைப் பாராட்டுவதா எதிர்ப்பதா என்று தெரியாமல் திகைக் கிருர்கள். நமது நற்காலம், யதார்த்த நிகழ்ச்சிகள் எல்லாவிதச் சந்தேகங்களையும் போக்கி விட்டன.

லெனின் சுக்கானைக் கைப்பற்றிக் கொண்டுவிட்ட எதேச்சாதிகாரி, வேறு எவரையும் அவர் மதிப்பதில்லை என்ற எண்ணம் எழக்கூடும். இத்தகைய எண்ணம் அடிப் படையிலேயே தவருனது. மக்கள் மீது மட்டுமே அல்ல— அதைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு அதிக முக்கியமாக— மக்களது இதயங்கள் மீது இத்தகைய பெருத்த செல் வாக்கு வரலாற்ருல் அளிக்கப் பெற்றிருக்கும் அதிர்ஷ்ட சாலிகளில் வேறு எவருமே அரசாங்க இயந்திரத்தில் மனிதனது இடத்தை லெனினைப்போன்று இவ்வளவு உயர்

வாக மதித்ததில்லை. பிறரையும் அவர் தம்மைப் போலவே கருதுகிறார். மற்றவர்களால் இதைச் சில வேளைகளில் தாங்க முடிவதில்லை. ஏனென்றால் அவர் அடிக்கடி அவர்களை மிகையாக மதிப்பிட்டுவிடுகிறார். தாம் பெற்றிருப்பது போன்ற மாவீர ஆற்றலை அவர்களும் பெற்றிருப்பதாக நினைத்துவிடுகிறார். அவருடைய எதிர்பார்ப்பை நிறைவேற்ற முடியவில்லையே என அவர்கள் மனம் உளைகிறார்கள். எனினும் எந்தத் தீர்மானத்தையும், எந்த நடவடிக்கையையும், அது தமது சொந்தக் கருத்து மட்டும் அல்ல, தமது போராட்டத் துணைவர்களில் பலரது கருத்தின் வெளியீடு என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளாமல் அவர் ஒருபோதும் மேற்கொள்வதில்லை. லெனினது எண்ணங்களையும் தீர்மானங்களையும் தங்கள் அனைவரது கவலைகளும் அனுபவங்களும் எவ்வளவு தூரத்துக்குத் தூண்டி ஊக்கியிருக்கின்றன என்பதை அவரைச் சூழ்ந்திருப்பவர்களும் அடிக்கடி சந்திப்பவர்களும் கூட அறியார். மிக மிகப் பலரின் அனுபவங்களையும் தகவல்களையும் உட்குழிவுக் கண்ணாடியில் போல தம்மில் ஒருமுனைப்படுத்தவும் தமது வளமான அறிவு என்னும் சோதனைக்கூடத்தில் அவற்றைப் பொதுக் கருத்துக்களாகவும் பொது கோஷங்களாகவும் மாற்றவும் அவருக்கு உள்ள இந்த வல்லமையே அவரது அரிய திறமையாகத் திகழ்கிறது.

இந்தப் பண்புகளின் காரணமாக அவர் வறண்ட, கடுகடுத்த அரசியல்வாதியாக, உயிருள்ள மனிதர்களை வெறும் பாவைகளாகவும் சதுரங்கக் காய்களாகவும் மட்டுமே கருதுபவராக விளங்குகிறாரோ என்ற கேள்வி எழலாம். அப்படி இல்லவே இல்லை. விளாதீமிர் இல்யீச் பொது நலன்களுக்காக எவர்களுடன் சேர்ந்து உழைக்கிறாரோ, போராடுகிறாரோ அவர்கள்பால் அன்பு செலுத்துகிறார். அவர்களிடம் அவர் பெருத்த கனிவு காட்டுகிறார், அவர்களைப் பற்றிக் கவலை எடுத்துக்கொள்கிறார். அவருடைய கனிவு ஆண்மைக்குரியது, இனிப்பான சொற்களும் வெளிச் சைகைகளும் அற்றது. ஆனால் இங்கும் லெனின்

தமது இயல்புக்கு ஏற்பவே நடந்து கொள்கிறுர். ஒருவன் தனக்கு அளிக்கப்பட்டுள்ள பொறுப்பைத் தட்டிக் கழித்ததுமே, போராட்ட வீரர்களின் அணிகளிலிருந்து அவன் துரோகமாக விலகி ஓடியதுமே, லெனினைப் பொறுத்த வரையில் அவன் இறந்தவனுக்குச் சமம். கம்யூனிஸ்ட் கட்சியின் அணிகளில் சேர்ந்து பாட்டாளி வர்க்கத்தின் லட்சியத்துக்காகப் போராடுதல் — ஒரு மனிதன் பால் லெனினது உறவைத் தீர்மானிக்கும் உரைகல் இதுவே. அவர் கண்களுக்கு எது ''பிளாட்டோவைக்'' காட்டிலும் உயர்ந்ததோ, அந்த ''உண்மை'' இதுவே. லெனினுக்கே இயல்பானதும் கவர்ச்சியுள்ளதுமான சொந்த ஒழுக்கநெறியின் அடிப்படைப் பண்பை நாம் இங்கே நெருக்கமாக அணுகுகிறுேம். பொதுவகைப் பட்டது, தனிவகைப்பட்டது என்ற பேதம், பொது வாழ்க்கை, சொந்த வாழ்க்கை என்ற பாகுபாடு அவரிடம் கிடையாது. இந்த விஷயத்திலும் அவர் ஒரே பாளத்திலிருந்து செதுக்கப்பட்டவர். பொது வாழ்க்கைக்கு அவர் தம்மைச் சிறிதும் மீதமின்றி முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டுவிட்டார். தமது சொந்த வாழ்வை அதனுடன் இணைத்துப் பொருத்திக்கொண்டுவிட்டார். அவருடைய சொந்த வாழ்வு முழுவதுமே அவரது பொதுச் செயல்களின் பணிமகள். நடுத்தர வகுப்பின் மரபுவழிச் சொத்தான உள் முரண்பாடுகள், துன்பமுடிவுகள், சமரசங்கள், அல்லது இவை போன்ற வேறு விஷயங்கள் எவற்றுக்கும், அநேகப் புரட்சிகர அறிவுஜீவிகளின் வாழ்க்கைகளைத் தகர்த்துவிட்ட இத்தகைய எந்த விஷயத்துக்கும் இங்கே இடமில்லை. பகைவர்களின் அவதூறுகள்கூட எட்ட முடியாத அத்தகைய ஒழுக்கநெறிச் சிகரத்தில் லெனினை அமர்த்தியிருப்பது இந்த முழுமையே ஆகும்.

லெனினது தன்மைச் சித்திரிப்பு தருவது என்றுல் பல பல முழுத் தொகுதிகளை எழுதிக் குவிப்பது என்று பொருள் படும். ஏனெனில், மிகவும் எளிமையும் முழுமையும் வாய்ந்தவரும், அதே சமயம் மிகுந்த பல்வகைப் பண்பு

களும் சிக்கலும் கொண்டவருமான இந்த மனிதரைப்பற்றி அவ்வளவு நிறையச் சொல்ல முடியும், சொல்ல விருப்பம் உண்டாகிறது. ஆனால் இப்போது மேலோங்கி நிற்பது, கம்யூனிஸ்ட் கட்சியின் அணிகளில் அவருடன் சேர்ந்து பணியாற்றிய, பணியாற்றி வருகிற நாம் அனைவரும் இந்த மனிதரது உயர்மாண்பு பால் கொண்டுள்ள வணக்க உணர்வையும் நண்பர், போராட்டத் தோழர் என்ற முறையில் நமக்கு அவர் மேல் உள்ள அன்பையும் சில வரிகளில் வெளியிடும் விருப்பமே.

வி. இ. லெனின் காப்ரி என்னும் தீவில் மக்ஸீம் கோர்க்கியின் விருந்தினராக. இத்தாலி, 1908



# ம. கோர்க்கிய்

ருஷ்யப் புரட்சியின் தலைவர் வி. இ. லெனினும் மாபெரும் பாட்டாளி எழுத்தாளர் ம. கோர்க்கியும் முதன்முறை பீட்டர்ஸ்பர்க் நகரில் 1905ம் ஆண்டு சந்தித்தார்கள். 1907ம் ஆண்டு லண்டனில் நடந்த கட்சிக் காங்கிரஸில் கோர்க்கிய் லெனினுடன் இன்னும் நெருங்கிப் பழகி அவரை அறிந்து கொண்டார். இதையே கோர்க்கிய் தமது கட்டுரையில் விரிவாக விவரிக்கிறார். பெருத்த நட்பும் பரஸ்பர மரியாதையும் இவ்விருவரையும் பிணைத்திருந்தன. கோர்க்கியின் படைப்புக்கலையை லெனின் மிக உயர்வாக மதித்தார். ''கோர்க்கிய் மிகப் பெரிய கலை மேதை, உலகப் பாட்டாளி வர்க்க இயக்கத்துக்கு அவர் பெருத்த நன்மை செய்திருக்கிறார், செய்து வருகிறார் என்பதில் சந்தேகமில்லை'' என்று அவர் 1917ம் ஆண்டில் எழுதினார்.

ம. கோர்க்கியின் கட்டுரை சுருக்கி வெளியிடப் படுகிறது.

# வி. இ. லெனின்

## (நினைவுக் குறிப்புக்களிலிருந்து)

விளாதீமிர் லெனின் காலமாகிவிட்டார்.

''தம் காலத்துப் பெரியோர்கள் எல்லோரையும் விட அதிகத் துலக்கமாக மேதா விலாசத்தின் உருவாகத் திகழ்ந்த'' மனிதரை லெனினின் வடிவில் உலகம் இழந்துவிட்டது என்று அவருடைய பகைவர்களது முகாமில் கூடச் சிலர் நேர்மையுடன் ஒப்புக் கொள்ளுகிறார்கள்.

அவர் காலமானதுமே நான் எழுதியது துயர் நிறைந்த மனநிலையில், அவசரமாகவும் மோசமாகவும் எழுதப்பட்டது. ''நயப் பாங்கு'' காரணமாகச் சில விஷயங்களை நான் குறிப்பிட முடியவில்லை. இது முற்றிலும் புரிந்து கொள்ளக் கூடியதே என்று நம்புகிறேன். மதிநுட்பமும் விவேகமும் வாய்ந்திருந்தார் இந்த மனிதர். ''பெருத்த விவேகத்தில் பெருத்த துயரமும் அடங்கியிருக்கிறது.''

அவர் நெடுந்தொலை முன்னே நோக்கினார். 1919க்கும் 1921க்கும் இடையே சில மனிதர்களைப் பற்றிச் சிந்திக்கையிலும் உரையாடுகையிலும் சில ஆண்டுகளில் அவர்கள் எத்தகையவர்களாக இருப்பார்கள் என்பதை அடிக்கடி சரியாக முன்னுரைத்தார். அவருடைய தீர்க்கதரிசனத்தை ஏற்றுக்கொள்ள எப்போதும் விருப்பம் உண்டாகவில்லை, ஏனெனில் சிலர் விஷயத்தில் அது புண்படுத்துவதாக இருந்தது. ஆனால் துர்ப்பாக்கியவசமாக அவரது ஐயுறவு மிக்க தன்மைச் சித்திரிப்புக்களைப் பலர் மெய்ப்படுத்தி விட்டார்கள். அவரைப் பற்றிய எனது நினைவுக் குறிப்புக்கள் மோசமாக மட்டுமின்றி கோவையில்லாமல் வருந்தத்தக்க இடையீடுகளுடன் எழுதப்பட்டிருந்தன. லண்டன் காங்கிரஸிலிருந்து நான் தொடங்கியிருக்க வேண்டும். அந்த நாட்களில்தான் விளாதீமிர் இல்யீச் சிலரது சந்தேகத்தினாலும் அவநம்பிக்கையாலும் வேறு சிலரது வெளிப்படையான பகைமையாலும் அற்புதமாக ஒளியுறுத்தப்பட்டு என் முன்னே தோன்றினார்.

லண்டன் நகர்ப்புறத்தில் இருந்த நகையாடத்தக்க ஏழ்மை வாய்ந்த மரச் சர்ச்சின் வெற்றுச் சுவர்களையும்,

வறிய பள்ளிக்கூட வகுப்பறை போன்ற சிறிய, குறுகலான ஹாலையும், அதன் கூர் முகட்டுப் பலகணிகளையும் நான் இப்போதும் என் கண்ணெதிரே காண்கிறேன். வெளியிலிருந்து பார்ப்பதற்குத்தான் அந்தக் கட்டிடம் சர்ச்சு போன்றிருந்தது. உள்ளேயோ வழிபாட்டுப் பொருள்கள் எவையுமே இல்லை. உபதேசியாரின் உயரமற்ற உரை மேடை கூட வழக்கம்போல ஹாலுக்கு உள்ளே இராமல் அதன் வாயிலில் இரு கதவுகளுக்கு நடுவே அமைந்திருந்தது.

அந்த ஆண்டுக்கு முன் நான் லெனினைச் சந்தித்ததில்லை.* அவருடைய எழுத்துக்களையும் நான் வேண்டிய அளவு படித்ததில்லை. ஆனால் நான் படித்தவையும், சிறப்பாக அவரை நேரில் அறிந்த தோழர்களின் மகிழ்பொங்கும் வருணனைகளும் என்னை அவர்பால் வலிவாக ஈர்த்தன. நாங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதும் அவர் என் கையை இறுகப் பற்றிக்கொண்டு, கூரிய விழிகளால் ஆழ்ந்து ஆராய்ந்தவாறு, நெடுங்கால நண்பர் போன்ற தோரணையில் கேலியாகச் சொன்னார்:

''நீங்கள் வந்தது நல்லதே! உங்களுக்குத் தான் சண்டைகள் பிடிக்குமே? இங்கே பெருத்த சண்டை நடக்கப் போகிறது.''

லெனின் இப்படியிருப்பார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அவரிடம் எதுவோ குறை எனக்குத் தென்பட்டது. அவரது ரகர உச்சரிப்பு ஹகரம் போல ஒலித்தது. அரைக் கோட்டுக் கைத்துளைகளில் கட்டைவிரல்களை நுழைத்துக் கொண்டு நின்றார். மொத்தத்தில் எல்லா விதத்திலும் சர்வ சாதாரணமாயிருந்தார். ''தலைவருக்கு'' உரிய எதுவும் அவரிடம் காணப்படவில்லை. நான் எழுத்தாளன். சில்லறை விஷயங்களைக் கவனிப்பது தொழில் முறையில் எனது கடமை. இந்தக் கடமை வழக்கம் ஆகிவிட்டது, சில சமயங்களில் சலிப்பூட்டுகிறது.

---

*இது கோர்க்கியின் நினைவுப் பிசகு. பின்னொரு சமயத்தில் தமது பிசகை அவரே சுட்டிக்காட்டினார். அவரது முதல் சந்திப்பு பற்றிய விவரத்தை 31ம் பக்கத்தில் காண்க.

நான் கி. வ. பிளெகானவிடம் ''இட்டுச் செல்லப் பட்டதும்'', அவர் கைகளைக் கட்டிக்கொண்டு நின்ருர், வேலையால் அலுத்துப்போன பள்ளி ஆசிரியன் புதிய மாணுக்கனைப் பார்ப்பதுபோலக் கண்டிப்புடன், சலிப்பு தோன்ற என்னை நோட்டமிட்டார். ''உங்கள் திறமை யைப் போற்றுபவன் நான்'' என்ற வழக்கமான வாக்கியத் தை அவர் என்னிடம் சொன்ஞர். இதைத் தவிர என் நினைவில் நிலைக்கும்படியான எதையும் அவர் கூறவில்லை. காங்கிரஸ் நடந்த காலம் முழுவதிலும் ''மனம் விட்டுப்'' பேச வேண்டும் என்ற விருப்பம் அவருக்கோ எனக்கோ உண்டாகவே இல்லை.

ஆனுல் வழுக்கைத் தலையரும், ரகரத்தைத் தொண்டை யால் உச்சரிப்பவரும், கட்டுக்குட்டானவரும், பலமுள்ள வருமான இந்த மனிதரோ, கிரேக்க ஞானி ஸாக்ரட்டீ ஸினது போன்ற நெற்றியை ஒரு கையால் தடவிக்கொண்டு மறு கையால் என் கையை இழுத்தவாறு, வியப்பூட்டும் வகையில் ஒளி சுடர்ந்த விழிகளால் என்னைக் கனிவுடன் நோக்கி, எனது ''அன்னை'' என்ற நூலின் குறைபாடுகளைப் பற்றி அப்போதே பேசத் தொடங்கிவிட்டார். இ. ப. லதீஷ் னிக்கவிடமிருந்து இந்த நூலின் கையெழுத்துப் பிரதி யை அவர் வாங்கிப் படித்தாராம். இந்தப் புத்தகத்தை அவசரமாக எழுதியதாக நான் கூறினேன். ஆனுல் ஏன் அவசரப்பட்டேன் என்று நான் விளக்குவதற்குள் லெனின் புரிவைக் காட்டும் பாவனையில் தலையை அசைத்தவாறு தாமே அதற்கு விளக்கம் தரலானுர். நான் அவசரப்பட்டது நல்லதே ஆயிற்று என்றும், புத்தகம் அவசியமாயிருந்தது என்றும், ஏராளமான தொழிலாளர்கள் உணர்வு இன்றி, தாமாகவே உந்தப்பட்டுப் புரட்சி இயக்கத்தில் கலந்து கொண்டார்கள் என்றும், இப்போது அவர்கள் ''அன்னை'' என்ற நூலைப் படித்துப் பெரிதும் பயன்பெறுவார்கள் என்றும் அவர் சொன்ஞர்.

''மிகவும் காலத்துக்கேற்ற புத்தகம்'' என்பதே அவர் கூறிய ஒரே புகழுரை. ஆனுல் இது எனக்கு நிதி கிடைத்தது

போல் இருந்தது. பிறகு அவர் ''அன்னை'' பிற மொழிகளில் பெயர்க்கப் பட்டிருக்கிறதா, ருஷ்ய, அமெரிக்கத் தணிக்கை அதிகாரிகள் நூலை எந்த அளவுக்குச் சிதைத்திருக் கிறார்கள் என்று காரியரீதியாக விசாரித்தார். நூலா சிரியன் மீது வழக்குத் தொடுப்பதாக நிச்சயிக்கப்பட்டிருக் கிறது என்று அறிந்ததும் அவர் முதலில் முகம் சுளித் தார். அப்புறம் தலையைப் பின்னே சாய்த்து, கண்களை மூடிக்கொண்டு அசாதாரணமான முறையில் குபீரென உரக்கச் சிரித்தார். அவருடைய சிரிப்பு தொழிலாளர் களின் கவனத்தை ஈர்த்தது....

... விளாதீமிர் இல்யீச் பரபரப்புடன் உரை மேடை மேல் ஏறினார். ''தோழர்களே'' என்று பொருள்படும் ''தவாரிஷ்ஷி'' என்ற ருஷ்யச் சொல்லைக் குதலையாக ஒலித்தார். அவர் நல்ல பேச்சாளர் அல்ல என்று எனக்குத் தோன்றியது. ஆனால் நிமிட நேரத்திற்கெல்லாம் மற்ற யாவரையும் போன்றே நானும் அவருடைய சொற்பொழி வால் வசீகரிக்கப்பட்டுவிட்டேன். மிகச் சிக்கலான அரசியல் பிரச்சினைகளைப் பற்றி அவ்வளவு எளிமையுடன் பேச முடியும் என்பதை அப்போதுதான் முதன் முதலாகக் கேட்டு அறிந்தேன். இந்த மனிதர் அழகிய சொற்றொடர் களைப் புனைந்துரைக்க முயலவில்லை. ஆனால் ஒவ்வொரு சொல்லையும் உள்ளங்கை நெல்லிக்கனி போலத் துலக்க மாக முன்வைத்து, அதன் சரியான பொருளை ஆச்சரிய கரமான சுளுவுடன் வெளிக்காட்டினார். அவர் ஏற்படுத்திய அசாதாரணமான உளப்பதிவை விவரிப்பது மிகக் கடினம்.

கையை முன் நீட்டிச் சற்றே உயர்த்தி, உள்ளங்கை யால் ஒவ்வொரு சொல்லையும் நிறுப்பது போன்ற பாவனை யுடன் அவர் பேசினார். எதிர்ப்பாளர்களின் சொற்களை அலசி ஆராய்ந்தார். அவற்றுக்கு எதிராகப் பொருள் நிறைந்த வாதங்களை முன் வைத்தார். மிதவாத பூர்ஷ்வாக் களின் பின்னேயோ, அல்லது அவர்களின் அருகாகவோ கூட இல்லை, தனக்கே உரிய வழியில் முன்செல்வதற்குத்

தொழிலாளி வர்க்கம் உரிமையுள்ளது, அவ்வாறு செல்வது அதன் கடமை என்று ஆதாரங்கள் காட்டினர். இவை எல்லாமே அசாதாரணமாக இருந்தன. இவற்றை லெனின் தாமாகவே அல்ல, உண்மையில் வரலாற்றின் தூண்டுதலால் கூறியது போல் பட்டது. அவரது சொற்பொழிவின் ஒன்றித்த கட்டுக்கோப்பும் செவ்வியும் நேர்மையும் வன்மையும், உரை மேடை மீது அவர் நின்ற பாங்கு அனைத்துமே, சிறந்த கலைப்படைப்பு போன்று திகழ்ந்தன. எல்லாம் பொருத்தமாக அமைந்திருந்தன. தேவையற்றது எதுவுமே இல்லை. எவ்வித அணிகளும் இல்லை. இருந்தாலுங்கூட அவை புலப்படவில்லை. முகத்தில் இரண்டு கண்களும் கையில் ஐந்து விரல்களும் போல இந்த அணிகள் இயல்பாகவே இன்றியமையாதவையாக இருந்தன.

தமக்கு முன் பேசியவர்களைவிடக் குறைந்த நேரமே அவர் உரையாற்றினர். எனினும் அவர் விளைத்த உளப்பதிவு எவ்வளவோ அதிகம். இவ்வாறு உணர்ந்தவன் நான் ஒருவன் மட்டுமே அல்ல. எனக்குப் பின்னிருந்தவர்கள் மகிழ் பொங்கப் பின்வருமாறு கிசுகிசுத்ததைக் கேட்டேன்:

''நறுக்கு தறித்தாற்போலப் பேசுகிறார்....''

உண்மையும் அதுதான். அவருடைய ஒவ்வொரு வாதமும் தானகவே, தனக்குள் அடங்கியிருந்த பலத்தினலேயே வெளிப்பட்டது.

லெனினுடைய பேச்சு தங்களுக்குப் பிடிக்கவில்லை என்பதையும், அவரையோ தாங்கள் அறவே வெறுப்பதாகவும் மென்ஷெவிக்குகள் வெட்கமின்றிக் காட்டிக் கொண்டார்கள். தனது செயல்முறை வேலையின் எல்லா அம்சங்களையும் சரி பார்க்கும் பொருட்டு புரட்சிச் சித்தாந்தத்தின் உச்சியை எட்டிப்பிடிப்பது கட்சிக்கு இன்றியமையாதது என்று எவ்வளவுதூரம் மனதில் பதியும்படி அவர் சான்று காட்டினரோ அவ்வளவு தூரம் வஞ்சத்துடன் அவர்கள் அவர் பேச்சில் குறுக்கிட்டார்கள்.

''காங்கிரஸ் தத்துவம் பேசும் இடம் அல்ல!''

''எங்களுக்குக் கற்பிக்காதீர்கள். நாங்கள் பள்ளிப் பிள்ளைகள் அல்ல!''

கடைக்காரன்போன்ற முகத்தோற்றமுள்ள வாட்ட சாட்டமான தாடிக்காரன் ஒருவன் எல்லோரிலும் அதிகமாகக் குறுக்கிட்டான். அவன் இருக்கையிலிருந்து துள்ளி எழுந்து திக்கலுடன் கத்தினன்:

''ச்-சதிகாரர்கள்... ச்-சதி வேலை செய்கிறீர்கள்! ப்-பிளான்கிஸ்டுகள்!''

மாருக ரோஸா லக்ஸம்பர்க் லெனினை ஆதரிக்கும் பாவனையில் தலை அசைத்தாள். அடுத்து நிகழ்ந்த கூட்டம் ஒன்றில் அவள் மென்ஷெவிக்குகளிடம் மிக நன்ருகச் சொன்ஞள்:

''நீங்கள் மார்க்ஸீயத்தை ஆதரித்து நிற்கவில்லை. நீங்கள் அதன் மேல் உட்கார்ந்திருக்கிறீர்கள், படுத்துப் புரளக்கூடச் செய்கிறீர்கள்.''*

எரிச்சலும் ஏளனமும் வெறுப்பும் நிறைந்த கொடிய அனல் காற்று ஹாலில் வீசியது. நூற்றுக் கணக்கான விழிகள் பல்வேறு நோக்குகளுடன் லெனினது உருவத்தின் மீது ஒளி பாய்ச்சின. பகைமைத் தாக்குதல்கள் அவரைக் கலவரப்படுத்தியதாகத் தெரியவில்லை. அவர் ஆவேசம் பொங்க, ஆஞல் பொருளாழத்துடன், நிதானத்தை இழக்காமல் பேசினர். வெளிக்கு இந்த நிதானத்தைக் காட்டுவதற்கு அவர் எவ்வளவு பாடுபட வேண்டியிருந்தது என்பதைச் சில நாட்களுக்குப் பின் நான் அறிந்துகொண்டேன். சித்தாந்தத்தின் உச்சியிலிருந்தே கட்சியால் தனக்குள் நிலவும் கருத்து வேற்றுமைகளின் காரணங்களைத் தெளிவாகக் காண முடியும் என்ற இயல்பான எண்ணமே லெனின் பால் பகைமையைத் தூண்டிவிடுகிறது என்பதைக்

---

* இந்தச் சொற்களை மென்ஷெவிக்குகளை நோக்கிக் கூறியவர் போலந்து நாட்டு சோஷல்-டெமாக்ராட் ல. தீஸ்க்கா.

கண்டு வியப்பும் வருத்தமும் உண்டாயின. காங்கிரஸ் நடந்த ஒவ்வொரு நாளும் விளாதீமிர் இல்யீச் மேலும் மேலும் புதிய வலிமையும் அதிக உற்சாகமும் தன்னம் பிக்கையும் அடைந்துகொண்டு போவதாகவும், நாளுக்கு நாள் அவரது பேச்சுக்கள் அதிக உறுதியுடன் ஒலிப்ப தாகவும் காங்கிரஸ் உறுப்பினர்களில் போல்ஷெவிக் பகுதியினரின் தீர்மானமும் கண்டிப்பும் மிகுந்துகொண்டு போவதாகவும் எனக்குப் பட்டது. மென்ஷெவிக்குகளுக்கு எதிராக ரோஸா லக்ஸம்பர்கின் நேர்த்தியான, கூர்மை யாகத் தாக்கிய பேச்சும் எனது உள்ளத்தில் லெனினுடைய பேச்சுக்களைப் போலவே ஆழ்ந்த பதிவை ஏற்படுத்தின.

ஒழிவு கிடைக்கும் ஒவ்வொரு மணியையும் நிமிடத்தை யுங்கூட லெனின் தொழிலாளர்களுக்கு நடுவே கழித்தார். அவர்களுடைய அன்றாட வாழ்க்கை பற்றிய அற்பமான சில்லறை விவரங்களை விசாரித்தார்.

''பெண்கள் நிலைமை என்ன? வீட்டுவேலை கடுமையாக இருக்கிறதா அவர்களுக்கு? இருந்தாலும் கற்றுக்கொள் கிறார்களா, படிக்கிறார்களா?''

லெனினை முதல் தடவையாகப் பார்த்த சில தொழி லாளர்கள், காங்கிரஸில் லெனின் நடந்துகொண்ட விதம் பற்றி ஹைட் பார்க்கில் பேசிக் கொண்டிருந்தார் கள். அவர்களில் ஒருவன் எடுத்துக்காட்டான முறையில் பின்வருமாறு சொன்னான்:

''எனக்குத் தெரியாது, இங்கே, ஐரோப்பாவில் தொழி லாளர்கள் இடையே இதே மாதிரி அறிவாளி ஒருவர் —பேபெலோ, வேறு யாரோ—ஒருவேளை இருக்கலாம். ஆனால் இந்த மனிதரைக் கண்டதுமே எனக்குப் பிடித்து விட்டதுபோல வேறொருவரைப் பிடிக்கும் என்று எனக்கு நம்பிக்கைப்படவில்லை!''

''இவர் நம்மவர்!'' என்று புன்னகையுடன் சொன்னான் வேறு ஒரு தொழிலாளி.

''பிளெகானவும்தாம் நம்மவர்'' என்று மற்றொருவன் மறுப்புக் கூறினான்.

''பிளெகானவ் நமது ஆசான், நமது எஜமான். லெனினே, நம் தலைவர், தோழர்'' என்று வந்தது பொருத்தமான பதில்.

''பிளெகானவின் பிராக் கோட்டு தடங்கலாயிருக்கிறது'' என்று கிண்டல் செய்தான் ஒரு இளைஞன்.

இன்னொரு சந்தர்ப்பத்தில் உணவு விடுதிக்குப் போகும் வழியில் ஒரு மென்ஷெவிக் தொழிலாளி விளாதீமிர் இல்யீச்சை நிறுத்தி ஏதோ கேட்டான். லெனின் நடை வேகத்தைக் குறைத்தார், உடன் வந்தவர்கள் முன்னே சென்றுவிட்டார்கள். ஒரு ஐந்து நிமிடங்களுக்குப் பின் லெனின் உணவு விடுதிக்கு வந்து, முகத்தைச் சுளித்தவாறு விவரித்தார்:

''இவ்வளவு வெகுளிப் பையன் கட்சிக் காங்கிரஸ் கூட்டத்துக்கு வந்துவிட்டது விந்தைதான்! நமது கருத்து வேற்றுமைக்கு உண்மைக் காரணம் என்ன என்று என்னிடம் கேட்டான். 'உங்கள் தோழர்கள் பாராளுமன்றத்தில் வீற்றிருக்க விரும்புகிறார்கள். நாங்களோ, தொழிலாளி வர்க்கம் போராட்டத்துக்கு ஆயத்தம் செய்ய வேண்டும் என்று திண்ணமாக நம்புகிறோம்' என்றேன். புரிந்துகொண்டான் என்று நினைக்கிறேன்....''

நாங்கள் சிலர் மலிவான சிறு உணவு விடுதி ஒன்றிலேயே எப்போதும் சாப்பிடுவது வழக்கம். விளாதீமிர் இல்யீச் மிகக் கொஞ்சமாகவே உணவு அருந்தியதை நான் கவனித்தேன். இரண்டு மூன்று முட்டைகள் கொண்ட பொரியலும் சிறு துண்டு பன்றித் தொடைக் கறியும் சாப்பிட்டு விட்டு, கெட்டியான கறுத்த பீர் ஒரு குவளை பருகினார். அவர் தம்மைப் பற்றி அசட்டை பாராட்டுவது தெளிவாகப் புலப்பட்டது. எனவே, தொழிலாளர்கள் விஷயத்தில் அவர் காட்டிய அக்கறையும் பரிவும் எனக்கு வியப்பூட்டின. அவர்களது சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்யும் பொறுப்பு ம. பி. அந்திரேயெவாவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

''என்ன நினைக்கிறீர்கள்? தோழர்கள் பசியாறவில்லையோ? ஊம்? ம்... ம்... ஒருவேளை இறைச்சிவைத்த ரொட்டித் துண்டுகள் இன்னும் கொஞ்சம் கொடுக்கிறீர்களா அவர்களுக்கு?'' என்று அவளிடம் கேட்பார் லெனின்.

நான் தங்கியிருந்த விடுதிக்கு வந்தவர் படுக்கை விரிப்பைக் கவலையுடன் தொட்டுப் பார்த்தார்.

''என்ன செய்கிறீர்கள்?''

''துப்பட்டிகள் ஈரமாயிருக்கின்றனவோ என்று பார்க்கிறேன்.

எனக்கு உடனே விஷயம் விளங்கவில்லை. லண்டனில் துப்பட்டிகள் எப்படியிருந்தால் இவருக்கு என்ன என்று சிந்தித்தேன். எனது விளங்காமையை உணர்ந்துகொண்டு அவர் தெளிவுபடுத்தினார்:

''நீங்கள் உங்கள் ஆரோக்கியத்தைக் கவனித்துக் கொள்ள வேண்டும்.''

*1918* இலையுதிர் காலத்தில் ஸோர்மோவோ தொழிலாளி திமீத்ரிய் பாவ்லவிடம் அவனுடைய கருத்துப்படி லெனினின் தனிச் சிறப்புள்ள தன்மை எது என்று கேட்டேன்.

''எளிமை. அவர் உண்மை போன்றே எளிமையானவர்'' என்று தயங்காமல் பதிலளித்தான் திமீத்ரிய்.

நன்ருகச் சிந்தித்து வெகு காலத்துக்கு முன்பே தீர்மானம் செய்துவிட்ட விஷயம் போல இதை அவன் சொன்னான்.

ஒருவர்கீழ் வேலை பார்ப்பவர்கள் அவரை யாவரிலும் கடுமையாக விமர்சிக்கிறார்கள் என்பது தெரிந்ததே. ஆனால் பெருத்த அனுபவசாலியும் லெனினுடைய காரோட்டியுமான கில் என்பவர் பின்வருமாறு கூறினார்:

''லெனின் அலாதியானவர். அப்படிப்பட்டவர்கள் வேறு இல்லை. அவரைக் காரில் ஏற்றிக்கொண்டு மியாஸ்நீத்ஸ்காயா வீதி வழியே ஓட்டிப் போய்க் கொண்டிருந்தேன். பெருத்த போக்குவரத்து நெருக்கடி. காரில் யாரேனும் மோதிவிடக்கூடாதே என்பதற்காக நான் மெதுவாக

ஊர்ந்தேன். மறுபடி மறுபடி ஹார்ன் அடித்தேன். ஒரே கவலே எனக்கு. லெனின் கார்க் கதவைத் திறந்தார், படிப் பலகை வழியாக என் அருகே வந்தார், யாரேனும் இடித்துத் தள்ளிவிடும் ஆபத்தைப் பொருட்படுத்தாமல். 'தயை செய்து கலவரப் படாதீர்கள், கில். எல்லோரையும் போலவே ஓட்டிச் செல்லுங்கள்' என்று தேறுதல் சொன்னர். நான் வயதான காரோட்டி. எனக்குத் தெரியும், இப்படி வேறு ஒருவரும் செய்யமாட்டார் என்று.''

லெனினுடைய உளப்பதிவுகள் எல்லாம் எத்தகைய இயல்பான, லாகவமான முறையில் ஒரே சிந்தனைப் பெருக்கில் ஒன்று கலந்தனவோ, அதைச் சொற்களால் விவரிப்பது, சித்திரிப்பது கடினம்.

திசைகாட்டி முள்ளின் முனைபோல அவரது சிந்தனை உழைப்பாளி மக்களின் வர்க்க நலன்களையே நோக்கி எப்போதும் திரும்பியிருந்தது. லண்டனில் ஒரு நாள் மாலை ஒழிவு இருந்தபடியால் நாங்கள் சிலர் சாதாரண மக்கள் வழக்கமாகச் செல்லும் ''மியூஸிக் ஹால்'' எனப்படும் சிறு தியேட்டருக்குப் போனேம். கோமாளிகளையும் வேடிக்கை நிகழ்ச்சிகளையும் பார்த்து விளாதீமிர் இல்யீச் மனம் விட்டுச் சிரித்தார். மற்ற நிகழ்ச்சிகளை அலட்சியமாக நோக்கினர். பிரிட்டிஷ் கொலம்பியா தொழிலாளர்கள் மரம் வெட்டும் காட்சியை விசேஷக் கவனத்துடன் பார்த்தார். மன்றம் மரம் வெட்டும் முகாமாக ஜோடனை செய்யப்பட்டிருந்தது. அதன் முன் ஒரு மீட்டர் சுற்றளவுள்ள அடிமரத்தை வாட்டசாட்டமான இரண்டு வலிய இளைஞர்கள் ஒரு நிமிடத்தில் இரு கூறாக்கிவிட்டார்கள்.

''சந்தேகமின்றி இது பார்வையாளர்களைக் குதூகலப்படுத்தத்தான். உண்மையில் அவர்களால் இவ்வளவு வேகமாக வேலை செய்யமுடியாது. ஆனல் ஒன்று தெளிவாகிறது. அங்கேயும் அவர்கள் கோடரிகளால் தான் மரம் வெட்டுகிருர்கள், நன் மரத்தின் பெரும்பகுதியை ஒன்றுக்கும் உதவாத சிம்புகள் ஆக்கிவிடுகிருர்கள். பண்பாடுள்ள

ஆங்கிலேயர்களின் லட்சணத்தைப் பாருங்கள்!'' என்ருர் லெனின்.

முதலாளித்துவ அமைப்பில் நிலவும் உற்பத்தியின் ஒழுங்கீனத்தையும் பயனின்றி விரயமாக்கப்படும் கச்சாப் பொருள்களின் பெருத்த சதவிகிதத்தையும் பற்றி அவர் பேசினுர். இந்த விஷயம் குறித்து நூல் எழுதும் எண்ணம் இதுவரை எவருக்கும் தோன்றவில்லே என்பதை வருத்தத் துடன் கூறி முடித்தார். இந்த எண்ணத்தில் சில அம்சங்கள் எனக்குத் தெளிவுபடவில்லே. ஆனுல் இவற்றைப் பற்றிநான் கேட்பதற்குள் விளாதிமிர் இல்யீச் நாடக மன்றக் கலேயின் தனிவகை வடிவம் என்ற முறையில் ''விசித்திர வேடிக்கை யைப்'' பற்றிச் சுவையாகப் பேசத் தொடங்கிவிட்டார்.

''வழக்கமான விஷயங்களின்பால் எள்ளி நகையாடு கிற, ஐயுறவுள்ள ஒரு போக்கு இது. உள்வெளியாகத் திருப்பவும் ஓரளவு திரிக்கவும் வழக்கமானதில் உள்ள தர்க்கப் பொருத்தமற்றதை வெளிக்காட்டவும் இதில் முயற்சி செய்யப்படுகிறது. இது சிக்கலானது, ஆனுல் அக்கறைக்கு உரியது!''

இரண்டு ஆண்டுகளுக்குப் பின் காப்ரி என்னும் இடத் தில் கற்பனுவாத நவீனம் ஒன்றைப் பற்றி அ. அ. பொக் தானவ்-மலினேவ்ஸ்க்கியுடன் உரையாடுகையில் லெனின் பின்வருமாறு கூறினுர்:

''முதலாளித்துவவாதிக் கொள்ளேக்காரர்கள் பூமியை எவ்வாறு சூறையாடிவிட்டார்கள், அதன் எல்லாக் கனிய எண்ணெயையும் இரும்பையும் வெட்டு மரத்தையும் நிலக்கரியையும் விரயமாக்கி விட்டார்கள் என்பது பற்றித் தொழிலாளர்களுக்காக நீங்கள் ஒரு நவீனம் எழுதுங் களேன். இது மிகவும் பயனுள்ள புத்தகமாயிருக்குமே, ஸிஞ்ஞோர் மாஹீயவாதி!''

லண்டனில் நாங்கள் பிரிகையில், தாம் இளேப்பாறு வதற்குக் கட்டாயமாகக் காப்ரிக்கு வருவதாக அவர் உறுதி கூறினுர்.

ஆனால் அவர் காப்ரிக்கு வர ஆயத்தம் ஆவதற்கு முன்பே பாரிஸ் நகரில், இரு அறைகள் கொண்ட மாணவர் இல்லத்தில் நான் அவரைக் கண்டேன். அளவில் தான் அது மாணவர் இல்லமே தவிர துப்புரவிலும் கண்டிப்பான ஒழுங்கிலும் அல்ல. நதேஜ்தா கான்ஸ்தாந்தீனவ்னு எங்களுக்குத் தேநீர் தயாரித்துக் கொடுத்துவிட்டு எங்கோ போய்விட்டார். நாங்கள் இருவருமே அறையில் இருந்தோம். அந்த நாட்களில் ''ஸ்ஞனியே'' பதிப்பகம் கவிழ்ந்துவிட்டது. நமது இலக்கிய ஆசிரியர்கள் அனைவரையும் முடிந்தவரை ஒருங்கிணைக்கக் கூடிய புதிய பதிப்பகம் ஒன்றை நிறுவுவது பற்றி விளாதீமிர் இல்யீச்சுடன் பேசுவதற்காகவே நான் வந்திருந்தேன். விளாதீமிர் இல்யீச், வா. வா. வரோவ்ஸ்க்கிய் இருவரையும் இன்னும் சிலரையும் வெளிநாட்டில் பதிப்பகத்தின் ஆசிரியர்களாக நியமிக்கலாம் என்றும் ருஷ்யாவில் வ. அ. தெஸ்நீத்ஸ்க்கிய்-ஸ்த்ரோயெவ் அவர்களின் பிரதிநிதியாக இருக்கலாம் என்றும் நான் யோசனை கூறினேன்.

மேற்கத்திய இலக்கியம், ருஷ்ய இலக்கியம் ஆகியவற்றின் வரலாறு பற்றியும் பண்பாட்டின் வரலாறு பற்றியும் நிறைய நூல்கள் எழுதப்படுவதும் தற்பயிற்சிக்கும் பிரசாரத்திற்கும் தொழிலாளர்களுக்கு விரிவான உண்மை விவரங்கள் தருவதும் அவசியம் என நான் உணர்ந்தேன்.

விளாதீமிர் இல்யீச்சோ, இந்தத் திட்டத்தைத் தகர்த்துவிட்டார். தணிக்கை முறையையும் ஆட்களை ஒழுங்கமைப்பதன் சிரமத்தையும் அவர் சுட்டிக் காட்டினர். பெரும்பாலான தோழர்கள் நடைமுறைக் கட்சி வேலைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்றும் எழுதுவதற்கு அவர்களுக்கு நேரம் இல்லை என்றும் அவர் சொன்னர்.

ஆனல் அவருடைய முக்கியமான, நம்பிக்கைக்குரிய வாதமாக எனக்குப் பட்டது கிட்டத்தட்டப் பின்வருமாறு: பருத்த புத்தகங்கள் வெளியிட இது சமயம் அல்ல. பருத்த புத்தகங்களை ஆர்வத்துடன் படிப்பவர்கள் அறிவுஜீவிகள் தாம். அவர்களோ சோஷலிஸத்திலிருந்து பின்வாங்கி மித

வாதத்தை நோக்கிச் செல்வதைக் காண்கிறோம். அவர்கள் தெரிந்தெடுத்துக் கொண்டுவிட்ட பாதையிலிருந்து அவர்களை நம்மால் அகற்ற முடியாது. நமக்குத் தேவையானவை செய்தித்தாளும் சிறு பிரசுரங்களுமே. ''ஸ்ஞனியே'' நூல் தொடர்* வெளியீட்டை மீண்டும் தொடங்குவது நல்லதுதான். ஆனல் ருஷ்யாவில் தணிக்கை முறை காரணமாகவும் வெளிநாடுகளில் போக்குவரத்து வசதிக் குறைவு காரணமாகவும் இது அசாத்தியம். ஆயிரக் கணக்கான, லட்சக் கணக்கான துண்டுப் பிரசுரங்களை நாம் பொது மக்களிடையே வினியோகித்தாக வேண்டும். இவ்வளவு பெருந்தொகையான பிரசுரங்களைச் சட்ட விரோதமாக நாட்டுக்கு உள்ளே கொண்டு செல்வது இயலாது. நல்ல தருணம் வாய்க்கும்வரை பதிப்பகம் நிறுவுவதைத் தள்ளி வைப்போம்.

தமக்கே உரிய வியப்பூட்டும் உயிர்த்துடிப்புடனும் தெளிவுடனும் அவர் தூமாவைப் பற்றியும் காடெட்டுகளைப்** பற்றியும் பேசத் தொடங்கினர். காடெட்டுகள் ''அக்டோபர்வாதிகளாக''*** இருப்பதற்கு ''வெட்கப் படுகிறார்கள்'' என்றும் ''அவர்களுக்கு முன்னுள்ள ஒரே பாதை வலப்புறம் இட்டுச் செல்வதே'' என்றும் கூறினர். விரைவில் யுத்தம் மூளும் என்றும் ''ஒன்று அல்ல, அனேக போர்கள் மூளலாம்'' என்றும் சொல்லி, அதற்குப் பல

---

* ''ஸ்ஞனியே'' பதிப்பகத்தார் வெளியிட்ட ''பொது மக்கள் நூலகத்'' தொடரின் கட்சிப் பதிப்பகப் பிரிவு ஒன்றை மக்ஸீம் கோர்க்கிய் 1905 இறுதியில் போல்ஷெவிக் மத்தியக் கமிட்டியின் யோசனைப்படி நிறுவினர்.

** **காடெட்டுகள்** (அரசியல் சட்ட ரீதியான ஜனநாயக வாதிகள்)—பூர்ஷ்வா மிதவாத முடியரசுக் கட்சியினர். இந்தக் கட்சி ருஷ்யாவில் அரசியல் சட்டரீதியான முடியரசை ஸ்தாபிக்க விரும்பியது.

*** **அக்டோபரிஸ்டுகள்**—புரட்சி எதிர்ப்புக் கட்சியினர். பெரும் பூர்ஷ்வாத் தொழிலதிபர்களும் நிலச்சுவான் தார்களும் இந்தக் கட்சியின் உறுப்பினர். ஜார் அரசாங் கத்துக்கு அவர்கள் முழு ஆதரவு அளித்தார்கள்.

ஆதாரங்களைக் காட்டினார். அவருடைய இந்த ஊகம் பால்கன் நாடுகளில் விரைவில் உண்மையாயிற்று.

அவர் எழுந்து, வழக்கம்போல வெயிஸ்ட் கோட்டுக் கைத்துளைகளில் கட்டை விரல்களை நுழைத்தவாறு, இடுக்கிய இமைகளும் ஒளிவீசும் விழிகளுமாகக் குறுகிய அறையில் மெதுவாக நடந்தார்.

''போர் மூளும். அது தவிர்க்க முடியாதது. முதலாளித்துவ உலகம் அழுகிய நொதிப்பு நிலையை அடைந்து விட்டது. நாட்டுவெறி, தேசீயவாதம் என்னும் நஞ்சுகளை மக்கள் ஏற்கனவே விழுங்கத் தொடங்கிவிட்டார்கள். அனைத்து ஐரோப்பிய யுத்தம் ஒன்றை நாம் இன்னும் காண்போம் என்று நான் நினைக்கிறேன். பாட்டாளி மக்களோ? இரத்தக் களரியைத் தடுப்பதற்கு வேண்டிய வலிமையைப் பாட்டாளி மக்களால் திரட்டிக்கொள்ள முடியும் என்று எனக்கு நம்பிக்கைப்படவில்லை. தடுப்பது தான் எப்படி? ஐரோப்பா முழுவதிலும் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தின் மூலமா? இதற்குத் தேவையான அளவு அவர்கள் ஒழுங்கமைக்கப்படவில்லை, உணர்வு பெற வில்லை. இம்மாதிரி வேலைநிறுத்தம் உள்நாட்டுப் போரின் தொடக்கமாக அமையும். எதார்த்தவாதி அரசியலாளர்கள் ஆகிய நாம் இதை நம்பியிருக்க முடியாது.''

அவர் நின்று, ஜோட்டின் குதியால் தரையைத் தேய்த்தவாறு சிந்தனை தேங்கக் கூறினார்:

''பாட்டாளி மக்கள் பயங்கரமான துன்பம் அனுபவிப்பார்கள், சந்தேகமில்லை. தற்போதைக்கு அவர்களுடைய விதி அப்படி. ஆனால் பாட்டாளிகளின் பகைவர்கள் ஒருவரையொருவர் பலங்குன்றச் செய்துவிடுவார்கள். இதுவும் தவிர்க்க இயலாது நிகழும்.''

அவர் என் அருகே நெருங்கி, மிகுந்த வன்மையுடன் ஆனால் தணிந்த குரலில் பேசலானார். அவர் குரலில் ஓரளவு வியப்பு தொனித்தது.

''இல்லை, நீங்களே யோசித்துப் பாருங்கள்: வயிறார உண்டவர்கள் பசித்தவர்களை ஒருவரையொருவர் படு

கொலை செய்யுமாறு எதற்காக விரட்டுகிறீர்கள்? இதைக் காட்டிலும் மதிகெட்ட, அருவருக்கத்தக்க குற்றத்தை உங்களால் சொல்ல முடியுமா? தொழிலாளர்கள் இதற்காக மிகக் கடுமையான விலை செலுத்த வேண்டியிருக்கும். எனினும் முடிவில் அவர்கள் வெற்றி பெறுவார்கள். இதுவே வரலாற்றின் விருப்பம்.''

அவர் வரலாற்றைப் பற்றி அடிக்கடி பேசினார். ஆயினும் வரலாற்றின் விருப்பத்துக்கும் ஆற்றலுக்கும் எதிரே மூடபக்தியுடன் தலைவணங்கும் பான்மையை அவரது சொற்களில் நான் உணரவில்லை.

பேசியதனால் கிளர்ச்சியுற்று அவர் மேஜை அருகே உட்கார்ந்து நெற்றி வியர்வையைத் துடைத்துக் கொண்டார். ஆறிய தேநீரை ஒரு மடக்கு குடித்தார். பின்பு திடீரென்று கேட்டார்:

''ஆமாம், அமெரிக்காவில் உங்களுக்கு என்ன தொல்லை ஏற்பட்டது? செய்தித்தாள்களில் வந்த விவரத்தை நான் அறிவேன். ஆனால் இது எப்படி நேர்ந்தது?''

எனக்கு நிகழ்ந்ததை நான் சுருக்கமாக அவருக்குத் தெரிவித்தேன்.

விளாதீமிர் இல்யீச் சிரித்தது போல மற்றவருக்குத் தொற்றிக்கொள்ளும் விதத்தில் மனம் விட்டுச் சிரித்த எவரையும் நான் கண்டதே இல்லை. கடுமையான எதார்த்தவாதி. மாபெரும் சமூகத் துன்ப நிகழ்ச்சிகளின் தவிர்க்க இயலாமையை அவ்வளவு தெளிவாக முன்கண்டு ஆழ்ந்து உணர்பவர். முதலாளித்துவ உலகின்பால் சமரசப்படுத்த முடியாத, ஊசலாட்டமற்ற வெறுப்பு பாராட்டுபவர். இத்தகைய மனிதரால் குழந்தை போல, கண்ணீர் வரும் அளவுக்கு, புரையேறும்படி சிரிக்க முடியும் என்பதைக் காணவே விந்தையாக இருந்தது. இவ்வாறு சிரிப்பதற்கு ஒருவர் பெரிய, வலிய உள ஆரோக்கியம் கொண்டிருப்பது அவசியம்.

''ஓகோ, அடேயப்பா, நீங்கள் சிரிக்கச் சிரிக்கப் பேசுகிறீர்கள்!'' என்று நகைத்துக்கொண்டே கூறினார் அவர்.

''இதை நான் எதிர்பார்க்கவே இல்லை. ரொம்ப வேடிக்கையாக இருந்தது....''

பிறகு சிரிப்புக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு பரிவும் கனிவும் தோன்ற முறுவலித்தவாறு ஆழ்ந்த முறையில் சொன்னார்:

''தோல்வியை விளையாட்டாக எடுத்துக்கொள்ள உங்களால் முடிவது நல்லதே. நகைச்சுவை நேர்த்தியான, நல்ல தன்மை. நான் வேடிக்கைப் பேச்சை நன்றாகப் புரிந்து கொள்கிறேன், ஆனால் அப்படிப் பேசும் திறன் எனக்கு இல்லை. வாழ்க்கையில் வேடிக்கை நிகழ்ச்சிகள் துயர நிகழ்ச்சிகளை விடக் குறைவில்லை, நிச்சயமாகக் குறைவில்லை.''

மறுநாளுக்கு மறுநாள் அவரை வந்து காண்பதாகச் சொல்லிவிட்டு விடைபெற்றேன். ஆனால் பருவநிலை மோசமாக இருந்தது. இரவில் எனக்கு இருமலுடன் பெருத்த இரத்தப் பெருக்கு தொடங்கிவிட்டது. எனவே மறுநாள் நான் பாரிஸை விட்டுப் போய்விட்டேன்.

பாரிஸுக்குப் பிறகு காப்ரியில் நாங்கள் சந்தித்தோம். காப்ரியில் விளாதிமிர் இல்யீச் மனநிலையில் முற்றிலும் வெவ்வேறான இரண்டு லெனின்கள் ஆகிவிட்டது போன்ற விந்தையான எண்ணம் எனக்கு உண்டாயிற்று.

ஒரு லெனின், கப்பல் துறையில் நான் அவரை எதிர் கொண்டதுமே தீர்மானமாகப் பின்வருமாறு சொன்னார்:

''அலெக்ஸேய் மக்ஸீமவிச், நான் கடிதத்தில் உங்களை எச்சரித்திருந்த போதிலும் மாஹீயவாதிகளுடன் என்னைச் சமரசப்படுத்துவது சாத்தியமே என்று நம்புகிறீர்கள் என்பதை அறிவேன். இது ஒருகாலும் நடவாது! ஆகவே, முயற்சி எதுவும் செய்யாதீர்கள்!''

அவர் நினைப்பது அவ்வளவு சரியல்ல என்பதை என் இருப்பிடத்துக்குப் போகும் வழியிலும் அங்கு போய்ச் சேர்ந்த பின்னரும் நான் விளக்க முயன்றேன்: தத்துவ வேறுபாடுகளுக்கிடையே சமரசம் செய்துவைக்கும் நோக்கம் எனக்கு இருந்ததுமில்லை, இருக்கவுமில்லை. தவிர, இந்த

வேறுபாடுகள் எனக்கு அவ்வளவாக விளங்கவுமில்லை. இது மட்டுமின்றி இளமையிலிருந்தே எனக்குத் தத்துவங்கள்மீது அவநம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. எனது சொந்த ''அகநிலை'' அனுபவத்துடன் தத்துவம் முரண்படுவதே இதன் காரணம். என்வரையில் உலகம் இப்போதுதான் தொடங்கியிருந்தது, உருவாகியிருந்தது. தத்துவமோ, அதன் மண்டையில் அடித்து, கொஞ்சமும் இடப்பொருத்தமோ காலப்பொருத்தமோ இன்றி, ''எங்கே போகிறாய்? எதற்காகப் போகிறாய்? ஏன்—நினைத்துப் பார்க்கிறாயா?'' என்று வினவியது.

சில தத்துவவாதிகளோ, வெறுமே ''நில்!'' என்று கண்டிப்பாகக் கட்டளை இட்டார்கள்.

தவிரவும் தத்துவம் பெண்ணைப் போலவே மிகவும் அழகற்றதாக, விகாரமாகக் கூட இருக்கலாம், ஆனால் அழகுள்ளதாகத் தோற்றும் வகையில் தந்திரமாக, நம்பிக்கையூட்டும்படி அணி செய்யப்பட்டிருக்கலாம் என்பதை நான் ஏற்கனவே அறிந்திருந்தேன். எனது இந்த விளக்கத்தைக் கேட்டு விளாதீமிர் இல்யீச் வாய்விட்டுச் சிரித்தார்.

''இது கிண்டல். ஆனால் உலகம் இப்போதுதான் தொடங்கியிருக்கிறது, உருவாகிக்கொண்டிருக்கிறது என்பது நன்று. இதைப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள். நீங்கள் வெகு காலத்துக்கு முன்பே வந்து சேர்ந்திருக்க வேண்டிய இடத்துக்கு இங்கிருந்து வந்து சேர்ந்துவிடுவீர்கள்'' என்றார்.

அ. அ. பொக்தானவ், அ. வ. லுனச்சார்ஸ்க்கிய், வ. அ. பஸாரவ் ஆகியோர் என் கண்களுக்குப் பெரியோர்களாகப் படுகிறார்கள் என்றும் எல்லாத் துறைகளிலும் சிறந்த கல்வித் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள் என்றும் அவர்களுக்கு இணையானவர்களைக் கட்சியில் நான் காணவில்லை என்றும் பிறகு நான் குறிப்பிட்டேன்.

''அப்படியே வைத்துக் கொள்வோம். அதிலிருந்து நீங்கள் பெறும் முடிவு என்ன?''

''முடிவாகப் பார்க்கையில் அவர்கள் ஒரே குறிக்கோள் கொண்டவர்கள் என நான் கருதுகிறேன். முழுமையாகப் புரிந்துகொள்ளவும் உணர்ந்து அறியவும் பட்ட குறிக்கோளின் ஒருமை தத்துவ முரண்பாடுகளை அகற்றி விட வேண்டும்....''

''அதாவது சமரசம் ஏற்படும் என்ற நம்பிக்கை உங்களுக்கு இன்னும் இருக்கிறது, அப்படித்தானே? இது வீண். இந்த நம்பிக்கையை முடிந்தவரை தொலைவில் விரட்டிவிடுங்கள். நட்பு முறையில் உங்களுக்கு யோசனை கூறுகிறேன். உங்கள் கருத்துப்படி பிளெகானவும் ஒரே குறிக்கோள் கொண்டவர். ஆனால்—இது நமக்குள் இருக்கட்டும்—அவர் மாருநிலைவாதி அல்ல, உலோகாயதவாதியே எனினும் குறிக்கோளில் முற்றிலும் வேறுபட்டவர் என்று நான் நினைக்கிறேன்'' என்றார் லெனின்.

எங்கள் உரையாடல் இத்துடன் முற்றுப் பெற்றது. அதை அப்படியே சொல்லுக்குச் சொல் நான் இங்கே தரவில்லை என்பதைக் கூறத் தேவையில்லை. ஆனால் கருத்தை அப்படியே தந்துள்ளேன் என்பதில் சந்தேகமே இல்லை.

விளாதீமிர் இல்யீச் லண்டன் காங்கிரஸில் இருந்ததைக் காட்டிலும் இப்போது அதிக உறுதியும் வளையாமையும் கொண்டிருந்ததை நான் கண்டேன். ஆனால் அங்கே அவர் கலக்கமுற்றிருந்தார். கட்சியில் ஏற்பட்டிருந்த பிளவு அவரைப் பெரிதும் வாட்டியது என்பதைச் சில சந்தர்ப்பங்களில் தெளிவாக உணர முடிந்தது.

இங்கேயோ, அவர் அமைதியும் கிளர்ச்சியின்மையும் ஏளனமும் வாய்ந்த மனநிலையில் இருந்தார். தத்துவ உரையாடல்களிலிருந்து கடுப்புடன் விலகி ஒதுங்கினார். பொதுவாகவே எச்சரிப்புடன் நடந்து கொண்டார். அ. அ. பொக்தானவ் மிகவும் விரும்பத்தக்க மனிதர். மெல்லியல்பு உள்ளவர். லெனின்மீது மிகுந்த பற்று கொண்டவர். ஆனால் ஓரளவு தற்பெருமை பாராட்டுபவர். அத்தகையவர் மிகவும் குத்தலான சுடு சொற்களைக் கேட்க நேர்ந்தது.

“ ‘தெளிவாகச் சிந்திப்பவன் தெளிவாக விளக்கு வான்’ என்கிறார் ஷோப்பென்ஹார். இதைவிடச் சிறந்தது எதையும் அவர் சொல்லவில்லை என்று எண்ணுகிறேன். ஆனால் தோழர் பொக்தானவ், நீங்கள் தெளிவின்றிப் பேசுகிறீர்கள். உங்களுடைய ‘மாற்றுக் கொள்கை’ தொழிலாளி வர்க்கத்துக்கு என்ன தருகிறது என்பதையும் ஏன் மாஹீயம் மார்க்ஸீயத்தைவிடப் புரட்சிகரமானது என்பதையும் இரண்டு மூன்று வாக்கியங்களில் எனக்கு விளக்குங்கள்.”

பொக்தானவ் விளக்க முற்பட்டார். ஆனால் அவர் உண்மையாகவே தெளிவின்றியும் நிறையவும் பேசினார்.

“அட விடுங்கள்! யாரோ ஒருவர், யுவாரெஸ் என்று நினைக்கிறேன், சொன்னார்: ‘உண்மை பேசுவது மந்திரியாக இருப்பதைவிட மேல்’ என்று. ‘மாஹீயவாதியாக இருப்பதை விட’ என்பதையும் நான் சேர்த்திருப்பேன்” என்றார் லெனின்.

இதன் பின் அவர் பொக்தானவுடன் உற்சாகமாகச் சதுரங்கம் விளையாடினார். அதில் தோற்றதும் கோபங் கொண்டார், குழந்தைபோல ஏங்கிப் போனார். ஆனால் குழந்தைத்தனமான இந்த ஏக்கம், அவருடைய வியப்பூட்டும் சிரிப்பு போலவே அவரது இயல்பின் முழுமைக்கு ஊறு செய்யவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

காப்ரியில் இன்னொரு லெனினும் இருந்தார். இவர் அருமையான தோழர். களிபொங்கும் மனிதர். உலகில் உள்ள எல்லாவற்றின்மீதும் சோர்வறியா உயிரோட்டமுள்ள அக்கறை கொண்டவர். ஆச்சரியகரமான மென்மையுடன் மனிதர்களிடம் பழகுபவர்.

ஒரு நாள் இரவு எல்லோரும் உலாவச் சென்ற பின் அவர் ம. பி. அந்திரேயெவாவுடனும் என்னுடனும் உரையாடினார். ஆழ்ந்த வருத்தத்துடன், துயர் ததும்பப் பேசினார்.

“இவர்கள் அறிவாளிகள், திறமையுள்ளவர்கள். கட்சிக்காக நிறையச் செய்திருக்கிறார்கள். இன்னும் பன்

மடங்கு செய்ய இவர்களால் முடியும். ஆனால் இவர்கள் நம்முடன் செல்ல மாட்டார்கள்! இவர்களால் செல்ல முடியாது. இம்மாதிரிப் பதிற்றுக் கணக்கான, நூற்றுக் கணக்கான மனிதர்களைக் குற்றத்தன்மை கொண்ட இந்த அமைப்பு சிதைக்கிறது, அவலட்சணப்படுத்துகிறது.''

இன்னொரு முறை அவர் பின் வருமாறு சொன்னார்:

''லுனச்சார்ஸ்க்கிய் கட்சிக்குத் திரும்பி விடுவார். அந்த இருவரைவிடக் குறைந்த ஆணவம் கொண்டவர் அவர். அரிய இயற்கைத் திறன்கள் வாய்ந்தவர். எனக்கு அவர் விஷயத்தில் 'பலவீனம் உண்டு'—சீ, என்ன அறிவற்ற சொற்கள்: 'ஒருவர் விஷயத்தில் பலவீனம் கொள்ளுதல்!' நான் அவரை நேசிக்கிறேன். சிறந்த தோழர் அவர்! ஒரு வகையான பிரெஞ்சு அறிவொளிர்வு அவரிடம் இருக்கிறது. அவருடைய சஞ்சல சுபாவங்கூட பிரெஞ்சுச் சஞ்சல சுபாவம்—அவருடைய அழகுணர்ச்சி காரணமாகத் தோன்றுவது.''

காப்ரி மீன்வலைஞர்களின் வாழ்க்கை பற்றியும், அவர்களுடைய வருவாய் பற்றியும், பாதிரிகளின் செல்வாக்கு பற்றியும், பள்ளிக்கூடத்தைப் பற்றியும் லெனின் விவரமாக விசாரித்தார். அவருடைய அக்கறைகளின் பரப்பு என்னை வியப்பில் ஆழ்த்தியது. ஒரு பாதிரி ஏழைக் குடியானவனின் மகன் என்று அறிந்ததும், பின்வரும் விவரங்களைச் சேகரிக்குமாறு அவர் அக்கணமே கோரினார்: குடியானவர்கள் தங்கள் குழந்தைகளை எவ்வளவு அடிக்கடி மதப் பள்ளிகளுக்கு அனுப்புகிறார்கள்? குடியானவர்களின் பிள்ளைகள் பாதிரிகளாகப் பணியாற்றத் தங்கள் கிராமங்களுக்கே திரும்புகிறார்களா இல்லையா?

''உங்களுக்குப் புரிகிறது அல்லவா? இது தற்செயல் நிகழ்ச்சி அல்ல என்றால் இது வாட்டிக்கனின் கொள்கை என்று ஆகிறது. தந்திரமான கொள்கை!''

மற்றவர்களைவிட இவ்வளவு உயரத்தில் இருந்தபோதிலும் அதிகார வேட்கையின் மயக்குக்கு ஆளாகாமலும் ''சாதாரண மக்கள்'' பால் உயிர்த்துடிப்புள்ள அக்கறை

யை இழக்காமலும் இருக்க வல்ல வேறு மனிதரை என்னுல் கற்பனே செய்யவே முடியவில்லே.

அவரிடம் ஒரு வகையான காந்தக் கவர்ச்சி இருந்தது. உழைப்பாளி மக்களின் இதயங்களேயும் உள்ளுணர்வுகளே யும் அது தன்பால் ஈர்த்தது. அவர் இத்தாலிய மொழியில் பேசவில்லே. ஆயினும் காப்ரி மீன்வலேஞர்கள், ஷல்யாப் பினேயும் வேறு பல ருஷ்யப் பிரமுகர்களேயும் கண்டிருந்த போதிலும் ஏதோ உள்ளுணர்வால் தூண்டப்பட்டு லெனினுக்குத் தனியான சிறப்பிடத்தை அளித்தார்கள். அவருடைய சிரிப்பில் பெருத்த கவர்ச்சி இருந்தது. மனித அறிவீனத்தின் பாங்கின்மையையும் அறிவின் தந்திரமான கரணவித்தைகளேயும் நன்கு காணக் கூடியவராக இருந் தும் ''சாதாரண மக்களின்'' குழந்தைமை நிறைந்த வெகுளித்தனத்தில் இன்புற வல்லவராயிருந்த மனிதரின் உளமார்ந்த சிரிப்பு அது.

''நேர்மையுள்ள மனிதன்தான் இப்படிச் சிரிக்க முடியும்'' என்று முதிய மீன்வலேஞன் ஜோவான்னி ஸ்பதாரோ அவரைப் பற்றிக் கூறினுன்.

வானம் போன்றே தெளிந்த நீல வண்ணக் கடல் அலே கள்மீது படகில் அசைந்தாடியவாறு, ''விரலால்''—அதாவது தூண்டில் கழி இன்றிக் கயிற்றை மட்டும் கொண்டு— மீன் பிடிக்க லெனின் கற்றுக்கொண்டிருந்தார். கயிற்றின் நடுக்கத்தை விரல் உணர்ந்ததுமே இழுத்துவிட வேண்டும் என்று மீன்வலேஞர்கள் அவருக்கு விளக்கினுர்கள்.

''கோஸி: த்ரின்-த்ரின். கப்பிஷ்?'' என்ருர்கள் அவர் கள்.

அதே கணத்தில் லெனின் ஒரு மீனே இழுத்துவிட்டார். குழந்தையின் கொம்மாளமும் வேட்டைக்காரனின் உற் சாகமும் பொங்க ''ஆகா! த்ரின்-த்ரின்!'' என்று ஆர்ப் பரித்து அதைப் படகுக்குள் இழுத்துப் போட்டார்.

மீனவர்களும் குழந்தைகள் போலக் கலகலவென உரக்க நகைத்து ''ஸிஞ்ஞோர் த்ரின்-த்ரின்'' என்று லெனினுக்குப் பெயரிட்டுக் கூவினுர்கள்.

அவர் போய்விட்ட பின்பும் அவர்கள், ''ஸிஞ்ஞோர் த்ரின்-த்ரின் எப்படியிருக்கிறார்? ஜார் அவரைக் கைது செய்ய மாட்டானா?'' என்று ஓயாமல் விசாரித்துக் கொண்டிருந்தார்கள்.

தொல்லைகளும் பஞ்சமும் நிறைந்த 1919ம் ஆண்டில் வெளியூர்களிலிருந்து தோழர்களும் படைவீரர்களும் குடியானவர்களும் அனுப்பிய உணவுப் பண்டங்களைச் சாப்பிடுவதற்கு லெனின் நாணினார். தமது வசதியற்ற இருப்பிடத்துக்குப் பார்சல்கள் கொண்டுவரப்பட்டதும் அவர் முகஞ் சுளிப்பார், குழப்பமடைவார். கோதுமை மாவு, சர்க்கரை, வெண்ணெய் முதலியவற்றை நோயாளிகளுக்கும் அரைப்பட்டினியால் வலுவிழந்த தோழர்களுக்கும் விரைவில் வினியோகித்து விடுவார். ஒரு முறை என்னைத் தம் வீட்டில் சாப்பிட அழைத்துவிட்டு, ''புகையில் வாட்டிய மீன் சாப்பிடலாம் எங்கள் வீட்டில். ஆஸ்திரகான் தோழர்கள் அனுப்பியிருக்கிறார்கள்'' என்றார்.

பின்பு ஸாக்ராட்டீஸினது போன்ற நெற்றியைச் சுளித்து, எல்லாவற்றையும் கூர்ந்து நோக்கும் விழிகளைச் சிறக்கணித்து, பேச்சைத் தொடர்ந்தார்:

''ஏதோ எஜமானனுக்கு அனுப்புவது போல அனுப்புகிறார்கள்! ஆனால் இதைத் தவிர்ப்பது எப்படி? வேண்டாம் என்று மறுப்பது முறையாகாது. அவர்கள் மனம் புண்படும். மக்களோ, எங்கும் பட்டினி கிடக்கிறார்கள்.''

அவர் எளிதில் திருப்தி அடைபவர். மது அருந்துவதோ புகை குடிப்பதோ அவருக்கு வழக்கமில்லை. காலை முதல் இரவுவரை சிக்கலான, கடும் வேலையில் முனைந்திருப்பவர். தன் சௌகரியங்களைக் கவனித்துக்கொள்ள அவரால் முடியவே முடியாது. ஆயினும் தோழர்களின் வாழ்க்கைகளைக் கூர்ந்து கவனித்துவந்தார்.

**வி. இ. லெனின். மாஸ்கோ, 1920, ஜுலை**



ஒரு நாள் அவர் தம் அலுவலறையில் மேஜை அருகே உட்கார்ந்து மளமளவென்று ஏதோ எழுதிக்கொண்டிருந்தார். நான் போனதும் காகிதத்திலிருந்து பேனுவை எடுக்காமலே, ''வணக்கம். சௌக்கியமா? இதோ முடித்து விடுகிறேன். ஒரு தோழர் வெளியூரில் இருக்கிருர். சலிப்படைந்துவிட்டார். களைத்துப் போய்விட்டார் போலும். அவரை உற்சாகப்படுத்துவது அவசியம். மனநிலை முக்கியமானது ஆயிற்றே!'' என்ருர்.

ஒரு தடவை மாஸ்கோவில் அவர் வீட்டுக்குப் போனேன்.

''சாப்பிட்டீர்களா?'' என்று கேட்டார்.

''ஆமாம்.''

''சும்மா சொல்லவில்லையே?''

''சாட்சிகள் இருக்கிருர்கள். கிரெம்ளின் சாப்பாட்டு அறையில் உணவருந்தினேன்.''

''அங்கே சாப்பாடு கடைகெட்டது என்று கேள்விப்பட்டேனே.''

''கடைகெட்டதில்லை. ஆனுல் இன்னும் நன்ருயிருந்தால் நல்லது.''

சாப்பாடு எதனுல் மோசமாயிருக்கிறது, எப்படி அதை மேம்படுத்தலாம் என்று அவர் உடனே விவரமாக விசாரித்தார். பின்பு கடுகடுப்புடன் சீறினுர்:

''இதென்ன, இவர்களுக்குக் கைதேர்ந்த சமையல்காரனை அமர்த்த முடியவில்லையோ? ஜனங்களானுல் உடல் சோர்ந்து விழும்வரை உழைக்கிருர்கள். அவர்கள் நிறையச் சாப்பிடும்படி வாய்க்கு ருசியாகச் சமைத்துப் போட வேண்டும். உணவுப் பொருள்கள் குறைவு, தரத்தில் மோசம் என்பது எனக்குத் தெரியும். இந்த நிலைமையில் தேவையானவன் நல்ல சமையல்காரன்.'' இவ்வாறு சொல்லி விட்டு, சுவையான தயாரிப்பு சீரணத்திற்கும் ஊட்டத்திற்கும் எவ்வளவு அவசியமானது என்பதுபற்றி யாரோ ஆரோக்கியவிற்பன்னர் கூறியுள்ள கருத்தை மேற்கோள் காட்டினுர்.

''இம்மாதிரி விஷயங்களைப் பற்றிச் சிந்திக்க உங்களால் எப்படி முடிகிறது?'' என்று கேட்டேன்.

''அறிவுக்கியைந்த ஊட்ட முறை பற்றியா?'' என்று வினவினுர் அவர்.

எனது கேள்வி சந்தர்ப்பப் பொருத்தம் அற்றது என்பதை அவர் பேசிய தோரணை உணர்த்தியது.

என் போலவே ஸோர்மோவோ நகர்ப் பகுதிக்காரரான ப. அ. ஸ்கொரஹோதவ் எனது பழைய நண்பர். இளகிய மனம் உள்ளவர். ''ச்செக்காவில்''* வேலை செய்வது தனக்கு மிகவும் கடினமாயிருப்பதாக அவர் முறையிட்டார்.

''இது உங்கள் சுபாவத்துக்கு ஏற்ற வேலை அல்ல என்று எனக்கும் தோன்றுகிறது'' என்றேன் நான்.

''கொஞ்சங்கூட ஏற்றதல்ல'' என்று அவர் ஏக்கத்துடன் ஒப்புக்கொண்டார்.

ஆனுல், சற்று சிந்தித்துவிட்டு அவர் மேலே சொன்னுர்: ''இருந்தாலும் இல்யீச்சும் தமது உணர்ச்சிகளை அடிக்கடி அடக்கிக்கொள்ள வேண்டித்தான் இருக்கிறது என்பதை நினைத்துக்கொண்டதும் என்னுடைய பலவீனம் எனக்கு வெட்கமளிக்கிறது.''

நான் எத்தனையோ ஊழியர்களை அறிந்திருந்தேன், அறிவேன். தாங்கள் தொண்டாற்றும் லட்சியம் வெற்றி பெறும் பொருட்டு அவர்கள் பல்லைக் கடித்துக்கொண்டு ''தங்கள் உணர்ச்சிகளை அடக்கிக்கொள்ள'', உண்மையில் தங்கள் இரத்தத்தில் கலந்துவிட்ட ''சமூக ஆதர்சவாதத்தை'' நசுக்க வேண்டியிருந்தது, வேண்டியிருக்கிறது.

லெனினும் ''தம் உணர்ச்சிகளை அடக்கிக்கொள்ள'' வேண்டியிருந்ததா?

அவர் தம்மீது அரிதாகவே கவனம் செலுத்தினுர் ஆதலால் தம்மைப் பற்றி அவர் மற்றவர்களிடம் பேசியதும் அரிதே. தமது உள்ளத்தில் குமுறும் புயல்களை இரகசிய

* ச்செக்கா—புரட்சி எதிர்ப்பு, மறைமுக நாசவேலை, கள்ள வியாபாரம் ஆகியவற்றை ஒடுக்குவதற்கான அகில ருஷ்ய அசாதாரணக் கமிஷன்.

மாக வைத்துக் கொள்வதில் வேறு எவரையும் விட வல்லவர் அவர். ஆனால் ஒரு தடவை கோர்க்கி என்னும் இடத்தில் ஒருவருடைய குழந்தையைக் கொஞ்சியபடி அவர் சொன்னார்:

''இவர்கள் நம்மைக் காட்டிலும் மேலாக வாழ்வார்கள். நாம் அனுபவித்தவற்றில் பலவற்றை இவர்கள் அனுபவிக்க மாட்டார்கள். இவர்களுடைய வாழ்க்கை நம்முடையதைப் போல இவ்வளவு கொடூரமாயிராது.''

பின்பு தொலைவிலிருந்த குன்றுகள்மீது பார்வை செலுத்தினர். அவற்றின் உச்சியைத் தழுவியிருந்தது ஒரு கிராமம். லெனின் அவற்றை நோக்கியவாறு சிந்தனையுடன் கூறினர்:

''இருந்தாலும் இவர்கள்மீது நான் பொறாமை கொள்ள மாட்டேன். வியப்பூட்டும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செயலை நிறைவேற்றும் வாய்ப்பு நமது தலைமுறைக்குக் கிடைத்தது. நமது வாழ்க்கையின் கொடூரம் சூழ்நிலைமைகளின் நிர்ப்பந்தம் காரணமாக விளைந்தது. அது புரிந்து கொள்ளப்படும், உசிதமாகக் கருதப்படும். எல்லாம் புரிந்துகொள்ளப்படும், எல்லாமே!''

குழந்தைகளை அவர் மென்மையாக, மிகுந்த ஜாக்கிரதையுடன் தொட்டு வருடினர்.

ஒரு முறை நான் லெனினிடம் போனபோது, அவரது மேஜைமேல் லேவ் தல்ஸ்த்தோயின் ''போரும் அமைதியும்'' என்ற நவீனத்தைக் கண்டேன்.

''ஆமாம், தல்ஸ்த்தோய்! வேட்டைக் காட்சியை மறுபடி படிக்க விரும்பினேன். அதற்குள் ஒரு தோழருக்குக் கடிதம் எழுத வேண்டும் என்பது நினைவுக்கு வந்தது. படிப்பதற்கு நேரமே கிடைப்பதில்லை. தல்ஸ்த்தோய் பற்றிய உங்கள் புத்தகத்தை நேற்று இரவுதான் படித்தேன்'' என்ருர் லெனின்.

இளநகையுடன் கண்களைச் சுருக்கிக் கொண்டு அப்பாடாவென்று நாற்காலியில் சாய்ந்துகொண்டார். பின்பு குரலைத் தாழ்த்தி மளமளவென்று பேசினர்:

''எப்பேர்ப்பட்ட மலை, ஊம்? எத்தகைய மாண்பு மிக்க மாமனிதர்! கலைஞர் என்ருல், நண்பரே, இவர் தான்.... இன்னும் ஆச்சரியம் என்ன தெரியுமா? இந்தப் பிரபு எழுதத் தொடங்கு முன் உண்மையான ருஷ்யக் குடியானவன் இலக்கியத்தில் இடம் பெறவே இல்லை.''

பிறகு இடுங்கிய கண்களால் என்னை ஏறிட்டு நோக்கி, ''ஐரோப்பாவில் இவருக்கு இணையாக யாரைச் சொல்ல முடியும்?'' என்று கேட்டார்.

தமது கேள்விக்குத் தாமே விடையளித்தார்:

''ஒருவரையும் சொல்ல முடியாது.''

கைகளைத் தேய்த்துக்கொண்டு மனநிறைவுடன் வாய் விட்டுச் சிரித்தார்.

ருஷ்யாமீதும் ருஷ்யர்கள்மீதும் ருஷ்யக் கலைமீதும் கர்வம் அவரிடம் இருந்ததை நான் அடிக்கடி கவனித்திருந்தேன். இந்த இயல்பு லெனினுக்குப் பொருந்தாதது, அயலானது, வெகுளித்தனமானது என்று சில வேளைகளில் எனக்குப் பட்டது. தொழிலாளி மக்கள்பால் அவர் உள்ளத்தின் அடியாழத்தில் புதைந்திருந்த களிநிறைந்த அன்பின் எதிரொலியை இந்த இயல்பில் செவி மடுக்க அப்புறம் பழகிவிட்டேன்.

காப்ரியில் சுருமீனுல் அறுத்துச் சிடுக்காக்கப்பட்ட வலையை மீனவர்கள் பதபாகமாகச் சிடுக்கெடுத்ததைக் கண்டு அவர், ''நம்மவர்கள் அதிகத் துடியாக வேலை செய்கிருர்கள்'' என்ருர்.

நான் இதில் சந்தேகம் தெரிவித்தபோது அவர், ''ஹ்ம்-ஹ்ம். இந்தத் துண்டு நிலத்தில் வாழ்கையில் நீங்கள் ருஷ்யாவை மறந்து விடுகிறீர்களோ?'' என்று ஓரளவு சிடுசிடுப்புடன் கூறினுர்.

மாஸ்கோவில் ஒரு நாள் மாலை யெ. பெ. பேஷ்க்கோவாவின் வீட்டில் இஸாய் தப்ரவைன் பீத்ஹோவனின் ஸோனுட்டாவை இசைக்கக் கேட்டார் லெனின்.

"Appassionataவை விடச் சிறந்த இசைப் படைப்பை நான் கேட்டதே இல்லை. நாள்தோறும் இதைக் கேட்பதற்கு நான் தயார். அற்புதமான, அதிமானுஷீகமான இசை. மனிதர்கள் இத்தகைய அற்புதங்களைப் படைக்க முடியும் என்று எண்ணும் போதெல்லாம் எனக்கு கர்வம் உண்டாகிறது—ஒருவேளை அது குழந்தைத் தனமானது போலும்'' என்றார்.

பின்பு கண்களை இடுக்கிக்கொண்டு துயர் ததும்ப முறுவலித்துப் பேச்சைத் தொடர்ந்தார்:

''ஆனால் இசையை அடிக்கடி கேட்க எனக்கு முடியவில்லை. என் நரம்புகளை அது பாதிக்கிறது. அசட்டுத்தனமான இன்மொழிகள் பேசவும், இவ்வளவு அழுக்கடைந்த நரகத்தில் வாழ்ந்துகொண்டு இத்தகைய அழகைப் படைக்க வல்லவர்களாயிருக்கும் மக்களது தலைகளை வருடவும் விருப்பம் உண்டாகிறது. இந்த நாட்களிலோ, எவருடைய தலையையும் வருடுவது கூடாது—கையைக் கடித்துத் துண்டித்துவிடுவார்கள். ஆதர்சப்படி நாம் மக்கள்மீது எவ்வித வன்முறையையும் கையாளுவதை எதிர்க்கிறோம் எனினும் இப்போது அவசியமானது ஜனங்களின் மண்டைகளில் அடிப்பது, இரக்கமின்றி அடிப்பதுதான். ஹ்ம்-ஹ்ம். மிகக் கடினமான, சள்ளைபிடித்த வேலை!''

தாம் ஏற்கனவே அனேகமாக நோய்ப்பட்டு, மிகவும் எய்த்துப் போயிருப்பினும் 1921, ஆகஸ்டு 9ந் தேதி அவர் எனக்குப் பின் வரும் குறிப்பை எழுதி அனுப்பினார்:

''அ. ம.,

''உங்கள் கடிதத்தை ல. ப. காமினெவுக்கு அனுப்பியிருக்கிறேன். நான் ஒரேயடியாகக் களைத்துப் போனபடியால் எதுவும் செய்ய என்னால் இயலவில்லை. உங்கள் கோழையுடன் இரத்தம் வருகிறது. அப்படியும் நீங்கள் வெளிநாடு போக மறுக்கிறீர்களாமே! இது மகா மோசம். இதயமற்ற, யோசனையற்ற செயல். ஐரோப்பாவில்

நல்ல உடல்நல விடுதியொன்றில் உங்கள் வியாதியும் குணமாகிவிடும், நீங்களும் மும்மடங்கு வேலே செய்ய முடியும். நம் நாட்டிலோ, வியாதியும் குணப்படாது, வேலேயும் நடவாது. கெடுபிடியும் பரபரப்புந்தான், வெட்டியான கெடுபிடியும் பரபரப்புந்தான் மிஞ்சும். புறப்பட்டுப் போங்கள். சொஸ்தமாகுங்கள். பிடிவாதம் பிடிக்காதீர்கள். உங்களேக் கேட்டுக்கொள்கிறேன்!

''உங்கள் லெனின்''

ஓர் ஆண்டுக்கு மேலாக, நான் ருஷ்யாவிலிருந்து வெளியேறிவிட வேண்டும் என்று அவர் ஆச்சரியமூட்டும் பிடிவாதத்துடன் விடாது வற்புறுத்திவந்தார். வேலேயில் ஒரேயடியாக மூழ்கியிருந்த அவர், எவனே எங்கோ நோய்ப் பட்டிருக்கிருன், அவனுக்கு ஓய்வு வேண்டும் என்பதை எப்படி நினேவுவைத்துக்கொள்ள முடிந்தது? இது என்னே வியப்பில் ஆழ்த்தியது.

மேலே எடுத்துக்காட்டியது போன்ற கடிதங்களே அவர் பல்வேறு மனிதர்களுக்கு, டஜன்கணக்கில் எழுதியிருப்பார்.

தோழர்கள்பால் லெனின் கொண்டிருந்த முற்றிலும் தனிவகையான அக்கறை, அவர்களுடைய வாழ்க்கைகளின் அருசிகரமான சில்லறை விவரங்களேக் கூட உட்புகுந்து கண்டுகொள்ளும் அவருடைய ஆழ்ந்த கவனம் பற்றி நான் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன். அறிவுள்ள எஜமானன் நேர்மையும் திறமையும் கொண்ட தனது ஊழியர்கள்பால் காட்டும் தன்னலம் வாய்ந்த அக்கறையை அவரது இந்த உணர்வில் ஒரு போதும் என்னுல் காண முடியவில்லே.

இல்லே. உளமார்ந்த தோழனின் மனப்பூர்வமான கவனம் இது. சமமானவர்கள்பால் சமமானவர் காட்டிய அன்பு இது. விளாதீமிர் லெனினுக்கு அவரது கட்சியிலிருந்த மிகப் பெரிய மனிதர்கள் கூட இணேயாக முடியாது என்பதை நான் அறிவேன். ஆனுல் இந்த விஷயத்தை

அவர் தாமே அறிந்திருக்கவில்லை போலும். அல்லது இன்னும் சரியாகச் சொன்னால், அறிய விரும்பவில்லை போலும். மற்றவர்களுடன் வாதாடுகையில் அவர் அவர்களைக் கூர்மையாகத் தாக்குவார், இரக்கமின்றி எள்ளி நகையாடுவார், சில வேளைகளில் குத்தலாக நையாண்டி கூடச் செய்வார். இதெல்லாம் உண்மையே.

ஆனால் தலைக்கு நாள் எவர்களைத் தாக்கிப் படுகேலி செய்தாரோ, அவர்களைப் பற்றி மறுநாள் அவர் பேசுகையில் அவர்களுடைய திறமைகள் குறித்தும் அசையா நெஞ்சுறுதி குறித்தும் உளமார்ந்த வியப்பு தொனித்ததை நான் எத்தனையோ முறை தெளிவாகக் கேட்டிருக்கிறேன். 1918-1921 ஆண்டுகளில் நிலவிய நரகம்போன்ற நிலைமைகளில் அவர்கள் விடாப்பிடியாகக் கடுமையாக உழைத்தார்கள். எல்லா நாடுகளையும் எல்லா அரசியல் கட்சிகளையும் சேர்ந்த உளவாளிகளால் சூழப்பட்டு அவர்கள் வேலை செய்தார்கள். யுத்தத்தால் சளைத்துப்போன நாட்டின் உடலில் அழுகல் கொப்புளங்கள் போலக் கிளம்பிய சதியாலோசனைகளுக்கு நடுவே அவர்கள் பாடுபட்டார்கள். அவர்கள் ஓய்வு ஒழிவு இன்றி வேலை செய்தார்கள், சத்தில்லாத அற்ப உணவை அருந்தினார்கள், இடையறாத கலவர நிலையில் வாழ்ந்தார்கள். அவர்களுடைய இந்தக் கடும் உழைப்பை லெனின் வியந்து பாராட்டியதை நான் பலமுறை கேட்டிருக்கிறேன்.

ஆனால் இந்தச் சூழ்நிலைமைகளின் கடுஞ்சுமையை, உள்நாட்டுப் போர் என்னும் இரத்தப் புயலினால் அடிப்படை வரையில் உலுக்கியெடுக்கப்பட்ட வாழ்க்கையின் கவலைகளை லெனின் உணரவில்லை போலத் தோன்றியது. ஒரே ஒரு தடவைதான், ம. பி. அந்திரேயெவாவுடன் உரையாடுகையில், குறைபாடு போன்ற ஒன்று அவரிடமிருந்து வெளிப்பட்டது என்று அந்திரேயெவா சொல்லுகிறார். லெனின் கூறினாராம்:

''என்ன செய்வது, அன்பார்ந்த மரீயா பியோதரவ்னா? நாம் போராட வேண்டும். அது இன்றியமையாதது.

நமக்குக் கஷ்டமாயிருக்கிறதா? சந்தேகமில்லாமல். எனக்கு மட்டும் கஷ்டமாயில்லை என்று எண்ணுகிறீர்களா? கஷ்டமாகத்தான் இருக்கிறது, நிச்சயமாக! ஆனால் த்ஸெர் ஷீன்ஸ்க்கியைக் கொஞ்சம் பாருங்கள். எப்படி ஆகிவிட்டார் பாவம்! ஒன்றும் செய்வதற்கில்லை. நமக்கு எவ்வளவு தான் கஷ்டமாயிருந்தாலும் பரவாயில்லை. வெற்றி மட்டும் கிடைத்தால் போதும்!''

என்னைப் பொறுத்தவரை ஒரே ஒரு முறைதான் அவரிடமிருந்து பின்வரும் குறைபாட்டை நான் கேட்டேன்:

''வருத்தமாயிருக்கிறது, மார்த்தொவ் நம்மோடு இல்லாதது. மிகவும் வருத்தமாயிருக்கிறது! அவர்தான் எவ்வளவு அற்புதமான தோழர்! எவ்வளவு தூய்மையானவர்!''

மார்த்தொவ் எங்கோ எழுதியிருந்த ஒரு குறிப்பைப் படித்துவிட்டு லெனின் எவ்வளவு நேரம் பொங்கிப் பொங்கிச் சிரித்தார் என்பது எனக்கு நினைவிருக்கிறது. மார்த்தொவ் எழுதியிருந்தார்: ''ருஷ்யாவில் இரண்டே கம்யூனிஸ்டுகள் தாம் இருக்கிறார்கள். ஒருவர் லெனின், மற்றவர் கொலன்தாய்.''

சிரிப்பு நின்றதும் லெனின் பெருமூச்சு விட்டார்.

''எவ்வளவு புத்திசாலி! அட....''

பொருளாதாரத் துறை அதிகாரியான ஒரு தோழரைத் தமது அலுவலறையிலிருந்து விடைகொடுத்து அனுப்பியபின் லெனின் என்னை நோக்கி, ''உங்களுக்கு இவரை நீண்ட காலமாகத் தெரியுமோ? எந்த ஐரோப்பிய நாட்டிலும் மந்திரிசபைத் தலைவராயிருக்க வல்லவர் இவர்'' என்றார். அவரது குரலில் மரியாதையும் வியப்பும் தொனித்தன.

கைகளைத் தேய்த்துக்கொண்டு அவர் மேலும் சொன்னார்:

''திறமைசாலிகளைப் பொறுத்தவரையில் ஐரோப்பா நம்மைவிட ஏழ்மையானது.''

முன்பு பீரங்கிப்படை வீரராக இருந்த ஒரு போல்ஷெவிக்கின் புதுப் புனைவு ஒன்றைக் காண்பதற்கு என்

ளேடு பீரங்கிப் படைத் தலைமைக் காரியாலயத்துக்கு வரும்படி லெனினிடம் சொன்னேன். விமானத்தாக்கு பீரங்கியின் குண்டு வீச்சைத் திருத்துவதற்கு உதவுவது இந்தப் புதுப் புனேவு.

''இதில் எனக்கு என்ன புரியும்?'' என்று அவர் கேட்டார். எனினும் என்னேடு வந்தார். அரையிருட்டாயிருந்த அறையில் மேஜைமீது வைக்கப்பட்டிருந்தது அந்த இயந்திரம். ஒரு ஏழு ஜெனரல்கள் மேஜையைச் சூழ்ந்திருந்தார்கள். எல்லோரும் நரைத்த, மீசைக்காரக் கிழவர்கள், கல்விமான்கள். சிவில் உடை அணிந்த லெனினின் அடக்கமான உருவம் அவர்களுக்கு நடுவே எங்கோ புதைந்துவிட்டதுபோல, தென்படாது போயிற்று. இயந்திரத்தின் அமைப்பைப் புனேவாளர் விவரிக்கலானர். லெனின் இரண்டு மூன்று நிமிடங்கள் அவருடைய விளக்கத்தைக் கேட்டுவிட்டு ''ஹ்ம்-ஹ்ம்'' என்று ஆதரவைத் தெரிவித்தார். பின்பு புதுப்புனேவாளரை அரசியல் பிரச்சினேகளில் பரீட்சிப்பது போன்றே மளமளவென்று கேள்விகள் கேட்கத் தொடங்கினர்.

''இலக்கை நிர்ணயிக்கும் இயந்திர அமைப்பு இரட்டை வேலையை ஒரே சமயம் நிறைவேற்றுவதை எப்படிச் சாதித்தீர்கள்? பீரங்கிக் குழாய்களின் கோணம் உங்கள் இயந்திர அமைப்பு காட்டும் இலக்குக்கு ஏற்பத் தானியங்கி முறையில் அமையுமாறு செய்ய முடியாதா?''

வீச்சு எல்லே பற்றியும் வேறு சில விஷயங்கள் பற்றியும் அவர் கேள்விகள் கேட்டார். புதுப்புனேவாளரும் ஜெனரல்களும் உற்சாகமாக அவருக்கு விளக்கினர்கள். மறு நாள் புதுப்புனேவாளர் என்னிடம் சொன்னர்:

''நீங்கள் ஒரு தோழருடன் வருவீர்கள் என்று நான் என் ஜெனரல்களுக்கு அறிவித்தேன். ஆனல் அந்தத் தோழர் யார் என்று சொல்லவில்லே. அவர்கள் லெனினே அடையாளம் கண்டுகொள்ளவில்லே. ஆரவாரமும் பகட்டும் காவலும் இல்லாமல் அவர் வருவார் என்று அவர்களால் எண்ணவே முடியவில்லே போலும். 'இவர் யார், தொழில்

நுட்ப அறிஞரா, பேராசிரியரா?' என்று கேட்டார்கள். 'லெனின்' என்றேன். அவர்களுக்கு ஆச்சரியம் தாங்க வில்லை. 'என்ன? இருக்க முடியாது. தவிர, நம்முடைய துறைபற்றி அவர் எங்கிருந்து இவ்வளவு தெரிந்துகொண் டார்? தொழில்நுணுக்கங்களை நன்கு அறிந்தவர் போலக் கேள்விகள் கேட்டாரே!' என்றார்கள். ஒரே மர்மம்! தங் கள் இடத்துக்கு வந்தவர் லெனின்தாம் என்பதை அவர் கள் அப்புறமும் நம்பவே இல்லை போலும்....''

பீரங்கிப் படைத் தலைமைக் காரியாலயத்திலிருந்து திரும்பும் வழியில் லெனின் உற்சாகமாகச் சிரித்தார். புதுப்புனைவாளரைப் பற்றிப் பேசினார்.

''ஒருவனை மதிப்பிடுவதில் நாம் எவ்வளவு தவறு செய்து விடக் கூடும், பார்த்தீர்களா? இந்த ஆள் பழைய, நேர் மையான தோழர் என்பது எனக்குத் தெரியும். ஆனால் வானத்திலிருந்து விண்மீனைப் பிடிக்கும் அறிவாற்றல் உள்ளவர் என்று நான் எண்ணவே இல்லை. இவரோ அதற்கே ஏற்றவர் என்று புலப்படுத்திவிட்டார். அற்புதம்! புதிய இயந்திர அமைப்பின் செயல் முறைப் பயன்பாடு பற்றி நான் சந்தேகம் தெரிவித்ததும் ஜெனரல்கள் எப் படிச் சிலுப்பிக்கொண்டு என்மேல் பாய்ந்தார்கள், பார்த் தீர்களா? நான் வேண்டுமென்றே அப்படிச் செய்தேன். இந்தச் சாதுரியமான அமைப்பை அவர்கள் எவ்வாறு மதிக்கிறார்கள் என்று அறிய விரும்பினேன்.''

மறுபடி குலுங்கிச் சிரித்துவிட்டு அவர் பேச்சைத் தொடர்ந்தார்:

''இந்த மனிதர் இன்னொரு புதுப்புனைவும் செய்திருக் கிறார் என்று சொல்லுகிறீர்கள்? அது விஷயமாக ஏன் இன்னும் ஒன்றும் செய்யப்படவில்லை? அவர் வேறு எந்தக் காரியத்திலும் ஈடுபடக் கூடாது. அட, இந்தத் தொழில் நுட்ப நிபுணர்கள் எல்லோருக்கும் அவர்களுடைய வேலைக்கு ஏற்ற ஆதர்ச நிலைமைகளை நாம் ஏற்படுத்த முடிந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்! ஒரு இருபத்தைந்து

ஆண்டுகளுக்கெல்லாம் ருஷ்யா உலகின் முன்னணி நாடாகத் திகழும்!''

தோழர்களை அவர் இவ்வாறு புகழ்வதை நான் அடிக்கடி கேட்டிருக்கிறேன். எவர்களை அவர் விரும்பவில்லை என்று பேசிக்கொள்ளப்பட்டதோ, அவர்களைக்கூட இவ்வாறே அவர் புகழ்வதுண்டு. அவர்களுடைய ஊக்கத்துக்கு உரிய மதிப்பு அளித்துப் பாராட்ட லெனினால் முடிந்தது.

என் விஷயத்தில் அவர் கண்டிப்பான ஆசிரியராகவும் பரிவுள்ள ''அக்கறை எடுத்துக்கொள்ளும் நண்பராகவும்'' நடந்துகொண்டார்.

''நீங்கள் புரிந்துகொள்ள முடியாத மனிதர்'' என்று ஒரு நாள் அவர் என்னிடம் வேடிக்கையாகச் சொன்னார். ''இலக்கியத்தில் நல்ல எதார்த்தவாதியாகத் தோற்றம் அளிக்கிறீர்கள். மக்களைப் பொறுத்தவரையிலோ, கற்பனவாதியாக விளங்குகிறீர்கள். எல்லோரும் வரலாற்றின் பலியாட்கள் என்று எண்ணுகிறீர்கள், அப்படித்தானே? நாங்கள் வரலாற்றை அறிவோம், பலியாட்களிடம் நாங்கள் சொல்லுகிறோம்: ''பலிபீடங்களைப் புரட்டித் தள்ளுங்கள். கோயில்களை இடியுங்கள். கடவுள்களை வெளியேற்றுங்கள்!'' என்று. ஆனால் நீங்களோ, எல்லாவற்றுக்கும் முன்னால் அறிவுஜீவிகள் வசதியாக வாழ வகை செய்வது தொழிலாளி வர்க்கத்தின் போராட்டக் கட்சி செய்ய வேண்டிய கடமை என்று எனக்கு நம்பிக்கையூட்டப் பார்க்கிறீர்கள்.''

ஒரு வேளை என் எண்ணம் தவறாயிருக்கலாம். ஆனால் என்னோடு உரையாடுவது விளாதீமிர் இல்யீச்சுக்கு உவப்பாயிருந்தது என்று எனக்குத் தோன்றியது.

''நீங்கள் இங்கே வரும்போதெல்லாம் எனக்கு போன் செய்யுங்கள், சந்தித்துப் பேசுவோம்'' என்று அனேகமாக எப்போதும் சொல்லுவார்.

''உங்களுடன் சர்ச்சை செய்வது எப்போதுமே சுவை

யாயிருக்கிறது. உங்களது அனுபவங்கள் பல்வகைப்பட்டவை, அவற்றின் வீச்சு அதிக விரிவானது'' என்று ஒரு சந்தர்ப்பத்தில் அவர் கூறினர்.

அறிவுஜீவிகளின் மனநிலை பற்றி, அதிலும் விஞ்ஞானிகளைப் பற்றி மிகக் கவனமாக அவர் என்னிடம் விசாரித்தார். அப்போது நான் அ. ப. ஹலாத்தவுடன் ''விஞ்ஞானிகளின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துவதற்கான கமிட்டியில் '' வேலை செய்துவந்தேன். பாட்டாளி இலக்கியம் பற்றியும் அவர் அறிய விரும்பினர்.

''அதிலிருந்து என்ன விளைவை எதிர்பார்க்கிறீர்கள்?''

அதிலிருந்து நான் நிறைய எதிர்பார்ப்பதாகவும் ஆனல் இலக்கியக் கல்லூரி ஒன்றை நிறுவுவது முற்றிலும் இன்றியமையாதது எனக் கருதுவதாகவும் நான் கூறினேன். மொழி இயல், மேற்கு கிழக்கு நாடுகளின் மொழிகள், நாடோடி இலக்கியம், உலக இலக்கிய வரலாறு ஆகிய கிளைகளும் ருஷ்ய இலக்கியத்துக்காகத் தனிப் பிரிவு ஒன்றும் இந்தக் கல்லூரியில் இருக்க வேண்டும் என்று சொன்னேன்.

''ஹ்ம்-ஹ்ம்'' என்று அவர் கண்களைச் சுருக்கிக்கொண்டு சிரித்தார். ''மிக விசாலமானது, கண்களைக் கூசச் செய்வது உங்கள் திட்டம். விசாலமாயிருப்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனல் கண்கள் கூசும்படி பகட்டாயிருக்கப் போகிறது, அல்லவா? இந்தத் துறையில் நம்மிடம் சொந்தப் பேராசிரியர்கள் கிடையாது. பூர்ஷ்வாப் பேராசிரியர்கள் என்ன மாதிரி வரலாற்றைக் கற்பிப்பார்கள் என்பதோ தெரிந்ததுதான்.... இல்லை. இப்போது நம்மால் இந்தச் சுமையைத் தூக்க முடியாது. ஒரு மூன்று அல்லது ஐந்து ஆண்டுகள் பொறுத்திருக்க வேண்டும்'' என்ருர்.

பின்பு முறையிட்டார்:

''படிப்பதற்கு நேரமே கிடைப்பதில்லை! செய்யுள்கள் மிக நிறைய இயற்றப்படுகின்றனவே, கவனித்தீர்களா? சஞ்சிகைகளிலும் பக்கம் பக்கமாகச் செய்யுள்கள்.

செய்யுள் தொகுப்புக்களோ அனேகமாக நாள்தோறும் வெளியாகின்றன.''

பாட்டு இயற்றுவதற்கு இளைஞர்கள் ஆர்வம் கொள்வது இம்மாதிரிக் காலத்தில் இயல்பானதே என்றும் மட்டரகமான செய்யுள்கள் இயற்றுவது நல்ல உரைநடை எழுதுவதைவிட எளிது என்று நான் கருதுவதாகவும் சொன்னேன். செய்யுள் எழுதுவதற்கு நேரமும் குறைவாகவே தேவை என்றும், தவிர யாப்பு இலக்கணம் கற்பிக்கும் நல்ல ஆசிரியர்கள் நம் நாட்டில் நிறைய இருக்கிறார்கள் என்றும் கூறினேன்.

''செய்யுள் இயற்றுவது உரைநடை எழுதுவதைவிட எளிது என்பதை நான் நம்பவில்லை! என்னால் அப்படி நினைக்கவே முடியவில்லை. என் தோலை உரித்தாலும் சரியே, இரண்டு வரி செய்யுள் எழுத என்னால் முடியாது'' என்று சொல்லி முகஞ் சுளித்தார் அவர். ''நம் நாட்டிலும் ஐரோப்பாவிலும் உள்ள பழைய புரட்சி இலக்கியம் பூராவும் பொது மக்களுக்குக் கிடைக்க வகை செய்வது அவசியம்'' என்றார்.

அவர் ருஷ்ய மனிதர். நீண்ட காலம் ருஷ்யாவுக்கு வெளியே வாழ்ந்து தம் நாட்டைக் கவனமாக ஆராய்ந்தவர். தொலைவிலிருந்து நோக்குகையில் அது பல வண்ணங்களுடனும் பிரகாசமாகவும் துலங்குவதை அவர் கண்டார். ருஷ்யாவின் வருங்கால ஆற்றலை—மக்களின் அசாதாரண இயற்கைத்திறமையை—அவர் சரியாக மதிப்பிட்டார். இந்தத் திறமை அதுவரை மங்கலாகவே வெளித் தெரிந்தது. துன்பமும் சள்ளையும் நிறைந்த வரலாற்றால் அது இன்னும் தூண்டி எழுப்பப்படாதிருந்தது. எனினும் இயற்கைத் திறமை நாற்புறமும் சிதறிக் கிடந்தது, கற்பனை போன்ற ருஷ்ய வாழ்க்கையின் இருண்ட பகைப் புலத்தில் பொன் விண்மீன்கள் போன்று சுடர்ந்தது.

விளாதீமிர் லெனின், இவ்வுலகின் உண்மையான பெரிய மனிதர், காலஞ்சென்றுவிட்டார். அவரை அறிந்த

வர்களின் இதயங்களை இந்த மரணம் கொடுமையாகத் தாக்கிவிட்டது, மிகவும் கொடுமையாக!

ஆனால் மரணத்தின் கரிய விளிம்புக் கோடு உலகு அனைத்தின் கண்களுக்கும் அவருடைய முக்கியத்துவத்தை—உலக உழைப்பாளி மக்களின் தலைவரது முக்கியத்து வத்தை—இன்னொரு முறை வன்மையாக உணர்த்தி விட்டது.

அவர்பால் வெறுப்பு என்னும் மேகங்கள், அவருடைய பெயரைச் சுற்றிப் புனையப்பட்டுள்ள பொய்கள், அவதூறு கள் என்னும் மேகங்கள் இன்னும் அடர்த்தியாக இருப்பி னும், அவை ஒரு பொருட்டாக மாட்டா. மதியிழந்து வெறி கொண்டுவிட்ட உலகின் புழுக்கம் நிறைந்த இருளில் லெனின் உயர்த்திப் பிடித்த ஒளிப் பந்தத்தை மங்கச் செய்யக்கூடிய சக்தி எதுவும் இல்லை.

உலகின் நினைவில் என்றென்றும் நிலைத்து வாழ உண் மையிலேயே இந்த மனிதர் போன்ற தகுதி பெற்றவர் எவரும் இருந்ததில்லை.

விளாதீமிர் லெனின் காலமாகிவிட்டார். ஆனால் அவரது அறிவுக்கும் உளத்திண்மைக்கும் மரபுரிமை பெற்ற வர்கள் வாழ்கிறார்கள். அவர்கள் வாழ்கிறார்கள், உலகில் எங்கும், எவரும், எக்காலத்திலும் செய்யாத அளவு வெற்றிகரமாக வேலை செய்துவருகிறார்கள்.

**வி. இ. லெனினும் வி. தி. போன்ச்-புருயேவிச்சும் கிரெம்ளின் முகப்பு வெளியில். மாஸ்கோ, 1918, அக்டோபர்**



# போன்ச்-புருயேவிச்

வி. தி. போன்ச்-புருயேவிச் கம்யூனிஸ்ட் கட்சியின் மிகப் பழைய உறுப்பினர். 1917ம் ஆண்டில் நடந்த பிப்ரவரி, அக்டோபர்ப் புரட்சிகளில் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொண்டவர். வி. இ. லெனினை நன்கு அறிந்தவர். பல ஆண்டுகள் அவருடன் சேர்ந்து உழைத்தவர். அக்டோபர்ப் புரட்சியின் தொடக்க நாட்களிலிருந்து 1920ம் ஆண்டுவரை போன்ச்-புருயேவிச் மக்கள் கமிஸார்கள் சபையின் விவகார நிர்வாகியாகப் பதவி வகித்தார். பின்னர் அவர் ''ஷிஸ்ன் இ ஸ்நானியே'' (வாழ்க்கையும் அறிவும்) பதிப்பகத்தின் தலைமைப் பதிப்பாசிரியராகவும் அரசாங்க இலக்கியப் பொருட்காட்சிசாலையின் அமைப்பாளராகவும் இயக்குநராகவும் இருந்தார். ருஷ்யாவில் புரட்சி இயக்கத்தின் வரலாறு பற்றியும், இலக்கியம் பற்றியும் மனித இனப்பரப்பு விளக்கவியல் பற்றியும் அவர் பல ஆய்வுரைகள் எழுதியுள்ளார்.

# விளாதீமிர் இல்யீச் நிலம் பற்றிய ஆணைப் பத்திரத்தை எழுதியது எவ்வாறு

குளிர்கால அரண்மனை புரட்சிகர போல்ஷெவிக் படைகளால் கைப்பற்றப் பட்டு விட்டது. நமது இராணுவத் தலைவர்களின் நடவடிக் கைகளில் தாமதம் காரணமாகப் பெரிதும் கவலையுற் றிருந்த விளாதீமிர் இல்யீச் கடைசியில் தாராளமாக மூச்சு விட்டார். அக்கணமே அவர் தமது எளிய மாறு வேஷத் தைக் கலைத்துவிட்டு, நிகழ்ச்சிகளின் முடிவை எதிர்பார்த் துக் கொண்டிருந்த பெத்ரோகிராத் தொழிலாளர், படை வீரர் பிரதிநிதிகள் சோவியத்தின் கூட்டத்துக்குத் தமது நீண்டகால அரசியல் நண்பர்கள் புடைசூழ வந்து சேர்ந்தார்.

விளாதீமிர் இல்யீச் மேடைமீது தோன்றியதும் ஹால் முழுவதிலும் அதிர்ந்ததை இடி முழக்கம் என்று கூற முடியாது. அது இன்னும் பெரிய ஒன்று. உண்மையிலேயே திகைக்க வைப்பது. மனித உணர்ச்சிகளின் சூறுவளி ஹால் முழுதும் சுழன்றடித்தது எனலாம். கூட்டம் தொடங்கியது. மறுபடியும் வாழ்த்துக்கள், மறுபடியும் வெற்றி முழக்கங்கள், மறுபடியும் களிபேருவகை.... புகழ்பெற்ற, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தக் கூட்டம் இவ்வாறு புயலும் தழலும் வீசியவாறு நடந்தேறியது.

கடைசியில் கூட்ட நிகழ்ச்சிகள் முடிவுற்றன. இரவு வெகு நேரம் கடந்தபின் நாங்கள் உறங்குவதற்காக என் இருப்பிடம் சேர்ந்தோம். சொற்ப இரவுணவு கொண்டோம். விளாதீமிர் இல்யீச் உற்சாகக் கிளர்ச்சி கொண்டிருந்தாலும் ஒரேயடியாகக் களைத்துச் சோர்ந்து காணப் பட்டார். சாப்பாடு ஆனதும் அவரது ஓய் வுக்கு எல்லா வசதிகளும் செய்ய நான் முயன்றேன். தனியான சிறு அறையில் என்னுடைய படுக்கையில் படுத்துக்கொள்வதற்கு அவரை இணங்கச் செய்வதற்கு நான் அரும்பாடு பட நேர்ந்தது. அந்த அறையில் எழுது மேஜையும் காகிதமும் மையும் புத்தக அலமாரியும் இருந்தன.

நான் பக்கத்து அறையில் நீள் சோபாவில் படுத்துக் கொண்டேன். விளாதீமிர் இல்யீச் உறங்கி விட்டார் என்று முற்றிலும் உறுதிப்படுத்திக் கொண்ட பிறகுதான் தூங்குவது என்று தீர்மானம் செய்து கொண்டேன். அதிகக் காப்புக்காக வெளிக்கதவுகளைப் பூட்டி, சங்கிலிகளையும் கொண்டிகளையும் மாட்டி, தாழ்ப்பாள்களைப் போட்டேன். ரிவால்வர்களையும் கெட்டித்துத் தயாராக வைத்துக் கொண்டேன். ஏனென்றால் யாரேனும் கதவை உடைத்து உட்புகுந்து விளாதீமிர் இல்யீச்சைக் கைதியாக்கவோ கொலை செய்யவோ முயலலாமே. அதுதான் புரட்சியின் முதல் இரவு. எனவே எது வேண்டுமானாலும் நேரக் கூடுமே! தெரிந்த எல்லா நண்பர்களின் டெலிபோன் நம்பர்களையும் ஸ்மோல்னிய், வட்டாரத் தொழிலாளர் கமிட்டிகள், தொழிற்சங்கங்கள் ஆகியவற்றின் டெலி போன் நம்பர்களையும் கையோடு காவலாக அப்போதே ஒரு தனிக் காகிதத்தில் குறித்துக் கொண்டேன்—கலவரத்தில் எங்கேனும் மறந்துவிடக் கூடாதே என்று.

விளாதீமிர் இல்யீச் தமது அறையில் மின் விளக்கை ஏற்கனவே அணைத்துவிட்டார். தூங்குகிறாரா என்று காது கொடுத்துக் கேட்டேன். சந்தடியே இல்லை. தூங்கி வழியலானேன். இதோ ஆழ்ந்து உறங்கியிருப்பேன், அதற்குள் விளாதீமிர் இல்யீச் இருந்த அறையில் விளக்கு பளிச் சென்று எரிந்தது. அவர் அனேகமாக ஓசையின்றிக் கட்டிலிலிருந்து எழுந்ததையும், கதவை மெல்லச் சிறிது திறந்ததையும், நான் ''உறங்கிவிட்டதாக'' (உண்மையில் நான் உறங்கவில்லை) நிச்சயப்படுத்திக்கொண்டு, ஒருவரையும் எழுப்பிவிடாமலிருப்பதற்காக நுனிவிரல்களில் மெதுவாக அடிவைத்து நடந்து எழுதுமேஜை அருகே சென்று, அதன் பக்கம் அமர்ந்து, மைக்கூட்டைத் திறந்து, எவையோ காகிதங்களைப் பரப்பிவைத்துக் கொண்டு வேலையில் ஆழ்ந்துவிட்டதையும் கேட்டேன்.

அவர் எழுதினர், எழுதியதை அடித்தார், படித்தார், குறிப்புகள் எடுத்துக்கொண்டார், மறுபடி எழுதினர். முடிவில் எல்லாவற்றையும் செவ்வையாகப் பெயர்த்து எழுதினர் என்று தோன்றியது. பெட்ரோகிராதின் பின் கூதிர்கால வைகறையொளியால் வானம் சாம்பல் நிறம் அடையத் தொடங்கியபோதுதான் விளாதீமிர் இல்யீச் விளக்கை அணைத்து விட்டுப் படுக்கையில் படுத்து உறங்கினர்.

காலையில் படுக்கைவிட்டெழும் நேரம் வந்ததும், விளாதீமிர் இல்யீச் இரவு முழுவதும் வேலை செய்தமையால் நிச்சயமாக மிகவும் களைத்துப் போயிருப்பார் என்றும், எனவே சந்தடி செய்யாதிருக்கும்படியும் வீட்டிலிருந்தவர்களிடம் சொன்னேன். ஆனல் அவரோ, ஒருவரும் எதிர்பாராதிருக்கையில் திடீரென அறையிலிருந்து வெளி வந்தார். நல்லுடை அணிந்திருந்தார். துடிதுடிப்பும் புதுமைப் பொலிவும் உற்சாகமும் களிப்பும் பொங்க வேடிக்கையாகப் பேசினர்.

''சோஷலிஸப் புரட்சியின் முதல் நாள் வாழ்த்துக்கள்!'' என்று எல்லோருக்கும் வாழ்த்துக் கூறினர். அவர் முகத்தில் களைப்பின் சுவட்டையே காணேம், அவர் நன்கு தூங்கியது போல. உண்மையிலோ, அவர் உறங்கியதெல்லாம் அதிகமாய்ப் போனல் இரண்டு மூன்று மணி நேரம்தான். அதுவும் இருபத்து நான்கு மணி நேரம் இடைவிடாத பயங்கர உழைப்புக்குப் பின். நாங்கள் எல்லோரும் காலை ஆகாரத்துக்காகக் கூடினேம். எங்கள் வீட்டில் இரவைக் கழித்த நதேஜ்தா கான்ஸ்தாந்தீனவ்னவும் வந்து சேர்ந்தார். அப்போது விளாதீமிர் இல்யீச் திருத்தமாகப் பெயர்த்து எழுதப்பட்ட சில காகிதங்களைக் கோட்டுப் பையிலிருந்து எடுத்து, தமது புகழ் பெற்ற ''நிலம் பற்றிய ஆணைப்பத்திரத்தை'' எங்களுக்குப் படித்துக் காட்டலானர்.

''இதை மட்டும் நாம் பிரகடனம் செய்து, பிரசுரித்து விரிவாகப் பரப்ப முடியுமானுல்! அப்புறம் இதை வாபஸ் பெற யார் என்ன வேண்டுமானுலும் முயலட்டும்! நடக்க வே நடக்காது. இந்த ஆணைப் பத்திரத்தைக் குடியானவர் களிடமிருந்து பிடுங்கிக்கொள்ளவும் நிலச்சுவான்தார் களுக்கு நிலத்தைத் திருப்பிக் கொடுக்கவும் எந்த ஆட்சி யாலும் முடியாது. இதுதான் நமது அக்டோபர்ப் புரட்சி யின் மிக முக்கியமான வெற்றி. நில உடைமைப் புரட்சி இன்றே நிறைவேற்றப்பட்டு உறுதிப்படுத்தப்படும்.''

உள்ளூர்களில் நிலம்பற்றிய பலவித ஒழுங்கீனங்களும் போராட்டங்களும் இன்னும் நடக்கும் என்று ஒருவர் கூறினுர். லெனினே, இவை எல்லாம் சில்லறை விஷயங் கள் என்றும் அடிப்படைகள் மட்டும் புரிந்துகொள்ளவும் உட்கிரகித்துக் கொள்ளவும் பட்டுவிட்டால் இவை எல் லாம் தாமே நேராகிவிடும் என்றும் உடனே பதிலளித் தார். இந்த ஆணைப் பத்திரம் குடியானவர்களால் சிறப் பாக ஏற்கப்படக் கூடியது என்றும், ஏனெனில் குடியான வர்களால் தங்கள் பிரதிநிதிகளுக்கு அளிக்கப் பட்ட எல்லா உரிமைக் கட்டளைகளிலும் அடங்கியவையும் சோவியத்துக்களின் காங்கிரஸுக்கு அளிக்கப் பட்ட பொது உரிமைக் கட்டளைகளில் பிரதிபலித்தவையுமான கோரிக்கைகளின் அடிப்படையிலேயே தாம் இதைத் தயாரித்திருப்பதாகவும் அவர் விரிவாக விளக்க லானுர்.

''ஆனுல் அவர்களெல்லாம் சோஷலிஸ்ட்-புரட்சிவாதி கள் ஆயிற்றே. நாம் அவர்களிடமிருந்து கடன் வாங்கிய தாக மக்கள் சொல்வார்களே'' என்று ஒருவர் ஆட்சேபம் தெரிவித்தார்.

விளாதீமிர் இல்யீச் புன்னகைத்தார்.

''சொல்லட்டுமே. தங்களுடைய நியாயமான கோரிக் கைகளை நாம் எப்போதும் ஆதரிக்கிறேம் என்று குடியான

வர்கள் தெளிவாகப் புரிந்துகொள்வார்கள். குடியானவர்களுக்கு, அவர்களுடைய வாழ்க்கைகளுக்கு, அவர்களுடைய தேவைகளுக்கு நாம் மிக நெருங்கிவர வேண்டும். சில முட்டாள்கள் சிரிப்பார்கள் என்றுல் சிரித்துவிட்டுப் போகட்டும். குடியானவர்கள் மீது ஏகபோக உரிமையை சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளிடம் ஒப்படைத்து விடுவதாக நாம் ஒருபோதும் எண்ணவில்லை. நாம் பிரதான அரசாங்கக் கட்சியினர். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கு அடுத்தபடியாக எல்லாவற்றிலும் முக்கியமானது குடியானவர்களின் பிரச்சினை.''

நிலம் பற்றிய ஆணைப்பத்திரம் காங்கிரஸில் அன்று மாலையே பிரகடனம் செய்யப்படவிருந்தது. மறுநாள் செய்தித்தாளில் பிரசுரிக்கக் கொடுப்பதற்காக உடனேயே அதை டைப் செய்வதென்று தீர்மானிக்கப்பட்டது. எல்லாச் செய்தித்தாள்களும் அரசாங்கப் பிரகடனங்களைக் கட்டாயமாக வெளியிடச் செய்யும் ஆணை ஒன்றைப் பிறப்பிக்கும் யோசனை அப்போதுதான் விளாதீமிர் இல்யீச்சுக்கு உதயமாயிற்று.

நிலம் பற்றிய ஆணைப் பத்திரத்தைத் தனிச் சிற்றேடாக ஐம்பதினுயிரம் பிரதிகளாவது அச்சடித்து கிராமங்களுக்குத் திரும்பும் படைவீரர்களிடையே முதலில் வினியோகிப்பது என்றும், இவ்வாறு அது பொது மக்களிடையே விரைவிலேயே விரிவாகப் பரவிவிடும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. அடுத்த சில நாட்களில் இந்தச் செயலும் சிறப்பாக நிறைவேற்றப்பட்டது.

சற்று நேரத்தில் நாங்கள் கால் நடையாக ஸ்மோல்னிய்க்குப் புறப்பட்டோம். அப்புறம் டிராம் வண்டியில் ஏறிக்கொண்டோம். தெருக்களில் காணப்பட்ட ஆதர்ச ஒழுங்கை நோக்கி விளாதீமிர் இல்யீச் முகம் மலர்ந்தார். மாலை எப்போது வரும் என்று பொறுமையின்றித் துடித்தார். இரண்டாவது அகில ருஷ்யக் காங்கிரஸ் சமாதானம் பற்றிய ஆணைப் பத்திரத்தை அங்கீகரித்ததும், நிலம் பற்றிய ஆணைப்பத்திரத்தை அவர்

படித்தார். அது உற்சாகமாக, ஏகமனதாக அங்கீகரிக்கப் பட்டது.

ஆணைப் பத்திரம் அங்கீகரிக்கப்பட்டதுமே நான் விசேஷ அஞ்சல்காரர்கள் மூலம் அதன் பிரதிகளைப் பெத் ரோகிராதிலுள்ள எல்லாச் செய்தித்தாள் அலுவலகங் களுக்கும் அனுப்பி வைத்தேன். மற்ற நகரங்களுக்குத் தபால் மூலமாகவும் தந்தி வாயிலாகவும் உடனே அனுப்பினேன். நமது செய்தித்தாள்கள் அதை முன்னரே அச்சடிக்கத் தயாராக்கி வைத்திருந்தன. மறு நாள் காலையிலேயே லட்சக்கணக்கிலும் பத்துலட்சக் கணக்கிலும் மக்கள் அதைப் படித்தார்கள். உழைப்பாளி மக்கள் அனை வரும் அதைப் பேருவகையுடன் வரவேற்றார்கள். பூர்ஷ்வாக் களோ, தங்கள் செய்தித்தாள்களில் சீறினார்கள், குலைத் தார்கள். ஆனால் அப்போது அவர்களை யார் மதித்தார் கள்?

விளாதீமிர் இல்யீச் மகிழ்ச்சியில் திளைத்தார்.

''இந்த ஒன்று மட்டுமே நமது வரலாற்றில் மிக மிக நீண்ட காலத்துக்குத் தனது சுவட்டைப் பதித்துவிடும்'' என்றார் அவர்.

மிக மிக வளமான புரட்சிகரப் படைப்புச் செயல் கால கட்டம் வெகு வெற்றிகரமாகத் தொடங்கியது. நிலம் பற்றிய ஆணைப் பத்திரத்தின் எத்தனை பிரதிகள் செய்தித் தாள்கள் தவிர, படைவீரர்களிடையேயும் குடியானவர் களிடையேயும் வினியோகிகப்பட்டன என்று வெகு காலம் வரை விளாதீமிர் இல்யீச் ஓயாமல் விசாரித்துக் கொண் டிருந்தார். அது புத்தக வடிவில் பல தடவைகள் பதிப்பிக் கப்பட்டது. மாநில, மாவட்ட நகரங்களில் மட்டுமே அல்ல, ருஷ்யாவின் எல்லா மாவட்டச் சிற்றூர்களிலும் அதன் ஏராளமான பிரதிகள் இலவசமாக வினியோகிக் கப்பட்டன.

நிலம் பற்றிய ஆணைப் பத்திரம் எங்கும் பிரபலமாகி விட்டது. நிலம் பற்றிய இந்தச் சட்டம் நமது புதிய, சோஷலிஸச் சட்ட நிர்மாணத்தின் அடிப்படைச் சட்டங்களில் ஒன்று. இதை இயற்றுவதில் விளாதீமிர் இல்யீச் தமது ஆற்றலையும் ஊக்கத்தையும் வெகுவாக ஈடுபடுத்தினர், அதைப் பெருத்த முக்கியத்துவம் உள்ளதாக மதித்தார். வேறு எந்தச் சட்டமும் நம் நாட்டில் இந்தச் சட்டம் போன்று இவ்வளவு விரிவாக ஒருபோதும் பிரசுரிக்கப் பட்டதில்லை.




# சோவியத் அரசு இலச்சினை

நமது சோவியத் நாட்டின் அரசு இலச்சினையை உருவாக்குவது பெருத்த முக்கியத்துவம் உள்ள காரியமாக இருந்தது. ஏனெனில் இத்தகைய இலச்சினையின் உள்ளர்த்தம் முதலாளித்துவ அரசுகளின் இலச்சினைகளது உள்ளர்த்தத்திலிருந்து திட்டமாக வேறு பட்டிருப்பது அவசியமாயிருந்தது.

நீர் வண்ணங்களால் தீட்டப்பட்ட இலச்சினையின் மாதிரிப் படம் மக்கள் கமிஸார்கள் சபை நிர்வாக அலுவலகத்துக்குக் கொண்டுவரப்பட்டது. அது இப்போது உள்ள இலச்சினை போலவே வட்டமாக, இதே சின்னங்கள் கொண்டிருந்தது. ஆனால் உறையிடப்படாத வாள் ஒன்று அதன் நடுவில் கீழிருந்து மேல்வரை நீட்டிக்கொண்டிருந் தது. இந்த வாள் இலச்சினை முழுவதிலும் வியாபித் திருப்பதுபோலத் தோன்றியது. வாளின் பிடி அடியில் கதிர்களை இணைத்திருந்த பட்டை மீது சார்ந்திருந்தது. வரவரக் குறுகலான அதன் அலகு, பொதுச் சித்திரத்தின் மேற்பகுதியாக விளங்கிய சூரியனின் கதிர்களின் ஊடாக மேலே துருத்தியிருந்தது.

விளாதீமிர் இல்யீச் தமது அலுவலறையில் யா. மி. ஸ்வெர்திலோவ், பே. யெ. த்ஸெர்ஷீன்ஸ்க்கிய், வேறு பல தோழர்கள் ஆகியோருடன் பேசிக் கொண்டிருந்தார். அப்போது இந்த மாதிரிப்படம் அவர் முன்னே வைக்கப் பட்டது.

‘‘என்ன இது? அரசு இலச்சினையா? எங்கேபார்ப்போம்!’’ இவ்வாறு கூறி, அவர் மேஜைமீது குனிந்து படத்தை ஆராய்ந்தார். அவரைச் சூழ்ந்து நின்ற நாங்கள் படத்தை ஆவலுடன் பார்வையிட்டோம். ‘‘கோஸ்நாக்’’ அச்சக ஓவியன் ஒருவனால் தீட்டி அனுப்பப்பட்டிருந்தது அது.

இலச்சினை மொத்தத்தில் நல்லதாகவே தோன்றியது. இரு புறமும் கோதுமைக் கதிர்களால் விளிம்பு கட்டப் பட்டு விளங்கின இளஞ்சூரியனின் கிரணங்கள். கதிர்களின் நடுவே, சிவப்புப் பின்புலத்தில் சம்மட்டியும் அரிவாளும் தெளிவாகத் தீட்டப்பட்டிருந்தன. அடியிலிருந்து முடிவரை

நீண்டிருந்த கூரிய வாளலகு எல்லோருக்கும் எச்சரிக்கை விடுப்பதுபோலப் படத்தில் மேலோங்கி நின்றது.

''அக்கறைக்குரிய படம். கருத்து இதில் இருக்கிறது, ஆனால் வாள் எதற்காக?'' என்று எங்களை ஏறிட்டுப் பார்த்தார் விளாதீமிர் இல்யீச்.

''நாம் போராடிக்கொண்டிருக்கிறோம், யுத்தம் செய்து கொண்டிருக்கிறோம். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை வலுவாக நிறுவி, வெண்படையினரையும் வெளிநாட்டுத் தலையீட்டாளர்களையும் நம் நாட்டிலிருந்து விரட்டி அடிக்கும் வரை தொடர்ந்து போர் புரிவோம். ஆனால் யுத்தம், இராணுவமும் இராணுவ வன்முறையும் நம் நாட்டில் எப்போதேனும் மேலோங்கி நிற்கும் என்று இதற்கு அர்த்தம் அல்ல. நமக்குப் பிற நாடுகளை வெல்வது தேவையே இல்லை. பிற நாடுகளை வெல்லும் கொள்கை நமக்கு முற்றிலும் புறம்பானது. நாம் தாக்கவில்லை, உள்நாட்டு, வெளி நாட்டுப் பகைவர்களின் தாக்குதல்களை எதிர்த்து முறியடிக்கிறோம். நமது போர் தற்காப்புப் போர். வாள் நமது சின்னம் அல்லவே அல்ல. நமக்குப் பகைவர்கள் இருக்கும்வரை, அவர்கள் நம்மைத் தாக்கிக் கொண்டிருக்கும்வரை, அவர்கள் நம்மை அச்சுறுத்திக் கொண்டிருக்கும்வரை, நமது பாட்டாளி வர்க்க அரசைத் தற்காக்கும் பொருட்டு நாம் வாளை உறுதியாகக் கையில் பிடித்துக் கொண்டிருக்க வேண்டியது தான். ஆனால் நிலைமை எப்போதும் இவ்வாறே இருந்துவரும் என்பது அதன் பொருள் அல்ல....

''சோஷலிஸம் எல்லா நாடுகளிலும் வெற்றி அடைந்தே தீரும்—அதில் சந்தேகத்துக்கே இடமில்லை. நாடுகளின் சோதர அமைப்பு உலகம் முழுவதிலும் பிரகடனம் செய்யப்பட்டுச் செயல்படுத்தப்படும். நமக்கு இந்த வாள் தேவை இல்லை. இது நமது சின்னம் அல்ல'' என்று மீண்டும் கூறினார் விளாதீமிர் இல்யீச்.

''நமது சோஷலிஸ அரசின் இலச்சினையிலிருந்து நாம் இந்த வாளை அகற்றியாக வேண்டும்'' என்று அவர் பின்னும்

சொன்னார். கூரிய பென்சில் ஒன்றை எடுத்து, வாளை அகற்றும்படி அச்சகக் குறியிட்டு, வலது ஓரத்திலும் அதே குறியை இட்டார்.

''மற்றப்படி இலச்சினை நன்றாயிருக்கிறது. மாதிரியை அங்கீகரிப்போம். பின்பு மக்கள் கமிஸார்கள் சபையில் அதை மீண்டும் பார்வையிட்டு விவாதிப்போம். ஆனால் இதை எல்லாம் விரைவில் செய்து முடிக்க வேண்டும்....''

இவ்வாறு சொல்லி மாதிரிப் படத்தில் கையெழுத் திட்டார்.

''கோஸ்நாக்'' அச்சக ஓவியன் அங்கேயே இருந்தான். நான் படத்தை அவனிடம் கொடுத்து, இலச்சினையை மாற்றி அமைக்கும்படி கூறினேன்.

மறுமுறை, வாள் இல்லாமல், படம் எங்களிடம் அனுப் பப்பட்டதும் அதைச் சிற்பி அந்திரேயெவிடம் காட்டுவது என்று தீர்மானித்தோம். அதில் சில தொழில்முறைத் திருத்தங்கள் செய்வது அவசியம் என அவர் கருதினார். இலச்சினையை அவர் திரும்ப வரைந்தார், கதிர்க்கட்டுக்களை இன்னும் பருமனாக்கினார், ஒளி வீசும் சூரிய கிரணங்களை முன்னிலும் துலக்கமாகத் தீட்டினார், முழுப் படத் தையும் அதிகத் தெளிவாக்கி, அதன் கருத்து முன்னிலும் பளிச்சென வெளிப்படும்படி செய்தார்.

ருஷ்ய சோவியத் கூட்டு சோஷலிஸக் குடியரசின் அரசு இலச்சினை 1918ம் ஆண்டுத் தொடக்கத்தில் அங்கீ கரிக்கப்பட்டது.

சிவப்பு நட்சத்திரம் போன்றே சோவியத் குடியரசின் இந்த அரசு இலச்சினை உலகின் எல்லாப் பாட்டாளி மக்களதும், எல்லா உழைப்பாளிகளதும் சின்னமாக விளங்குகிறது.

வி. இ. லெனின், ந. கா.க்ரூப்ஸ்க்காயா, ம. இ. உல்யாஞெவா ஆகியோர், செஞ் சதுக்கத்தில் நடந்த வீரர்கள் அணி வகுப்பில். மாஸ்கோ, 1919, மே 25



# அலெக்ஸாந்தர் பேக்

சோவியத் உரைநடை ஆசிரியர் அலெக்ஸாந்தர் பேக் அரசாங்கப் பரிசு பெற்றவர். ''பெரெஷ்கோவின் வாழ்க்கை'' என்ற நவீனமும் ''வலக்கொலாம்ஸ்க் நெடுஞ்சாலை'' என்ற தலைப்பில் தொகுக்கப்பட்ட நான்கு தொடர் கதைகளும், பல சிறுகதைகளும் கட்டுரைகளும் அவரது பெயரைப் பிரபலமாக்கி யுள்ளன. வரலாற்றின் நிகழ்ச்சி விவரங்களுக்குக் கலை வாழ்வு அளிக்கும் திறன் பேக்கின் படைப் பாற்றலின் சிறப்பாகும். ''லெனினது கடிதம்'' என்ற சிறு கதை 1956ம் ஆண்டில் வெளியான சிறந்த சிறுகதைகளின் திரட்டில் முதன் முறை பதிப்பிக்கப் பெற்றது.

# லெனினது கடிதம்

## 1

விராங்கெல் 1920ம் ஆண்டு முடிவில் முறியடிக்கப்பட்டதுமே, தெற்குப் போர்முனையில் இருந்த ஒரு சைனியத்தின் புரட்சிகர இராணுவ சபை உறுப்பினன் ஆகிய கிளியாவின் இராணுவத்தில் கம்யூனிஸ்ட் கட்சி ஒழுங்கமைப்பாளர்களாக இருந்த வேறு பலருடன் தொழிற்சாலைகளைச் சீரமைக்கும் பணிக்கு மத்தியக் கமிட்டியால் மாற்றப்பட்டான். நான்கு ஆண்டுகள் ஏகாதிபத்தியப் போரினாலும் மூன்று ஆண்டுகள் உள்நாட்டுப் போரினாலும் பீடிக்கப்பட்டிருந்த பரந்த நாடு முழுவதிலும் ஒரே ஒரு ஊதுலை மட்டுமே இன்னும் இயங்கிக்கொண்டிருந்தது. அதுதான் ஸ்தாரோ-பெத்ரோவ்ஸ்க் தொழில் நிலையத்தின் ஆறும் எண் ஊதுலை. அனேகச் சுரங்கங்களும் ஒரு உருக்காலையும் ஒன்றிணைந்த ஸ்தாரோ-பெத்ரோவ்ஸ்க் தொழில் நிலையத்திற்குத் தான் கிளியாவின் இயக்குனராக அனுப்பப்பட்டான்.

அலுவலக ஊழியர்களும் அரசியல் செயலகத்தினரும் அமர்ந்திருந்த அவனது ரெயில்வண்டி பனிக்கால இரவில் பயண இலக்கைச் சென்றடைந்தது. சிறிய தடமாற்ற எஞ்சின் ஒன்று ரெயில்வண்டியைத் தொழிற்சாலைப் பாதையில் இழுத்துப் போயிற்று. வண்டிக் கோடியிலிருந்த மேடையிலிருந்து கிளியாவின் வெளியே பார்வையைச் செலுத்தினான். தன்னந்தனி ஊதுலையின் எரியொளிர்வு இருளின் ஊடாகச் சற்றே புலப்பட்டது. உலைகளின் உச்சியில் இருந்த இரும்புப் பின்னல் சட்டங்களையும் வெப்ப ஊது கணப்புக்களின் மௌன நிழலுருக்களையும் கிளியாவின் உற்று நோக்கினான். செங்குத்தாக வைக்கப்பட்டிருந்த பிரமாண்டமான பீரங்கிக் குண்டுகள் போன்றிருந்தன அந்தக் கணப்புக்கள். சாம்பல் நிறக் காரைக் கட்டிடங்களின் ஜன்னல் கண்ணாடிகள் நொறுங்கி விழுந்து

விட்டமையால் இடிந்த ஜன்னல்கள் கறேலெனக் காட்சி யளித்தன.

கிளியாவின் புரட்சிக்குமுன் கணித ஆசிரியனுக இருந்தான். தொழிற்சாலே எதிலும் அவன் ஒருபோதும் வேலே செய்தது கிடையாது. இந்த இயக்கமற்ற அரக்கர்களே உயிர்த்தெழச் செய்யும் பொறுப்பு இப்போது அவன்மீது சாந்திருந்தது.

வேலேயில் ஈடுபட்டதும் கிளியாவின் தனக்கு நன்கு பழக்கமான இராணுவ நிர்ப்பந்த முறைகளேக் கையாண்டான். அச்சுறுத்தும் ஆணேகளே எழுதினுன். ஆனுல் ஒரு பயனும் விளேயவில்லே. அப்போது அவன் தினப்படி ஸுபோத்னிக்குகள்* நடத்தி, தொழிலாளரின் அணிகளுக்குத் தானே தலேமை தாங்கலானுன். இராணுவ அரசியல் அமைப்பாளர்களும் தொழிற்சாலேக் கம்யூனிஸ்டுகளும் எந்த எதிரியையும் முறியடிப்பதற்குப் போதுமான அளவு தொழிலாளர்களின் உற்சாகத்தைத் தூண்டி ஊக்கினுர்கள். கிளியாவின் முன்னணிப் படைவீரனுக்குரிய இயல்பூக்கத்தால் இதை நன்கு உணர்ந்தான். குற்றுயிராய்க் கிடந்த தொழிற்சாலே அரக்கன் இயங்கத் தொடங்கி விட்டான் போலத் தோன்றியது. ஆனுல் சில வாரங்களுக்கெல்லாம் உற்பத்தி அளவு தடுக்க முடியாதவாறு கீழ் நோக்கிச் சரிந்தது. எதிர்பார்த்த அற்புதத்தை விளேக்காமலே தாக்குதல் வலிமையிழந்துவிட்டது. தொழிலாளரின் அணிகள் நாளுக்கு நாள் சுருங்கிக்கொண்டு போயின. ஆயினும் கிளியாவின் மனம் சோரவில்லே. தோற்று விட்டோம் என அவன் உணர்ந்தபோதிலும் ஒரு சில செம்படைவீரர்களேயும் தொழிலாளர்களேயும் மீண்டும்

---

* **ஸுபோத்னிக்** — சோஷலிஸ அரசின் நலத்துக்காகச் சுயேச்சையான ஒழிவு நேர வேலேயின் ஒரு வடிவம். முதலாவது ஸுபோத்னிக் மாஸ்கோவில் 1919, மே 10ந் தேதி நடத்தப் பெற்றது. அன்று ஸுபோத்தா (சனிக் கிழமை). எனவே இம்மாதிரி வேலே ஸுபோத்னிக் என்ற பெயர் பெற்றது.

மீண்டும் ஸுபோத்னிக்குக்களில் தலைமைதாங்கி நடத்திச் சென்றான்.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான வழியையே ஓயாமல் தேடி மூளையைக் குழப்பிக் கொண்டிருந்த கிளியாவின் உறங்குவதை அனேகமாக நிறுத்தி விட்டான். கருத்து வெளியிடும் உரிமை மட்டும் பெற்ற பிரதிநிதியாக அவன் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பத்தாவது காங்கிரஸுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தான். எனினும் அதற்குச் செல்ல மறுத்துவிட்டான். தனது பிரச்சினைக்குத் தீர்வு காணமல் மாஸ்கோ போக அவன் விரும்பவுமில்லை, அவனால் போக முடியவுமில்லை.

இறுதியில் தீர்வு கண்டுவிட்டான்.

*1921* மே மாத மாலை ஒன்றில் அவன் லெனினது அலுவலறையை ஒட்டிய வரவேற்பறையில் உட்கார்ந்திருந்தான்.

செக்ரெட்டரி அவன் வருகையை லெனினுக்கு அறிவிக்கச் சென்றிருந்தாள் ஆதலால் அவன் தனியாக இருந்தான். கிளியாவினது இளம் முகம் வெளிறியிருந்தது. அவன் உதடுகளில் அடிக்கடி மலர்ந்த புன்னகை, அற்ப ஓசை கேட்டாலும் சட்டென மறைந்தது. பிரபலமற்ற ஸ்தாரோ-பெத்ரோவ்ஸ்க்கில், ஓர் அற்பப் பகுதியில், அவன், அதாவது கிளியாவின், சோஷலிஸத் தேற்றங்கள் சரியானவையே என்பதை நடைமுறையில் நிரூபித்திருந்தான். வரைப்படங்களும் கணக்கு அறிக்கைகளும் அவனுடைய தோல் பையில் பத்திரமாயிருந்தன. இதோ அவன் அவற்றை எடுத்து லெனின் முன்னே வைக்கப் போகிறான்....

கதவு திறந்தது. செக்ரெட்டரி பெரிய கற்றைக் காகிதங்களுடன் வெளியே வந்தாள். கிளியாவின் உடல் முழுவதையும் நீட்டி அவள் புறம் சட்டெனச் சாய்ந்தான்.

''நீங்கள் உள்ளே போகலாம், தோழரே.... ஆனால் விளாதீமிர் இல்யீச்சின் நேரத்தை மட்டுமீறிப் பறித்துக் கொள்ளாதீர்கள்'' என்றாள் அவள்.

தமது சிறு மேஜையின் பின்னிருந்து எழுந்து புன்னகையுடன் அவனை வரவேற்றார் லெனின்.

''அடேடே, இளைத்துப் போய்விட்டீர்கள், இளைத்துப் போய்விட்டீர்கள்! வணக்கம், தோழர் கிளியாவின்!''

இந்தச் சொற்களைக் கேட்டதும் கிளியாவினின் தொண்டை வறண்டுவிட்டது, உதடுகள் உலர்ந்து போயின. லெனின் அவனை எப்படி நினைவு வைத்துக்கொண்டிருக்கிறார்? இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, 1919ல் கிளியாவின் மக்கள் கமிஸார்கள் சபைக் கூட்டங்களில் சில தடவைகள் கலந்துகொண்டான், ஒரு தரம் லெனினுடன் உரையாடினான். அப்படியிருக்க லெனின் இன்னுமா அவனை நினைவு வைத்துக் கொண்டிருக்கிறார்? ஓரளவு சிதைந்த ரகர உச்சரிப்பு கொண்ட சொற்கள் அவனிடம், கிளியாவினிடம் தானா கூறப்படுகின்றன? அந்தப் புன்னகை பூத்த முகத்தையும், அன்பு ததும்பச் சுருங்கிய விழிகளையும், பெருத்த முழைப்புக்கள் கொண்ட பிரமாண்டமான பளிச்சிடும் நெற்றியையும் மட்டுமே நோக்கியவாறு அறையைக் கடந்தான் கிளியாவின். மென்று விழுங்கிக் கொண்டு, ''வணக்கம், விளாதீமிர் இல்யீச்!'' என்று படு சிரமத்துடன் கூறினான்.

''உட்காருங்கள். விவரமாகச் சொல்லுங்கள், உங்கள் டொனேட்ஸ் சுரங்கப் பிரதேசத்தில் புதினங்கள் என்ன?''

கிளியாவின் முன்கூட்டித் தயாரித்து வைத்திருந்த சொற்கள் யாவும் எங்கோ சிதறி மறைந்துவிட்டன. தோல்பையை இரு கைகளாலும் பற்றினான். அவனுடைய விவரங்கள் எல்லாம் அதற்குள் இருந்தன. இதோ வெளியில் எடுத்து விடுவான்....

போதாத வேளை, தோல்பையின் பூட்டு திறக்க மாட்டேன் என்றுவிட்டது. நீடித்த மௌனத்தாலும் தனது லாகவமின்மையாலும் சள்ளைப்பட்டவனாய், அவன் அதை முழு பலத்தோடும் இழுத்தான். திடீரென்று (ஐயோ

வெட்கமே! ஐயோ பயங்கரமே!) சடாரெனத் திறந்த தோல்பைக்கு உள்ளிருந்து லெனினது காகிதங்கள் மேல் பாய்ந்து விழுந்தன ஒரு சோப்புத் துண்டும் குளியல் நார்க் கட்டும் — குளிக்கும்போது உடம்பைத் தேய்த்துக் கொள்வதற்கான சாதாரண நார்க்கட்டு அது.

லெனின் குதூகலமாக வாய்விட்டுச் சிரித்தார். கிளியாவினுக்குக் கைகால் மரத்துப் போயிற்று. முகம் குப்பெனச் சிவந்துவிட்டது. பிய்ந்த தோல் பையையே நோக்கியவாறு இருந்தான். லெனினை ஏறிட்டுப் பார்க்க அவனுக்குத் துணிவு வரவில்லை. பாழாய்ப் போகிற கால்யா! பொதுக் குளியறைக்கு அவன் போக வேண்டும் என்று அவள்தான் ஏதோ பிதற்றிக்கொண்டிருந்தாள். கடைசியில் நார்க்கட்டைத் தோல்பைக்குள் திணித்து விட்டிருக்கிருள்.

''மாஸ்கோ வந்ததைக் கொண்டாடுவதற்காகப் பொதுக் குளியறைக்குப் போவதாக எண்ணமோ?''

''ஆம்.''

''நீராவிக் குளியலோ? மாஸ்கோ குளியிடங்களில் நீராவி அறைகள் இயங்குகின்றனவா?''

''ஆமாம்.''

''கதை கட்டவில்லையே நீங்கள்?''

லேசான பிரம்பு நாற்காலியை நகர்த்திவிட்டு, பொத் தான்கள் போடப்படாத கோட்டும் தானுமாகப் பெரிய புத்தக அலமாரியைக் கடந்து நடந்தார் லெனின்.

''இது அருமையான சேதி! போல்ஷெவிக் ஆட்சியில் கூட நீராவி ஸ்நானம் செய்ய முடியும், அல்லவா?''

அவர் கைகளை அழுத்திக் தேய்த்துக்கொண்டார், முதுகை அசைத்தார், தொண்டையைக் கனைத்துக் கொண் டார்—கொதிநீரை ஒரு வாளி மேலே ஊற்றிக்கொண் டவர் போல. கண்கள் பளிச்சிட லெனின் கலகலவென நகைத்தார். அவருடைய செம்பட்டை மீசை புன்னகையில் பாதி திறந்த பருத்த உதடுகளை மறைக்கவில்லை.

அந்தச் சிரிப்பில் வெளிப்பட்டது தலைவரின் கணக்

கீடுள்ள திருப்தி அல்ல. சாதாரணமான, தன்னலம் அற்ற மகிழ்ச்சி அது. அவரை ஆட்கொண்ட உணர்ச்சி மிகவும் மனிதத்தன்மை வாய்ந்தது, புரியக்கூடியது. எனவே கிளியாவின் நார்க்கட்டை அறவே மறந்துவிட்டான். கட்டிப் போட்டதுபோன்ற உணர்ச்சி மறைந்துவிட்டது. லெனினுக்கு முன்னே இருப்பது அவனுக்கு சகஜமாகி விட்டது.

ஆனால் அதற்குள் லெனினது முகபாவம் மாறி விட்டது.

''நாங்களும் நல்ல ஆட்கள்தாம். செய்தித்தாள்களில் என்னென்னவெல்லாமோ—அது பாழாய்ப் போக— எழுதித் தள்ளுகிறோம். அற்பக் கருத்துரைகளைக் கற்பித்து வரைகிறோம். ஆனால் பொதுக் குளியிடங்களைப் பற்றி எழுதலாம் என்பது ஒருவர் புத்திக்கும் எட்டவில்லை.''

அவர் கடுப்புடன் கைகளைக் கோட்டுப் பைகளுக்குள் நுழைத்துக் கொண்டார். அவருடைய புருவங்களுக்கு நடுவே விட்டவாகான சுருக்கங்கள் தோன்றின.

''மாஸ்கோ குளியறையில் மனமார ஆவி ஸ்நானம் செய்ய எனக்கு இனி ஒருபோதும் வாய்க்காது. படு சங்கடம் பிடித்த வேலை என்னுடையது....''

லெனின் பெருமூச்சு விட்டு, ''மக்கள் கமிஸார்கள் சபைத் தலைவர்'' என்ற முத்திரை பொறித்த பெரிய குறிப்புப் புத்தகத்தைச் சுட்டிக் காட்டினார். அவரது விழிகளில் மின்னிட்ட கேலியைக் கிளியாவின் கண்டு கொண்டான்.

நேரம் கடத்தக் கூடாது, லெனினது வேலைநேரத்தில் ஒவ்வொரு கணமும் விலைமதிப்பற்றது என்பதைப் புரிந்து கொண்டு கிளியாவின் விவரிக்கத் தொடங்கினான்.

விளாதீமிர் இல்யீச் லெனினது மேஜைமேல் நான்கு ஸ்டியரின் மெழுகுவத்திகள் வைக்கப்பட்டிருந்தன. நாடு முழுவதையும் கொடுமையாகப் பீடித்திருந்த பொருளா தாரச் சீரழிவு இங்கும் எட்டிவிட்டது, மாஸ்கோ மின் னுக்க நிலைய நீராவி டர்பைன்கள் நின்றுவிடும்போது இங்

கேயும் மின் விளக்குகள் அணைவதுண்டு என்பதற்குச் சான்று கூறின மெழுகுவத்திகளின் எரிந்து கருண்ட திரிகள். லெனின் உட்கார்ந்தார். பின்பு எழுந்து, கிளியாவினின் முகத்தை மறைத்துக்கொண்டிருந்த மெழுகுவத்திகளை அப்பால் நகர்த்தினர். கிளியாவின் கவனிக்காதவாறு லாகவமாகக் குளியல் நார்க்கட்டைக் காகித அடுக்குகளுக்கும் புத்தகங்களுக்கும் நடுவே கண்ணில் படாதபடி மறைத்தார். அப்புறம் முழங்கைகளை ஊன்றிக்கொண்டு, உரையாடுபவனுக்கு அருகே இருக்கும்வகையில் மார்பு மேஜைமீது படும்படி முன்னே சாய்ந்தார். அவரது இடக்கண் சுருங்கியது, புருவம் ஒரேயடியாக வளைந்தது. ஒரு முனைப்பட்ட கூர்ந்த கவனம் அவர் முகத்தில் காணப்பட்டது. தந்திரப் புன்னகை அவரது உதடுகளில் பளிச்சிட்டு மறைந்தது. சில வேளைகளில் லெனினுடைய விழிகள் கிளியாவினைக் குடைந்து ஊடுருவுபவை போலக் கூர்ந்து நோக்கின.

கூச்சமே படாமல், தனக்கும் லெனினுக்கும் நடுவே தடுப்பு இருப்பதாக உணராமல், கிளியாவின் உற்சாகமாக, மளமளவென்று பேசினன். தனது தோல்வியடைந்த முயற்சிகளையும் எண்ணங்களையும் சந்தேகங்களையும் விவரித்தான்.

''விளாதீமிர் இல்யீச், முதலாளித்துவ நிர்வாக முறைகளுக்கு முற்றிலும் மாறுன, புதிய முறை ஒன்றை நாம் சிந்தித்து வகுப்பது அவசியம் என்பது வெளிப்படை உண்மையாக எனக்குப் பட்டது. ஆனல் திடீரென்று ஓர் எண்ணம் உதித்தது: எதற்காக இப்படிச் செய்ய வேண்டும்? உழைப்புக்கேற்ற ஊதிய முறையை, மார்க்ஸே எதைப் பற்றி எழுதினரோ அந்த எளிய முறையை நாம் ஏன் எடுத்துக்கொண்டு நமது தேவைக்குப் பயன்படுத்தக் கூடாது?''

''அவ்வளவு எளிதாகவா? அப்புறம்?''

''சம ஊதிய முறைப்படி பதினெட்டாயிரம் பேருக்கு எங்கள் தொழில் நிலையம் உணவளித்துவந்தது. 'ஆமாம்,

இந்த ரொட்டியை வேறு விதமாகப் பங்கிட முடியாதா?' இப்படி நினைத்தேன். பாட்டாளி வர்க்கத்தைச் சேர்ந்திருப்பதற்காக அன்றி, உழைப்புக்காக, உற்பத்தித் திறனுக்காக ரொட்டியை ஊதியமாகக் கொடுக்கக் கூடாதா? தொழிற்சங்கக்காரர்களுக்கு இது கொள்கைமுரண் என்று பட்டது. அவர்களுடன் நான் போராட நேர்ந்தது. ஆயினும் மார்ச் மாதம் முதல் உழைப்புக்கேற்ற ரொட்டி ஊதிய முறையைப் புகுத்திவிட்டேன். அதன் விளைவுகள் இதோ, விளாதீமிர் இல்யீச்.''

கிளியாவின் தனது தோல்பையிலிருந்து விளக்க வரைப்படம் ஒன்றை எடுத்து மேஜைமேல் பரப்பினன். தொடக்கத்தில் அடியில் எங்கோ நெளிந்து கொண்டிருந்த சிவப்புக் கோடு விரைவாக மேல் நோக்கிச் சென்று, 1913ம் ஆண்டில் சுரங்கத் தொழிலாளியின் சராசரி உற்பத்தித் திறனைக் காட்டிய கறுப்புக் கோட்டையும் கடந்து, அதற்கு மேலே நீண்ட நாக்கு போன்று நீட்டியிருந்தது.

லெனினுடைய கண்கள் கோடுகளை விரைவாகப் பார்வையிட்டன. நடு நடுவே எண்களையும் குறிப்புக்களையும் நோக்கின.

''ஆனல் நீங்கள் எப்படி ஊதியம் வழங்குகிறீர்கள்? உதாரணமாக ஒரு சுரங்கத் தொழிலாளி எவ்வளவு உற்பத்தி செய்தால் மூன்று பவுண்டு ரொட்டியை ஊதியமாகப் பெற முடியும்? அளவுமானங்களை நிச்சயித்து விட்டீர்களா?''

''அளவுமானங்களைத் தீர்மானிப்பதற்காகப் பதினெரு ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தினேன். முதிய தொழிலாளிகளுடன் பல நாட்கள் உட்கார்ந்து ஆலோசித்தேன்....''

''அப்படியா? ஊம், ஊம்....''

லெனின் முன்னிலும் அதிக உற்சாகம் அடைந்தார். அளவுமானங்களைத் தீர்மானிக்கும் ஆலோசனைக் கூட்டங்கள் எவ்வாறு நிகழ்த்தப்பட்டன, என்ன மாதிரி விவாதங்களும் நிகழ்ச்சிகளும் நடந்தன, எத்தகைய யோசனைகள் முன்வைக்கப்பட்டன என்று ஆவலுடன் விவரமாகக்

கேட்கலானுர். தனது தகவல்கள் இலக்கை எட்டிவிட்டன, ஸ்தாரோ-பெத்ரோவ்ஸ்க்கின் நிறைவேற்றங்கள், மிகச் சிறு விவரங்கள் உட்பட லெனினது அக்கறைக்கு உள்ளாகிவிட்டன என்பதை அறிந்து கிளியாவின் பெரு மகிழ்வு அடைந்தான். அவன் உற்சாகப் பெருக்குடன் பேசினுன். தன்னைப்பற்றியும் தான் ஆற்றிய பங்கைப் பற்றியும் தனது செயல்களைப் பற்றியும் தான் பட்ட தொல்லைகளைப் பற்றியும் விருப்பமில்லாவிடினும் அவன் குறிப்பிட வேண்டியதாயிற்று. லெனின் அவனை நைச்சியமாக வேறு வழியில் திருப்பி, தொழில் நிலையத் தொழிலாளிகளின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் உண்மை விவரங்களை அவனிடமிருந்து கிரகித்துக்கொண்டார்.

''இந்த முறை எளியதுதானு? ஒவ்வொரு தொழிலாளிக்கும் புரியக்கூடியது தானு? நீங்கள் விஷயங்களைச் சிக்கல்படுத்தவோ குழப்பவோ இல்லையே? இதைப் பற்றி ஏதேனும் கண்டனம் தெரிவிக்கப்படவில்லையா?''

உற்பத்தித் திறன் குறிப்புப் புத்தகங்களையும் தொழிலாளர்களின் சம்பளக் கார்டுகளையும் ரொட்டிச் சீட்டுகளையும் கிளியாவின் எடுத்து, சற்று எழுந்து லெனினுக்குக் காட்டினுன். அவற்றை, எல்லாம் லெனின் கவனமாகப் பார்வையிட்டு மறுபடி கேள்விகள் கேட்டார். 1921ம் ஆண்டு மே மாதம், போர்க்காலக் கம்யூனிஸம் நடப்பிலிருந்ததற்கு மூன்று ஆண்டுகள் பின்னர், உழைப்புக்கேற்ற ஊதிய முறை சோவியத் குடியரசுக்குப் புதிய கண்டுபிடிப்பாக விளங்கியது.

தஸ்தாவேஜுகளை எல்லாம் கூர்ந்து ஆராய்ந்த பிறகு லெனின் பின்னே சாய்ந்து கொண்டார்.

''இதைப் பற்றித் தொழிற்சங்கக் காங்கிரஸில் நாங்கள் விவாதித்திருக்க வேண்டும். ஆட்கள் நிறைய வந்து குழுமினுர்கள், முழுதாக ஆறு நாட்கள் சளசளத்தார்களே தவிர, நூற்றுக் கணக்கான உதாரணங்களிலிருந்து நல்ல ஒன்றைத் தெரிந்தெடுத்து ஆராய்ந்து அதைப்

பின்பற்ற முயலவே இல்லை. சபாஷ், ஸ்தாரோபெத்ரோவ்ஸ்க்காரர்கள்! மெச்சினேன் அவர்களை!'' என்றார்.

மேஜைமேல் கண்ணோட்டினார். விரல்களைச் சுடக்கினார். அவரது விழிகள் எதையோ தேடின. விளக்க வரைப் படத்தைத் தூக்கி, மக்கள் கமிஸார்கள் சபைத் தலைவரது தலைப்புக்குறி அச்சிட்ட குறிப்பு நோட்டை அதற்கு அடியிலிருந்து எடுத்து, பேனாவால் பெரிய வீச்சு எழுத்துக்களில் ஒரு அடித்தல் திருத்தல் இன்றி மளமளவென்று எழுதலானார்.

கிளியாவின் ஆவலை அடக்க மாட்டாமல் எட்டிப் பார்த்து, கடிதம் யாருக்கு எழுதப்படுகிறது என்பதைக் கண்டுகொண்டான். லெனினுடைய வரிகள் ஸ்தாரோ-பெத்ரோவ்ஸ்க் தொழில்நிலையத் தொழிலாளர்களுக்கு எழுதப்பட்டிருந்தன.

கையொப்பமிட்டு மையொற்றிய பின் அந்தப் பக்கத்தை நோட்டிலிருந்து கிழித்துக் கிளியாவினிடம் நீட்டினார் லெனின்.

''அவர்களிடம் கொடுங்கள் இதை'' என்று கூறிவிட்டு, ''ஆமாம், டொனேட்ஸ் சுரங்கப் பிரதேசத்தில், ஷ்தெரோவ்ஸ்க்காயா மின்னுக்க நிலையத்தில் நிலைமை எப்படி இருக்கிறது?'' என்று அதே மூச்சில் வினவினார்.

டொனெட்ஸ் சுரங்கப் பிரதேசத்தைப் பற்றி இன்னும் நெடு நேரம் பல கேள்விகள் கேட்டபின்னர்:

''கேளுங்கள், தோழர் கிளியாவின். மாஸ்கோவில் வெகு நேரம் தாமதிக்காதீர்கள். சீக்கிரம் தொழிற்சாலைக்குத் திரும்புங்கள். கடினமான நாட்கள் வரப் போகின்றன. உணவு நிலைமை மோசமாயிருக்கிறது'' எனக் கூறினார்.

இருக்கையிலிருந்து எழுந்து கிளியாவினின் உடல் நலம் பற்றி விசாரித்தார். மாஸ்கோ அலுவல்களை விரைவில் முடிப்பதற்குத் தமது செக்ரெட்டரி தேவைப் பட்டால் உதவுவார் என்று சொன்னார்.

தான் போக நேரம் வந்துவிட்டது என்று புரிந்து கொண்டு கிளியாவின் விடை பெற்றுக்கொண்டான்.

காகித அடுக்குக்களுக்கும் புத்தகங்களுக்கும் இடையிலிருந்து சோப்பையும் குளியல் நார்க்கட்டையும் வெளியில் எடுத்துக் கிளியாவினிடம் கொடுத்துவிட்டு அடக்க மாட்டாமல் பொங்கிச் சிரித்தார் லெனின்.

3

சில நாட்களுக்குப் பிறகு கிளியாவின் ஸ்தாரோ-பெத்ரோவ்ஸ்க் திரும்பினுன். லெனினுடைய கடிதம் அன்றைய தினமே தொழிலாளர்கள் கூட்டங்களில் படிக்கப்பட்டது. தனது பிரயாணம் பற்றியும் தான் லெனினைச் சந்தித்தது பற்றியும் விஸ்தரிக்கப்பட்ட பிரதிநிதிகள் மகாநாட்டில் அறிக்கை சமர்ப்பிக்க எண்ணினுன் கிளியாவின், ஆனுல் அது இயலவில்லை.

உணவுப் பிரச்சினை, ரொட்டிப் பிரச்சினை, முந்திய ஆண்டுகளின் வசந்த காலத்தில் போன்றே இந்த நாட்களில் மிகக் கடுமையாக, கலவரமூட்டுவதாக ஆயிற்று. அந்த முறை வரவேண்டிய கோதுமை முழுமையாக ஸ்தாரோ-பெத்ரோவ்ஸ்க் வந்து சேரவில்லை. அதற்கு அனுப்பப்பட்ட சில ரெயில்வே வாகன்கள் வழியில் கழற்றப்பட்டு வேறு முகவரிக்குத் திருப்பப்பட்டுவிட்டன. ஓர் இரவு கிளியாவின் தனது ஆர்டர்லியுடன் நாற்பது கிலோமீட்டர் குதிரைச் சவாரி செய்து மாநிலத் தலைநகர் பாஹ்மூத் சேர்ந்தான்.

அந்த ஆண்டு டொனேட்ஸ் சுரங்கப் பிரதேசத்தில் இரவுகளில் விளக்குகள் எரியவில்லை. பாதி வழியில் இருந்த கோர்லொவ்க்கா நகரத்தை விளக்கு ஒளியால் அல்ல, பல பத்தாண்டுகளாகக் குவிந்து கிடந்த உலோகக் கசடுகளின் பிரமாண்டமான மலைகள் மீது அங்குமிங்கும் சுடர்ந்த கந்தகத்தின் ஒளிர்வினுல்தான் ஊகித்து அறிய முடிந்தது.

கிளியாவின் பாஹ்மூத் நகரைச் சேர்ந்த போது பொழுது புலர்ந்துவிட்டது.

அப்பொழுதுதான் விடிந்திருந்தது என்றாலும் இராணுவ சப்ளை டிப்போ அமைந்திருந்த முன்னாள் மகளிர் பள்ளிக் கட்டிடத்தைச் சுற்றிலும் வண்டிகளும் சவாரிக் குதிரைகளும் சந்தையில் போல நெரிந்தன. வாயிலில் பாராக்காரன் நின்று கொண்டிருந்தான். கதவு நிமிடத்துக்கொரு தரம் திறந்து மூடப்பட்டது, பதற்றம் நிறைந்த, உரத்த குரல்கள் கேட்டன. பார வண்டிகளிலும் தரையிலும் ஆட்கள் படுத்து உறங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் இங்கே நாள் கணக்காகக் காத்திருந்தார்கள் போலும்.

தனது நிரந்தர அனுமதிச் சீட்டைப் பாராக்காரனுக்குக் காட்டிவிட்டுக் கிளியாவின் உள்ளே போனான். நடப்பு அலுவல்களை எல்லாம் வழக்கமாகக் கவனித்துக் கொள்ளும் உதவித் தலைவர் தம் இடத்தில் இல்லை. தொழிற்சாலை இயக்குநர்களும் சப்ளை ஏஜெண்டுகளும் தொழில்நிலைய, சுரங்கக் கமிட்டிகளின் தலைவர்களும் ஆளோடிகளிலும் வரவேற்பு அறைகளிலும் கடுகடுப்புடன் காத்திருந்தார்கள். டிப்போத் தலைவர் யெபிபானவ் தந்திக் கருவியின் அருகே உட்கார்ந்திருந்தார். தந்திக் கருவிகள் வைக்கப்பட்டிருந்த அறைக்குள் எவரையும் புக விடுவதற்குப் பாராக்காரன் மறுத்துவிட்டான்.

கிளியாவின் அந்த அறை வாயிலை அணுகி, தனது தஸ்தாவேஜுகளைக் காட்டினான். பாராக்காரன் வாய் திறவாமல் அவனைத் தடுத்துவிட்டான்.

''அட சைத்தான்! என்னிடம் லெனின் எழுதிய கடிதம் இருக்கிறதப்பா!'' என்று புகலின்றிக் கத்தினான் கிளியாவின்.

தன் தோல்பையிலிருந்து கடிதத்தை எடுத்து விரித்தான். மக்கள் கமிஸார்கள் சபைத் தலைவரின் முத்திரையையும் லெனினது கையெழுத்தையும் கண்டு பாராக்

காரன் கண நேரம் தயங்கினன். கிளியாவின் பாய்ந்து கதவைத் திறந்து தந்தி அறைக்குள் புகுந்துவிட்டான்.

அறையில் தந்திக் கருவி வறட்சியாகக் கடகடத்தது, காகித நாடா மெதுவாக வெளியே ஊர்ந்து கொண்டிருந்தது. உறக்கமின்மையால் சிவந்த வெறித்த விழிகளை உயர்த்தினர் யெபிபானவ்.

''வெளியே போங்கள்! பேச்சுக்கு இடமே இல்லை! எல்லாவற்றையும் உதவித் தலைவரிடம் சொல்லிக் கொள்ளுங்கள், உதவித் தலைவரிடம்!'' என்று முகத்தைச் சுளித்துக் கொண்டு சீறினர்.

அகன்ற தோள்களும் நெடிய உருவமுமாக அவர் கிளியாவினை நோக்கி அடி எடுத்து வைத்தார். அவருடைய பூட்சுகளைச் சுற்றிக்கொண்டிருந்த எல்லையற்று நீண்ட தந்திக் காகித நாடா அவர் பின்னே சரசரத்தது. ஜன்னல் வழியே வெயிலொளி வீசியது. எனினும் தந்திக் கருவிக்கு உயரே மின் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. இரவு, பகல் என்ற கணக்கே இங்கு தவறிப்போய் விட்டிருந்தது.

கிளியாவின் இறைஞ்சும் தோற்றத்துடன் லெனினது கடிதத்தை நீட்டினன். யெபிபானவ் அதை வாங்கிப் படித்தார். அவர் முகம் கனிவுற்றது.

''நிலைமை மோசம், தோழர் கிளியாவின். வரவர இன்னும் மோசம் ஆகும். நான் என்ன செய்ய முடியும்?'' என்றூர்.

லெனினல் பாராட்டப் பெற்ற திட்டத்தை இடைமுறிப்பது கூடாது என்றும், ஸ்தாரோ-பெத்ரோவ்ஸ்க்குக்கு விசேஷச் சலுகை காட்டுவது அவசியம் என்றும், அங்கு கொண்டுவரப்படும் ஒவ்வொரு மூட்டை கோதுமையும் சமப் பங்கீட்டு முறையில் அன்றி உண்மையில் உற்பத்தி செய்யப்பட்ட நிலக்கரி, உலோகம் ஆகியவற்றின் அளவுக்கு ஏற்பப் பகிர்ந்தளிக்கப்படும் என்றும் விவரித்தான் கிளியாவின். அடிக்கடி தந்திக் கருவிக்கு அழைக்கப்பட்டதால் யெபிபானவின் கவனம் அங்கு திருப்பப்பட்டது எனினும் கிளியாவின் சொன்னதை அவர்

காதுகொடுத்துக் கேட்டார். பிடிவாதத்தைக் காட்டும் பருத்த மோவாயைப் பதற்றத்துடன் அசைத்தவாறு அவர் பல ரெயில் நிலையங்களுடன் தந்தியில் பேசினார், டொனேட்ஸ் பிரதேசத்தை நெருங்கிய ஒவ்வொரு உணவுப் பண்ட ரெயில் வண்டியின் போக்கையும் கூர்ந்து கவனித்தார், சரக்கேற்றும் ஒவ்வொரு நிலையத்துடனும் தொடர்பு கொண்டார், கண்டிப்பான, அதிகார தோரணை கொண்ட உத்தரவுகளை வாய் மொழியாகப் பிறப்பித்தார். கிளியாவினிடம் அவர் சொன்னார்:

''கோதுமையைப் பற்றி நான் உறுதிமொழி எதுவும் கூறமாட்டேன். உலோகத் தொழில் நிலையங்களுக்கான சப்ளைகள் கால்வாசியாகக் குறைக்கப்பட்டு விட்டன. தொழிற்சாலைகளுக்குப் பங்கீடு கார்க்கவ் நகரில் உங்கள் தலைமை அலுவலகத்தால் திட்டமிடப்பட்டுள்ளது. ஒரு வேளை அந்த அளவைக் கூட சப்ளை செய்வது எங்களுக்கு இயலாது போகலாம். என் சொந்தப் பொறுப்பில் நான் சில வாகன்கள் பிண்ணாக்கு அதிகப் படியாகத் தரலாம். அதோடு, ஒருவேளை...'' யெபிபானவ் கருமித்தனம் தோன்ற முறுவலித்து, ''போனால் போகிறது. லெனினுக்காக இன்னொரு வாகன் மக்காச் சோளமும் தருகிறேன்'' என்றார்.

கிளியாவின் வெகு நேரம் விடாது பேரம் பேசி இன்னொரு வாகன், இன்னும் அரை வாகன் வேண்டிப் பெற்றுவிட்டான்.

யெபிபானவ் வாகன்களின் எண்களைக் குறித்துக் கொண்டார், செயலாளரை அழைத்தார், தேவையான கட்டளைகளைத் தயாரிக்கும்படி உத்தரவிட்டார். பின்பு, உக்ரேய்னாவின் உணவுக் கமிஸார் விளாதீமிரவைக் கண்டு பேசுமாறு கிளியாவினுக்கு யோசனை கூறினார்.

''ஒரு வேளை அவர் தம்மிடமிருந்து எதையேனும் உங்களுக்குத் தரலாம்'' என்றார்.

''இப்போது அவர் எங்கே இருக்கிறார்?''

''வல்னவாகா ஸ்டேஷனில். நாளை எங்கிருப்பாரோ தெரியாது.''

பாஹ்மூத்திலிருந்து கிளியாவின் நேரே கார்க்கவ் நகரை அடைந்து, கனரகத் தொழில் மைய நிர்வாக நிலையம் சென்ருன். தொழிற்சாலைகளில் உள்ள மொத்த ஆட்கள், குடும்பத்தினரின் தொகைக்கு ஏற்ற விகிதத்தில் தயாரிக்கப்பட்டிருந்த பங்கீட்டுத் திட்டத்தில் மாறுதல் செய்யும்படி கோரி அங்கே அவன் வாதாடினுன். ஆனுல் ஒன்றும் பலிக்கவில்லை. பெருத்த வாய்ச் சண்டைக்குப்பின் நிலையத் தலைவரை ''அன்னசத்திரக் காவலர் பெருமான்'' என்று இகழ்ந்துவிட்டு வெளியேறினுன். ஒரு தொழிற் சாலை எஞ்சின் அவனுக்காக கார்க்கவ் நகருக்கு அனுப்பப் பட்டது. அதில் ஏறிக்கொண்டு உக்ரேனிய ரெயில் நிலையங்களை விசேஷ ரெயிலில் சுற்றிவந்து கொண்டிருந்த உணவுக் கமிஸாரைத் தேடிச் சென்ருன். இந்தப் பயணத் தின் விளைவாக ஏதோ கொஞ்சம் வலிந்து பெறுவது அவ னுக்கு இயன்றது. சில வாக்குறுதிகளும் கிடைத்தன. ஆயி னும் ஸ்தாரோ-பெத்ரோவ்ஸ்க் தொழில் நிலையத்தின் பல்லாயிரம் ஆட்களுக்கு இவை எல்லாம் மிக மிக அற்ப மாகவே இருந்தன.

தொழிற்சாலை திரும்பியதும் கிளியாவின் கட்சி ஸ்தா பன அலுவலகத்தாருடன் கலந்து ஆலோசித்து, மாலையில் தொழிற்சாலைக் கமிட்டிக் கூட்டத்தின் முன் உணவு நிலை மை பற்றி விரிவுரை நிகழ்த்தினுன். தொழிற்கூடங்களின் தலைவர்களில் பெரும்பாலோர் கட்சி உறுப்பினர் அல்லாத முதிய தொழிலாளர்கள். கிளியாவினின் படாடோபமற்ற பேச்சை அவர்கள் சிடுசிடுப்புடன் கேட்டார்கள். அவன் உணவு நிலைமையிலுள்ள இடர்ப்பாடுகளை விவரித்தான். தான் பட்ட சிரமங்களை வருணித்தான். எங்கே, எத்தனை வாகன்கள் உணவுப்பொருள்கள் பெற முடிந்தது என்று கணக்குக் காட்டினுன். குனிந்த தலையுடன், வாய்விட்டுச் சிந்திப்பவன் போல அவன் கணக்கீடு செய்தான். தொழில் நிலையத்துக்கு நிலக்கரி போதிய அளவு கிடைக்கச்

செய்வது, தினந்தோறும் எண்ணூறு டன் நிலக்கரி அகழ்ந்தெடுப்பது முக்கியமானது. போராட்டத்தின் முடிவை இதுவே நிர்ணயிக்கும். வரம்பற்ற ஊதிய உழைப்பின் அடிப்படையில் ஒவ்வொரு பணிமுறையிலும் இரண்டு மூன்று பவுண்டு ரொட்டி சம்பாதிப்பது சுரங்கத் தொழிலாளிகளுக்குச் சாத்தியமாயிருப்பது அவசியம். மற்றப் பணியினருக்கு எவ்வளவு மிஞ்சும்? அவன் கணக்குக் கூட்டி வகுத்தான். ஒவ்வொரு நாளும் ஆளுக்குக் கால் பவுண்டு வந்தது. மறு அறுவடை வரையில் இதை வைத்துக்கொண்டு சமாளிக்க வேண்டியதுதான் என்றான்.

பேச்சை முடித்துவிட்டு அமர்ந்து கிளியாவின் சிந்தனையில் ஆழ்ந்தான். அறையில் நிலவிய நிசப்தம் திடீரென அவனுக்கு வியப்பூட்டியது. தலையை நிமிர்த்தினான். தொழிலாளிகள் மௌனமாயிருந்தார்கள். ஊதுலைத் தொழிலாளி ரோதியோன் நிக்கீத்தின் அவன் அருகே உட்கார்ந்திருந்தான். மாவீரன் போன்ற உடற்கட்டு வாய்ந்த மீசைக்காரன் அவன். இந்த மனிதனின் விழிகள் பனித்ததைக் கிளியாவின் கண்டான். நிக்கீத்தினின் குடும்பம் பெரியது என்பதைக் கிளியாவின் அறிந்திருந்தான். நிக்கீத்தின் உள்ளங்கையால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டான். நிரந்தர உலை வெக்கையால் கறுப்பேறியிருந்த கன்னங்களில் ஒரு துளி கண்ணீர் கூட வழியவில்லை.

கிளியாவின் மற்ற முகங்கள் மீது கண்ணோட்டினான். ஒருவரும் அசையவில்லை. எல்லோரும் முன்போலவே மௌனமாயிருந்தார்கள்.

புரட்சி ஆண்டுகளில் கிளியாவின் எவ்வளவோ சங்கடங்களை அனுபவித்திருந்தான். கஸான் நகரில் ஏற்பட்ட புரட்சி எதிர்ப்புக் கலகம், வார்ஸா நகரிலிருந்து பின்வாங்கியது, தோழர்களின் சாவுகள் ஆகியவற்றைக் கண்டிருந்தான். ஆனால் இந்த மௌனக் கணங்கள், இந்த உகாக் கண்ணீர், இந்தச் சாதாரண நிசப்தம் எல்லாவற்றிலும் கொடியனவாக இருந்தன. ஆட்கள் எதிர்ப்பு தெரிவித்து, வைது

திட்டி, கூச்சலிட்டிருந்தால் அப்பாடா என்றிருக்கும் போல் தோன்றியது.

இருந்த உணவைப் பங்கிடுவது பற்றிய திட்டத்தைத் தொழிற்சாலைக் கமிட்டி சிறிது நேர விவாதத்துக்குப் பின் அங்கீகரித்தது.

4

நாளுக்கு நாள் நிலைமை அதிகக் கடினம் ஆகிக்கொண்டு போயிற்று. 1921ம் ஆண்டு ஜூலை மாதம் டொனேட்ஸ் பிரதேசம் முன் ஒருபோதும் கண்டிராத அளவு பயங்கர மாயிருந்தது. அதன் சுரங்கங்களிலிருந்து மே மாதம் 3, 84,000 டன் நிலக்கரி அகழ்ந்தெடுக்கப்பட்டது. ஜூன் மாதம் இந்த அளவு 2,88,000 டன் ஆயிற்று. ஜூலை யிலோ, 1,44,000 டன் நிலக்கரிதான் அகழ்ந்தெடுக்கப் பட்டது. சுரங்கங்களிலிருந்து தண்ணீரை இறைத்துக் கொட்டுவதற்குக்கூட இது போதாது.

மிகப் பெரிய சுரங்கங்களில் தண்ணீர் நிறைந்துவிட் டது. முழு முழுச் சுரங்கப் பகுதிகள் உயிரற்றவைபோல ஓய்ந்து கிடந்தன. நிலயங்களில் பற்பல நாட்களுக்குப் போதுமான நிலக்கரி வெகு முன்னதாகவே தோண்டி எடுக்கப்பட்டுச் சேமிக்கப்பட்டிருப்பது வழக்கம். இப்போ தோ அவை எத்தனை நாட்களுக்கு அல்ல, எத்தனை மணி களுக்குப் போதும் என்று கணக்கிட வேண்டியிருந்தது. முட்டுத்தூண்களுக்கு வேண்டிய கட்டைகள் த்ஸாரீத்ஸின் என்னும் இடத்திலிருந்து வருவது நின்று போயிற்று. காக்கஸஸிலிருந்து ரெயில் போக்குவரத்து அனேகமாக ஸ்தம்பித்துவிட்டது. குபான் பிரதேசத்திலிருந்து கோது மை ஏற்றிவரும் வண்டிகளை இழுக்கும் எஞ்சின்களுக்குத் தேவையான நிலக்கரி அடிக்கடி கிடைப்பதில்லை.

மக்கேயெவ்க்கா, யூஸோவ்க்கா இரண்டு இடங்களி லும் ஊதுலைகள் அவிந்து போயின. சோவியத் குடியரசின் முதலாவது அமைதி ஆண்டு ஆன இந்த வருடந்தான்

அவை வேலை தொடங்கியிருந்தன. டொனேட்ஸ் பிரதேசம் முழுவதிலும் இன்னும் வேலை செய்துகொண்டிருந்த ஒரே ஊதுலை ஸ்தாரோ-பெத்ரோவ்ஸ்க் ஊதுலைதான்.

வெம்மையும் வறட்சியும் மிகுந்த கோடைகாலம் டொனேட்ஸ் பிரதேசத்தின் துன்பத்தை இன்னும் கொடியதாக்கிற்று. கடும் வெப்பக் காற்று இடைவிடாது வீசி, பழுக்கக் காய்ந்த கரும் புழுதியை ஸ்தெப்பி வெளியில் படலம் படலமாக வாரியடித்தது. களைத்துச் சோர்ந்த குதிரைகள் சுரங்கங்களில் தொய்ந்து விழுந்தன. தீவனம் இல்லை. புல் தரைகள் தீய்ந்து போயின. கிராம வீடுகளின் கூரைகளிலிருந்து புல்லைப் பிய்த்து எடுக்க வேண்டியதாயிற்று. இருட்டியபின் சுரங்கங்களிலிருந்து குதிரைகள் வெளியே இழுத்துவரப்பட்டன. எலும்பும் தோலுமாக இருந்த குருட்டுக் குதிரைகள் வாடி உலர்ந்து குச்சிகுச்சியாக இருந்த புல்லைக் கொறித்தன. காலையில் குதிரைகள் மீண்டும் சுரங்கங்களுக்கு ஓட்டிச் செல்லப்பட்டன. பழங்கால டொனேட்ஸ் சுரங்கங்களின் சிறு கூண்டுகளுக்குள் ஒரு குதிரையைப் புகுத்துவது மிகக் கடினமாக இருந்தது. குதிரையின் நான்கு கால்களையும் கட்டி, வலுக்கட்டாயமாக டிரக்குக்கு உள் தள்ளிக் கூண்டுக்குள் இட்டுச்செல்ல வேண்டியிருந்தது. அதுவோ, பாவம் நடுங்கும், கால்களை உதைக்கும்.

இந்த மூன்று மாதங்களும் கிளியாவின் ஸ்தாரோ-பெத்ரோவ்ஸ்க்குக்கும் பாஹ்மூத்துக்கும் இடையே ஓயாது பயணம் செய்த வண்ணமாக இருந்தான். புதர்களும் மரங்களும் அடர்ந்த பள்ளங்களில் கொள்ளைக் கூட்டங்கள் பதுங்கியிருந்தன. அந்தக் கோடைகாலத்தில் இவை மேலும் பல்கிப் பெருகியிருந்தன. கிளியாவின் தனது மாவ்ஸர் துப்பாக்கியை எங்கும் உடன் எடுத்துச் சென்றான். இரவுப் பயணங்களின் போது வழியில் சுட்ட கொள்ளைக்காரர்கள்மீது இரண்டு தடவை அதைப் பிரயோகமும் செய்தான். ஓரிரு வாகன்கள் தானியமோ சிறு துவரையோ பிண்ணுக்கோ, சில மணங்குகள் துருவேறிய மீன்

களோ, அல்லது மூன்று, நான்கு பீப்பாய் கொழுப்போ தேடிப் பெறுவது எப்படி என்பதிலேயே அவனது அறிவாற்றலும் உளத்திண்மையும் முற்ற முழுக்க ஈடுபட்டிருந்தன.

ஏதேனும் ஒரு வகையில் ரொட்டியை ஒத்திருந்த பொருள் எதுவும் கால் பவுண்டு கூடத் தொழிலாளர்களுக்குக் கிடைக்காத நாட்களும்—இவ்வளவு பாடுபட்ட பிறகும்—வந்தன.

இம்மாதிரி ஒரு நாளில் கிளியாவினுக்குத் திடீரென போனில் அழைப்பு வந்தது. ஊதுலைத் தொழிற்கூடக் கட்சி ஸ்தாபனத்தினர் அவனை வரச் சொன்னார்கள்.

''என்ன நடந்தது?''

''நீயே காண்பாய். எல்லா வேலையையும் போட்டுவிட்டு உடனே வா!'' என்று பதற்றத்துடன் கூறினான் கட்சிச் செயலாளன்.

ஊசலாடிய மாவ்ஸர் துப்பாக்கியை அசையாது பிடித்துக்கொண்டு தலைமை அலுவலகத்தின் இரண்டாவது மாடியிலிருந்து தடதடவென்று இறங்கித் தொழிற்சாலைக்கு ஓடினான் கிளியாவின். காற்றிலேயே, மிகப் புழுக்கம் நிறைந்த ஜூலைமாதச் சூழ்நிலையிலேயே ஏதோ பயங்கரமானதை அவன் உணர்ந்தான். விஷயம் என்ன என்பதை மறு கணமே புரிந்துகொண்டு நின்று உற்றுக் கேட்டான். ஊதுலையின் இரைந்த சீழ்க்கையும் இயந்திரத்தின் ஒரு சீரான கடகடப்பும் கேட்கக் காணோம். தொழிற்சாலை செயலற்று நின்றுவிட்டது. கிளியாவினின் கிட்டித்த பற்களின் ஊடாக ஒரு முனகல் வெளிப்பட்டது. அவன் முன்னே பாய்ந்தான்.

வார்ப்புக் கூட முகப்பு வெளியில் பெருங்கூட்டம் நெரிவதை அவன் தொலைவிலிருந்தே கண்டான். தனித் தனிக் கூச்சல்கள் பேராரவாரத்தில் ஒன்று கலந்தன. ஒருவன் மற்றவர்களது தலைகளுக்கு மேலாக எழும்பி ஏதோ பேச முயன்றான். ஆனால் கீழே இழுத்துவிடப்பட்டான்.

ஊதுலேயின் அஸ்திவாரக் கற்கள் மேலும், காற்றுக் கணப்புக்களின் உலோகக் காப்புத் தகடுகள்மீதும், கொதி கலங்கள் மேலும், ஊதுலேக்கூடச் சுவர்கள் மீதும், மேலே யும் கீழேயும், எங்கு பார்த்தாலும் பிரமாண்டமான எழுத் துக்களில் சாக் கட்டியால் எழுதப்பட்டிருந்தது ''ரொட்டி! ரொட்டி! ரொட்டி!'' என்று.

கட்சிச் செயலாளன் குளூஷ்க்கோ தன்னே நோக்கி ஓடி வருவதைக் கிளியாவின் கண்டான். குளூஷ்க்கோவின் முகம் ஒரேயடியாக வெளிறியிருந்தது. முந்திய பேச்சாளன் எந்த மேட்டிடத்திலிருந்து இழுத்து இறக்கப்பட்டானே அதை நோக்கிக் கூட்டத்தில் இடித்துப் புகுந்து முன் னேறினுன் குளூஷ்க்கோ. கிளியாவினும் அதே இடத்தை நோக்கிச் சென்ருன். மாவ்ஸர் துப்பாக்கியை இறுகப் பற்றியவாறு, தோள்களால் இரு புறமும் இடித்து வழி செய்துகொண்டு, ஆட்கள் சீற்றத்துடன் தன்னே இடிப் பதை உணர்ந்தபடி அவன் நெருக்கியடித்து முன்னே நகர்ந்தான்.

குப்புறக் கவிழ்த்த தள்ளுவண்டியின் இரும்பு முதுகின் மேல் முதலில் ஏறினுன் குளூஷ்க்கோ. கிளியாவின் அவன் பின்னே துள்ளி ஏறினுன். தொழிற்சாலேக் கம்யூ னிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் சிலர் அதற்குள் அந்த இடம் வந்து சேர்ந்துவிட்டார்கள். மற்றவர்கள் கூட்டத்தின் ஊடாக நெருக்கி முன்வந்து கொண்டிருந்தார்கள். கிளியாவினுடைய தொப்பி பறிபோய்விட்டது, அவனது பழுப்பு இராணுவக் கோட்டுப் பொத்தான்கள் தெறித்துப் போயின, காலர் விரியத் திறந்துவிட்டது. அழுக்குச் சட்டையும் வெற்று மார்பும் வெளித் தெரிந்தன.

புகலின்மையால் வெறிகொண்ட ஆயிரக்கணக்கான ஆட்களின் கூட்டம் அவர்களே நாற்புறமும் நெருக்கமாகச் சூழ்ந்தது. அதிகபட்ச இறுக்க நிலே—இதை முன்கூட்டி நிர்ணயிப்பது ஒருபோதும் முடியாது—கடந்துவிட்டது.

உலோக, நிலக்கரிப் புழுதி படிந்து கறுத்து விகாரத் தோற்றம் அளித்த முகங்கள் மீது கிளியாவின் கண்ஞேட்

டினுன். சுற்றிலும் வெள்விழிகள் சினத்துடன் ஒளிர்ந்தன. தொழிலாளர்கள் கந்தல் உடுத்திருந்தார்கள். கித்தான் கையுறைகளால் தாமே தைத்துக்கொண்ட தொப்பிகளை அணிந்திருந்தார்கள் சிலர்.

குளூஷ்க்கோ கையை உயர்த்தி, புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் கடமை பற்றி ஏதோ கூச்சலிடத் தொடங்கினுன். கூட்டமோ அவனைப் பேச விடவில்லை. ஆட்கள் கவிழ்ந்த வண்டியோடு ஒண்டி நெருக்கினுர்கள். ஒருவனுடைய கரிய கைகள் குளூஷ்க்கோவின் கோட்டைப் பற்றிக் கீழே இழுத்துத் தள்ள முயன்றன.

அந்தக் கணத்தில் கிளியாவின் மன்னிக்க முடியாத, படுமோசமான தவறு ஒன்றைச் செய்துவிட்டான். தான் அறியாமலே துப்பாக்கியைப் பிடித்துக் கொண்டான் அவன். எல்லோரும் காட்டுக் கூச்சல் போட்டார்கள். அரக்கன் போன்ற உடற்கட்டுள்ள ஒரு தொழிலாளி வண்டி மேல் தாவி ஏறி, ஒரே இடியில் குளூஷ்க்கோவை அப்பால் தள்ளிவிட்டான். கண்தலை தெரியாத கோபத்துடன் தன் சட்டையை டர்ரெனக் கிழித்து மார்பைத் திறந்து காட்டினுன்.

''சுடு! இனி உயிர் வாழத் திராணி இல்லை என்னிடம்! கொல்லு, கொன்றுவிடு என்னை, வேசி மகனே!'' என்று கர்ஜித்தான்.

அவன் ரோதியோன் நிக்கீத்தின், தொழிற்சாலைக் கமிட்டிக் கூட்டத்தில் அனேகமாக அழுதுவிட்ட ஊதுலைத் தொழிலாளி, என்பதைக் கிளியாவின் கண்டுகொண்டான். நம்பிக்கையின்மை அவனை ஒரேயடியாக ஆட்கொண்டு விட்டது. வெறிகொண்ட இந்தக் கூட்டத்தை வசப்படுத்துவதற்குத் தன்னுல் இயலாது என்பதை அவன் புரிந்து கொண்டான். பின்னே நோக்கினுன். செயலற்றுப் போய் விட்ட ஊதுலை மௌனமாகக் காட்சி அளித்தது. புரட்சியின் இந்த நான்கு ஆண்டுகளாக இடையருது எரிந்து கொண்டிருந்தஅந்த ஊதுலை, மறுநாள் பிணமாகக் குளிர்ந்து போய்விடும் என்று எண்ணினுன்.

ஊதுலேத் தொழிலாளி தனது விசாலமான வலிய மார்பைத் திறந்தவாறு கிளியாவினை மேலும் மேலும் நெருக்கிக் கொண்டிருந்தான். அவனுடைய வாய் வலிப்பு வந்தாற்போலத் திறந்தது. அதன் ஓரங்களில் நுரை படிந்திருந்தது.

ஏதோ பயங்கரம் நிகழப் போகிறது என்று உணர்ந்த கிளியாவினின் மூளேயில் திடீரென ஒரு யுக்தி பளிச்சிட்டது. கோட்டுப் பையிலிருந்து பர்ஸைச் சட்டென வெளியில் எடுத்து ''லெனினது கடிதத்தை மறந்துவிட்டீர்களா என்ன?'' என்று கரகரத்த தொண்டையில் கத்தினன்.

பரபரப்புடன் அந்த விலேமதிப்பற்ற கடிதத்தைத் தேடி எடுத்து நிக்கீத்தின் கையில் திணித்தான். ஊதுலேத் தொழிலாளி நம்பிக்கை இன்றி அதை எடுத்துப் பிரித்தவன், கையெழுத்தைக் கண்டுகொண்டான். அவன் கைகள் நடுங்கின, முகம் பளிச்சிட்டது. லெனினுடைய வரிகளே உரக்கப் படிக்கலானுன்.

கவிழ்ந்த தள்ளுவண்டிமேல் நடந்தது என்ன என் பதை எல்லோரும் இன்னும் புரிந்து கொள்ளவில்லே. எனி னும் இரைச்சல் சட்டென அடங்கிவிட்டது. படிப்படி யாக ஆழ்ந்த நிசப்தம் குடிகொண்டது. ஸ்தம்பித்துப் போயிருந்த தொழிற்சாலேயின் பயங்கர மௌனத்திற் கிடையே நெடுந்தொலேவரை சென்று ஒலித்தன லெனி னுடைய சொற்கள். அவை தொழிலாளர்களின் கவனத்தை ஈர்த்தன, அவர்களது நினேவுகளில் என்றென்றைக்கும் இல்லாவிட்டால், நெடுங்காலத்துக்கு ஆழ்ந்து பதிந்து விட்டன.

''... தொழிலாளி வர்க்கத்தின் நிலேமை புகலற்ற அளவுக்குக் கடினமானது.... தொழிலாளிகள் கடுந் துன் பம் உழல்கிருர்கள். தொழிலாளி வர்க்கத்தின் துன்பம் அதன் சர்வாதிகாரக் காலகட்டத்தில் போன்று இவ்வளவு பெரிதாகவும் கொடியதாகவும் ஒருபோதும் இருந்த தில்லே....''

உலகிலேயே யாவற்றினும் கடினமான செயலேப்

புரிவது, உண்மை நிலையை எளிமையாக, உள்ளபடியே எடுத்து உரைப்பது, விளாதீமிர் இல்யீச்சுக்கு மிகச் சுளுவாக இருந்தது. இதுதான், திட்டவட்டமான, நேரான இந்த உண்மைதான் எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தித் தன்வசப்படுத்தியது.

''இன்னும் ஒரு பெரு முயற்சி செய்வது தவிர இப்போது வேறு வழி இல்லை. மனிதகுல வரலாற்றிலேயே எல்லாவற்றிலும் புரட்சிகரமான, எல்லாவற்றிலும் வீரம் நிறைந்த வர்க்கமான தொழிலாளி வர்க்கம் தவிர வேறு எந்த வர்க்கமும் இத்தகைய பெரு முயற்சி செய்வதற்கு ஒரு போதும் திறன் கொண்டிருந்ததில்லை.''

கடைசி வரியைப் படித்து முடித்ததும் நிக்கீத்தின் உள்ளங்கையால் நெற்றியைத் துடைத்துக்கொண்டு சுற்று முற்றும் கண்ணோட்டினான்.

''ஊம்? என்ன நினைக்கிறீர்கள், தோழர்களே?'' என்று நிதானமாக வினவினான்.

லெனினுடைய கையெழுத்தைக் காணவும், அந்தக் காகிதத்தைத் தங்கள் கைகளால் தொட்டு உணரவும் ஆவல் கொண்டு எல்லோரும் முன்னே நெருக்கி நிக்கீத்தினைப் பின்னே தள்ளிவிட்டார்கள். அவன் ஒருவன் கையில் கடிதத்தைக் கொடுத்தான். கடிதம் மறுமுறை படிக்கப் பட்டது. பின்பு கூட்டத்தில் கைக்குக் கை மாறிச் சென்றது.

கிளியாவின் கைக்கு அந்தக் கடிதம் திரும்ப வரவே இல்லை. அன்றைக்குப் பின் அவன் அதைக் காணவே இல்லை. எவர்களுக்கு அது எழுதப்பட்டிருந்ததோ, அவர்களுக்கிடையே அது கரைந்து கலந்து மறைந்துவிட்டது போலிருந்தது. சுரங்கத்தில் எங்கோ அது படிக்கப்பட்டதாகப் பின்னர் தகவல் கிடைத்தது. ஆனால் கடைசியாக அதை யார் வைத்திருந்தான், யார் பார்த்தான் என்பது தெரியாமலே போய்விட்டது.

கடிதம் மீள வகையின்றித் தவறிப்போய்விட்டது போலும். எஞ்சியிருப்பது அதன் கதை மட்டுமே.

ஸ்தாரோ-பெத்ரோவ்ஸ்க் ஊதுலே அவிந்துவிடவில்லே என்று சொல்லவும் வேண்டுமோ? 1921ம் ஆண்டுக் கோடைகாலம் முழுவதும், மறு அறுவடைவரை தெற்குப் பிரதேசத்தில் தன்னந்தனியாக விடாது எரிந்து கொண்டிருந்தது அது.

டொனேட்ஸ் பிரதேசத்து முதிய தொழிலாளிகள் இந்தக் கதையை இன்றும் சொல்லிக் கொண்டிருக்கிருர் கள்.

ஆனல் கதைதான இது?

கிரெம்ளினில் வி. இ. லெனினது அலுவலறை
கிரெம்ளினில் வி. இ. லெனினது இருப்பிடத்தில் ஓர் அறை

அடுத்த பக்கங்களில்:

வி. இ. லெனினும் யா. மி. ஸ்வெர்திலோவும் செஞ்சதுக்கத்தில் கிரெம்ளின் மதிற்சுவருக்கு அருகே திறந்து வைக்கப்பட்ட, சமாதானத்திற்காகவும் மக்களது சோதரத்துவத்துக்காகவும் உயிர் வழங்கிய தியாகிகளின் நினேவுப் பட்டயத்தின் முன்னே. மாஸ்கோ, 1918, நவம்பர் 7






1917

# ஸெ. அன்தோனவ்

ஸெர்கேய் பியோதரவிச் அன்தோனவ் சோவியத் இலக்கியத்தில் சுமார் இருபது ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறார். ''தொலைதூரப் பிரயாணி'', ''நிர்ணயகரமான அடிவைப்பு'' என்ற சிறுவர்களுக்கான நெடுங்கதைகளையும் லெனினைப் பற்றிய பல கதைத் திரட்டுக்களையும் அண்மை ஆண்டுகளில் அவர் இயற்றியுள்ளார். ''நமது அன்புக்குரிய பண்புகள்'', ''நம் எல்லோருக்காகவும்'', ''கிரெம்ளினில் சந்திப்பு'' என்பவை லெனினைப் பற்றிய அவரது சிறுகதைத் திரட்டுக்களின் தலைப்புக்கள்.

# கிரெம்ளினில் சந்திப்பு

லெனின் ஜன்னல் அருகே நின்றுகொண்டிருந்தார். அவருடைய கைகள் காற்சட்டைப் பைகளின் ஆழத்தில் நுழைக்கப்பட்டிருந்தன. இரு ஜன்னல்களும் உயரமான வளைவு முகடும் கொண்ட அலுவலறை குளிரும் ஈரிப்புமாக இருந்தது. பனிக்காலத்தின் இந்தக் கடைசி வாரங்களில் குளிர் மிகக் கடுமையாக இருந்தது.

குண்டுச் சிதல்களால் சல்லடைக்கண்ணாகத் துளைக்கப்பட்டிருந்த ஆயுதசாலை விளாதீமிர் இல்யீச்சுக்குத் தென்பட்டது. த்ரோயித்ஸ்காயா கோபுரத்தின் உச்சியில் இருந்த பிரமாண்டமான கழுகு சாம்பல் வானின் பின்னணியில் துலக்கமாகத் தெரிந்தது. கோபுரம் குதிரையேற்றப் பயிற்சிச் சாலையிலிருந்து பார்க்கும்போது காணப்படுவது போல இங்கிருந்து அவ்வளவு உயரமாகத் தோன்றவில்லை. கிரெம்ளின் சுவரின் ஒரு பகுதியும் படைவீடும் லெனினுக்குத் தென்பட்டன. பாவுகற்கள் புதைந்து குழிகள் விழுந்திருந்த சதுக்கத்தில் ஆயுதசாலையை ஒட்டி நிக்கோல்ஸ்காயா கோபுரம் வரை வரிசையாகச் சென்றிருந்தன மெல்லிய விளக்குக் கம்பங்கள். நுனிகளில் வளைந்த புல் தாள்கள் போல அவை தோற்றம் அளித்தன.

த்ரோயித்ஸ்காயா கோபுரத்துக்கும் ஆயுதசாலைக்கும் சென்ற பாதைகள்மீதும் விளக்குக் கம்பங்கள் விளிம்பு கட்டியிருந்த சதுக்கத்தின்மீதும் வெண்பனி ஆட்களால் மிதிக்கப்பட்டு அழுக்கடைந்திருந்தது. கட்டிடக் கூரைகள் மேலும் கிரெம்ளின் சுவர்கள்மீதும் மட்டுமே வெண்பனி பணியாரத்தின் மேல் தூவிய சர்க்கரைப் பொடி போலத் தூயதாகவும் ஒருசீராகவும் காணப்பட்டது.

கிரெம்ளினுக்கு வெளியே கடுங்குளிருக்கு உள்ளான செங்கல் கட்டிடங்கள் விறைத்து நின்றன. ரும்யாந்த்செவ் காட்சிச்சாலைக்கும் நூலகத்துக்கும் அப்பால் புகைபோக்கிகள் அரிதாகவே கண்ணுக்குப் புலனாயின. ஆனால் எவ்வளவுதான் கூர்ந்து நோக்கினாலும் எங்குமே புகை தென்படவில்லை. எரிப்பதற்கு விறகோ, கரியோ இல்லை.

பனிக்காலம் மாஸ்கோவைக் கிட்டிபோட்டு இறுக்கியது. உள்நாட்டுப் போரினுல் சித்திரவதைபட்டுக் குருதி பெருக்கிச் சோர்ந்திருந்த நாட்டைப் பீடித்திருந்த பட்டினி, அழிவு என்னும் பகைவர்களோடு கடுங்குளிர் என்ற இன்னெரு எதிரியும் சேர்ந்துகொண்டது.

டைபஸ் நோய் கோர தாண்டவம் ஆடியது.

லெனின் பெருமூச்செறிந்தார். பின்பு திடீரென வலது கையைப் பையிலிருந்து சட்டென்று வெளியில் எடுத்து மேஜை அருகே உட்கார்ந்தார்.

அவர் கையில் பிடித்தது சாதாரணமான, பள்ளிச் சிறுவனது போன்ற பேஞ. காகிதத்தின்மேல் அது விரைவாக ஓடி, அரைகுறையான, சுருக்கக்குறிச் சொற்களே எழுதியது. புரிந்துகொள்ளக் கடினமானவையாக இருந்தன அந்தக் குறிச் சொற்கள். எண்ணங்கள் ஒன்றையொன்று முந்திக்கொண்டு விரைந்தன. அவர் அவற்றை விரைவாகக் குறித்தார்: ‘‘குழந்தைகள் இல்லங்களுக்கு விறகு கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று சரிபார்க்க வேண்டும். இல்லேயானுல் கொடுக்கும்படி செய்ய வேண்டும்.... உலோகத் தொழிற்சாலைகளின் தொழிலாளர்களுக்குச் சர்க்கரை, ஸாகரீன் ரேஷனே அதிகப்படுத்த வேண்டும்.... கல்வித்துறை மக்கள் கமிஸார் அலுவலகம் கிராமங்களுக்கான புத்தகங்களே வெளியிடுவதில் தாமதம் செய்துவிட்டது. லுனச்சார்ஸ்க்கியுடன் பேசிக் கடிந்து கொள்ள வேண்டும்.... தோழர்களுக்கு ஆணேப் பத்திரத்தை விளக்கி உறுதிப்படுத்த வேண்டும்.... காமினெவுக்குக் குறிப்பு எழுத வேண்டும்.... வெளிநாடுகள் உதவி செய்ய முன்வருகின்றன.... நம் சொந்த முயற்சியால் சமாளிப்போமா மாட்டோமா?’’

பேஞ கணப்போது நின்றது.

அமர்வுக் கூடத்துக்குச் செல்வதற்கான வாயிலின் வெள்ளே மெழுகுச்சீலே தைத்த கதவு மெதுவாகத் திறந்தது. செயலாளன் அங்கே நின்ருன்.

''விளாதீமிர் இல்யீச்!'' என்று தணிந்த குரலில் அழைத்தான்.

ஆனால் வேலையில் மூழ்கியிருந்த லெனின் பதில் பேசவில்லை.

''விளாதீமிர் இல்யீச்!''

லெனின் தலையை நிமிர்த்தினார்.

''என்ன?'' என்று கேட்டவாறே குறிப்பு எழுதுவதற்காக இன்னொரு காகிதத்தை எடுத்தார்.

''தோழர் கோர்ஷுனவ் வந்திருக்கிறார், உங்களைப் பார்ப்பதற்கு.''

''நல்லது'' என்றார் லெனின்.

செயலாளன் ஓசைப்படாமல் கதவைச் சாத்திவிட்டுப் போய்விட்டான். விளாதீமிர் இல்யீச், காமினெவுக்குக் குறிப்பு எழுதி முடிப்பதற்காக அவசர அவசரமாகப் பேனாவை மீண்டும் ஓட்டினார். அவர் எழுதிக்கொண்டு போனார். ஆனால் நெடுங்காலம் அறிமுகமானவராகிய விஞ்ஞானியின் உயரமற்ற, ஒடிசலான உருவம் கதவருகே தென்பட்டதுமே அவர் எழுந்து வந்தவரை வரவேற்க முன் சென்றார். விஞ்ஞானி ஓரளவு குழப்பமும் கூச்சமும் கொண்டவராகக் காணப்பட்டார்.

''வாருங்கள், லெஓனீத் அலெக்ஸேயெவிச், உள்ளே வாருங்கள்! இப்படி அமருங்கள், தயை செய்து'' என்று மெத்தை தைத்த நாற்காலி ஒன்றைக் காட்டினார்.

லெஓனீத் அலெக்ஸேயெவிச் கோர்ஷுனவ் சங்கோசத்துடன் விரைவாக நடந்து மெத்தை தைத்த நாற்காலியில் உட்கார்ந்து, லெனினது மேஜையை ஒட்டிக் குறுக்காகப் போடப்பட்டிருந்த மேஜைக்கு அடியில் சட்டென்று கால்களை மறைத்துக்கொண்டார். தமது விரைந்த இயக்கம் அசட்டுப் பிசட்டென்று இருப்பதைத் தாமே உணர்ந்து மறுபடி குழப்பம் அடைந்தார் கோர்ஷுனவ். ஆனால் லெனின் தமது பின்னல் நாற்காலிக்குத் திரும்புவதைக் கண்டதும் நிதானத்துக்கு வந்து அவர் பக்கம் திரும்பினார்.

''சௌக்கியமாயிருக்கிறீர்களா, லெஓனீத் அலெக்ஸேயெவிச்? உடம்புக்கு ஒன்றுமில்லையே?'' என்று வினவினார் லெனின்.

''ஒன்றுமில்லை, விளாதீமிர் இல்யீச். நன்றி.''

''நல்லது. இது கடினமான காலம், லெஓனீத் அலெக்ஸேயெவிச். நாம் அதை எதிர்த்துச் சமாளிக்க வேண்டும்.''

லெனின் பேசி நிறுத்தியதும் கோர்ஷுனவ் கூறலானார்:

''விளாதீமிர் இல்யீச், நான் வந்தது சைபீரிய ஆராய்ச்சிப் பயணம் விஷயமாக. 1908 ஜூன் 30ந் தேதி விஞ்ஞான உலகுக்கு எல்லையற்ற அக்கறைக்குரிய ஒரு நிகழ்ச்சி நடந்தது என்பது உங்களுக்குக் கட்டாயமாகத் தெரிந்திருக்கும். அது மிக அரிய நிகழ்ச்சி. அளவிலும், ஒருவேளை முக்கியத்துவத்திலுங்கூட அசாதாரணமானது. சைபீரியத் தைகாக் காட்டில் வீழ்மீன்கல் ஒன்று விழுந்தது.''

கோர்ஷுனவ் லெனினை ஏறிட்டு நோக்கி அவர் தம்மை உற்றுக் கவனித்துக்கொண்டிருப்பதைக் கண்டார்.

லெனின் அந்த வீழ்மீன்கல்லைப் பற்றி நன்கு அறிவார் என்றும், தமது எண்ணங்களும் விழைவுகளுங்கூட அவருக்குத் தெரியும் என்றும் கோர்ஷுனவுக்குத் தோன்றியது. விவரமாகப் பேசுவதால் தாம் வேலை நெருக்கடி மிக்க ஒரு மனிதரின் நேரத்தை வீணாக்குவதாக அவருக்குப் பட்டது. எனவே அவருடைய நா குழறியது.

''இந்த வீழ்மீன்கல்... ஆனால் உங்களுக்கு அதைப் பற்றி நன்றாய்த் தெரிந்திருக்கும்....''

''நீங்கள் எண்ணுவது வீண், லெஓனீத் அலெக்ஸேயெவிச். எங்கோ ஒரு வீழ்மீன்கல் விழுந்தது என்பது தவிர வேறு ஒன்றுமே எனக்குத் தெரியாது. மேலே சொல்லுங்கள்'' என்றார் லெனின்.

விஞ்ஞானியின் புறம் தலையைச் சாய்த்து, ''வருஷம் கூட எனக்கு நினைவில்லை'' என்று புன்னகையுடன் தணிந்த குரலில் சொன்னார்.

கோர்ஷுனவும் முறுவலித்தார்.

''விசித்திரமான விஷயம்!'' என்று ஆழ்ந்த முறையில் பேச்சைத் தொடர்ந்தார் லெனின். ''மக்கள் கமிஸார்கள்

சபைத் தலைவரும் மக்கள் கமிஸார்களும் எல்லாம் அறிந் தவர்கள் என்று எதனாலோ பலர் நினைக்கிறார்கள்! கெடுத லான அபத்தம்! நாங்கள் அறிந்திருப்பதோ சொற்பம், மிகச் சொற்பம், வெட்கப்படும் அளவுக்கு அற்பம்! உங்களோடு எவ்வளவுக்கெவ்வளவு உரையாடுகிறோமோ அவ்வளவுக் கவ்வளவு எங்களுக்கு நல்லது. மேலே சொல்லுங்கள், லெஓனீத் அலெக்ஸேயெவிச், அவசரப்படாதீர்கள்'' என்றார்.

கோர்ஷுனவ் இதைக் கேட்டு உற்சாகமும் மகிழ்ச்சி யும் அடைந்தார். லெனினிடம் சொல்ல வேண்டும் என்று வெகு காலமாக முன்கூட்டி யோசித்து வைத்திருந்த கருத் துக்களை விவரிக்கலானார்.

''எல்லாவற்றிலும் பெரியதாகக் கருதப்படும் வீழ் மீன்கல் முப்பத்தாறரை டன் எடையுள்ளது என் பதையும் அதற்கு அடுத்தபடியான மெக்ஸிக்கோ வீழ் மீன்கல் எனப்படுவது இருபத்தேழு டன் எடையுள்ளது என்பதையும் கருத்தில் கொண்டால் நமது சைபீரிய வீழ்மீன்கல் நமக்குத் தெரிந்த வீழ்மீன்கற்களுடன் ஒப்பிடு கையில் மிகப் பிரமாண்டமாக இருக்க வேண்டும் என்று எனக்குப் படுகிறது. சங்கடம் என்னவென்றால் இந்த வீழ் மீன்கல் எங்கே விழுந்தது என்பது திட்டவட்டமாக நமக் குத் தெரியாததுதான்.''

''நீங்கள் இந்த வீழ்மீன்கல்லைத் தேடிப் போக விரும்பு கிறீர்களாக்கும்?'' என்று கோர்ஷுனவ் இடைநிறுத்திய தும் கேட்டார் லெனின்.

''ஆமாம். நீங்கள் நினைப்பது முற்றிலும் சரி. வீழ்மீன் கல்லைத் தேடிப்போக விரும்புகிறேன்'' என்று பதிலளித்த கோர்ஷுனவ் உடனேயே தொடர்ந்து கூறினார்: ''இப் போது இது அவ்வளவு முக்கியமில்லை என்பது எனக்குப் புரிகிறது.... ஆனால் நான் உங்களிடம் மிகச் சொற்ப உதவியே கேட்கப்போகிறேன். நமது ருஷ்ய வீழ்மீன்கல் பற்றிய ஆராய்ச்சிக்காக வெளிநாடுகளில் கழகங்கள் நிறுவப்படுகின்றன, நாமோ வாளாவிருக்கிறோம். இது வருத்தம் அளிக்கிறது.''

''இல்லே, இல்லே! வெளிநாட்டினருக்கு இதில் தொடர்பே இருக்காது. அவர்கள் வீண் மனக்கோட்டை கட்ட வேண்டாம். உங்கள் ஆராய்ச்சிப் பயணத்துக்குத் தேவைப்படுவது என்ன?''

கோர்ஷுனவ் தமது கோட்டு உள்பையிலிருந்து இரண்டாக மடிக்கப்பட்ட சில காகிதங்களே வெளியில் எடுத்து, ''நான் தயாரித்திருக்கிறேன். கூடுமான வரையில் சொற்பமாகவே நான் கணக்கிட்டிருக்கிறேன், விளாதீமிர் இல்யீச்'' என்ருர்.

லெனின் பட்டியலேப் பார்வையிடலாஞர். அதைப் பார்க்கப் பார்க்க அவர் முகம் மேலும் சுளித்தது. பிறகு அவர் காகிதங்களே மேஜைமேல் வைத்து, இடது கையால் அவற்றை தடவி நேராக்கியவாறு விஞ்ஞானியை நோக்கிஞர். அவரது முகத்தில் கடுமையும் ஓரளவு துயரமும் இருந்ததாகக் கோர்ஷுனவுக்குத் தோன்றியது.

விஞ்ஞானி பார்வையை நிமிர்த்தி, தயக்கத்துடன் சொன்ஞர்:

''சரி... பட்டியலே இன்னும் குறைக்கலாம். ரொட்டி இவ்வளவு தேவையில்லே.... கருவிகளேப் பொறுத்தவரை தளமட்டக் கோணமானி ஒன்றைக் குறைத்துக் கொள்ளலாம். தவிர....''

லெனின் அவரைப் பார்க்காமல் அறையின் ஒரு மூலேயை நோக்கிக்கொண்டிருந்தார். விஞ்ஞானியின் சொற்களே அவர் கேட்கவில்லே போலவும் அவர் இருந்ததையே கவனிக்கவில்லே போலவும் காணப்பட்டது.

''தளமட்டக் கோணமானி ஒன்றைக் குறைத்துக் கொள்ளலாம்'' என்ற சொற்களே, சுருங்கிய விழிகளால் கோர்ஷுனவைப் பார்த்தவாறு திருப்பிக் கூறிஞர் லெனின். தமது பிரம்புப் பின்னல் நாற்காலியைச் சரட்டென்று பின்னே நகர்த்திவிட்டு எழுந்து, கோபமும் வியப்பும் கொண்டவர் போன்று விரல்களால் காகிதங்கள் மீது தாளம் போட்டார். அப்புறம் மேஜையின் புறத்திலிருந்து வெளியே வந்தார்.

கோர்ஷுனவின் பக்கம் பார்க்காதிருக்க முயன்றவாறு கைகளைக் காற்சட்டைப் பைகளுக்குள் நுழைத்துக்கொண்டு ஜன்னலை அடிக்கடி நோக்கியபடி அறையில் நடை போட்டார்.

''நீங்கள் போகும் இடம் தைகாக் காடு ஆயிற்றே.'' நிலைமையை விஞ்ஞானிக்கு உள்ளபடி விளக்குபவர் போலக் கடுமையாகவும் அழுத்தத்துடனும் பேசினர் லெனின். ''ஆயிரக் கணக்கான வெர்ஸ்ட்டாக்கள் பரந்த கடக்க அரிதான அடர் காடு, பிரசண்டமான ஆறுகள், கொடிய விலங்குகள். பாதைகளே கிடையா.... இவற்றை எல்லாம் நன்கு உணர்கிறீர்கள் அல்லவா?''

இவ்வாறு சொல்லிவிட்டுச் சற்று நிறுத்தினர்.

''இதெல்லாம் உங்களுக்கு நன்கு தெரிந்ததுதான்'' என்று அதிக மென்மையுடன் சொன்னர் லெனின். பின்பு பட்டியலை மறுபடி பார்வையிட்டுவிட்டுப் பேச்சைத் தொடர்ந்தார்:

''ஒரு நாளைக்கு ஒருவருக்கு ஒரு பவுண்டு ரொட்டி, எல்லோருக்கும் ஐந்து பவுண்டு சர்க்கரை, புகையிலை....'' இவ்வாறு படிக்கையில் லெனினது குரலில் கடுமையும் அதிருப்தியும் வியப்பும் மாறி மாறித் தொனித்தன. சில வேளைகளில் இவை எல்லாவற்றையும் அமுக்கிக்கொண்டு மேலோங்கியது துயரம்.

''சர்க்கரையை வேண்டுமானல் விட்டு விடலாம். ஆனல் புகையிலை இன்றியமையாதது. கொசுக்களிலிருந்து அது காப்பாற்றும்'' என்று கண்டிப்புடன் கூறினர் விஞ்ஞானி.

அவர் பேச்சைக் காதில் வாங்கிக் கொள்ளாதவர் போன்று மேலே படித்தார் விளாதீமிர் இல்யீச்:

''கருவிப் பெட்டிகளுக்கு உள்ளே வைத்துத் தைக்க மென்மயிர்த் தோல். கருவிகளுக்காக!'' என்று திரும்பச் சொன்னர்.

கோர்ஷுனவ் இருக்கைவிட்டு எழுந்தார். அவருடைய மூக்குக் கண்ணுடி ஜன்னல் புறமிருந்து வந்த ஒளியைப் பிரதிபலித்துப் பளிச்சிட்டது. இறுதி முயற்சி செய்து பார்க்கும் மனிதனுக்குரிய உறுதி அவரிடம் தென்பட்டது.

''விளாதீமிர் இல்யீச்!'' என உரக்க, அழுத்தமாக விளித்தார். ''தோழர் லெனின்! நாங்கள் போயாக வேண்டும்! நமது நல் அதிர்ஷ்டம் இது என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். விண்வெளியிலிருந்து வந்த இந்த அபூர்வ விருந்தாளி, இந்த வீழ்மீன்கல், வேறு எவருடைய பிரதேசத்திலோ அல்ல, நமது சொந்தப் பிரதேசத்தில் விழுந்திருக்கிறது! நாமோ? பிரான்சிலோ அமெரிக்காவிலோ இது விழுந்திருந்தால் எத்தனை ஆராய்ச்சிக் குழுக்கள் அந்த இடத்துக்கு உடனே விரைந்திருக்கும் என்று நினைத்துப் பாருங்கள்! நாம் ஏழைகள், பட்டினி கிடக்கிறோம் என்பது உண்மையே. தலையீட்டாளர்கள் நம் கழுத்தை நெரிக்கிறார்கள் என்பதும் சரியே. ஆனால் நமக்கு மட்டுமே வாய்த்துள்ள ஒரு சந்தர்ப்பத்தை நம்மால் மதிப்பிடவோ பயன்படுத்திக்கொள்ளவோ இயலாது என்று அர்த்தமாகுமா? நாம் ஏழைகளாயிருப்பது உலக விஞ்ஞானத்தின் குற்றம் அல்லவே. நாங்கள் போயாக வேண்டும், விளாதீமிர் இல்யீச்!'' என்றார்.

கோர்ஷுனவ் நாற்காலியில் அமர்ந்தார்.

''அட கடவுளே!'' என்று வியப்புடன் கூறி விஞ்ஞானியின் அருகே சென்றார் லெனின். அபூர்வ மனிதரே, லெஓனீத் அலெக்ஸேயெவிச்! நீங்கள் கட்டாயம் போக வேண்டியதுதான். நீங்கள் கேட்பவற்றை நாங்கள் கொடுப்போம். ஆனால் அவை மிக மிகப் போதாதவை ஆயிற்றே! இம்மாதிரிச் சாதனங்களுடன் சைபீரியாவுக்கு யாராவது போவார்களா? மாஸ்கோ நகர்ப்புறப் பயணத்துக்கு வேண்டுமானால் இவை போதுமானவையாக இருக்கலாம்! இவை மிக அற்பம்! எவ்வளவு வருந்தத்தக்க நிலைமை! எவ்வளவு வருந்தத்தக்க நிலைமை!'' என்று இரு முறை சொன்னார். லெனின் மனது எதனால் புண்பட்டது என்று கோர்ஷுனவ் இப்போது புரிந்துகொண்டார். ''உங்களைப் போன்ற மனிதர்களுக்கு இன்றியமையாதவை யாவற்றையும், அவர்களது தகுதிக்கு ஏற்ற எல்லாவற்றையும் கொடுக்க இன்னும் எங்களால் முடியாதிருப்பது மிக வருந்தத்

தக்கது! ஆனால் கவலைப்படாதீர்கள்! எங்களுக்கு நேரம் மட்டும் தாருங்கள்!'' என்றார் லெனின்.

''ஆனால், ஆனால்...'' என்று லெனினை நோக்கியவாறு குழறினார் கோர்ஷுனவ். மேலும் ஏதோ சொல்ல விரும்பினார், ஆனால் ஆறுதலுடன் பெருமூச்சு மட்டும் விட்டு வியர்த்த நெற்றியைத் துடைத்துக் கொண்டார்.

லெனின் அவரை இன்னும் நெருங்கி, ''லெஓனீத் அலெக்ஸேயெவிச்! இங்கே, துறவிகளது போன்ற இந்தப் பட்டியலில் குறிக்கப்பட்டுள்ள சாதனங்களை மட்டும் நாங்கள் கொடுத்தால், நீங்கள் போவீர்களா?'' என்று பரிவும் ஆவலும் தொனிக்க வினவி, கோர்ஷுனவின் காகிதங்களைச் சுட்டிக் காட்டினார்.

''விளாதீமிர் இல்யீச், மேற்கொண்டு எதையும் நான் எதிர்பார்க்கவில்லை! இதோ வெண்பனி உருகட்டும், நாங்கள் ஆயத்தம் செய்துகொண்டு புறப்பட்டு விடுகிறோம். மெய்யாகவே சொல்லுகிறேன், மேற்கொண்டு எதுவும் வேண்டாம். எல்லாரும் உங்களிடம் எதையாவது கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள்.... எல்லாவற்றுக்கும் எங்கே போவது?''

''அப்படியானால் நீங்கள் போகத் தயார்தானே?'' என்று மறுபடி கேட்டார் லெனின்.

''தயார்.''

''மேற்கொண்டு எதுவும் கேட்க மாட்டீர்களே?''

''மாட்டேன்.''

''எதுவுமே கேட்க மாட்டீர்கள் அல்லவா லெஓனீத் அலெக்ஸேயெவிச்?'' என்று மீண்டும் வினவினார் லெனின்.

''எதுவுமே.''

லெனின் திருப்தியின்றித் தொண்டையைக் கனைத்துக் கொண்டார். பிறகு அவர் மேஜைக்கு அடியில் எங்கோ உற்றுப் பார்த்தார். தந்திரப் புன்னகை அவர் முகத்தில் தவழ்ந்தது.

''அது சரி, லெஓனீத் அலெக்ஸேயெவிச், அதோ அந்த ஜன்னல் பக்கம் போங்கள் சற்று'' என்று குதூகலமாக, நட்பார்ந்த முறுவலுடன் கூறினார்.

''எதற்காக, விளாதீமிர் இல்யீச்?''

''நான் கேட்டுக்கொள்கிறேன், லெஓனீத் அலெக்ஸே யெவிச். தயைசெய்து அந்த ஜன்னல் அருகே செல்லுங்கள்.''

''எதற்காக, விளாதீமிர் இல்யீச்?''

''ரொம்பக் கேட்டுக்கொள்கிறேன், லெஓனீத் அலெக்ஸேயெவிச், எனக்காக இதைச் செய்யுங்கள், தயவு செய்து'' என்று கேட்டுவிட்டு, அச்சுறுத்தும் பாவனையில் விளையாட்டாக விரலை ஆட்டி, ''உங்களை எனக்குத் தெரியுமே!'' என்றார்.

''இல்லை, விளாதீமிர் இல்யீச். நீங்கள் இசைந்துவிட்டீர்கள் என்றால் நான் உங்கள் நேரத்தை மேலும் வீணாக்க மாட்டேன்....''

''இல்லை, நான் இன்னும் இசைந்துவிடவில்லை. கொஞ்சம் தயை செய்யுங்கள். இந்த ஜன்னல் அருகே செல்லுங்கள், லெஓனீத் அலெக்ஸேயெவிச்'' என்று நல்லியல்புடன் சொன்னார் லெனின்.

கோர்ஷூனவ் விருப்பின்றி எழுந்தவர், எதையோ எதிர்பார்த்துத் தயங்கி, லெனினை நோக்கினார்.

ஆனால் லெனினும் அவர்மீது பதித்த பார்வையை அகற்றவில்லை.

''நல்லது, நடவுங்கள்!'' என்றார்.

''ஆகா'' என்று தீர்மானத்துக்கு வந்து மேஜையின் பின்னிருந்து நகர்ந்தார் கோர்ஷூனவ்.

லெனின் விஞ்ஞானியின் பாதங்களை உற்று நோக்கினார்.

''அது தானே. நான் நினைத்தபடியே இருக்கிறது. என் அருமை நண்பரே, எதை அணிந்து கொண்டு தைகா போவதாக உங்கள் எண்ணம்? மாஸ்கோவிலிருந்து ஐந்து மைல் தொலை போவதற்குள் பிய்ந்து விழுந்துவிடும் இந்த ஜோடுகளையா?''

''இவற்றுக்கு என்ன வந்தது? இவற்றை ஒரு கயிற்றால் கட்டி இறுக்கிக்கொள்வேன். உள்ளுக்குத் துணி கொடுத்து மேலே கயிற்றால் கட்டிக்கொள்வேன்'' என்றார் கோர்ஷூனவ்,

லெனின் யோசனையுடன், ''கட்டிக்கொள்ளலாம்'' என்று சொல்லிவிட்டு, ''அப்படியானால் உங்களிடம் வேறு ஜோடுகள் இல்லை, சரிதானே?'' என்று கேட்டார்.

''வேறு ஜோடுகளுக்கு எங்கே போவது? இருந்தன, தேய்ந்து போய்விட்டன. இந்த ஜோடுகளை நான் ஜாக்கிரதையாகப் பேணி வருகிறேன்....''

''இவற்றுக்கு என்ன வந்தது?'' என்று திருப்பிச் சொன்னார் லெனின். ''மன்னியுங்கள், லெஓனீத் அலெக்ஸேயெவிச், மன்னியுங்கள்'' என்றார்.

கோர்ஷுனவின் தோளை மெல்லத் தொட்டு அவரை உட்கார்த்தினார். அவருடைய முகத்தைக் கவனமாக ஆராய்ந்து,'' அவர் கோபித்துக்கொண்டு விடவில்லையே என்று பார்த்தார். அவர் கோபித்துக்கொள்ளவில்லை என்பது முடிவாக நிச்சயம் ஆனதும் நிம்மதியடைந்து அறையில் உலாவலானார்.

''நம் நாட்டில் சில அசாதாரண மனிதர்கள் இருக்கிறார்கள். உதாரணமாக த்ஸிஒல்கோவ்ஸ்க்கியை எடுத்துக் கொள்ளுங்களேன். பிராந்திய ருஷ்யச் சிற்றூர் ஒன்றைக் கற்பனை செய்து கொள்ளுங்கள். தாராக்களும் பன்றிகளும் தாராளமாக வளையவரும் புல் மண்டிய தெரு ஒன்றில், எங்கோ ஒரு பழைய மர வீட்டில் வசிக்கிறார் வயதான கணித ஆசிரியர். ரொட்டியும் ஹெர்ரிங் மீனும் அடங்கிய ரேஷன் அவருக்குக் கிடைக்கிறது. அவரோ, கிரக நடு வெளியில் பறப்பது பற்றிய பிரச்சினைகளில் மூழ்கியிருக்கிறார். அவர் வசிக்கும் வீட்டில் கணப்பு கூட எரியாதிருக்கலாம். நண்பரே, நீங்களும் அதே வழியைக் கடைப்பிடிக்கிறீர்கள். தைகாக் காட்டில் ஆயிரம் வெர்ஸ்ட்டாக்கள் நடக்கப் போகிறீர்கள் பிய்ந்த ஜோடுகளைப் போட்டுக்கொண்டு!'' என்றார் லெனின்.

''நீங்கள் மட்டும் என்னவாம்? எங்கே 'சோஷலிஸம்' என்ற சொல்லைப் படிப்பதுகூட எல்லோராலும் முடியாதோ அந்த நாட்டில் சோஷலிஸத்தை நிறுவ முற்பட்டிருக்கிறீர்கள் நீங்கள்!'' என்று நினைத்துக்கொண்டார் கோர்ஷுனவ்.

தம்மையும் லெனினையும் ஏதோ ஒன்று உறவுபடுத்துகிறது, ஒன்றிணைக்கிறது என்றும், தாமும் லெனினும் ஒரே செயலை நிறைவேற்றிக் கொண்டிருப்பதாகவும், கலூகா நகரில் பிரபஞ்சத்தை ஆராய்ந்துகொண்டிருக்கும் த்ஸிஒல்கோவ்ஸ்க்கிய், தொழிற்சாலைகளைச் சீரமைத்துக் கொண்டிருக்கும் அரைப்பட்டினியான தொழிலாளர்கள், கட்டைக் கலப்பைகளால் நிலத்தை உழுது கொண்டிருக்கும் குடியானவர்கள் ஆகிய எல்லோருடைய வாழ்க்கைகளிலும் முக்கியமானது இந்தச் செயலே என்றும் கோர்ஷுனவ் திடீரெனத் தெளிவாக உணர்ந்தார்.

கிளர்ச்சிப் பெருக்கும் பேருவகையும் பொங்க லெனினிடம் விடைபெற்றுச் சென்றார் விஞ்ஞானி. கிரெம்ளினை விரைவாகக் கடந்து செஞ்சதுக்கத்துக்கு வந்தார். அவரது மனம் வருங்காலத்தைப் பற்றியே, நிச்சயமாக நனவாகப் போகிற கனவைப் பற்றியே எண்ணமிட்டுக் கொண்டிருந்தது.

...ஒரு காலம் வரும். அப்போது நாட்டில் தொழிற்சாலைப் புகை போக்கிகள் புகை உமிழத் தொடங்கிவிடும். இப்பொழுது நிலவாத தொழிற்சாலைகள்கூட, வளைவு முகடு கொண்ட குளிர் நடுக்கும் அறையில் வேலையில் முனைந்திருக்கும் மனிதரின் சிந்தனையில் இப்போது உதயமாக மட்டுமே செய்துள்ள டிராக்டர் தொழிற்சாலைகள், மோட்டார்த் தொழிற்சாலைகள் முதலியனகூட அப்போது இயங்கும்.... பூஷ்க்கின், தல்ஸ்த்தோய் போன்ற பேரிலக்கிய ஆசிரியர்களின் நூல்கள் அப்போது எல்லோருக்கும் விளங்கும். ஏனெனில் கல்வி அறிவு அற்ற, ஓரளவு அநாகரிகமான ருஷ்யா அப்போது மக்கள் எல்லோரும் எழுத்தறிவு பெற்றவர்களாக இருக்கும் நாடாகத் திகழும்.... விஞ்ஞான ஆராய்ச்சிக் குழுக்கள் நிச்சயமாக வட துருவத்தை அடைந்துவிடும். யாராவது சிலர் மாகடலின் அடித்தளத்தை இறங்கி ஆராய்வார்கள், அல்லது வாயுமண்டலத்திற்கும் மேலே எழும்புவார்கள். அந்த ஆராய்ச்சிப் பயணக் குழுக்களின் தலைவர்கள் ஒரு துண்டு ரொட்டிக்

காகவும் ஒரு சிட்டிகை புகையிலைக்காகவும் ஒரு புதிய பேரரசின் அமைப்பாளரைத் தொந்தரவு செய்ய வேண்டியிராது.... மனிதனுடைய வாழ்க்கை நோக்கத்தைப் பற்றிய புதிய புரிவு கொண்ட புதிய மனிதர்கள் அதற்குள் வளர்ந்துவிடுவார்கள்.... இவை எல்லாம் நிகழ்ந்து தீரும்.

இதற்கிடையே வீதிகளில் அகற்றுவாரின்றிக் குவிந்து கிடந்தது வெண்பனி. கடுங்குளிரில் விரைந்து நடந்தார்கள் வழிப்போக்கர்கள். குதிரை, வண்டியை மெதுவாக இழுத்துச் சென்றது. ''அட வங்குபிடித்த கழுதை!'' என்று அதைத் திட்டினான் வண்டியோட்டி. இறுக்க அடைக்கப்பட்ட கடைகளின் முகப்புக்களில் ''மர்த்தியானவ்'', ''கூரினும் மகன்களும், மொத்த வியாபாரிகள்'', ''இ. வ. கோஷ்க்கின், இரும்புச் சாமான்கள்'' என்றெல்லாம் எழுதப்பட்ட அடையாளத் தகடுகள் தொங்கின. ஆனால் இவை எல்லாம் தாற்காலிகமானவையே.

...பனிக்காலக் குல்லாய்கள் அணிந்த சில செம்படை வீரர்கள் ஒரு சறுக்கு வண்டியில் இரும்புக் குழாய்களை ஏற்றி இழுத்துச் சென்றார்கள். குழாய்களின் கணகணப்பு ஒலி தெரு முழுதும் ஆர்த்தது. ஏதோ கட்டிடத்தைப் புதுப்பிக்கவோ புதிதாக எதையேனும் கட்டவோ போகிறார்கள் போலும். ஒரு ஜன்னல் வழியாகக் கார்ல் மார்க்ஸின் உருவப்படமும் ''வாழ்க...'' என்ற கோஷம் ஒன்றின் தொடக்கச் சொல்லும் கோர்ஷுனவின் பார்வையில் பட்டன. சிவப்புத் தலைக்குட்டை அணிந்த மாது ஒருத்தி ஒரு வீட்டு வாயிலிலிருந்து மற்ற வீட்டு வாயிலுக்கு ஓடிச் சென்றாள்...

இதற்கிடையே, விசாலமான நாட்டின் இதயமான கிரெம்ளினில், நடுத்தர உயரமும் கட்டுக்குட்டான மேனியும் கொண்ட ஒரு மனிதர் தமது அலுவலறையில் குறுக்கும் நெடுக்கும் நடந்தார், சிந்தித்தார், ஊக்கமாகவும் விரைவாகவும் ஏதோ குறிப்பு எழுதினார். ருஷ்யாவை அடிப்படையில் மாற்றப் போகிற புதிய சாதனைகள் அவருக்கு இப்போதே தெளிவாகத் தென்பட்டன.

# பிரதிநிதி

ஒரு முதிய குடியானவன் ஸ்மோல்னியில் வெகு நேரம் வாயிலருகே தயங்கித் தயங்கி நின்றுகொண்டிருந்தபின் லெனினது செக்ரெட்டரியின் மேஜையை மெதுவாக அணுகினான். புதிய மரவுரி பூட்சுகளும் கைநெசவுத் துணியாலான நைந்த கோட்டும் அணிந்திருந்தான் அவன். நெடுங்கால உபயோகத்தால் மெத்திட்டிருந்த கயிறு ஒன்றால் கோட்டை இடுப்பில் வரிந்து கட்டிக்கொண்டிருந்தான். அவனுடைய ஒரு கையில் தொப்பியும் மறு கையில் ஒரு தொங்குபையும் இருந்தன. அவனது கோட்டும் தொங்குபையும் ரை ரொட்டி மணமும் புகை நெடியும் வீசின. கதிரடிக்கும் இடங்கள், அரிதாட்கள் நிறைந்த வயல்கள், உருளைக்கிழங்குச் செடிகளின் மேற்பகுதி எரிக்கப்படும் வெற்று நிலங்கள், இலையுதிர்கால நீல வானம், வெப்பப் பிரதேசங்களை நோக்கித் தெற்கு முகமாக ஆர வரிசைகளாகப் பறந்துசெல்லும் நாரைகளின் கத்தல்கள் ஆகியவை அந்த வாசனையால் நினைவுக்கு வந்தன....

செக்ரெட்டரிக்கு முன் மரியாதையாகச் சிரம் தாழ்த்து, ''வணக்கம்'' என்று முகமன் கூறினான் குடியானவன்.

யுவதியான செக்ரெட்டரி பார்வையை நிமிர்த்தி, ''வணக்கம், தோழரே'' என்றாள்.

''எனக்கு லெனினைப் பார்க்க வேண்டும்'' என்று சொல்லிவிட்டுத் தயக்கத்துடன் ''தோழர்....'' என இழுத்தான் முதியவன்.

''நீங்கள் கட்டாயமாக லெனினைப் பார்த்தாக வேண்டுமா? என்ன காரியமாக?'' என்று வினவினாள் செக்ரெட்டரி.

''எங்கள் காரியம் நாடறிந்த விஷயம்தான். நிலத்தைப் பற்றியது, நல்ல தோழரே.''

''நிலத்தைப் பற்றி என்ன அறிய விரும்புகிறீர்கள்? உங்களுக்கு ஏதேனும் விளங்கவில்லையா? ஆணைப்பத்திரம் உங்களுக்குக் கிடைக்கவில்லையோ?''

‘‘கிடைத்தது’’ என்று கூறினுன் குடியானவன். பின்பு பெருமூச்சுடன் தொங்குபையைத் திறந்து அதற்குள் எதையோ தேடித் துழாவலானுன்.

‘‘உட்காருங்கள், தோழரே. உங்கள் பெயர் என்ன?’’ என்ருள் செக்ரெட்டரி.

வந்தவன் நாற்காலியில் அமர்ந்து, ‘‘பகோமவ். எங்கள் கிராமத்தில் எல்லாருமே பகோமவ்கள்தாம். கிராமத்தின் பெயரும் பகோமவ்க்கா. அக்கம்பக்கத்து கிராமங்களின் பெயர்களும் சின்னப் பகோமவ்க்கா, புதிய பகோமவ்க்கா. கிராமத்தார் எல்லாருமே பகோமவ்கள்.... இந்தாருங்கள்’’ என்று கூறி, ஒரு காகிதத்தை செக்ரெட்டரியின் பக்கம் நீட்டினுன் குடியானவன். அந்தக் கடிதம் மடிப்புக்களில் நைந்து, கசங்கி, அங்கங்கே ஒட்டப்பட்டிருந்தது.

செக்ரெட்டரி அதை வாங்கிக் கவனமாக ஆராய்ந்தாள்.

‘‘நிலம் இப்போது உங்களுக்கே சொந்தம் என்பதை இந்தக் காகிதத்திலிருந்துதான் தெரிந்துகொண்டீர்களா?’’ என்று வியப்புடன் கேட்டாள்.

‘‘இதிலிருந்துதான்.... இதிலிருந்துதான்....’’

செக்ரெட்டரி காகிதத்தைப் பதபாகமாக மேஜைமேல் பரப்பினுள். நிலம்பற்றிய ஆணைப் பத்திரத்தின் நகல் அது. அதிக எழுத்தறிவற்றவன் ஒருவனுல் பிரதி எடுக்கப்பட்டது. சிவப்பும் கறுப்புமாக நெடுக்குக் கோடுகள் வரையப்பட்டு ‘‘பற்று’’ எனத் தலைப்பிடப்பட்டிருந்த அந்தக் காகிதம் ஏதோ அலுவலகப் பேரேட்டிலிருந்து கிழிக்கப்பட்டிருந்தது. போதாக்குறைக்கு அது மடிப்புக்களில் ஒரேயடியாக நைந்து போயிருந்தமையால் சில சொற்களும் வாக்கியங்களும் கூடப் படிக்கக் கஷ்டமாயிருந்தன.

நூற்றுக் கணக்கான குடியானவர்களின் காய்ப்பேறிய கைகளால் பரிசிக்கப்பட்டிருக்கும் அந்தக் காகிதம் — சொந்தமாகச் செய்யப்பட்ட அந்த ஆணைப்பத்திர நகல்

துண்டு. செக்ரெட்டரி அந்தக் காகிதத்தின்மீது கண்ணோட்டியவாறு ''ஊம்-ம்'' என்று வியப்புடன் இழுத்தாள்.

நிலம் இப்போது உண்மையிலேயே ''நம்முடையது'' என்று தாமே உறுதிப்படுத்திக் கொள்வதற்காக எத்தனை கண்கள் இதை ஆர்வத்துடன் பருகியிருக்கும்! இதை நம்புவதே கடினமாயிருந்தது. லெனினைக் காணவந்த கிராமவாசிகள் நிலம் குடியானவர்கள் கைகளுக்கு மாறுவது சம்பந்தமான கேள்விகளால் வழக்கமாக உலப்பப்பட்டிருப்பதை செக்ரெட்டரி அனுபவ வாயிலாக அறிந்திருந்தாள். ஆனால் பகோமவை அனுப்பியிருந்த சமூகமோ, இந்தப் பத்திரம் பிரமாணபூர்வமானது தானா என்பதையே, அதாவது நிலம் பற்றிய ஆணைப் பத்திரம் உண்மையில் நிலவுகிறதா என்பதையே நம்பமுடியாமல் குழம்புவது தெரிந்தது.

எனவே அவள் விவசாயம் பற்றிய உதவி மக்கள் கமிஸாரிடம் குடியானவனைப் போகச் சொன்னாள்.

''இது போதாது'' என்று பெருமூச்செறிந்து சொன்னான் பகோமவ். ''ஊர்க்காரர்கள் என்னை லெனினிடம் அனுப்பியிருக்கிறார்கள். எனக்கு லெனின்தாம் வேண்டும். சாட்சாத் லெனின்!'' என்றான்.

''எனக்குப் புரிகிறது, தோழர் பகோமவ். ஆனால் விளாதீமிர் இல்யீச்சால் எவ்வளவுதான் விரும்பினாலும் எல்லோரையும் சந்திக்க முடியாது. எந்தத் தோழரிடம் நான் உங்களை அனுப்புகிறேனோ அவர் நிலம் பற்றிய பிரச்சினைகளையே கவனிக்கிறார். அவர் உங்களுக்கு எல்லா விஷயங்களையும் நன்றாக விளக்குவார். விவசாயம் பற்றிய உதவி மக்கள் கமிஸார் அவர்.''

''அப்படியா'' என்று சிந்தனையுடன், அதிருப்தி தோன்றக் கூறினான் பகோமவ். ''கமிஸாரிடம்தான் நான் போயாக வேண்டும் போலிருக்கிறது, அப்படித்தானே? ஆனால் கமிஸாரால் எனக்குச் சரிவர விளக்க முடியவில்லை என்றாலோ? அப்போது நான் லெனினைப் பார்க்கலாம் அல்லவா?'' திறந்த தொங்குபையைக் கைகளில் பிடித்தவாறு

செக்ரெட்டரியை ஓரக் கண்ணுல் தந்திரமாக நோக்கினுன் பகோமவ்.

ஊர்க்காரர்கள் பெத்ரோகிராதுக்கு வேறு எவரையும் அனுப்பாமல் பகோமவை அனுப்பியிருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லே என எண்ணிக்கொண்டாள் செக்ரெட்டரி.

''அப்போது நீங்கள் லெனினேப் பார்க்கலாம்'' என்று வேறு வகையின்றி ஒப்புக்கொண்டாள்.

''சம்மதம்!'' என்று மேஜைமீது உள்ளங்கையால் அடித்தான் பகோமவ். அவன் எழுந்தான். மறுபடி கட்டாயம் திரும்பிவருவான் என்பது அவன் முகத்தில் புலப்பட்டது.

உதவி மக்கள் கமிஸாருடையது என்று பகோமவுக்குக் காட்டப்பட்ட மேஜை அந்தப் பெரிய பொது அறையில் இருந்த பத்து, பன்னிரண்டு மற்ற மேஜைகள் போலவே இருந்தது. அது சாதாரண அலுவலக மேஜை. பச்சைத் துணியால் மூடப்பட்டிருந்தது. ஊதா மைப் புள்ளிகளும் கறைகளும் துணி மீது நிறையக் காணப் பட்டன.

மேஜைக்கு உரியவர் தமது இடத்தில் இல்லே. யெகோர் பகோமவ் நாற்காலியில் அமர்ந்து, மேஜை விரிப்பின்மேல் விரல்களால் தாளம் போட்டவாறு சுற்றுமுற்றும் படிப்படியாகப் பார்வையைச் செலுத்தினுன். அந்தச் சூழல் அவனுக்குப் பிடிக்கவில்லே. அது மரியாதைக்கு உரியதாக, கண்ணியம் உள்ளதாக இல்லே. இம்மாதிரிச் சந்தர்ப்பங்களில் யெகோர் பகோமவ் இன்றியமையாதவை எனக் கருதிய நம்பிக்கையோ ஓரளவு மனப் பதற்றமோகூட அதைக் கண்டதும் ஏற்படவில்லே. ''என்னதான் புதியவர்கள் என்ருலும் இவர்கள் அதிகாரிகள் ஆயிற்றே! அதிகாரம், அதிலும் உச்ச அதிகாரம், கொஞ்சமாவது பணிவையும் அச்சத்தையும் விளேக்க வேண்டும்.... இல்லே, இங்கே எல்லாமே வேறுவிதமாக இருந்தன. அவரவர் தமக்கு இஷ்டமான வகையிலெல்லாம் உடையணிந்திருந்த மனிதர்கள் மேஜைகளின் பின்னே உட்கார்ந்திருந்

தார்கள். அவர்களில் சிலர் பெண்கள் கூட. வந்தவர் களோ, மேஜைக்கு மேஜை விட்டாற்றியாகச் சுற்றிக் கொண்டிருந்தார்கள். டெலிபோன்களின் கணகணப்பும் தட்டெழுத்துப் பொறிகளின் கடகடப்புமாக ஒரே இரைச்சலாக வேறு இருந்தது.... பெரிய அலமாரி ஒன்று வாயில் வழியாக உள்ளே இழுத்துவரப்பட்டுக் கொண் டிருந்தது. எவனோ ஒருவன் ''புகை பிடிக்கக் கூடாது'' என்ற குறிப்பலகையைச் சுவரில் ஆணியடித்து இறுக்கிக் கொண்டிருந்தான்.

யெகோர் பகோமவ் காத்திருந்த மேஜையை நோக் கிக் கடைசியில் வந்தார் நடுத்தர உயரமான ஒரு மனிதர். முழங்கால் வரை வரும் உயர பூட்சுகளும் ருஷ்யப் பாணியில் கால்சராய்க்கு வெளியே தொங்கிய சாம்பல் நிறச் சட்டையும் அணிந்திருந்தார். மெக்கானிக் அல்லது கிராமப் பள்ளி ஆசிரியர் போன்று தோற்றம் அளித்தார். மேஜை அருகே தம் இருக்கையில் அமர்ந்து, ''நீங்கள் என்னைப் பார்க்க வந்திருக்கிறீர்களா, தோழரே?'' என வினவினார்.

யெகோர் பகோமவ் அவர் பக்கம் திரும்பி எழுந்து நின்று:

''நீங்கள்தாம் கமிஸாரா?'' என்று தயக்கத்துடன் கேட்டான்.

''உதவிக் கமிஸார்.''

''வணக்கம்'' என்று முகமன் கூறினான் பகோமவ்.

''வணக்கம் தோழரே. என்ன காரியமாக வந்தீர்கள்?''

''நிலத்தைப் பற்றிய காரியமாக'' என்று விடையிறுத் தான் பகோமவ்.

''ஆணைப் பத்திரம் விளங்கவில்லையோ?''

''ஆமாம்'' என்று தலையசைப்பால் தெரிவித்துவிட்டுப் பகோமவ் பின்னொரு முறை சுற்றிலும் அதிருப்தியுடன் கண்ணோட்டினான். இந்த அறையில் இந்த ஆட்களிடம் உருப்படியாக எதுவும் கிடைக்கும் என்று அவனுக்கு

நம்பிக்கைப்படவில்லை. எனினும் வந்த விஷயத்தைப் பேசித்தீர வேண்டியிருந்தது....

உதவி மக்கள் கமிஸாரின் பக்கம் திரும்பினான். அவரோ நிதானமாக, மாணவர்களுடன் பேசுவது போன்ற பழக்கமான முறையில் ''விளக்க முயல்கிறேன்'' என்று சொல்லிவிட்டு விளக்க முற்பட்டார்:

''நிலங்கள் மீது நிலச்சுவான்தார்களின் சொத்துரிமை எவ்வித ஈடுமின்றி உடனடியாக ரத்து செய்யப்பட்டு விட்டது. இது முதல் விஷயம்'' என்று துடியாக விரலை மடக்கினார் உதவிக் கமிஸார். ''இதன் பொருள் என்ன? இதன் பொருள் என்னவென்றால் முதன் முதலாக....''

அவர் வாக்கியத்தை முடிப்பதற்குள் இராணுவ உடுப் பணிந்த ஒரு மனிதன் மேஜை அருகே வந்து, ''மன்னிக்க வேண்டும். அந்த அலமாரியில் என் காகிதங்கள் இருக்கின்றன'' என்று கூறி உதவிக் கமிஸாரின் பின்புறம் இருந்த அலமாரியைச் சுட்டிக் காட்டினான்.

உதவிக் கமிஸார் நாற்காலியுடன் ஒரு பக்கமாக ஒதுங்கிக்கொண்டு பேச்சைத் தொடர்ந்தார்:

''இதன் பொருள் என்னவென்றால் முதன் முதலாக, நிலச் சுவான்தார்களுக்கும் மடங்களுக்கும் ஜார் குடும்பத்தினருக்கும் முன்பு சொந்தமாயிருந்த நிலம் எவ்வித ஈடும் இன்றி எல்லா உழைப்பாளி மக்களுக்கும், நிலத்தில் தாமே சாகுபடி செய்பவர்கள் எல்லோருக்கும் பயன்பாட்டுக்காகத் தரப்படுகிறது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தக் கணம் முதல் நிலத்தின் முழு அதிகாரம் பெற்ற உரிமையாளர்கள் ஆகியிருக்கிறீர்கள் நீங்கள், அதாவது குடியானவர்கள்.''

''இல்லை. அவை அலமாரியில் இல்லை'' என்று வருத்தத்துடன் சொன்னான் இராணுவ உடுப்பு அணிந்தவன். ''அவை இடது செருகறையில் இருக்கும்'' என்று உதவிக் கமிஸார் உட்கார்ந்திருந்த மூலையைச் சுட்டிக் காட்டினான்.

உதவிக் கமிஸார் நாற்காலியுடன் முந்திய இடத்துக்கு நகர்ந்து உற்சாகமாக மேலே பேசிக்கொண்டு போனார்:

''நிலம் உற்பத்தியாளர்களுக்கு! சுரண்டுவோரின் காலம் ஒழிந்தது, நமது பூமியின் உண்மையான எஜமானர்களின் காலம் தொடங்கிவிட்டது!''

இராணுவ உடுப்பு அணிந்தவன் இப்போது மறுபடியும் குறுக்கிட்டான். ''மன்னிக்க வேண்டும். அந்தக் காகிதங்கள் நடுச் செருகறையில் இருக்கின்றன போலிருக்கிறது....''

உதவிக் கமிஸார் மேஜையின் பக்கத்திலிருந்து அகன்று பகோமவின் அருகே காகிதக் கட்டு ஒன்றின்மேல் உட்கார்ந்து கொண்டு பேச்சை விடாது தொடர்ந்தார்:

''இனிமேல் எல்லா நிலமும் உங்களுடையது. என்றென்றைக்கும் உங்களுக்கே உரியது.''

ஐந்து நிமிடங்களுக்கெல்லாம் புதிய அலமாரி கொண்டுவந்து வைக்கப்பட்டது. மேஜை நகர்த்தப்பட்டது. எனவே உதவிக் கமிஸாரும் யெகோர் பகோமவும் வெற்றிடத்தின் முன்னே உட்கார்ந்திருக்க நேர்ந்தது.

''நல்ல கமிஸார்! நல்ல பூமியின் எஜமானன்! அழகுதான்!'' என்று நினைத்துக் கொண்டான் பகோமவ்.

உதவிக் கமிஸாரின் பேச்சைக் கடைசிவரை கேட்டான், மெய்ப்புக்குச் சில கேள்விகளைக் கிளப்பினான். பின்பு நிலம் பற்றிய ஆணைப்பத்திரத்தின் பிரதி ஒன்றைப் பெற்றுக் கொண்டு வணங்கி விடைபெற்று அப்பால் சென்றான்.

வெளியூர்களிலிருந்து ஏதேனும் காரியமாக அனுப்பப்பட்டுப் பெத்ரோகிராத் வந்தவர்கள் எல்லோருமே லெனினைக் காணவும், அவரை நன்கு பார்க்கவும், அவருடன் பேசவும், கைகுலுக்கவும், அவர் உண்மையில் நிலவுவதைத் தங்கள் சொந்தக் கண்களால் உறுதிப்படுத்திக் கொள்ளவும் கட்டாயமாக விரும்பினார்கள். தவிரவும் — இது எல்லாவற்றிலும் முக்கியமானது—புதிய உலகு பற்றிய உண்மை அனைத்தும், இன்னும் எல்லோருக்கும் தெளிவுபடாத அதன் கருத்துக்களும் உட்பொருளும், எல்லோருக்கும் இன்னும் விளங்காத அதன் வடிவங்களும், மனிதகுல வரலாற்றில் முன் ஒருபோதும் இல்லாத அளவு ஒரே பெயரில் ஒருமுனைப்பட்டிருந்தன. அந்தப்

பெயர்தான் லெனின். அவர் வாயிலாகக் கேட்கையில் மறைபொருளான விஷயங்கள் தெளிவாக விளங்கின, அண்மையில்தான் அயலானவையாகத் தோன்றியவை அன்புக்குரியவை ஆயின, நடக்க முடியாதவையாகக் காணப்பட்டவை சாத்தியமானவை ஆயின.

தன்னைப் பெத்ரோகிராத் அனுப்பிய ஊர்க்காரர்களிடம் திரும்பிச் சென்று, ''லெனின் என்னிடம் இப்படிச் சொன்னார். நானே அவருடன் பேசினேன், அவரைப் பார்த்தேன்'' என்று தெரிவிக்கும் உரிமையைப் பெற ஒவ்வொரு தூதனும் விரும்பினான்.

யெகோர் பகோமவ் லெனினது செக்ரெட்டரியிடம் திரும்பி வந்ததும் அவள் வியப்படையவில்லை. மற்றவர்கள் போலவே இவனும் லெனினைக் காண முயற்சி செய்யப் போகிறான் என்று எண்ணிக்கொண்டாள்.

''காரியம் பழமா காயா?'' என்று பகோமவிடம் கேட்டாள்.

''ஏதோ பேசினோம்'' என்று மழுப்பலாகப் பதிலளித்துவிட்டு அவன் ''நான் நாற்காலியில் உட்கார்ந்திருந்தேன், கமிஸார் காகிதக் கட்டு மேல் வீற்றிருந்தார்'' என்று அர்த்தபுஷ்டியுடன் சொன்னான். சற்று நேரம் பேசாதிருந்தபின், ''அன்பார்ந்த தோழரே, நான் கட்டாயமாக லெனினைப் பார்த்தாக வேண்டும். ஊராருக்கு நான் என்ன சொல்வேன்? அவர்களோ லெனினை நேரில் கண்டு பேசும்படி உத்தரவிட்டிருக்கிறார்கள். எங்கள் பகோமவ்க்காக்காரர்களுக்குக் கொஞ்சம் மரியாதை காட்டுங்கள், அன்புள்ள தோழரே'' என்று உறுதியுடன் கூறினான்.

இப்போதெல்லாம் லெனின் ஒரு நாளைக்கு இரண்டு மூன்று மணி நேரந்தான் உறங்குகிறார் என்றும் அவருக்குத் தலைக்குமேல் வேலை இருக்கிறது என்றும் விவரிப்பதில் பயனில்லை என்று உணர்ந்த செக்ரெட்டரி பெருமூச்சு விட்டு: ''கொஞ்சம் பொறுங்கள். லெனினுக்கு உங்களுடன் பேச எப்போது ஒழியும் என்று அறிந்து வருகிறேன்'' என்றாள்.

''ஆகா, ஆகா! எனக்கு வேண்டியதும் அதுவேதான்!'' என்று களிபொங்கக் கூவினன் பகோமவ்.

செக்ரெட்டரி காட்டிய நாற்காலியில் அமர்ந்து எதிர் பார்க்கலானுன்.

பல மாலுமிகள் லெனினது அலுவலறையிலிருந்து வெளிவந்தார்கள். உடனே உள்ளே போனுர்கள் தொழிலாளிகள் போலக் காணப்பட்ட சிலர். தொழிலாளர்களுக்கு அப்புறம் தரைப்படை வீரர்கள் உள்ளே போனுர்கள், அவர்கள் வெளிவந்ததும் மூக்குக்கண்ணுடியும் விலையுயர்ந்த மென்மயிர்த்தோல் கோட்டும் அணிந்த ஒரு மனிதர் உள்ளே சென்ருர். செக்ரெட்டரி அனேக முறை லெனினது அறைக்குள் போய் வந்தாள்.

''சீக்கிரம் உங்களைக் காண்பார், தோழர் பகோமவ்'' என்று தெரிவித்தாள்.

''நன்றி, நன்றி'' என்று உளமார நன்றி தெரிவித்தான் பகோமவ். ''எனக்கு ஒன்றும் அவசரமில்லை. தோழர் லெனினுடைய சௌகரியம் போல நடக்கட்டும்'' என்ருன்.

மூக்குக் கண்ணுடியும் விலையுயர்ந்த மென்மயிர்த்தோல் கோட்டும் அணிந்த மனிதரும் கடைசியில் லெனினது அறையிலிருந்து வெளியேறினுர். அலுவலறைக்குள் வேறு எவரும் புகவில்லை. லெனின் ஒழிவாக இருப்பது போலத் தான் பட்டது. ஆனுல் செக்ரெட்டரி ''இன்னும் பத்து நிமிடங்களில், தோழரே'' என்ருள்.

செக்ரெட்டரி விரைவில் எங்கோ போய்விட்டாள். லெனினுக்கு இடைவேளை ஓய்வு போலும் இது என்று பகோமவ் நினைத்துக் கொண்டான்.

ஐந்து நிமிடங்கள் கழிவதற்குள் அரை மணிக்கு மேல் ஆகிவிட்டது போலப் பகோமவுக்குத் தோன்றியது. பொறுமையிழந்து எழுந்தான். ஆனுல் கம்பமாய் நிற்பது சரியல்ல என்று படவே மறுபடி உட்கார்ந்துவிட்டான். மேலும் ஒரு நிமிடத்திற்கெல்லாம் தான் அறியாமலே மீண்டும் எழுந்து எதிர்பார்ப்பு அறையில் குறுக்கும் நெடுக்கும் நடக்கத் தொடங்கினுன். செக்ரெட்டரி இன்னும் பத்து

நிமிடம் பொறுத்திருக்கும் படி சொன்னபோது அவன் கடிகாரத்தைப் பார்க்கவில்லை. இப்போதோ, ஏற்கன வே எவ்வளவு நேரம் கழிந்துவிட்டது என்று தெரியாமல் தொல்லைப்பட்டான். ஒருவேளை லெனின் நிம்மதியிழந்து தவிக்கிறார் போலும். அவனை எதிர்பார்த்து விலைமதிப் பற்ற நேரத்தை வீணே போக்குகிறார் போலும். அவனோ, உள்ளே போகிற வழியாய்க் காணோம்.... செக்ரெட்டரி இன்னும் திரும்பிவரவில்லை.

முடிவில் யெகோர் பகோமவ் கதவை லேசாகத் திறந்து தொங்குபையும் கையுமாக அறைக்குள் நுழைந்து விட்டான்.

நடுத்தர உயரமுள்ள கட்டுக்குட்டான மனிதர் ஒரு வர், பழசுபட்ட உடை அணிந்து சிறு மேஜை அருகே அமர்ந்து, கீறல்கள் விழுந்த படைவீரன் கிண்ணத்தி லிருந்து எதையோ எடுத்துச் சாப்பிட்டுக்கொண்டிருந்தார். அவரது சிறு மேஜை பெரிய எழுது மேஜையின் பக்கத்தி லேயே இருந்தது.

''இவர் லெனினாக இருக்க முடியுமா?''

யெகோர் பகோமவ் அப்படியே நின்றுவிட்டான்.

அந்த மனிதர் ஸ்பூனை ஆட்டிச் சைகை செய்தவாறு, ''வாருங்கள், வாருங்கள், தோழரே! உட்காருங்கள். நான் இதோ முடித்துவிடுவேன். உங்கள் பெயர் என்ன, தோழரே?'' என்றார்.

அவன் ஓரளவு குழப்பம் அடைந்து, ''பகோமவ்'' என்று பதில் அளித்தான். ''ஆமாம், லெனின் தான்!'' என உறுதிப்படுத்திக்கொண்டான்.

லெனின் தமக்கு அருகிலிருந்த ஒரு நாற்காலியைச் சுட்டிக் காட்டி, ''இதோ, இப்படி அமருங்கள் தோழர் பகோமவ்'' என்றார். அவன் உட்கார்ந்ததும், ''கிராமத்தி லிருந்தா? நில விஷயமாகவா?'' என உற்சாகமாக வினவி விட்டு, ''மிக அக்கறைக்குரிய விஷயம்!'' என்றார்.

பகோமவ் ஜாக்கிரதையாக நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு லெனினையும் உணவுக் கிண்ணத்தையும் ஸ்பூனை

யும் வறண்ட பொங்கலையும் உறுத்து நோக்கினன். அவனால் நிதானத்துக்கு வரவே முடியவில்லை. தன்னிடம் கூறப்பட்டது அவனுக்குத் தெளிவாகக் காதில் விழுந் தது என்றாலும் தன்னிடம் சொல்லப்பட்ட வார்த்தை களும் தான் இங்கு வந்த நோக்கமும் தற்போதைக்கு இரண்டாம் பட்சமாகிவிட்டதாக அவனுக்குத் தோன் றியது.

கிண்ணத்தை நோக்கித் தன்வசமின்றித் தலையை அசைத்து, ''பொங்கல், நெய் இல்லாத பொங்கல்!'' என்றான்.

''இப்போதைக்கு நெய் இல்லாமல், தோழர் பகோ மவ்'' என்ற பதிலளித்தார் லெனின்.

''ஆண்டவனே, யேசுவே! தோழர் லெனின்! கடவுள் ஆணையாகச் சொல்கிறேன், என்ன இது, நம்பவே முடிய வில்லையே!'' என்று கூறியவாறு துள்ளி எழுந்து, தொங்கு பைக்குள் சட்டெனக் கைவிட்டுத் துழாவினன் பகோமவ்.

பைக்குள்ளிருந்து துணியில் சுற்றிய கொழுப்புக் கட்டி யையும் வட்ட ரொட்டித் துண்டையும் வெங்காயத்தை யும் காகிதத்தில் கொஞ்சம் உப்பையும் எடுத்து சிறு மேஜை மேல் அதற்குள் வெறுமையாகிவிட்ட கிண்ணத் தின் அருகே வைத்தான்.

''தோழர் லெனின்! மறுக்காமல் எடுத்துக் கொள்ளுங் கள்!'' என்று உணர்ச்சி பொங்கக் கூறினன்.

''வேண்டாம், வேண்டாம்! நன்றி. எனக்கு வயிறு நிறைந்துவிட்டது'' என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டார் விளாதீமிர் இல்யீச்.

''தோழர் லெனின்! நீங்கள் சாப்பிடுவது நெய் இல்லாத பொங்கலா? இது அடுக்குமா? நீங்கள் வறண்ட பொங்கலைச் சாப்பிட்டீர்கள், நான் கொழுப்பும் ரொட்டி யும் தின்றேன் என்று சொன்னேன் ஆனல் எங்கள் ஊரார் என்னை உரித்து உப்பைத் தடவி விடுவார்களே!'' என்று அதே ஆவேசத்துடன் கூவினன் யெகோர் பகோமவ்.

''அப்படியானுல் ஒரு துண்டு நறுக்கித் தாருங்கள். உங்களைக் காப்பாற்றுவதற்காக'' என்ருர் லெனின்.

அறுப்பரிவாள் அலகினுல் செய்து மரப்பிடி வைத்த கத்தியை எடுத்துக் கொழுப்புத் துண்டை நறுக்கினுன். மழிகத்தி போலக் கூராயிருந்தது அவனுடைய கத்தி.

கொழுப்பையும் மணம் கமழும் ரை ரொட்டியையும் மென்றவாறு, ''அருமையான கொழுப்பு! அற்புதமான ரொட்டி! இந்த மாதிரித் தின்று வெகு காலம் ஆயிற்று.... அப்படியானுல் நீங்கள் சுகமாகவே வாழ்கிறீர்கள் என்று தெரிகிறது. கிராமத்தாரின் மனநிலை எப்படியிருக்கிறது? ஆணைப் பத்திரம் பற்றிக் குடியானவர்கள் என்ன சொல்லு கிருர்கள்?'' என்ருர் லெனின்.

நிலம் பற்றிய ஆணைப் பத்திரம் ஒரு பத்து நாட்களுக்கு முன்தான் லெனினுல் எழுதப்பட்டிருந்தது.... தொழிலா ளர்களும் படைவீரர்களும் பனிக்கால அரண்மனையைத் தாக்கிக் கைப்பற்றிக் கொண்டதும் விளாதீமிர் இல்யீச் தொழிலாளர்கள், குடியானவர்கள் பிரதிநிதிகளின் பெத் ரோகிராத் சோவியத் கூட்டத்தில் பிரசன்னமாகி, வரலாற் றில் முதலாவது சோஷலிஸப் புரட்சியின் வெற்றியைப் பிரகடனம் செய்தார். அப்புறம், இருபது மணி நேரம் இடைவிடாது உடல், மன, நரம்பு ஆற்றல் அனைத்தையும் கசக்கிப் பிழிந்து வேலை செய்தபின் ஓய்வெடுத்துக் கொள் வதற்காக போன்ச்-புருயேவிச்சின் வீட்டுக்குச் சென்ருர். ஆனுல் அங்கே விட்டுக்காரர்களுக்கு இடைஞ்சல் செய்யக் கூடாது என்பதற்காக அவர்கள் உறங்கும் வரை காத் திருந்துவிட்டு விளாதீமிர் இல்யீச் எழுதுமேஜை அருகே அமர்ந்தார்.... அவர் எழுதினுர், அடித்தார், மறுபடி எழுதினுர்.... பெத்ரோகிராத் நகரின் பின் கூதிர்காலச் சாம்பல் நிற வானில் புலர் போதின் ஒளி பரவத் தொடங்கிய போதுதான் அவர் படுத்துக் கொண்டார்.

காலையில் தேநீர் அருந்துகையில் அவர் செவ்வை யாகப் பெயர்த்து எழுதப்பட்ட கையெழுத்துப் பிரதி

யைக் கோட்டுப் பையிலிருந்து எடுத்து உரக்கப் படித்தார். ''நிலம் பற்றிய ஆணைப் பத்திரம்'' அது.

அன்று மாலையே இந்த ஆணைப் பத்திரம் சோவியத்துக்களின் இரண்டாவது அகில ருஷ்யக் காங்கிரஸில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. செய்தித்தாள்களிலும் தனிப் பிரசுரங்களிலும் வெளியிடப்பட்டது.

கிராமாந்தரங்களில் அது எவ்வாறு வரவேற்கப்பட்டது என்பதை அறிய விளாதீமிர் இல்யீச்சுக்கு இப்போது வாய்ப்பு கிடைத்தது.

கேள்வியைக் கேட்டுவிட்டு அவர் சௌகரியமாக உட்கார்ந்து கொண்டு பதிலைச் செவியேற்க ஆயத்தமானார்.

''ஆணைப் பத்திரம் பற்றி என்ன சொல்லுகிறார்களா? அடேயப்பா! இந்த மாதிரி ஆள் நெரிசலையும் ஆரவாரத்தையும் நான் ஆயுள் முழுவதும் கண்டதில்லை!'' என்றான் பகோமவ். களிப் பெருக்கும் ஓரளவு திகிலும் அவன் குரலில் தொனித்தன.

''கிராமத்தைக் குலுக்கிப் போட்டுவிட்டது என்று சொல்லுங்கள், ஊம்?'' என்று வினவினார் லெனின்.

''அதை வருணிக்கவே முடியாது போங்கள். தேனடை போல ஒரே ரீங்காரமும் உழைப்பும்! ஊர்க்காரர்கள் எல்லோரும் தெருவிலே கும்பல் கும்பலாக மொய்த்து விவாதித்த வண்ணமாக இருக்கிறார்கள்.''

''எதைப் பற்றி விவாதிக்கிறார்கள்?'' என்று சட்டெனக் கேட்டு விட்டுப் பகோமவை உற்றுப் பார்த்தார் லெனின்.

''எத்தனையோ விஷயங்களைப் பற்றி, தோழர் லெனின்'' என்று அவன் பதிலளித்து விவரிக்கத் தொடங்கினான். ''நிலம் முழுவதையும் கைப்பற்றிக் கொள்வதா அல்லது ஒரு பகுதியை மட்டுமா....''

''முழுவதையும், முழுவதையும்!'' என்று துவாலையில் கைகளைத் துடைத்துக்கொண்டு எழுது மேஜை அருகே அமர்ந்தார் லெனின். ''ஒரு சதுர அங்குலம் விடாமல்

நிலம் முழுவதையும்! வேறு எதைப் பற்றி விவாதிக்கிறார்கள்?'' என வினவினர்.

''ஈட்டுத்தொகை எதுவுமே கொடுக்க வேண்டாமா அல்லது கனவான்கள் பட்டினி கிடக்காதபடி ஏதேனும் கொஞ்சம்....''

''ஒன்றுமே கொடுக்க வேண்டாம்! நிலத்தின் மீது சொத்துரிமை எந்தவித ஈடும் இல்லாமல் ரத்து செய்யப் பட்டுவிட்டது. நிலம் நியாயப்படி யாருக்குச் சொந்தமோ, அவர்கள் கைகளுக்கு மாறுகிறது. வேறு எதைப் பற்றி விவாதிக்கிறார்கள்?''

''உள்ளபடி சொல்வதானல் இன்னொரு விஷயத்தைப் பற்றியும் ஜனங்கள் விவாதிக்கிறார்கள்'' என்றான் பகோமவ். அவன் முக்கியமான விஷயத்தை இப்போது தொடங்கப் போகிறான் என்பது புலப்பட்டது.

''எதைப் பற்றியோ?''

பகோமவ் பெருமூச்சு விட்டான், காதைச் சொறிந்தான், மூக்கைத் தடவினன், ஆனல் ஒரு தீர்மானத்துக்கு வந்து உறுதியாக, விசேஷத் தெளிவுடன் சொன்னன்:

''குடியானவர்கள் சந்தேகப்படுகிறார்கள். இந்த நிலத்துக்காக அப்புறம் தரையிலிருந்து எழுந்திருக்கவே முடியாதபடி இடுப்பை முறித்துவிட மாட்டார்களா எதிராளிகள் என்று.''

லெனின் புருவங்களை நெரித்தார்.

''அப்படியா? இந்த மாதிரிப் பேச்சுக்குக் காரணம் என்னவோ?'' என்றார்.

பகோமவ் கைகளை லேசாக விரித்தான்.

''எல்லாவற்றுக்கும் உள்ளது போல இதற்கும் காரணம் இருக்க வேண்டுமே'' என்று விடாப்பிடியாகக் கேட்டார் லெனின்.

''எங்களுக்குப் பயமாயிருக்கிறது'' எனப் பதிலளித்தான் பகோமவ்.

''பயமாயிருக்கிறது என்பது எனக்குப் புரிகிறது. ஆனல் முக்கியமான விஷயம்: யாரைக் கண்டு அஞ்சுகிறீர்கள்? எது பயமாயிருக்கிறது?'' என்றார் லெனின்.

யெகோர் பகோமவ் விடை தரவில்லை.

''பல நூற்றுண்டுகளாகத் தங்கள் ஆதிக்கத்தில் இருந்ததை விட்டுவிட நிலச் சுவான்தார்களுக்கும் மடங்களுக்கும் உவப்பாக இருக்குமா என்ன? நிச்சயமாக இராது. அதனுல்தான் மடாதிபதிகளும் நிலச்சுவான்தார்களும் தங்கள் ஆட்களைவிட்டு உங்கள் இடுப்புக்களை முறிப்பதாக அச்சுறுத்தக் கூடும். கேள்வி எல்லாம் என்ன என்றுல், யார் இடுப்பை யார் முறிக்கப் போகிருர்கள் என்பதுதான்'' என்ருர் லெனின்.

''அடிக்கக் கிளம்புவதற்கு நிறையப் பேர் இருக்கிருர்கள், தோழர் லெனின்'' என்று சொன்னுன் பகோமவ்.

''அடிக்கக் கிளம்புபவர்கள் இருக்கத்தான் செய்வார்கள்'' என்று ஒப்புக் கொண்டார் லெனின். ''ஆனுல் அடித்தால் நீங்கள் பேசாமல் பட்டுக் கொண்டிருப்பீர்களா என்ன? நான் அப்படி நினைக்கவில்லை'' என்ருர்.

''நாங்கள் அவ்வளவு கையாலாகாதவர்கள் அல்ல, தோழர் லெனின். ஆனுல் சில ஆட்களிடம் இன்னமும் பலம் நிறைய இருக்கிறது....''

''நமது எதிரிகளிடமா?'' என்று சட்டெனக் கேட்டார் லெனின்.

''ஆமாம்'' என்ருன் பகோமவ்.

''அப்படியா!'' என்று வன்மையுடன் கூறினுர் லெனின். ''சோவியத் ஆட்சி அதிகாரம் வலுவானதுதானு? நிலைக்கக் கூடியது தானு? இதுதானே கேள்வி? புரிகிறது! நாம் நிலத்தை எடுத்துக் கொள்கிருேம், அப்புறம் புதிய ஆட்சி தகர்ந்து நொறுங்கி விடுகிறது, போல்ஷெவிக்குகளும் கமிஸார்களும் ஆளுக்கு ஒரு புறமாக ஓட்டம் பிடிக்கிருர்கள் என்றுலோ? தங்கள் இஷ்டப்படி காரியங்களை நடத்தியதற்காகக் குடியானவர்களுக்குக் கிடைக்கும் சாத்துபடி! இது தானே நீங்கள் தயங்குவதற்குக் காரணம்? புரிகிறது!'' லெனின் மேஜையின் மறுபுறமிருந்து நகர்ந்து பகோமவ் அருகே வந்து மேலே சொன்னுர்: ''முதலாளித்துவ உலகம் முழுவதுமே ஒன்று திரண்டு எதிர்த்தாலும் சோவியத்

ஆட்சியை ஒருவராலும் ஒருபோதும் வெல்ல முடியாது. அது நிலவுவது நம் எல்லோரையும் பொறுத்திருக்கிறது, உங்களையுங்கூடத்தான், தோழர் பகோமவ்!''

இந்தக் கடைசிச் சொற்கள் யெகோர் பகோமவுக்குப் புதிராயிருந்தன.

''எங்களைப் பொறுத்திருக்கிறது என்பது ஏன், தோழர் லெனின்?'' என வினவினன்.

''ஏனென்றல் நீங்கள் கொழுப்பும் முதல்தரமான ரொட்டியும் சாப்பிடுகிறீர்கள், தொழிலாளர்களும் தரைப் படை வீரர்களும் கடற்படை வீரர்களும் விஞ்ஞானிகளும் என்ன உண்கிறர்களோ சைத்தானே அறிவான். குறைந்தது இந்தக் காரணத்தினலாவது உங்களையும் பொறுத்திருக்கிறது சோவியத் ஆட்சி நிலவுவது. ஆம், ஆம்!'' என்று ஆழ்ந்த முறையில் சொன்னர் லெனின்.

யெகோர் பகோமவ் தலையைத் தொங்கப் போட்ட வாறு பேசாதிருந்தான்.... ''நாங்கள் அப்படி ஒன்றும் பிரமாதமாகச் சாப்பிட்டுவிடவில்லை. ஆனல் மொத்தத்தில் அவ்வளவு மோசமில்லை.... நகரவாசிகளைவிட எவ்வளவோ மேல்....'' அவன் லெனினை நோக்கினன். அவர் தமது நாற்காலி அருகே சென்றர்.

''குடியானவர்கள் தொழிலாளர்களுக்கு ரொட்டி தருவார்கள்... சேகரிப்பார்கள் என்று நினைக்கிறேன்'' என மெதுவாகச் சொன்னன் பகோமவ்.

''இது அருமையான விஷயம்! நாம் இருவரும் சிந்தித்திருப்பது நல்ல காரியம், தோழர் பகோமவ்! தொழிலாளர் பிரதிநிதிகள் உங்களைக் காண வருவார்கள். எதிர்பாருங்கள்!'' என்று கூறினர் லெனின்.

தம் காகிதத்தில் எதையோ குறித்துக்கொண்டார். அதிர்ஷ்டவசமாகக் கிடைத்த இந்தக் கருத்தை விரிவாகச் செயல்படுத்துவது எவ்வாறு என்று அவர் அறிந்திருப்பதை அவரது முகபாவம் காட்டியது.

''அற்புதம்! அற்புதம், தோழர் பகோமவ்!'' என்று கூறினர் லெனின். பின்பு புன்னகையுடன் கேட்டார்:

''அப்புறம், நில விஷயம் என்ன? பயமாயிருக்கிறதாக்கும்? எடுத்துக்கொள்ள மாட்டீர்களாக்கும்?''

யெகோர் பகோமவ் முதலில் ஒரு பக்கமும் பிறகு மறு பக்கமும் பார்த்தான். அப்புறம் நிதானமாக, பெருமிதம் தொனிக்க, ''நிலத்தை நாங்கள் ஒரே மணி நேரத்தில் பங்கிட்டுக் கொண்டோம், முழுவதையும்'' என்று விடையிறுத்தான்.

சில கணங்கள் மௌனம் நிலவியது. அப்புறம் இடிமுழக்கம்போலப் படீரென வெடித்தது சிரிப்பு. தலையைப் பின்னே சாய்த்து, வெயிஸ்ட் கோட்டுக் கைத்துளைகளில் விரல்களை மாட்டியவாறு பொங்கிப் பொங்கிச் சிரித்தார் லெனின். கொஞ்சம் அடக்கிக் கொள்வார், பின்பு பகோமவின் மறுமொழியை நினைவுபடுத்திக்கொண்டு மீண்டும் குபீரென்று உரக்க நகைப்பார்.

''நிலத்தை எடுத்துப் பகிர்ந்துகொண்டு விட்டீர்களா? முழுவதையும் ஒரு மணி நேரத்தில்? அப்படியா, அப்படியா! இப்போது சந்தேகப்படுகிறீர்களாக்கும்?'' என்று நகைப்புடன் கேட்டுவிட்டு மீண்டும் அதிர் வேட்டுச் சிரிப்பு சிரித்தார்.

''இனிமேல் ஒருவேளை சந்தேகிக்க மாட்டோம்'' என்று கூறித் தொங்கு பையை மூடினான் பகோமவ். ''ஆனால், தோழர் லெனின், இன்னொரு கேள்வி'' என்றான்.

''இன்னொரு கேள்வியா? தாராளமாகக் கேளுங்கள். ஒரு வேளை இதுதான் எல்லாவற்றிலும் முக்கியமானதோ?'' என்று தந்திரமாகக் கண்களை இடுக்கியவாறு நறுக்கெனக் கேட்டார் லெனின். வரப்போகும் கேள்வி ''சிக்கலானதாக'' இருக்கும் என்றும் அதற்கு விடை அளிப்பது தமக்குப் பிடித்தமாயிருக்கும் என்றும் எதிர்பார்ப்பவர் போன்று விசேஷத் திருப்தி தோன்ற இந்தக் கேள்வியைக் கேட்டார் அவர்.

''அப்படித்தான் நினைக்கிறேன்'' என்று எண்ணங்களை முறைப்படுத்தியவாறு சொன்னான் பகோமவ்.

''எங்கே, முக்கியக் கேள்வியைக் கேளுங்கள்.''

''நீங்கள் சொல்லுகிறீர்கள், சந்தேகப்படாதீர்கள், சோவியத் ஆட்சி என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் என்று. ஆனால்—என்னை மன்னிக்க வேண்டும் இப்படிச் சொல்லுவதற்கு — இது என்ன ஆட்சி? ஒருவருக்குச் சொந்த மேஜைகூட இல்லை, ஒரு கமிஸாரிடம்—மன்னிப்பு கோருகிறேன்—காற்சட்டை இல்லை. இன்னொருவர் நெய் இல்லாத வறண்ட பொங்கல் சாப்பிடுகிறார்....''

''போதாக்குறைக்கு வழுக்கைத் தலையர் வேறே'' என்று பகோமவின் தோரணையில் சட்டெனச் சொன்னார் லெனின் புன்னகையுடன்.

பகோமவ் தலை குனிந்து, மரியாதை காட்டுவதற்காகச் சற்று நேரம் மௌனமாயிருந்தான். பின்பு பேச்சைத் தொடர்ந்தான்:

''...நெய் இல்லாத வறண்ட பொங்கல் சாப்பிடுகிறார், ருஷ்யா முழுவதையும் ஆள்கிறார். என்ன ஆட்சி இது?''

''உங்களை சோவியத் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். நீங்கள், தோழர் பகோமவ், மரவுரி பூட்சுகளும் கைநெசவுத் துணிக் கோட்டும்—மன்னிக்க வேண்டும்—இடுப்பு வாருக்குப் பதில் கயிறுமாக ஆட்சிப் பிரதிநிதியாக விளங்குவீர்கள். அது என்ன ஆட்சியாக இருக்கும்? நமது சொந்த ஆட்சியாக! மக்கள் ஆட்சியாக!'' என்று விடையிறுத்தார் லெனின்.

கச்சிதமாக உடையணிந்த ஒரு மனிதர் அளவாக அடிவைத்து அறைக்குள் வந்தார். மிக ஒடிசலாக இருந்தமையால் அவர் உயரமானவர் போலத் தோன்றினார். ஆணிபோல் நீட்டிய சிறு தாடி வைத்திருந்தார். அவரது விசாலமான நெற்றி தெளிவாக இருந்தது.

''தோழர் த்ஸெர்ஷீன்ஸ்க்கிய்... பேலிக்ஸ் யெத்மூந்தொவிச்!'' என்று லெனின் அவரை நோக்கி முறுவலித்தவாறு கூறி, ''இவர்தாம் தோழர் பகோமவ், குடியானவர்.... நிலத்தைக் கைப்பற்றப் பயமாயிருக்கிறதாம், இடுப்பை முறித்துவிடுவார்களோ என்று பயப்படுகிறார்

களாம் குடியானவர்கள், இவர் சொல்லுகிறார்.... நான் சோவியத் ஆட்சி அதிகாரத்தைப் பற்றி விவரிக்கிறேன், அது நிலைத்து நிற்கும் என்று சொல்லுகிறேன், ஆனால் சோவியத் ஆட்சி பெருமிதம் அற்றது என்கிறார் இவர். இருந்தாலும் இவருடைய ஊரார் நிலத்தை எப்போதோ பகிர்ந்து கொண்டுவிட்டார்களாம், முழுமையாக!'' எனக் கூறி மீண்டும் கலகலவெனச் சிரித்தபடி த்ஸெர்ஷீன் ஸ்க்கியின் பக்கம் கையை நீட்டினார்.

''எப்படியிருக்கிறது சேதி? ஊம்? பிரமாண்டமான சக்தி இயங்கத் தொடங்கியிருக்கிறது. எவனாவது அறியாமையினால் அதன் வழியில் குறுக்கிட்டால் துடைத்து ஒழிக்கப்பட்டு விடுவான்!'' என்றார்.

யெகோர் பகோமவை அறைவாயில் வரை உடன் சென்று கைகுலுக்கி வழியனுப்பியபின் அவர் த்ஸெர்ஷீன் ஸ்க்கியிடம் திரும்பினார்.

லெனினது அறைக்கு வெளியே வந்ததும் யெகோர் பகோமவ் எதிர்பார்ப்பு அறையில் சற்று நின்றான். வியப்புடன் நாக்கைச் சப்புக்கொட்டிவிட்டுச் சுற்று முற்றும் நோக்கினான். பின்பு தன்னையே பார்வையிடலானான். மரவுரி பூட்சுகள்... ஓரங்களில் திரித்திரியாக நைந்த கைநெசவுத்துணிக் கோட்டு... இடுப்பைச் சுற்றிக் கட்டியிருந்த கயிறு, எல்லாவற்றையும் நோட்டமிட்டான்.

''நானும் சோவியத் ஆட்சியின் பிரதிநிதியா?'' என்று எண்ணி இளநகை பூத்தான்.

''என்ன சேதி? எல்லாம் சரியாகிவிட்டது என்று நினைக்கிறேன், ஊம்?'' என்று வினவினாள் செக்ரெட்டரி.

''இப்போது நான் கமிஸாரைப் பார்க்க வேண்டும்'' என்று கவலையுடன் சொன்னான் பகோமவ்.

''என்ன? லெனினுடன் பேசியது உங்களுக்கு போதவில்லையா?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் செக்ரெட்டரி.

''போதும்தான்.... ஆனால் கமிஸாருடன் பேசியபோது நான் சரியாக நடந்துகொள்ளவில்லை'' என்று பதிலளித்

தான் பகோமவ். உதவி மக்கள் கமிஸார் நிலத்தைப் பற்றி லெனின் சொன்னதையேதான் சொன்னுர் என்பதையும் அவரைத் தான் நம்பவில்லை, லெனினை மட்டும் நம்பினுன் என்பதையும் அவன் நினைவுபடுத்திக் கொண்டான்....

பகோமவ் போனபோது உதவி மக்கள் கமிஸார் புதிய மேஜை அருகே உட்கார்ந்திருந்தார். இது இனி அவருக்கே நிரந்தரமாக உரியதாக இருக்கும் போலும் என்று பகோமவுக்குப் பட்டது. அவர் செருகறைகளைப் பார்வையிட்டவாறு சில புத்தகங்களையும் காகிதங்களையும் அவற்றில் வைத்துக்கொண்டிருந்தார்.

யெகோர் பகோமவ் அவர் பக்கம் கையை நீட்டி, ''போய் வருகிறேன்.... மிக மிக நன்றி, தோழரே!'' என்ருன்.

உதவிக் கமிஸார் எழுந்து, ''ஆனுல் நாம்தான் பிரிவு சொல்லிக் கொண்டுவிட்டோமே'' என நினைவுபடுத்தினுர்.

''உண்மைதான், பிரிவு சொல்லிக்கொண்டோம். இப்போது இன்னெரு முறை'' என்ருன் பகோமவ்.

உதவிக் கமிஸார் கையை நீட்டியதும் அதை நன்றியுடன் இறுகப் பற்றிக் குலுக்கினுன் பகோமவ்.

**வி. இ. லெனின் கிரெம்ளினில் ஒலிப் பதிவு இயந்திரத்தின் முன்னே. 1919, மார்ச்**



# ஸாவா தன்கூலவ்

பிரபல சோவியத் பத்திரிகையாளரும் ''இன ஸ்த்ரான்னயா லித்தெரத்துரா'' (அயல்நாட்டு இலக்கியம்) என்னும் மாதச் சஞ்சிகையின் பிரதம உதவி ஆசிரியரும் ஆகிய ஸாவா தன்கூலவ் இயற்றி யுள்ள லெனினைப் பற்றிய கதைகள் முன்னாள் தொழிலாளியும் இளம் அரசாங்க தூதருமான திமீத்ரிய் திமீத்ரியெவிச் ரிபக்கோவ் என்பவர் வாய்மொழியாகச் சொல்லப்படுபவை போல எழுதப் பட்டிருக்கின்றன. புரட்சியின் தொடக்க ஆண்டு களில் சோவியத் ருஷ்யாவுக்கு வந்த அமெரிக்கர் களுடன் விளாதீமிர் இல்யீச்சின் சந்திப்புக்கள்குறித்த தஸ்தாவேஜுகளையும் நினைவுக் குறிப்புக்களையும் ஆதாரமாகக் கொண்டவை இந்தக் கதைகள். ''அமெரிக்காவுக்கு லெனினின் செய்திகள்'' என்ற தொடரில் உள்ள ஒரு கதை இந்தத் திரட்டில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

# நம்பிக்கை

க. ப. கிராஸ்னஷ்சோக்கவாவுக்கு

தென்கிழக்கிலிருந்து காற்று வீசியது. மாஸ்கோ நகர வானம் வெண் சாம்பல் நிறமாக இருந்தது. அதில் புழுதி வாடை அடித்தது. புழுதி விண்ணையும் மண்ணையும் நிறம் இழக்கச் செய்து தன் நிறமாக்கிற்று. இந்தப் புழுதி காரணமாகவே மாலைக் கதிரொளி வெகு உயரமாகவும் வெறித்த செந்நிறம் உள்ளதாகவும் திகழ்ந்தது. வோல்காப் பிரதேச வெயிலில் வயல்கள் தீய்ந்து போயிருந்தன. ஒரு வேளை அந்த வயல் களிலிருந்துதான் காற்று புழுதியை அள்ளி வருகிறதோ?

நடுப்பகலுக்குப் பின் அவள் எனக்கு போன் செய்தாள்.

''திருவாளர் ரிபக்கோவ்?'' அமெரிக்கர்களுக்கு உச்சரிக்கக் கடினமான ''ரி'' என்ற எழுத்தைக் கொண்ட என் குலப்பெயரை அவள் ஓரளவு சுளுவாகச் சமாளித்து விட்டாள். ''தயை செய்து உங்களைக் கண்டு பேச என்னை அனுமதிப்பீர்களா? நான் பெஸ்ஸீ பீட்டி பேசுகிறேன்.''

''மன்னிக்க வேண்டும். நான் கேட்டது சரிதானா? பெஸ்ஸீ பீட்டியா பேசுகிறது? 'ருஷ்யாவின் செவ் விதயம்' என்ற நூலின் ஆசிரியையா?''

அவள் கலகலவென நகைத்தாள்.

''ஆம், 'ருஷ்யாவின் செவ்விதயம்' எழுதியவள்தான்.''

ஆம். ''ருஷ்யாவின் செவ்விதயம்'' என்னும் நூலை இயற்றிய அதே பெஸ்ஸீ பீட்டிதான் அவள். ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பதினேழாம் ஆண்டில் அவள் பீட்டர்ஸ்பர்கில் இருந்தாள், லெனினைச் சந்தித்தாள். அவளைப்பற்றி யாரோ என்னிடம் சொன்னார்கள். அவள் பிரபு வம்சத்தினள், வறியவள் அல்லவே அல்ல. கொள்கைப் பற்று அவளை ருஷ்யாவுக்குக் கவர்ந்து இழுத்திருப்பது சந்தேகந் தான். அசாதாரண நிகழ்ச்சிகளைத் தேடி அவள் இங்கு வந்திருக்க வேண்டும். இங்கே, ருஷ்யாவில் பீட்டி ஆரம்பத்தில் கலவரம் அடைந்தாள், அப்புறம் வாட்டமுற்றாள்,

பின்னர் புதுமலர்ச்சி பெற்ருள். ஏதேனும் நல்லது செய்யும் விருப்பத்தால் நிறைந்தவளாக வெளியேறினுள். ''ருஷ்யா வின் செவ்விதயம்'' என்னும் அவளுடைய நூலில் சில விஷயங்கள் தவருயிருந்தன. ஆயினும் அது நட்புடன் எழுதப்பட்ட புத்தகம். ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பதினேழில் அவளுக்கு வயது முப்பது. இப்போது முப் பத்து மூன்று.

''மன்னியுங்கள். நான் இன்று உங்கள் இருப்பிடத்துக்கு வர முடியும். அது எனது வீட்டிற்கு அருகேதான் இருக் கிறது என்று நினைக்கிறேன்.''

வாயிலில் நின்றிருந்தாள் ஒரு மாது. அவளது புன்னகையில் மகிழ்ச்சியும் இனிய சரசமும் ஒருங்கே மிளிர்ந்தன.

''நியூயார்க்கிலும்கூட வெக்கை, ஒரே வெக்கை, சாதாரண வெப்பம் அல்ல. ஈரிப்பு நகரின் ஒவ்வொரு ரோமக்காலிலும் புகுந்துவிட்டது போலிருக்கும். பாவம் ஆடவர்கள். அவர்களுக்குச் சட்டைகளை மாற்றி மாளாது. நாளைக்கு மூன்று சட்டைகள்!''

இந்தச் சில சொற்களைக் கூறிவிட்டு அவள் என்னை நோக்கினுள். நியூயார்க்கில் எவ்வளவு வெக்கை என் பதை நான் புரிந்துகொள்ளும்படி விவரிக்கத் தன்னுல் முடிந்ததா இல்லையா என்று பார்ப்பவள் போல. நான் பேசாதிருந்தேன். வெக்கை பற்றிய இந்தப் பேச்சை வளர்த்த எதனுலோ எனக்கு ரொம்ப விருப்பம் உண்டாக வில்லை. நாளைக்கு மூன்று சட்டைகள்! அவர்கள் ஒரே பணக்காரர்கள் ஆனபடியால் இது அவர்களுக்கு ஒரு பொருட்டாகவே தோன்றுவதில்லை.

''எனக்கு எல்லாம் தெரியும்!'' என்று அச்சுறுத்தும் பாவனையில் விரலை ஆட்டினுள். ''செவ்வாய்க் கிழமை நீங்கள் வோல்கா ஆற்றில் பயணம் புறப்படப் போவதாக என்னுடைய ருஷ்ய நண்பர்கள் என்னிடம் சொன்னுர்கள். ஆம், ஆம், பிரசாரக் கப்பலில். 'ஸரா... ஸராப்பு...''

''ஸரப்புலேத்ஸ்'' என்று சொல்லிக்கொடுத்தேன்.

''பார்த்தீர்களா? எனக்கு எல்லாம் தெரியும். கலீனின்? அவர் வருவது உண்மைதானு? இல்லே, இல்லே. நான் கேட்கவில்லே. நானும் உடன் வர மனுச் செய்துகொண்டால் சாதகமான பதில் கிடைக்கும் என்று நான் நம்பலாமா? இதுதான் நான் அறிய விரும்புவது....''

...ரெயில் வண்டி ஸ்தெப்பி வெளி வழியே சென்றது. கலீனின் ஜன்னலோரமாக உட்கார்ந்து ஸ்தெப்பிமீது பார்வை செலுத்திக் கொண்டிருந்தார். அவர் குடியானவர், அவருக்கு எல்லாம் புரிந்தது. அறுவடை ஆகிவிட்டது, ஆனுல் ஸ்தெப்பியில் ஆட்களேயே காணேம். பயங்கரமாக ஆளற்றுக் கிடந்தது ஸ்தெப்பி. களத்துக்கு இரண்டு மூன்ருக அனுதைகள்போல நின்றன வைக்கோல் போர்கள்.

''இந்தப் போர்களேப் பார்த்தாலே போதும், எல்லாம் புரிந்துவிடும்'' என்ருர் கலீனின்.

பீட்டி, கலீனினே விடாது தொடர்ந்தாள். பத்திரிகை நிருபருக்குத் தொழில்முறைப் பழக்கம் இது— பார்வைப் புலத்தில் உள்ளவை அனேத்தையும் கடுமையான ஆராயும் பார்வையுடன் நோட்டமிடுவது.

''இவருடைய பெயரைக் குடியரசுத் தலேவர் பதவிக்கு லெனின் பிரேரித்திருக்கிருராமே, உண்மைதானு?''

''உண்மைதான்.''

''ஓ-ஓ-ஓ!''

இந்த ''ஓ-ஓ-ஓ!''வுக்கு அர்த்தம் என்ன, எந்த அளவுக்கு அது பரிவைக் காட்டிற்று என்று சொல்ல முடியவில்லே. இருந்தாலும் அது பரிவைக் காட்டியதாகவே எனக்குப் பட்டது. இவள் நமது நாட்டுக்கு வந்திருப்பது ஏன்? இவளுடைய சுபாவம் இதற்குப் பெரிதும் காரணமாக இருந்திருக்கலாம். அசாதாரணமானவளாகத் தோன்றுவது இவளுக்கு உவப்பானது. ருஷ்யாவில் சுற்றுப்பயணம் செய்வது இவளது வட்டாரத்தைச் சேர்ந்தவர்களுக்கு அசாதாரணத்துக்கும் மேலானது. ஆட்சி மாறிய அன்று பீட்டி பெத்ரோகிராதில் இருந்தாள். பனிக்கால

அரண்மனை தாக்கிக் கைப்பற்றப்பட்ட போது இவள் ரீட், வில்லியம்ஸ், இருவருடனும் இருந்ததாகவும் வீரத்துடன் நடந்து கொண்டதாகவும்கூடச் சொல்லுகிறார்கள். வழக்கத்துக்கு மாறான தன்மீது உள்ள மோகமே ஒருவேளை இதற்கும் காரணமோ? இருக்கலாம். ஆயினும் அவள் கண்டவை அவள் உள்ளத்தில் பதிவு ஏற்படுத்தாமல் இல்லை. அவளுடைய உள்ளுணர்வில் ஏதோ கொஞ்சம் படிந்து விட்டது. இதயம் கவசம் பூண்டிருக்கவில்லை. கண்களுக்கும் எண்ணங்களுக்கும் கவசம் போடுவது கடினம்.

ரெயில் வண்டி ஸ்தெப்பிகள் வழியாகச் சென்றது. வயல்கள் ஆகஸ்டு மாதத்தில் வழக்கமாகக் காணப்படுவது போலின்றி வெறிச்சோடிக் கிடந்தது எதனாலோ விசித்திரமாகப் பட்டது. ஒரு சிறு நிலையத்தில் எங்கள் ரெயில் வண்டி திடீரென நின்றது. எதிரே ஏதேனும் வண்டி வருவதற்காகவோ, அல்லது தண்ணீர் நிறைத்துக்கொள்வதற்காகவோ.

கலீனின் தமது பெட்டியிலிருந்து இறங்கினார். நெடுஞ்சோடுகளும் மடித்த கழுத்துப்பட்டை கொண்ட கித்தான் துணிச் சட்டையும் அணிந்திருந்தார். மூக்குக் கண்ணாடியைக் கழற்றி நிதானமாகத் துடைக்கத் தொடங்கினார். துடைத்த பின்பு அதைப் போட்டுக்கொண்டு நாற்புறமும் கண்ணோட்டினார், விழிகளை இடுக்கிக் கொண்டார். ஆஸ்திராகான் ஆட்டுத்தோல் தொப்பி அணிந்திருந்த ஒரு முதியவன் கலீனினைக் கண்டுகொண்டு அருகே வந்தான். அவனது சராய் நுனிகள் கம்பளிக் காலுறைகளுக்குள் செருகப்பட்டிருந்தன. சராய்க்கு வெளியே தொங்கிய சட்டை இடுப்பு வாரால் இறுக்கப்படவில்லை. கலீனினுக்குச் சில தாவடி தூரத்தில் அவன் நின்றுவிட்டான்.

''அது யார், கலீனினா? மிகயீல் கலீனினா?''

''ஆம்.''

கிழவன் இன்னொரு அடி முன் வந்தான்.

''அதுதானே பார்த்தேன்...''

ஆனுல் இதற்குள் கலீனின் அவனே எதிர்கொள்ள முன் சென்ருர்.

எதிர்வண்டி வருவதற்காக எங்கள் ரெயில் காத்திருந்தது, நாற்பது நிமிடம் போல. இந்த நேரம் முழுவதும் இரண்டு மனிதர்கள் தொலேவில் நின்று ஸ்தெப்பியில் பார்வை செலுத்திஞர்கள். அவர்களுடைய விழிகளில் விந்தையான கடுமை காணப்பட்டது. ஸ்தெப்பியிலிருந்தே இந்தக் கடு கடுப்பை அவை சேகரித்துக் கொண்டன போன்று இருந்தது.

என் அருகே பீட்டி நிற்பதை அப்போதுதான் கண் டேன். அவள் திறந்த குறிப்பு நோட்டைக் கையில் பிடித்த வாறு, இருப்புப்பாதை அருகே தணிந்த குரலில் உரை யாடிக் கொண்டிருந்த இருவரையும் மௌனமாகப் பார்த் தாள். அவளுடைய பென்சில் திறந்த உதடுகள்மீது சொல் போன்று நோட்டின் மேல் அனுதரவாகத் தொங்கியது.

கலீனின் தமது பெட்டிக்குத் திரும்பும் வரை காத் திருந்தாள் அவள்.

''நான் உங்களிடம் கேட்கலாமா?'' என்று கூறிப் பென்சிலே உயர்த்திஞள்.

''என்ன?''

''அந்த மனிதனேடு நீங்கள் என்ன பேசினீர்கள்?''

கலீனின் நின்று, மூக்குக் கண்ணுடியைக் கழற்றி, பீட்டியை உறுத்து நோக்கிஞர்.

''அவர் என்னிடம் சொன்ஞர்: 'மிகயீல் இவானிச், பஞ்சம் எப்படித் தொடங்குகிறது என்பதை நான் அறி வேன். முன் ஒருபோதும் இல்லாத மாதிரிப் பஞ்சம் வரப் போகிறது.... ஆயிரமாயிரம் பேர்....' நான் கூறினேன்: 'விபத்தைச் சமாளிப்பதற்கு வேண்டிய சக்தி இன்று நம்மிடம் இல்லே. ஆனுல் இன்று மட்டுமே. ருஷ்யா எந்தக் காலத்திலும் பஞ்சத்துக்கு உள்ளாகாதபடி செய்வதற் கான குறிக்கோளே நோக்கி நாம் சென்று கொண்டிருக் கிருேம். இந்த லட்சியத்தை அடைய நாம் முயன்று கொண் டிருக்கிருேம்.' 'நான் நம்பவில்லே. எனக்கு எழுபதுக்கு மேல் வயதாகிவிட்டது. எனக்கு நினேவு இருக்கிறவரை

எப்போதும் பஞ்சம் இருந்து வந்திருக்கிறது. வேறு வகை யாக இருக்க முடியவும் முடியாது! பூமி முழுவதையும் சூடுபடுத்த வேண்டிய அளவு வெயில் ஆண்டவனிடம் இல்லை! நிலம் முழுவதற்கும் பாய்ச்சுவதற்குத் தேவை யான தண்ணீரோ, தரையை எல்லாம் மூடிப் போர்ப் பதற்கு வேண்டிய வெண்பனியோ கடவுளிடம் இல்லை. ஓர் இடத்தைப் போர்த்து மூடினல் போர்வை அந்தப் பக்கம் இழுக்கப்படுகிறது, மறு புறம் திறந்து கொள் கிறது. ஆண்டவனிடம் அவ்வளவு சக்தி இல்லை' என்ருன் அவன். 'ஆண்டவனிடம் இல்லை, ஆனல் நம்மிடம் இருக் கும்' என்றேன். 'ஆண்டவன் அருள்க' என்ருன். இதுதான் நாங்கள் பேசிக்கொண்டது.''

தம்போவுக்கு அப்பால் எங்கோ ஓர் இடத்தில், மாலை மங்கலில் நீண்டு பரந்திருந்த திறந்த ஸ்தெப்பி வெளியில், சாலைகள் இரு கிளைகளாகப் பிரிந்து சென்றிருந்த சந்தி யில் முகாம் அமைந்திருந்தது. நெகிடி எரிந்து கொண் டிருந்தது. கனத்த புகைப் படலங்களைக் காற்று தரை யருகிலேயே பரப்பிக் கொண்டிருந்தது. வைக்கோல் நனைந் திருந்தது போலும். ஆட்கள் நெகிடி அருகே அமர்ந்து நெருப்பைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஆண்களும் பெண்களும் நிறையக் குழந்தைகளும் இருந் தார்கள். ரெயில் வண்டி அருகாகச் சென்றது, ஆனல் ஒருவராவது தலை நிமிரவேயில்லை. நெகிடி அருகில் பேசப் பட்ட விஷயத்தைவிட முக்கியமானதாக எதுவுமே அவர் களுக்குப் படவில்லை. மற்ற விஷயங்களைப் பார்க்கவோ அவற்றைப் பற்றிப் பேசவோ விருப்பமில்லை. ஸ்தெப்பிச் சாலைகள் கிளைபிரியும் இடத்தில் இவர்கள் எதைப் பற்றிப் பேச முடியும்? ஒரு காலத்தில் தானிய வளம் கொழித்த உக்ரேய்னவை நோக்கி மேற்கே செல்வதா அல்லது தெற் கேயா என்பதே ஆலோசிக்கப்பட்டது போலும். புரியாத இன்னெரு பெயரும் பழக்கமாகி விட்டது: தானியப் பிரதேசம் தொடங்கிற்று தீகரேத்ஸ்கயாவில். ஆம், தீக ரேத்ஸ்கயா—அமைதியான ஆறு அல்லது சிற்ருறு பாயும்

இடம். இந்தப் பெயரை முடிவின்றித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தாலே போதும், சிறுவனின் மனதில் சூடான ரொட்டியையும் அப்போது கறந்த பாலையும் பற்றிய கற்பனைக் காட்சியை அது ஒன்றே தோற்றுவித்துவிட முடியும். ஆனால் உண்மையில் எத்தகையது இந்தத் தீகரேத்ஸ்கயா?

நாங்கள் இரண்டாவது நாள் பயணத்தைத் தொடர்ந்தோம். பீட்டியின் போக்கில் வாட்டம் தென்படலாயிற்று. அவளுடைய விழிகளின் அடி ஆழத்தில் ஏக்கம் குடி கொண்டது. புறப்படும் போது பீட்டி உல்லாசப் பயணத்திற்காகப் போல உடை அணிந்திருந்தாள். முதலில் அவள் தொப்பியைக் கழற்றி வைத்துவிட்டுத் தலைக்குட்டையைக் கட்டிக் கொண்டாள். சாதாரணமான, வெண் மஞ்சள் நிறத் தலைக்குட்டை அது. புருவங்கள் வரை வரும்படி தாழ்வாக அதைக் கட்டிக்கொண்டாள் பீட்டி. அப்புறம் பிளவுஸுக்குப் பதில் ஆடம்பரமற்ற, மிகச் சாதாரணமான சட்டையைப் போட்டுக் கொண்டாள். தோள் வார் வைத்த கட்டம் போட்ட ஸ்கர்ட்டைக் கழற்றி விட்டு, இலையுதிர்கால உடை ஜோடியிலிருந்து கறுப்பு ஸ்கர்ட்டை அணிந்துகொண்டாள். அவளால் மாற்றிக் கொள்ள முடியாதவை ஜோடுகள் மட்டுமே. ஆனால் அவற்றிலும் அலங்கார நாடாக்கள் பறந்துவிட்டன போலும்.... அவை போன சுவடு தெரியாமல் மறைந்துவிட்டன.

பொவோல்ஷே நெருங்குகிறது என்பதை ஏதோ அடையாளத்தால் நாங்கள் உணர்ந்துகொண்டோம். அதனுடன் அணுகிவந்தது அதன் நிலங்கள் மீதும் நீர் மீதும் கட்டின்றிப் பெருகிய பெருந் துயரம். இலையுதிர்காலத்தில் போல அதற்குள் சருகாகியிருந்த இலைகளிலும் சிலந்தி வலைகளின் பளபளப்பிலும் புழுதியின் இயக்கத்திலும், எல்லாவற்றிலும் வியாபித்திருந்தது விபத்து. கரிய, பழுப்பான அல்லது துவேஷம் நிறைந்த சிவப்பு நிற மலைகளாக ஸ்தெப்பி வெளியில் திடீரெனக் கிளம்பிப் பாதி வானத்தை மறைத்தது புழுதி. இந்த ஸ்தெப்பி வெளியில் மண்,

வின் இரண்டின் மணமாகவும் இன்று விளங்கும் இந்தக் கொடுந்துயரிலிருந்து மனிதனது விழிகளையும் இதயத்தையும் மூடிக் காக்க எந்தக் கவசத்தால்தான் முடியும்?

ரெயில் பெட்டியில் வெளிச்சம் இல்லை. சில வேளை களில் புகைப் படலம் ஜன்னல்களை மூடும். அப்போது இன்னும் இருட்டாகிவிடும்.

''அன்று இரவு நான் பெத்ரோகிராதில் இருந்தேன்'' என்று திடீரெனக் கூறினாள் பீட்டி. அவள் சொல்ல விரும்பு வது எல்லாமே திடீரென வெளிப்படும். சற்றுமுன்தான் பேசப்பட்ட விஷயத்துடன் அதற்கு எவ்விதத் தொடர்பும் இருக்காது. குறைந்தபட்சம் அருகே உட்கார்ந்திருப்பவர் களுக்கு அப்படித் தோன்றும். ''படைவீரர்களின் பின் னே நான் பனிக்கால அரண்மனைக்குள் புகுந்தேன். கறுப்பு உடை அணிந்த ஒரு மனிதர் அரண்மனையின் பிரதான ஹால் வழியாக அழைத்துவரப்பட்டார். அவர் திறந்த வழுக்கைத் தலையைச் சுட்டிக் காட்டித் தமது தொப்பியை எடுத்துவர யாரையேனும் அனுப்பும்படி கேட்டுக்கொண் டார். இந்தக் கணத்தில் ஒருவர் தம் தலையைப் பற்றி நினைக்காமல் தொப்பியைப் பற்றிக் கவலைப்படுவது படை வீரர்களுக்கு நிச்சயமாக வேடிக்கையாக இருந்திருக் கும். 'தொப்பி! தொப்பியைக் கொண்டுவர வேண்டும்! மனிதருக்குத் தடிமல் பிடித்துவிடக்கூடுமே!'' என்று மிக உற்சாகத்துடன் கத்தினார்கள் அவர்கள். உயரே, அனேக மாகக் கூரை உத்தரங்களுக்குக் கீழே, பணியாளர்களுக் கான அறைகள் இருந்த இடத்தில், ஒரு படைவீரன் நின்று ஜன்னல் வழியே பார்த்துக் கொண்டிருந்தான். அவன் எதைப் பற்றி எண்ணமிடுகிறான் என்று கேட்டேன் — இந்தக் கேள்வியைக் கேட்பது எனக்குப் பிடிக்கும். அவன் இருளில் கையை நீட்டி நெவா ஆற்றுக்கு அப்பால் சுட்டிக் காட்டினான். 'பார்த்தீர்களா, அதோ தெரிகிறது பெத்ரோப்பாவ்லவ்ஸ்காயா கோட்டை' என்றான். அவன் எதைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கிறான் என்று

மறுபடி கேட்டேன். 'ருஷ்யாவைப் பற்றி. இதே பூமியில் பனிக்கால அரண்மனையும் பெத்ரோப்பாவ்லவ்ஸ்காயா கோட்டையும் இருந்தன என்ருலும் நாங்கள் நிர்மாணிக்கப் போகிருேமே புதிய ருஷ்யா, அதைப்பற்றி எண்ணிக் கொண்டிருக்கிறேன்' என்ருன் அவன். அப்போது நான் நினைத்தேன், 'இவர்களிடம் இப்போது இருப்பதைவிட அதிகமாக ஒன்றுமே, நிச்சயமாக ஒன்றுமே இவர்களுக்குத் தேவையில்லை' என்று.'' இவ்வாறு கூறி நிறுத்திஞள் பீட்டி. இல்லை, இவள் சொல்லுவது எல்லாமே திடீரென இவளுக்கு மனத்தில் உதிப்பதில்லை. அவளது காணும் திறனுல் வரையறுக்கப்பட்டவை பல உள்ளன.

மாலையில் பீட்டியும் நானும் மணற் சரிவில் உட்கார்ந்து கப்பலின் வருகைக்காகக் காத்திருந்தோம். தொலைவில் வோல்கா ஆற்றின் மஞ்சள் நீரருகே நின்ருர் கலீனின். அவரது பார்வை வோல்காவின் அக்கரை ஸ்தெப்பியை நோக்கியவாறிருந்தது.

கலீனின் நின்ற திக்கை விழிகளால் குறித்து, பீட்டி கடுமையுடன், அசாதாரணக் கடுமையுடன் பேசலாஞள். இப்போது சிறிது காலமாக இந்தக் கடுமை அவளது குரலில் தொனிக்கத் தொடங்கியிருந்தது.

''நான் என்ன நினைக்கிறேன் தெரியுமா? போல்ஷெவிக்காக இருப்பதைக் காட்டிலும் துன்பகரமான பொறுப்பு இன்று வேறு எதுவும் இல்லை என்று நினைக்கிறேன்'' என்ருள் அவள்.

நள்ளிரவில் கப்பல் புறப்பட்டது.

பலபல வென்று விடியும் நேரத்தில் கப்பல் ஒரு பெரிய கிராமப் புறத்தில் நின்றது. கிராமம் செங்குத்துச் சரிவில் அமைந்திருந்தது. கண்டாமணி அடிக்கப்பட்டது. அதன் சக்தி மிக்க அடிகளால் தரையே அதிர்ந்து ஒலிப்பது போலப் பிரமை உண்டாயிற்று. சதுக்கத்தில் ஆட்கள் நிறைந்து விட்டார்கள். அவர்களது உடைகளால் சதுக்கம் கறுப்பாயிற்று. பழுப்பு நீல நிற ஸ்தெப்பியே சதுக்கத்தில் பெருகிவந்துவிட்டது போலக் காணப்பட்டது.

''பலத்தை எல்லாம் திரட்டி நிலத்தை உழுது விதைக்க வேண்டும்.... நமது வருங்காலம்... நமது குழந்தைகளே.''

சதுக்கம் அசைவின்றி மௌனமாயிருந்தது. உள்ளிருந்து பழுக்கக் காய்ந்த விழிகள் மட்டுமே சுடர்ந்தன. அரிதாக, மிக அரிதாகக் கண்ணீர் துளித்து, பாம்பு போல விரைவாக நெளிந்து செல்லும் தாரையாகக் கன்னங்கள் மீது வழிந்தோடிற்று.

கிராமத்திலிருந்து வெளிவந்ததுமே திட்டின் அடிவாரத்தில் ஸ்தெப்பிக் கிணற்றருகே கூட்டத்தைக் கண்டோம். நிறம் மங்கி நைந்த நீளங்கி அணிந்த சிறுகூடான பாதிரி ஒருவன் பிரார்த்தனை செய்து வைத்துக் கொண்டிருந்தான். விழிகளை வானை நோக்கி உயர்த்தியவாறு மன எழுச்சி உண்டாக்கும் வகையில் அவன் பிரார்த்தனை சொல்லிக் கொண்டிருந்தான்.

''கருணை காட்டு, ஆண்டவனே, உன் அடிமைகளாகிய நாங்கள்....''

கூட்டம் வறண்ட தரையில் புழுதியில் முழந்தாள் படியிட்டுக் கீழ்க் குரலில் சொல்லிற்று:

''கருணை காட்டு, ஆண்டவனே, உன் அடிமைகளை வருத்தாதே....''

கலீனின் மோட்டாரிலிருந்து இறங்கி, தொப்பியைக் கழற்றிக் கையில் வைத்துக்கொண்டு தூரத்தில் நின்றார். பிரார்த்தனை செய்பவர்களைக் கடுகடுப்புடனும் துயரத்துடனும் மௌனமாக நோக்கினார். பிரார்த்தனையை இடைநிறுத்தாமலே பாதிரி தொழுபவர்களை எழுந்திருக்குமாறு சைகை செய்துவிட்டு, கிராமத்தை நோக்கி நடந்தான். வழியில் அவர்களை நிறுத்திவிட்டு விரைவாகக் கலீனின் அருகில் வந்தான். அவன் விழிகளில் அன்பின்மை அனல் வீசியது.

வெடிப்புக் கண்ட தரையில் சிலுவையால் குத்தி, ''பார்த்தீர்களா, பார்த்தீர்களா! ஆண்டவனை அடித்து விரட்டினீர்கள்.... இப்போது தண்டனையை எவ்வகை

யிலும் தவிர்க்க முடியாது... எவ்வகையிலும்... தண்டனை யை....''

கலீனின் முகம் வெளிறியது. அவர் மூக்குக் கண்ணுடி யைக் கழற்றினுர். உள்ளக் கிளர்ச்சி ஏற்படும் கணங்களில் அவர் இவ்வாறு செய்வதை நான் கவனித்திருந்தேன். அவர் கை நடுங்கியது கண்ணுடி வில்லின் நடுக்கத்தால் தெரிந்தது. ''மடத்தனம் செய்யாதீர்கள்'' என்பது போல ஏதேனும் நிர்த்தாட்சிண்ணியமான வார்த்தை களைப் பாதிரியிடம் சொல்ல அவர் விரும்பியிருப்பார். ஆனுல் அவர் தம்மைக் கட்டுப்படுத்திக்கொண்டார்.

''போங்கள். உங்களுக்காக வெட்கப்படுகிறேன். போய்விடுங்கள்'' என்று மிகத் தணிந்த குரலில் சொன்னுர்.

சிலுவை பிடித்த கையை உயர்த்தியபடி பாதிரி கூட் டத்துக்கு ஓடினுன். நடு நடுவே அவன் நின்று, சிலுவையை இரண்டு கைகளாலும் பற்றிக்கொண்டு அதை மறுபடி மறுபடி ஆட்டினுன். இந்தச் சைகையைப் புரிந்துகொள் வது கடினமாயிருந்தது. அவன் விண்ணகத்தை அச்சுறுத் தினுனே, அல்லது அதை உதவிக்கு அழைத்தானே, தெரிய வில்லை.

கப்பல் இரவு முழுவதும் நிற்காது சென்றது. தண் ணீர் கறுப்பாகவும் வசந்தகாலத்தில் உழுத நிலம் போல வெதுவெதுப்பாகவும் காணப்பட்டது. கப்பல் இயக்கி அலகுகளுக்குப் பின்னே ஆற்றுநீர் கொழுமுனையால் உடைக் கப்பட்ட கனத்த மண்கட்டிகளை ஒப்பத் தென்பட்டது.

பீட்டி கரு நீரை நோக்கியபடி கூறலுற்ருள்:

''இது வீரம்... உண்மையான வீரம். பஞ்சத்தில் அடி பட்ட கிராமவாசிகளுக்கு முன் இவ்வாறு மேடையேறி வருங்காலத்தைப் பற்றிப் பேசுவது, புரிகிறதா, வருங் காலத்தைப் பற்றி.''

அவள் பேச்சை நிறுத்திவிட்டு முன்னே பார்வை செலுத்தினுள். கரைகள் மீது இருள் போர்த்திருந்தது. எனினும் சரிவும், ஏற்றமும் நீரை நோக்கி நிதானமாகச்

சரிந்து வந்திருந்த திறந்த வயல்களும் நிலவற்ற மங்குல் கருக்கலில் சற்றே தென்பட்டன.

''பெத்ரோகிராதில் புரட்சிக்குப் பிறகு வந்த முதலாவது புத்தாண்டு எனக்கு நினைவு வருகிறது. பெத்ரோகிராதிலிருந்து படைவீரர்கள் போர்முனை சென்றார்கள். பொதுக் கூட்டம் குதிரையேற்றப் பயிற்சிக் கூடத்தில் நடந்தது என்று நினைக்கிறேன். லெனின் கூட்டம் தொடங்கிய பின் வந்து சேர்ந்தார். அவர் வந்து மேடை அருகே நின்றார். மேடையில் அப்போது பேசிக்கொண்டிருந்தான் எனது அமெரிக்க நண்பர்களில் ஒருவன்—வில்லியம்ஸ் என்று நினைக்கிறேன். அவன் ருஷ்ய மொழியில் பேசிக் கொண்டிருந்தான். லெனின் பக்கத்தில் நின்றார். வில்லியம்ஸின் துணிச்சலைக் கண்டு அவர் மகிழ்ச்சியும் அதே சமயம் ஓரளவு குழப்பமும் அடைந்தார். ஒரு முறை வில்லியம்ஸ் லெனினைப் பார்த்து 'to open' என்று கத்தினான். லெனின் 'திறக்க' என்று பொருள்படும் ருஷ்யச் சொல்லை அவனுக்குக் கூறினார். ஆனால் ஒரு நிமிடத்திற்கெல்லாம் இன்னொரு ருஷ்யச் சொல் தேவைப்பட்டது. 'to enlist' என்று கத்தினான் வில்லியம்ஸ். லெனின் சிரித்துக்கொண்டு, 'சேர' எனப் பொருள்படும் ருஷ்யச் சொல்லைக் கூறினார்.''

பீட்டியின் பேச்சைக் கேட்க எனக்கு மகிழ்ச்சியாயிருந்தது. அவளுடைய மொழி அமைப்பு வழக்கமானதுதான். ஆனால் தோரணையும் ஒலிப்பண்பும் மிக நேர்த்தியானவை. அவள் பேசுகையில் மொழி மென்மையும் இன்னொலிப்பும் பெற்றுவிடுகிறது (குறைந்தபட்சம் எனக்கு அப்படித் தோன்றுகிறது).

பீட்டி பேச்சைத் தொடர்ந்தாள்: ''அப்புறம் மேடை மீது ஏறினார் லெனின். அந்தப் பழைய கட்டிடத்தின் வளை முகட்டுக்கு அடியே உண்மையிலேயே சூரியன் இறங்கி வந்து விட்டது போலிருந்தது. ஆர்வப் படைவீரர்கள் பலவீனர்களுக்கு ஆதரவாக இருக்க வேண்டும், தயங்குபவர்களைத் தங்கள் உதாரணத்தால் தூண்டி ஊக்க வேண்டும் என்று இங்குதான் லெனின் கூறினார். ஆம், தயங்குபவர்

களைத் தங்கள் சொந்த உதாரணத்தால் தூண்டி ஊக்க வேண்டும் என்று இப்படியே சொன்னார் என்று நினைக்கிறேன்.... ஜனங்களுக்கோ இந்த ஒளி நிறைந்த நம்பிக்கை போதவில்லை போலும். அவர்கள் அவரைக் கைகளில் தூக்கிக்கொள்ளாத குறையாக மோட்டாருக்கு இட்டுச் சென்றார்கள். அவரோ? படைவீரர்களால் சூழப்பட்டு மோட்டாரில் அவர் உட்கார்ந்ததும் நான் அவருடைய விழிகளைக் கவனித்துப் பார்த்தேன். எல்லாவற்றையும் காண்பவர், எல்லாவற்றையும் புரிந்து கொள்பவர், ஆபத்தை எதிர்கொண்டு முன் செல்பவர் ஆன அந்த மனிதரின் விழிகளை நான் உற்று நோக்கினேன்.... அன்று மாலை விலியம்ஸூம் நானும் பெத்ரோகிராத் நகரில்—கரையோரச் சாலையில் என்று நினைக்கிறேன்—சுற்றிக் கொண்டிருந்தோம். அப்போது அவன் என்னிடம் சொன்னான்: 'ஒன்று தெரியுமா? குதிரையேற்றப் பயிற்சிக் கூடத்திலிருந்து திரும்புகையில் லெனின்மீது எவனோ துப்பாக்கியால் சுட்டான்.... ஐந்து குண்டுகள். மோட்டாரின் பார்வைக் கண்ணாடி உடைந்துவிட்டது....'''

அவள் பேசப் பேச வயல்களில் ஒளி மேலும் மேலும் பரவுவது போலிருந்தது. அவை, இந்த வோல்காப் பிரதேச ஸ்தெப்பிகள் இப்போது எனக்கு அவ்வளவு வெறுமையானவையாகத் தோன்றவில்லை. ஒரு காலம் வரத்தான் போகிறது. அப்போது வறட்சி இந்த நிலங்களிலிருந்து என்றென்றைக்கும் அகன்றுவிடும், என்றென்றைக்கும் அகன்றுவிடும். நான் இருளில் உற்று நோக்கினேன். கலீனினுடைய வெள்ளைச் சட்டை காணப்படுவது போல் தோன்றியது. வோல்காவின் அக்கரை ஸ்தெப்பி வெளிகள் பரந்திருந்த திசையையே அவரும் பார்த்துக் கொண்டிருந்தார். அவரும் நான் எண்ணுவதையே எண்ணிக் கொண்டிருக்கிறார் போலும்....

கிட்டத்தட்ட நள்ளிரவில் எங்கள் கப்பல் மணல் முனை ஓரமாகச் சிறிது நேரம் நின்றது. அக்கரையிலிருந்து

வீசியது காற்று. புழுதிமணமும் புகை நெடியும் அடித்தது. ஸ்தெப்பியில் புல் பற்றி எரிந்தது. கரையிலிருந்து கப்பலை நோக்கி விரைந்தது விளக்கு. இல்லை, படகு அல்ல, விளக்குத்தான். நீரின்மேல் மங்கிய ஒளிர்வுபோலத் தன்னந்தனியாக மினுமினுத்தது. விளக்கு வர வர அருகே நெருங்கிற்று. இதோ அது எங்களுக்குக் கீழே, சிந்தனையுடன் இரையும் நீர் மேல் வந்து விட்டது. மூன்று பெயர் கப்பல் மேல் ஏறி வந்தார்கள். கித்தான் மழைக்கோட்டும் தொப்பியும் அணிந்த ஒரு முதியவன், பனிக்கால இராணுவக் குல்லாயும் வெறுங்கால்களில் ரப்பர் மேல் ஜோடுகளும் அணிந்த ஓர் இளைஞன், இராணுவக் கோட்டு அணிந்த இளம் பெண் ஒருத்தி, ஆக மூவர்.

''நாங்கள் 'பம்கோல்' என்ற முறையில் வந்திருக்கிறோம், மிகயீல் இவானவிச்'' என்று உற்சாகம் பொங்கக் கூறினள் இளம்பெண். அந்தச் சொல் ''பம்கோல்'' (பஞ்சத்தால் பீடிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கான கமிட்டி) அவ்வளவு குதூகலமூட்டுவதல்ல என்பதை அவள் கவனிக்கவில்லை போலும்.

''பொறு, புரோஸ்யா'' என்று அவளை அடக்கிவிட்டுக் கிழவன் கலீனினிடம் கடுத்தமான குரலில் ஏதோ விவரமாகக் கூறலானன்.

இளைஞன் மட்டும் வெயில் பட்டுப் பழுப்பேறிய கைகளால் மார்பைப் பற்றிக்கொண்டு மோவாயை மறைத்தவாறு மௌனமாயிருந்தான். அவன் வாய் திறக்கவில்லை. அவனது பற்கள் கடகடவென்று அடித்துக் கொண்டன. குளிரில் நடுங்கினன்.

கலீனின் கையை நீட்டினர்.

''அங்கே இருக்கிறதா உங்கள் கிராமம்?''

''இன்னும் வலப்புறம், மிகயீல் இவானவிச். சரியாகச் சொன்னல் முனைக்கு அப்பால்'' என்று திருத்தினன் கிழவன்.

''அப்படியா'' என்று சொல்லிவிட்டுக் கலீனின் நெடுநேரம் இருளில் நோக்கியவாறு இருந்தார். ஒருவேளை

கிராமம், விபத்துக்கு உள்ளாகியிருந்த முழுக் கிராமமுமே அவருக்குத் தென்பட்டது போலும். பெரிய, சிறிய குடும்பங்களை அவர் கண்டார் போலும். இந்த நள்ளிரவில் அவர்கள் வழக்கம் போல மேஜையைச் சுற்றி அமர்வார்கள். சொற்பச் சாப்பாடு முடிந்திருக்கும், ஆயினும் ஒருவரும் இடத்தைவிட்டு அசைய மாட்டார்கள். களியற்ற சிந்தனை எல்லோரையும் ஆட்கொண்டிருக்கும். கலீனின் குடியானவர்களையும் கண்டார் போலும். வீட்டையும் குடும்பத்தையும் உற்றார் உறவினரையும் பற்றிய கவலை ஒருபோதும் அவர்களுக்கு இன்று போலச் சொல்லுக்கு எட்டாத அளவு பெரியதாகத் தோன்றியிராது. இதோ அவர்கள் வெளியே வந்து விண்மீன்கள் நிறைந்த வானத்தின் அடியில் மௌனமாக இருளில் நிற்கிறார்கள்—பின் முற்றத்தின் நடுவிலும் அடிகளத்தின் அருகிலும் காய்கறித் தோட்டத்தின் ஓரத்திலும். துன்பமும் இன்பமும் இங்கிருந்து கைக்கு எட்டும் தொலைவிலேயே இருப்பதாகத் தோன்றுகிறது. கலீனின் சிறுவர் சிறுமியரையும் கண்டார் போலும். சாப்பிட்டு முடிவதற்குள் உறக்கம் அவர்களை ஆட்கொண்டுவிட்டது. கிராமம் முழுவதுமே கலீனினுடைய கண்களுக்குப் புலனாயிற்று போலும்.

‘‘அப்படியானால் கிராமம் அங்கேயா இருக்கிறது?’’

‘‘ஆமாம், மிகயீல் இவானவிச், முனைக்கு அப்பால்.’’

அப்புறம் கலீனின் சொன்னார்:

‘‘போக வேண்டுமா? அதற்கென்ன, போகலாம். மரணத்தை எதிர்கொள்ள மட்டுமே போகக் கூடாது. பட்டினிக்குக் கண்கள் இல்லையா? தானியம் உள்ள இடத்துக்கு வழி கேட்டுக் கொண்டு போகட்டும். தானியம் உள்ள இடங்களுக்குச் செல்லும் வழிகள் வரவரக் குறைந்து கொண்டு போகின்றன. குழந்தைகளையாவது காப்பாற்ற முடியுமானால்—அதுதான் கவலை. வசந்த காலத்தில் வயல்களில் மறுபடி விதைப்பு நடந்துவிடும். முழு பலத்தையும் திரட்டி வயல்களை உழுது விதைத்துவிட வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் உணவு விடுதி

அமைக்க முடிந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்! குழந்தைகள் வயிறாரச் சாப்பிடுவார்களே.''

'' 'பம்கோல்' என்ற முறையில் நாங்கள்....''

''நிறுத்து, புரோஸ்யா!''

பெண் வாயை மூடிக் கொண்டாள். கலீனினைக் கண் கொட்டாமல் பார்த்தாள். அப்புறம் சொன்னாள்.

''என்னைச் சேர்ந்தவர்கள் போன மாதமே போய்விட்டார்கள். எல்லோரும் போய்விட்டார்கள். நான் மட்டும் தங்கிவிட்டேன். நான் விபத்தோடு ஒட்டிக்கொண்டு விட்டேன்.''

இளைஞன் பேசாதிருந்தான். கலீனினையே பார்த்துக் கொண்டிருந்த அவனது விழிகள் மட்டுமே ஒளி வீசின. சிறுவர்களுக்கு உரிய பணிவும் ஆயத்தமாயிருக்கும் துடிதுடிப்பும் அந்த விழிகளில் தென்பட்டன. இந்த மனிதர் பார்வையால் உத்தரவிடட்டும் போதும், பையன் எதுவும் செய்யத் தயார்.

''உள்ளம் சோர்வது நமக்கு முடியவே முடியாது'' என்றான் கிழவன். தன் மனத்தில் நெடுங்காலமாக முதிர்ந்து உணர்வில் நிலைத்துவிட்ட எண்ணத்தை இப்போது அவன் வெளியிட்டு ஆக வேண்டியிருந்தது. ''என் வாழ்க்கை நிகழ்ச்சி ஒன்றை இப்போது நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.'' அவன் தண்ணீரைப் பார்த்தான்—அது தான், அது மட்டுமே, இந்த நிகழ்ச்சியை நினைவு வைத்திருக்க முடியும் என்பது போல. ''அந்தத் தடவை, வசந்த காலத்தில் எங்கள் ஊரில் நிலைமை மோசமாக இருந்த போது என் மகள் ஒரேயடியாகச் சாகக் கிடந்தாள். நான் ஸ்தெப்பியிலிருந்து வந்தேன், அதற்குள் அவள் படுத்த படுக்கை ஆகிவிட்டாள்.... கால்களை முடக்கிக் கொண்டு விட்டாள். பேச்சில்லை. கண்கள் நீலப் புகை படிந்தவை போல இருந்தன. அது என்ன புகை என்பது எனக்குத் தெரிந்ததுதானே. என் பேரப்பிள்ளை அவளைச் சுற்றிச் சுற்றி ஓடி ''அம்மா... அம்மா...'' என்று கதறினான். அவள் வாயே திறக்கவில்லை. பேசாமல் அவனைப் பார்த்துக்

கொண்டிருந்தாள். நான் அமைதியான மனிதன்தான். ஆனால் அப்போது எனக்குக் கெட்ட கோபம் வந்துவிட்டது. கால்களைத் தொப்பென்று அடித்தேன், கைகளை வீசி ஆட்டினேன். பேரப்பிள்ளையைச் சுட்டிக் காட்டினேன். 'வெட்கங்கெட்டவளே, உனக்கு இதயம் இருக்கிறதா இல்லையா? இவனை யார் தலையில் கட்டுகிறாய்? எனக்குந்தான் இப்போது சாக விருப்பம். ஆனால் எனக்கு உரிமை கிடையாது! எழுந்திரு, சொல்கிறேன்!' என்று கத்தினேன். என்ன நினைக்கிறீர்கள்? எங்கேயோ எஞ்சியிருந்த பலத்தை எல்லாம் திரட்டி எழுந்துவிட்டாள். என்னுடைய சீற்றத்தால் நான் அவளை அசைத்து உலுக்கி நாணங்கொள்ளச் செய்துவிட்டேன். இல்லை, எனக்குத் தெரியும்: உள்ளஞ் சோர்வது நமக்கு முடியாது. உள்ளஞ் சோர்ந்தோமோ, தொலைந்தோம்.''

இரவில் ஒரு கிராமத்தின் ஓரமாக நங்கூரம் பாய்ச்சினோம். மலையின் சரிவில் படிப்படியாக இறங்கி வோல்கா ஆறுவரை வந்திருந்தது கிராமம். அதன் விசாலமான, வெறிச்சோடிய தெருக்களில் நெடுநேரம் நடந்தோம். சதுக்கத்தை அடைந்தோம். துத்தநாகக் கூரை வேய்ந்த பெரிய வீடு ஒன்றில் வெளிச்சம் தெரிந்தது. கதவைத் தட்டினோம்.

''யாரது?''

''மாஸ்கோவிலிருந்து வந்திருக்கிறோம். கலீனின்....''

''கலீனின்? இதோ வந்துவிட்டேன்.''

குரல் அடங்கிவிட்டது. ஜன்னல்களில் வெளிச்சம் ஊசலாடியது. பெரிய நிழல் ஒன்று அறையில் நுழைந்து சுவர்கள் மேலாகப் பெருகிற்று. அப்புறம் தாழ்ப்பாள் திறந்தது. கையில் லாந்தருடன் வாயிலில் நின்றான் ஒரு மனிதன். அவனது உடல் மட்டுமீறிப் பெரிதாயிருந்தது. முகம் ஊதியிருப்பதுபோல எனக்குப் பட்டது. விழிக்கீற்றுக்கள் அநேகமாக மூடியிருந்தன.

''ஆம், நான் இவ்வூர் 'பம்கோல்' தலைவன்.... கிராமவாசி. இல்லை, விவசாய நிபுணன் அல்ல, பள்ளி ஆசிரியன்.''

''டெலிபோன் இருக்கிறதா?''

''இருக்கிறது....''

''மாஸ்கோவுடன் எப்படித் தொடர்பு கொள்வது? த்ஸாரீத்ஸின் வழியாகவா, ஸராத்தவ் வழியாகவா?''

''த்ஸாரீத்ஸின் வழியாக.''

லாந்தரின் அருகே உட்கார்ந்து மாஸ்கோவுடன் பேசுவதற்காகக் காத்திருந்தோம். வீட்டுக்காரன் மன்னிப்பு கேட்கும் பாவனையில் சொல்லலானுன்:

''ஏதோ பட்டினியே கிடக்காதவன் போல, எப்படி மாறிவிட்டேன் பாருங்களேன்! இல்லே, பட்டினியின் கை எலும்பும்தோலுமானது அல்ல.'' தனது உப்பிய கையை நீட்ட வந்தவன் வெகு சிரமத்துடன் தன்னேக் கட்டுப் படுத்திக் கொண்டான்.

கலீனின் முகத்தைச் சுளித்துக்கொண்டு வீட்டுக்காரனே ஏறிட்டுப் பார்த்தார்.

''கமிட்டித் தலேவர் பட்டினியால் ஊதிப் போனது எப்படி நடந்தது? இப்போது வசந்தகாலமும் இல்லேயே.... கிராமம் முழுவதிலும் நீர் ஒருவர்தாம் இப்படியா?''

''ஒருவன்தான், மிகயீல் இவானவிச்.''

''ஏன் அப்படி?''

தலேவன் புன்னகை செய்ய முயன்ருன். ஆனுல் புன்னகை பரிதாபகரமாக இருந்தது. ஊதிப் போன முகம் இயக்கத்தை இழந்துவிட்டது.

''என் உடம்பு பெரியது, ரேஷன் எனக்குப் போதவே போதாது. அதிகமாக ரேஷன் பெற எனக்கு உரிமை கிடையாது.''

''ஆனுல் நீங்கள் நோயாளி ஆயிற்றே.''

''எல்லோரும் இறந்தால் நானும் இறந்துவிட்டுப் போகிறேன்.''

''முந்தி இறந்துவிடுவீர்கள்.''

''அதனுலென்ன, முந்தி இறந்துபோகிறேன். நான் ஆர்வத் தொண்டனுகப் புரட்சியில் கலந்துகொண்டேன்.''

''மறு உலகுக்கும் ஆர்வத் தொண்டராகவே தானே?''

தலைவன் பெஞ்சி ஓரத்தில் உட்கார்ந்திருந்தான். புகையிலைப் பையை எடுத்து வணங்கா விரல்களால் மட்டப் புகையிலையை ஒரு சிமிட்டா எடுக்க முயன்றான். ஆனால் விரல்கள் நடுங்கின, புகையிலைத் துணுக்குகள் தரையில் சிந்திவிட்டன.

கையால் சுருட்டிய சிகரெட்டை லாந்தருக்கு மேல் காட்டிப் பற்றவைக்க முயன்றவாறு, ''எனது சுபாவத்தை இனிமேல் மாற்ற முடியாது, மிகயீல் இவானவிச் '' என்றான் அவன்.

எல்லோரும் மௌனமாயிருந்தார்கள். மட்டப் புகையிலைப் புகை நெடி கடுமையாக அடித்தது.

அடுத்த அறையில் டெலிபோன் மணி கணகணத்தது. கலீனின் அங்கே சென்றார். கனத்த சுவருக்கு அப்புறமிருந்து குரல் அரைகுறையாகவே காதுக்கு எட்டிற்று. மாஸ்கோ. தலைவன் சிகரெட்டை அணைக்காமலே மேஜை விளிம்பில் வைத்தான். அதற்கு மேலே புகை அசையாமல் மிதந்தது. அறையில் நிறைந்திருந்த மனிதர்கள் மூச்சு விடுவதை நிறுத்திவிட்டார்கள் போலத் தோன்றியது.

''ரை விதை. விதைத் தானியம். பொறுக்கியெடுத்த தானியம் ஒரு பவுண்டா? ஒவ்வொரு மாவட்டமும்... ஒவ்வொன்றுமா? வாகன்கள்... வாகன்களா? ஸராத்தவா? பண்ணையாட்களா? ஸீஸ்ரானா? ஆமாம்...ஆமாம்....''

இப்படித் துண்டு துண்டான, கலவரம் நிறைந்த இந்தச் சொற்கள் விபத்தைச் சித்திரித்தன. உறங்கி வழியும் இந்த இரவில் எங்கேயோ பெருத்த சக்திகள் செயலில் ஈடுபடுத்தப்பட்டன. லாந்தர்களின் மினுமினுக்கும் வெளிச்சத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் ஆலோசனை செய்தார்கள். கண்ணுக்குத் தெரியாத, ஆனால் வலிய கரம் வாகனுக்குப் பின் வாகனாக, ரெயில் வண்டித் தொடருக்குப் பின் வண்டித் தொடராகக் கிழக்கே அனுப்பி வைத்தது. குரல் படைத்தவர்கள் எல்லோரும், இயற்கையிலேயே குரலற்றவையும் ஒன்றாகக் கூக்குரலிட்டன ''பஞ்சம்! பஞ்சம்!'' என்று.

சுவருக்கு மறுபுறம் இப்போது பேசினர் கலீனின். அவர் நிலைமையை விவரித்தார். அங்கே, மிக மிகத் தொலைவில் யாரோ ஒருவர் கவலையும் கவனமுமாக அவர் சொன்னதைக் கேட்டார்.

பேச்சு அந்தரங்கமாக இருப்பதற்கு யாருடன் உரையாடுகிறேமோ அவரது விழிகளைப் பார்ப்பது அவசியம்.

இருளையும் பொருட்படுத்தாமல் கலீனின் அந்த விழிகளைக் கண்டார் போலும். இருளில் ஆழ்ந்து கிடந்த ஆறுகளையும் காடுகளையும் நெடுந்தொலைவையும் மதியாமல் அவர் இவற்றைக் கண்டார் போலும்.

''ஆமாம். உண்மைதான். ஆமாம்'' என்று காதில் பட்டும் படாமலும் மறுமொழி பகர்ந்தார் கலீனின்.

டெலிபோன் நெம்பு கிளிக்கிட்டது — கலீனின் பேசு குழாயை வைத்துவிட்டார். கதவு அனேகமாக ஓசையின்றித் திறந்தது. அவர் உள்ளே வந்தார்.

தலைவன் பெஞ்சியிலிருந்து எழுந்து நின்றான், மலை போல.

''லெனின, மிகயீல் இவானவிச்?''

''ஆமாம்.''

மலை நடுங்கியது போலிருந்தது.

''தானியம் பற்றியா?''

''ஆமாம், தானியத்தைப் பற்றியும்... உங்களைப் பற்றியும்.''

''என்ன?''

நிசப்தம். தலைவன் மூச்சுவிடுவது மட்டுமே கேட்டது.

''அவர் சொன்னர்: நேர்மை எப்போதும் நம்முடன் இருக்கட்டும். எப்போதும் என்று.''

''வேறு என்ன சொன்னர்?''

கலீனின் பேசாதிருந்தார்.

''வாழ்வில் ஆர்வமுள்ள தொண்டர்கள் வேண்டும், சாவில் ஆர்வமுள்ளவர்கள் அல்ல என்றும் கூறினர்.''

மலை அழுததை முதன் முறை கண்டேன்.

மறு நாள் காலே வோல்கா ஆற்றிற்கு மேலே மீண்டும் பரவுகிறது கண்டா மணி ஓசை. மக்களின் ஆறு சதுக்கத்தில் பெருகுகிறது. அவசர அவசரமாக மரப் பலகைகளால் அமைக்கப்பட்ட மேடைமீது ஏறுகிறுர் கலீனின்:

''ருஷ்யா உலகிலேயே யாவற்றினும் செல்வம் கொழிக்கும் நாடாக விளங்கும், யாவற்றினும் செல்வம் கொழிப்பதாக. நம் நாட்டில் பஞ்சம் ஒரு நாளும் தலே காட்டாது. தலேயே காட்டாது... ஒரு நாளும்.''

வோல்காப் பிரதேச வானம் உண்மையிலேயே மாஸ்கோவுக்கு வந்துவிட்டது. மழையற்ற கூதிர் காலம், வெள்ளே வெளேரென்றிருக்கும் ஆகாயம், மஞ்சள் இலேகள், புழுதி, எல்லாம் வோல்காப் பிரதேசத்தில் போலவே உவர்ப்பும் கசப்புமாக இருந்தன.

லெனின் பீட்டியை எட்டு மணிக்கு வரச் சொல்லியிருந்தார்.

நாங்கள் பேசாமல் நடந்தோம். இந்தப் பேசாமையையும் இந்தக் கடுகடுப்பையும் அவள் வோல்காவிலிருந்து கொண்டுவந்திருந்தாள். வரலாற்றுப் பொருட்காட்சி சாலேக் கட்டிடம் ஒரே கற்பாறை போன்று தோற்றம் அளித்தது. காற்று எப்போதும் போலவே அதை வருடியவாறு வீசிக் கொண்டிருந்தது. அதன் எதிர்ப்பைச் சமாளித்தபடி மேலே நடந்தோம்.

திண்மை பெற்றுவிட்ட சிற்றலேகள் போலப் பாவுகற்கள் விளக்கொளியைக் கரடுமுரடாகப் பிரதிபலித்தன. இதனுல் சதுக்கம் வழக்கமாக இருப்பதைவிட அதிக வெறுமையாகத் தோற்றம் அளித்தது.

சதுக்கத்தின் குறுக்காக வந்தார் ஒருவர், விரைவாக, ஒருமுனேப்பாட்டுடன். சற்று நின்ருர், பின்பு மீண்டும் நடக்கலானுர்.

''விளாதீமிர் இல்யீச்சா என்ன?''

''வணக்கம்! ஆமாம், மாலேயில் சற்று திறந்த வெளியில் உலாவலாம் என்று வந்தேன். தய்நீத்ஸ்கிய் பூங்கா

தூரம், அவ்வளவு தொலேவு செல்ல நேரம் இருக்காது. இங்கே என்னதான் கவர்ச்சியற்ற சூழ்நிலே, மரஞ்செடிகள் இல்லே என்ருலும் திறந்தவெளியாவது இருக்கிறதே.'' அவர் பீட்டியைப் பார்த்தார். கண்களேச் சுருக்கிக் கொண்டு, ''பெத்ரோகிராத்? குதிரையேற்றப் பயிற்சிக் கூடம்? இல்லே, நான் மறக்கவில்லே. என் சகோதரி ஒரு நாள் நினேவுபடுத்தினுள். அவள் என்னுடன் இருந்தாள்.'' அவர் பீட்டியைக் கூர்ந்து நோக்கினுர். ''எல்லாவற்றை யும் கண்டீர்களாக்கும், ஊம்?''

பீட்டி உள்ளக் கிளர்ச்சி அடைந்திருப்பதை அவள் முகம் புலப்படுத்தியது.

''எல்லாவற்றையும் பார்த்தேன். உங்களுக்கு நன்றி.''

நாங்கள் கட்டிடத்துக்கு உள்ளே புகுந்தோம்—பீட்டி முன்னேயும் நாங்கள் பின்னேயுமாக.

தமது சிந்தனேயைக் கலந்தாலோசிப்பவர் போன்று லெனின் கூறலுற்ருர்: ''அரசாங்க தூதனும் தனது மக் களே இன்ப வேளேயில் அல்ல, துன்ப வேளேயில் தெரிந்து கொள்ள வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது.''

ஒரு மணி நேரத்தில் நாங்கள் ஆயுதசாலேக்கு முன் னுள்ள அதே சதுக்கத்தில் லெனினிடம் விடை பெற்றுக் கொண்டோம். இன்று மாலேயே தய்நீத்ஸ்கிய் பூங்கா வரை செல்லும் நம்பிக்கையை அவர் இன்னும் கைவிட வில்லே. உறங்குவதற்கு முன் அரை மணி நேரம் உலாவு வதைவிடத் தலேவலிக்குச் சிறந்த மருந்து எதுவும் இல்லே.

''அமெரிக்காவுக்கு என்ன செய்தி தெரிவிப்பது என்று கேட்கிறீர்களா? இந்தச் செய்தியைத் தெரிவியுங்கள்: எங்களது கடினமான நிலேமையில்கூட அதனிடம் எங்களுக் குப் பொருமை உண்டாகவில்லே. அமெரிக்கா செல்வ வளம் கொழிப்பது, நாங்கள் ஏழைகள் .அது வலிமை மிக் கது, நாங்கள் இன்னும் மிக வலிமை குன்றியவர்கள். ஒரு வேளே அது வயிருர உண்டு திருப்தி கூட அடைந்திருக் கிறது. நாங்களோ....'' அவர் பேச்சை நிறுத்திவிட்டு வானத்தைக் கடுப்புடன் நோக்கினுர். ''ஆனுல் அத

னிடம் இல்லாத ஒன்று எங்களிடம் இருக்கிறது. அதுதான் நம்பிக்கை. ஆற்றல், உணவு... ஏராளமான உணவு, எல்லாவற்றையும் இது எங்களுக்குத் தரும்.''

நாங்கள் விடை பெற்ருேம். லெனின் சதுக்கத்தின் குறுக்காக ஆற்றை நோக்கி நடந்தார். நாங்கள் த்ரோயித்ஸ்கிய் வாயிலுக்குச் சென்ருேம். வாயிலே அடைந்ததும் நான் திரும்பிப் பார்த்தேன். தொலேவில், இரவு வானின் மங்கிய ஒளியில் லெனினது உருவம் தெரிந்தது. அமெரிக்காவையும் ருஷ்யாவையும் பற்றிய தமது சிந்தனேயில் அவர் இன்னமும் ஆழ்ந்திருப்பதாக எனக்குப் பட்டது. அசாதாரண இளமையும் விரைவும் கொண்ட அவரது நடையிலிருந்து நான் இதை அறிந்தேன். ஆச்சரியம் என்னவென்ருல் தமது விரைந்த போக்கில் அவர் மண்ணேயும் விண்ணேயும் தம் பின்னே இழுத்துச் செல்பவர் போன்று தோற்றினுர். காற்றினுல் வளேந்த மரங்களும் காற்ருல் அடித்துச் செல்லப்படும் மேகங்களும் அவரையே பின்பற்றி விரைவன போலிருந்தன....

எல்லாச் சிந்தனேகளும் அவரைப் பற்றியவையே, அவரை மட்டும் பற்றியவையே, அவருடைய, நம்முடைய நம்பிக்கையைப் பற்றியவையே. இந்த நம்பிக்கையைவிட எழில் ஆர்ந்தது எதுவும் உலகில் இல்லே.

# நண்பர்

காலே வணக்கம், புரட்சியே!
நீ எனது மிகச் சிறந்த
நண்பனுக விளங்குவாய்!

லெங்ஸ்டோன் ஹியுஸ்

நான் கட்டிடத்திலிருந்து வெளிவந்த போது நள்ளிரவு ஆகச் சில நிமிடங்களே பாக்கி இருந்தன. லெனினது அறையில் விளக்கு அணைக்கப்பட்டு விட்டது. அவர் அங்கிருந்து வெளியே போய்விட்டார் என்று அதற்கு அர்த்தம். ஜான் ரீடும் போய்விட்டார். மாஸ்கோ ஆற்றிற்கு அப்பால் எங்கோ எழுந்தது தண்மதி. பேரரசன் இவானது மணிக்கூண்டின் கெடுநிழல் கிரெம்ளின் பாவு கற்கள் மீது விழுந்தது. பசுந் தாவரங்களின் குளிர் மூச்சுடனும் மூடுபனியுடனும் நள் ளிரவு மங்கலுடனும் நகரில் பெருகி நிறைந்தது நிசப்தம். மாஸ்கோ ஆற்றின் அகலமற்ற படுகையிலிருந்து பரவுவது போன்று காணப்பட்டது இந்த நிசப்தம். கும்மட்டங் களின் மங்கிய பொன்னிறத்துக்கு நிலவு மெருகு ஏற்றி விட்டது. இந்த நள்ளிரவிலும் புகை படிந்தவை போ லிருந்த நடைபாதைச் சதுரப்பலகைகளும் கூரியவையும் உருண்டையானவையும் ஆகிய கிரெம்ளின் பாவுகற்களும் நிலவொளியால் மெருகூட்டப்பட்டுத் திகழ்ந்தன. தங் கள் இயல்பான வரைகளையும் வடிவங்களையும் பெறு வதற்கு அவை நடுநிசியை எதிர்பார்த்துக் காத்திருந்தன போலும். இந்த நிசப்தத்தில் மனிதக் குரல் அசாதாரண ஆரவாரத்துடன் எதிரொலித்திருக்கும்.

கிரெம்ளின் குன்று ஆற்றை நோக்கி இறங்கும் இடத் தில் பாதையருகே நின்றூர்கள் இரண்டு மனிதர்கள். நில வின் மலர்க்கை அவர்களது தோள்களை வருடியது. அவர்கள் லெனின், ரீட் இருவருமே. ரீட் பேசிக்கொண் டிருந்தார். ஒரே சமயத்தில் எளிமையும் உயர்வும் தொ னிக்கும் வகையில் பேச ரீட் வல்லவர் என்பதை நான் முன்னரே கவனித்திருந்தேன். அவரது எளிமை அறிவு

முதிர்ச்சியின் விளைவாக, எல்லோரும் தம்மைப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் காரணமாக ஏற் பட்டது. உயர்வோ? அது அவரது இயல்பிலிருந்தே தோன்றியது போலும். ஏனெனில் அவர் கவிஞர்! நடை யை விரைவுபடுத்தி நான் அவர்களைக் கடந்து சென்றேன். ஆனால் கிரெம்ளின் வெளிவாயிலை நெருங்க நெருங்க எனது நடை வேகம் குறைந்தது. குன்றின் மேல் நின்றவர்களின் உள்ளக்கிளர்ச்சி என்னுள்ளேயும் புகுந்து விட்டது போலிருந்தது.

நள்ளிரவுப் பேச்சுத் துணைவராக ரீடை லெனின் தேர்ந்தெடுத்தது தற்செயலாக அல்ல. பெத்ரோகிராதில், வெளிர் செந்நீலச் சுவர்க் காகிதங்கள் ஒட்டிய சதுர அறையிலும் இவர்கள் இருவரும் இப்படியே பேசுவது வழக்கமாம். அந்த அறையின் ஒரு பாதி லெனினது அலுவலறையாகவும் மறு பாதி படுக்கையறையாகவும் விளங்கியது. அவர்களது உரையாடல் அலுவலறையில் தொடங்கும், நள்ளிரவு வேளையில் அறையின் மறு பகுதியில் மேஜையருகே தேநீருடன் தொடரும்.

நடை பாதையிலிருந்து நான் ரஸ்தாவில் இறங்கப் போன சமயத்தில் பின்புறம் காலடிச் சத்தம் கேட்டது. நான் திரும்பினேன். நிலவு ரஸ்தாவில் ஒளி பாய்ச்சியது. சற்று தூரத்தில் ரீட் வருவதைக் கண்ணுற்றேன்.

''ஒரு மூன்று நிமிடங்களாக உங்களைக் கவனித்துக் கொண்டிருக்கிறேன். என்ன, அவசரமோ?'' என்று சிந்தனையுடன் வினவினார் அவர்.

நான் இன்னும் மெதுவாக நடந்தவாறு, ''இல்லை'' என்றேன்.

''அப்படியானால் சேர்ந்து போவோமே.''

எனக்கும் ரீடுக்கும் இடையே மூன்று தாவடி தொலைவு இருந்தது. இந்த தூரத்தைக் குறைப்பதற்கு அவர் முயலவில்லை. நானுந்தான். நிலவு மேகங்களின் பின் மறைந்தது. ஆயினும் ரீட் எனக்கு நன்றாகத் தென்பட்டார். வெளிப் பார்வைக்கு அவர் தொழிலாளி போன்று தோற்றம்

அளித்தார். அகலமான, ஓரளவு கூனிய முதுகு, குட்டையான, வலிய கரங்கள். எளிய உடையே அணிந்தார் அவர். மிகச் சாதாரணப் பாங்கில் தைக்கப்பட்ட சாம்பல் நிற அல்லது கறுப்புக் காற்சட்டையும் கோட்டும், மடித்த கழுத்துப்பட்டை வைத்த வெள்ளைச் சட்டை, இவையே அவரது உடை. சட்டையில் ஓரிரு பொத்தான்கள் கழன்றிருக்கும். இப்போதும் அந்தச் சட்டை நிலவின் மங்கிய ஒளி நிறைந்து ததும்புவது போல் இருந்தது. உளுத்த மர வாசனை செறிந்த குளிர் காற்று ஆற்றிலிருந்து வீசியது. ரீட் குளிரில் நடுங்கியவாறு தோள்களைக் குலுக்கினார்.

உயரே நோக்கி, ''தெற்கிலோ இப்போது வானம் கருமையாக இருக்கும். அப்புறம் விண்மீன்கள்... ஒவ்வொன்றும் கைப்பருமன் இருக்கும்'' என்று கூறித் தன் முட்டிபிடித்த கையைப் பார்த்துக் கலகலவெனச் சிரித்தார்.

''மெக்ஸிக்கோவிலா? ஜெனரல் பாஞ்ச்சோவின் நாட்டிலா?'' என்று கேட்டேன்.

''இல்லை. எதற்காகப் பாஞ்ச்சோ?'' என்று புன்னகையுடன் கூறிவிட்டு முட்டியை உயர்த்தி, ''வீவா* பாஞ்ச்சோ! வீவா வீல்யா!'' என்றார். இப்போது அவர் எனக்குச் சிறிது முன்னே இருந்தார். என் முகத்தைக் கடைக்கணித்து நோக்கினார். ''ஒன்று தெரியுமா? அவர் கனிந்த இதயம் கொண்டிருந்தார். கனிந்த இதயம் கொண்டிருப்பது முக்கியம்! உறுதியான சுபாவமும் அவருக்கு இருந்தது. அவர் போன்ற மனிதருக்கு உறுதியான சுபாவம் உளக் கனிவைவிட இன்னும் முக்கியமானது. நான் அப்படி நினைக்கிறேன்—இன்னும் முக்கியமானது'' என்றார்.

இப்போது அவர் என் அருகாக நடந்தார். ஓரளவு வெளித்துருத்திய விழிகளும் பெரிய மோவாயும் சேர்ந்து

---

* வீவா—வாழ்க என்று பொருள்படும் ஸ்பானியச் சொல்.—(மொ-ர்.)

அவரது முகத்தை மிகுந்த உணர்ச்சி வெளியீடு கொண்ட தாகச் செய்தன. எனினும் அவற்ருல் அது ஓரளவு அழகற்றதாகக் காணப்பட்டது. அவருடைய விழிகளும் உயர்ந்த நெற்றியும் உதடுகளும் மிக நன்ருயிருந்தன. ஆனுல் அவற்றின் ஒப்பளவு பொருத்தமாயில்லே. இருந்தா லும் மொத்தத்தில் அவர் வாட்டசாட்டமானவர் ஆதலால் இந்த நுணுக்க விவரங்களேக் கவனிக்கத் தோன்றுவதில்லே.

ரீட் நடைவேகத்தைக் குறைத்தார், பின்பு திடீரென நின்றுவிட்டார்.

''சற்று பொறுங்கள். கொஞ்சம் மூச்சுவாங்கிக் கொள் கிறேன்.''

அவர் கையை மார்பின் மேல் வைத்துக்கொண்டார்.

''இருதயக் கோளாரு?''

''ஆமாம். மருத்துவர்கள் சொல்வது போல என் இரு தயம் தொண்டைக் குழிக்கு வந்துவிட்டது.'' அவர் இரு மினுர்—இருதயக் கோளாறு உள்ளவர்களுக்கு இயல்பான ஜாக்கிரதையுடன். ''அப்பா, மூச்சு வந்துவிட்டது போ லிருக்கிறது'' என்று கூறிப் புன்னகைக்க முயன்ருர். ''வாருங்கள் போவோம். ஆனுல் மெதுவாக. என்ன பேசிக் கொண்டிருந்தோம்?'' என்ருர்.

நாங்கள் மெதுவாக, மிக மெதுவாக நடந்தோம். வறண்ட, இடைவிட்ட அந்த இருமல் எங்கள் பேச்சை விரும்பாத போதே இடை முறித்து விட்டது. அது அதை ஒரேயடியாக, செப்பஞ்செய்ய இயலாதபடிக் குலேத் திருக்கும். ஆனுல் ரீட் கணப் போது மட்டுமே பேசாதிருந் தார்.

''ஜெனரல் பாஞ்ச்சோவிடமும் ஏதோ பற்ருக்குறை இருந்தது. ஏதோ மிக முக்கியமான ஒன்று இல்லாதிருந் தது!'' என்ருர் ரீட். இந்தச் சொற்களே அவர் மிக வன் மையுடன் கூறியது, அவர் பாஞ்ச்சோவைப் பற்றிப் பேச விரும்புகிருர், மற்ற எந்த விஷயமும் இப்போது அவருக்கு எவ்விதத்திலும் முக்கியமுள்ளது அல்ல என்பதைத் தெற் றெனக் காட்டியது.

ஜெனரல் பாஞ்ச்சோவின் அருகில் இரண்டாவது மனிதன், துணைவன், தோழன் ஒருவன் இருந்திருக்க வேண்டும் என்று ஒரு காலத்தில் ரீட் கருதியதுண்டு. 'கமிஸார்' என்ற சொல்லை உச்சரிக்க அவர் தயங்கவில்லை. நிகழ்ச்சிப் போக்கே, வாழ்க்கையின் தர்க்கமுறையே இத்தகைய ஒருவனைத் தோற்றுவித்துத் தீரும் என்று ரீட் நினைத்தார். ஆனால் அவர் நினைத்தது தவறாயிற்று! இந்த மாதிரி மனிதன் எவனும் தோன்றவில்லை. புரட்சி நெருப்பு நமது பூமியின் உதரத்தில் கொந்தளித்துக் கொண்டிருக்கும் பேராற்றலுள்ள தீப்பிழம்புகளுக்கு ஒப்பானது என்று அவருக்குச் சில வேளைகளில் தோன்றியது. ஓரிடத்தில் அவை வெடித்துக் கிளம்பவில்லை என்றால் மற்றோரிடத்தில் வழி செய்துகொண்டு வெளிப்பட்டே தீரும் என அவர் நம்பினார்.

எண்ணங்களில் ஆழ்ந்தவராக அவர் பேசாதிருந்தார்.

''நான் இன்னொரு விஷயமும் சொல்ல விரும்புகிறேன். அது இதுதான்: லெனினைப் பற்றி நான் எதுவும் அறியாதிருந்த காலத்தில்கூட அவர், அத்தகைய மனிதர், தோன்றியாக வேண்டும் என்று நான் எண்ணினேன். அவர் தோன்றாமலிருக்க முடியாது என்று எனக்குப் பட்டது. பாஞ்ச்சோவை நேரில் கண்டவனாகிய எனக்கு இது புரிந்தது.''

அவர் மீண்டும் வழக்கத்துக்கு மீறிய கிளர்ச்சி அடைந்தார். பாஞ்ச்சோவும் லெனினும். அவரைப் பொறுத்தவரையில் இது தீர்ந்துபோன விவாதம். ஆனால் இதைத் தீர்மானிப்பது அவருக்கு எவ்வளவு கடினமாக இருந்தது! அவருடைய மனத்தில் ஒருவர் மற்றவருக்கு இடம் கொடுத்துவிட்டு அவ்வளவு எளிதாக, போராட்டமின்றி, விலகியிருப்பது அசாத்தியமே. வாழ்க்கையில் எதுவுமே போராட்டம் இல்லாமல் நிகழ்வதில்லை. ஒரு காலத்தில் இரு கருத்தோட்டங்களும் அவரை ஒரே மாதிரி ஈர்த்திருக்கும், எதற்கு முதன்மை கொடுப்பது என்று தீர்மானிக்க முடியாமல் அவர் சங்கடப்பட்டிருப்பார்.

நாங்கள் செஞ்சதுக்கத்துக்கு வந்தோம்.

''பெரிய நிகழ்ச்சிகள் அங்கே முதிர்ந்துகொண்டிருக்கின்றன!'' என்று கூறி வானத்தை விழிகளால் காட்டினுர். விண்ணின் கிழக்கு விளிம்பு எங்களுக்கு எதிரே இருந்தது. ''விடுதலைப் பதாகை கிழக்கு நோக்கிச் செல்வதாக லெனின் கூறினுர்.'' ரீட் தொடர்ந்து எதிரே நோக்கினுர். புலரொளியின் ஒரு கீற்றுக்கூட வானத்தில் இன்னும் தென்படவில்லை. ஆகாயம் பார்வை புக இயலாத அளவு இருளடைந்ததாக, ஒருவேளை உயிரற்றதாகக்கூட இருந்தது. இந்த இடத்தில்தான் இரவின் கருநீலப் பனிப்பாறை உருகத் தொடங்கும் என்பதை நம்பவே முடியவில்லை.

''கிழக்கு'' என்று சிந்தனையுடன் திருப்பிச் சொன்னுர் ரீட். ''அங்கேதான் என்று லெனின் கூறினுர். லெனின்!''

நாங்கள் பிரிவு சொல்லிக் கொண்டோம்.

அவர் புறப்பட்டதும், ''நீங்கள் போகிறீர்களோ?'' என்று உரக்க வினவினேன்.

''ஆம். நாளைக்கு.''

இந்த வார்த்தைகளை நிறுத்து மதிப்பிடுபவர் போல அவர் சற்று நேரம் பேசாதிருந்தார். பின்பு கண்டிப்பாக மறுபடி கூறினுர்:

''நாளைக்கு.''

இரவில் அவர் நடந்து போவதை நெடுநேரம் பார்த்துக்கொண்டு நின்றேன். அவர் செஞ்சதுக்கத்தின் குறுக்கே சென்றதைக் கண்டேன். சதுக்கத்தின் நடுவில் அவர் நின்று, முதன் முறை பார்ப்பவர் போல அதன்மீது கண்ணேட்டினுர். இந்தப் பார்வைக்கு என்ன அர்த்தம்? சதுக்கத்தின் அசாதாரணத் தோற்றம்—நள்ளிரவுக்குப் பிந்திய இந்த நேரத்தில் அது ஆழ்ந்த கம்பீரமும் எழிலும் வாய்ந்து பொலிந்தது—அவருக்கு வியப்பு அளித்ததோ? அல்லது, நாம் எங்கிருக்கிறேம், எப்படி இங்கு வந்து சேர்ந்தோம் என்று சுற்று முற்றும் பார்த்து அவர் எண்ணமிட்டாரோ? ''விடுதலைப் பதாகை கிழக்கு நோக்கிச் செல்கிறது!'' இப்போது ரீட் புதிய கடல் ஒன்றின் கரையில் நின்றுகொண்டிருந்தார். அதன் கலவரமூட்டும் கொந்

தளிப்புக்களை எதிர்கொள்ள அவர் சித்தமாயிருந்தார். ''விடுதலைப் பதாகை....''

ரீட் மாஸ்கோவிலிருந்து போய் விட்டார். சிறிது காலத்துக்கு அவரைப் பற்றிய செய்தி எதுவும் கிடைக்கவில்லை. அப்புறம் செய்தித்தாள்களில் வந்தன ஓரிரு தகவல்கள்.... இவை மிகச் சொற்பமானவையே. எனினும் தகவல்களில் இல்லாத விஷயங்களை இட்டு நிரப்பிக்கொள்ள முயன்றது உள்ளுணர்வு. மலைச் சாலையில் இரவு நேரத்தில் செல்லும் மோட்டார் போலத்தான். அதனுடைய விளக்குகள் ஏற்றத்தின் உச்சியில் ஒளி வீசிவிட்டு மலைப் பாறைகளின் தடுப்புக்குப் பின் மறைந்துவிடும். அப்புறம் இருளைக் கிழித்துக்கொண்டு வெளிப்படும், பிறகு மறுபடி மறைந்துவிடும்—நெடுநேரத்துக்கு. பின்னர் மலையின் உயரே மீண்டும் எழும், விளக்குகள் தாமே அல்ல, அவற்றின் பிரகாசமற்ற வெளிச்சம் மட்டுமே. முடிவில் மோட்டார் முழுவதுமே, தற்செயலான அலை ஒன்றால் கடற்கரையை நோக்கித் தள்ளப்பட்ட சிறு கப்பல் போலத் திடீரெனக் கண்ணுக்குப் புலனாகும்.

நாட்கள் வழக்கம்போலவே கழிந்தன. ஆகஸ்டு முடிந்து செப்டெம்பர் தொடங்கியது. மாஸ்கோவில் இன்னும் கதகதப்பாக இருந்தது. ஆனால் பூங்காக்களில் இலைகள் நிறம் மங்கிவிட்டன. இரவு வானம் கோடைகாலத்தில் போல அவ்வளவு பிரகாசமாக இல்லை. அது இன்னும் ஆழ்ந்தும் அதிக நீலமாகவும் அதிக விண்மீன்கள் நிறைந்தும் காணப்பட்டது. காற்றில்கூடச் சரத்கால வாடை வீசியது. பாக்கூ நகரத்திலிருந்து ஒரு தந்தி வந்தது. கிழக்கு நாடுகளின் மக்களது மகாநாடு அங்கே தொடங்கியிருந்தது. புரட்சிகரக் கிழக்கு நாடுகள் அனைத்தும் அங்கே குழுமியிருந்தன. ஆயிரத்து ஐநூறு பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். அப்புறம் இன்னொரு தந்தி கிடைத்தது. மகாநாட்டுப் பிரதிநிதிகளை ரீட் வரவேற்றார் என்று கூறியது அது. (விளக்கு மலைப் பாறையின் உச்சியில் உண்மையாகவே பளிச்சிட்டது).

ரீட் மேடை மீது ஏறியதையும், கூடியிருந்தோரின் மகிழ்ச்சி ஆரவாரத்துக்கு விடையளிக்கும் பொருட்டுக் கையை சற்றே உயர்த்தி வீசி ஆட்டியதையும் நான் மனக் கண்ணுல் கண்டேன். ஹால் தொடர்ந்து முழங்கிற்று: ''அமெரிக்கா!'' என்று. ரீடின் முகம் வரவரக் கடுமை யாயிற்று, கண்களுக்கு நடுவில் உள்ள சுருக்கங்கள் இன் னும் ஆழமாயின. மோவாயிலிருந்த குழிவுக்கு மாருக அவை கண்டிப்பைத் தோற்றுவித்தன. ''தோழர் களே....'' அப்புறம்... (இல்லை, மலைப் பாறைகள்மேல் தெரிந்த விளக்கு நெடுங்காலத்துக்கு மறைந்து விட்டது).

அன்று பொழுது சாய்ந்த பின்னர் கிரெம்ளினிலிருந்து எனக்கு போன் வந்தது. ''ஸெவ்ர்.... ஸெவ்ர் உடன்படிக் கையைப் பற்றித் தகவல் வேண்டும்....'' எனது கார் குஸ்னேத்ஸ்க்கிய் வீதி வழியாக இறங்கி நெக்ளின்னயா வீதியில் திரும்பிற்று. இருள் பரவலாயிற்று, ஆனுல் தெரு விளக்குகள் இன்னும் ஏற்றப்படவில்லை. ஆழ்ந்த ஊதா நிற மங்குல் மழைப்புயலின் வருகைக்குக் குறி காட்டியது. ஒரே புழுக்கம். நகரம் வெந்நீரில் கிடந்தது போலிருந்தது. லெனின் கடைசிக் கூட்டத்தை முடித்து விட்டார் போலும். அவர் விட்டத்து விளக்குகளை அணைத்துவிட்டு, தமது மேஜை விளக்கை அருகில் இழுத்து வைக்கும் நேரம் வந்துவிட்டது. மேஜை விளக்கின் பச்சை நிழல் அவ ருடைய காகிதங்கள் மேலும், நீண்ட கத்தரிக்கோலின் நிக்கல் முலாம் பூசிய அலகுகள் மேலும் பளிங்கு மைக்கூட் டின் மேலும் பரவும். இந்த நேரத்தை லெனின் ஆர்வத் துடன் எதிர்பார்ப்பார், சிறிய, பெரிய உலக விவகாரங் கள் பற்றிச் சிந்தித்துத் தெளிவுபடுத்திக் கொள்வதற் காக. ''இதோ இருக்கிறது ஸெவ்ர்... பேச்சு வார்த்தை களுக்கு இந்த நகரை நேசநாட்டினர் தெரிந்தெடுத்தது எதனுல்? ஒரு காலத்தில் ஸெவ்ர் நகரில் கெய்ஸரின் தலை மை அலுவலகம் இருந்தது, அல்லவா? அப்படியானுல் இது விளம்பர நடவடிக்கையா?''

எனது கார் கிரெம்ளினுக்குள் புகுந்தது. நகரத்தை விட இங்கே அதிக வெளிச்சமாக இருந்தது. கிரெம்ளின் குன்றில்தான் பகற்போது மாஸ்கோவிடம் விடைபெற்றுப் பிரிந்தது. அல்லது ஒருவேளை இந்த ஒளி எல்லாம் கிரெம் ளினின் வெண்சுவர்க் கட்டிடங்களின் பிரதிபலிப்பு தானோ? துப்புரவாக வெள்ளையடிக்கப்பட்ட வீட்டில் எப்போதுமே அதிக வெளிச்சமாக இருக்கும். ஆனால் மாலை இருள் இங்கும் வந்துவிட்டது. அரண்மனை ஜன்னல்கள் வழி யே அது எட்டிப் பார்த்தது. கீழ் நோக்கிப் பாயும் தண்ணீர் போல அவற்றுக்குள் பெருகியது மாலையின் வெதுவெதுப் பான இருட்டு. லெனினது அறையின் இரண்டு பெரிய ஜன்னல்களும் அரையிருட்டாக இருந்தன. ஆனால் இது மேஜை விளக்கு ஷேடின் வெளிர் பச்சை நிழல் அல்ல, நடுங்கும் மஞ்சள் நிற மங்கலொளி. கணப்புக் கதவைத் திறந்தால் எரியும் தணல்களின் ஒளிர்வு சுவற்றில் பிரதி பலிக்குமே, அது போன்றது.

எதிர்பார்ப்பு அறையில் வழக்கத்துக்கு மாறாக நிசப் தம் குடிகொண்டிருந்தது. ஜன்னலின் மேல் கதவு திறந் திருந்தது. ஆனால் பகல் நேரத்தில் புகைக்கப்பட்ட சிக ரெட்டுக்களின் புகை நாற்றம் இன்னும் தங்கியிருந்தது.

''ஆமாம், உள்ளே வரலாம்.''

இந்த வாயிலுக்குள் நான் எத்தனையோ தடவை புகுந் திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் எனக்கு உண்டாகும் உணர்ச்சி ஒரே மாதிரியானது. கதவுப் பிடியில் கையை வைப்பதற்குள் என் நெஞ்சுத் துடிப்பு எனக்குத் தெளி வாகக் கேட்கும்.

''ஆகா, துபாஷியாரா....''

லெனினால் கேலி செய்யும் விருப்பத்தை அடக்கிக் கொள்ளவே முடியாது. அதில் குத்தல் இருக்காது, ஆனால் சிரிப்பினால் ஜன்னல்கள் அதிரும். அவருடைய அலுவல றையிலிருந்து அடிக்கடி சிரிப்பு வெளியே கேட்கும். கிரெம் ளினின் மிகக் கனத்த சுவர்கள் கூட அந்தச் சிரிப்புக்கு எதிர் நிற்க வல்லவை அல்ல. பக்கத்து வராந்தாவில்

அது கேட்கும். அலுவலறைக் கதவு திறந்திருக்கையிலோ, இங்கே, எதிர்பார்ப்பு அறையில் கூட அதைக் கேட்க முடியும். இங்கு சிரிப்பொலி எட்டும் போதெல்லாம் எதிர் பார்த்துக் காத்திருப்பவர்களின் கவலை தோய்ந்த முகங் கள் பளிச்சிடும். ''இல்யீச் சிரிக்கிறார். இது நல்ல குறி'' என்பார்கள் அவர்கள். ஆனால் இங்கு வழக்கமாக வருபவர் கள் இது நல்ல குறிதான் என்றாலும் இதை மிகையாக மதிப்பிடுவது கூடாது என்பதை அறிவார்கள். இல்யீச் எப்போதும் சிரிப்பார், எப்போதும் கண்டிப்பாயிருப்பார். ''உட்காருங்கள்... இன்னும் கொஞ்சம் கிட்டத்தில்'' என்றார் அவர் என்னிடம். வருபவர்கள் தமக்குப் பக்கத் தில் உட்காருவதை அவர் விரும்பினார். ''ஊம், ஸெவ்ர் விஷயம் என்ன?'' என்று கேட்டார்.

நடுங்கும் வெளிச்சம் எங்கிருந்து வந்தது என்பதை இப்போது கண்டுகொண்டேன். கிரெம்ளினில் மின் விளக்கு கள் அணைக்கப்பட்டிருந்தன (புரட்சிக்கு மூன்று ஆண்டு களுக்குப் பின் கிரெம்ளினில்கூட இது நிகழலாம் என்பது தெரிந்தது). கொழுப்பு வத்திகள் லெனினது மேஜைமேல் எரிந்து கொண்டிருந்தன. அவற்றின் அசைவற்ற சுவாலை கள் மேஜைமீது ஒரு சீரான வெளிச்சத்தைப் பரப்பின.

''என்ன சொன்னேன், ஸெவ்ர் என்றா? இல்லை, நான் அறிய விரும்புவது துருக்கியைப் பற்றி. இந்த உடன்படிக் கை குறித்து அங்கு ஏற்பட்டுள்ள எதிர்விளைவுகள் பற்றி இன்னும் என்ன தெரிய வந்திருக்கிறது? இல்லை, நான் கேட்பது துருக்கியப் பத்திரிகைகளின் கருத்தைப்பற்றி மட்டும் அல்ல. இஸ்தன்பூல்! இஸ்தன்பூல் என்ன சொல்லு கிறது? தகவல்... அந்த நாட்டிலிருந்தே பரவலான தகவல் சேகரிப்பது அவசியம். நான் சொல்வது புரிகிறதா உங் களுக்கு?''

அவர் மூக்குக் கண்ணாடியை மாட்டிக்கொண்டார். மெல்லிய உலோக விளிம்பு கட்டிய அந்தப் பழைய கண் ணாடியை அணிந்து கொண்டதும் அவருடைய தோற்றமே மாறிவிட்டது. கண்ணாடி அணிந்து கொண்டிருந்த

லெனினின் புகைப்படம் ஒன்றை நான் பார்த்தேன். ஆனால் அது பின்னர், வெகு காலம் பின்னர்.

நுணுக்கெழுத்துக்களில் அச்சடிக்கப்பட்ட பக்கத்தை அவருடைய கண்கள் மின்வேகத்தில் பார்வையிட்டன. அவர் படிக்கும் முறையே அலாதி. அடிக்கடி அவர் காகிதத்தை முடிவிலிருந்து படிக்கத் தொடங்குவார். அவ்வாறு செய்வதால் அதன் கருத்து தமக்கு அதிக விரைவில் புலப்பட்டுவிடும் என்பது அவருடைய நம்பிக்கை. ''விஷயம் தெரியுமா? இந்த ஸெவ்ர் விவகாரம் கிழக்கு நாடுகளில் நிகழ்ச்சிகளின் போக்கை விரைவுபடுத்தவே செய்யும்'' என்று சொல்லிவிட்டுக் கண்ணாடியைக் கழற்றினார் லெனின். எத்தனையோ புகைப்படங்களின் வாயிலாக எனக்கு மிகப் பரிச்சயமான தோற்றம் அவருக்குத் திரும்ப வந்துவிட்டது. ''கிழக்கு நாடுகளில் நிகழ்ச்சிகளின் போக்கை இது விரைவுபடுத்தும்.'' கண்ணாடியை இன்னும் கையில் பிடித்தவாறு நாற்காலியில் நன்றாகச் சாய்ந்துகொண்டு சற்று நேரம் மேலே பார்த்துக்கொண்டிருந்தார். அப்புறம் அவர் எழுந்தார். அவருடைய முகத்தில் கவலை படர்ந்தது. ''இப்போதுதான் எனக்கு மருத்துவர்களின் அறிக்கை ஒன்று கிடைத்தது'' என்று கூறி, சாம்பல் நிறக் காகிதம் ஒன்றை நீட்டினார். ''ஜான் ரீட் நோயுற்றிருக்கிறார்'' என்றார்.

நிமிட நேரத்துக்கு மௌனம் நிலவியது. கொழுப்பு வத்திகளின் சடசடப்பு மட்டுமே கேட்டது.

''டைபஸ் சுரமா, விளாதீமிர் இல்யீச்?''

''ஆம்.''

''அபாய நிலை கடந்துவிட்டதா?''

''இல்லை. இப்போதுதான் தொடங்கியிருக்கிறது.''

எனது துயரத்தை முக பாவத்திலிருந்து அவர் கண்டுகொண்டார்.

''ஆனால் அவருக்கு வயது முப்பத்து மூன்று தானே ஆகிறது? அது நம்பிக்கையூட்டக் கூடியது, அல்லவா?'' என்றார்.

கொழுப்பு வத்திகளின் மெல்லிய சடசடப்பு தவிர வேறு எதனுலும் குலேக்கப்படாத நிசப்தத்தில் எனக்கு ரீடின் இருமல், இருதய நோயாளியின் ஜாக்கிரதையான இருமல் நினைவுக்கு வந்தது.

''அவருக்கு இருதயக் கோளாறு, விளாதீமிர் இல்யீச்.''

''இருதயக் கோளாரு?''

அவர் எழுந்தார். தண்ணீர் ஜாடியை எடுத்துக் கொண்டு தொட்டியில் வைத்திருந்த விசிறிப் பனே அருகே சென்ருர். தமது உள்ளக் கிளர்ச்சியைத் தணித்துக் கொள்ள விரும்பும் போது அவர் இவ்வாறு செய்வது வழக்கம். உலர்ந்த மண் தண்ணீரை உறிஞ்சுவதை அவர் மௌனமாகக் கவனித்தார். ஜாடியைக் கவிழ்த்துக் கொட்டிவிட்டு, தொட்டியிலிருந்த குச்சி ஒன்றை எடுத்து அடிமரத்தின் பக்கத்தில் மண்ணைக் கிளறிவிட்டார், மரம் நீரைப் பருகுவதற்கு உதவுபவர் போல.

சிந்தனே தேங்கிய விழிகளை விசிறிப்பனையிலிருந்து திருப்பாமலே, ''சென்ற வாரந்தான் அவரிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் கிடைத்தது. மனைவி கடலுக்கு அப்பாலிருந்து அப்போதுதான் வந்திருப்பதாக ரீட் எழுதியிருந்தார்'' என்ருர். மேஜைக்குத் திரும்பி ஜாடியை வைத்தார். ''கடிதம் காரியரீதியானது என்று சொல்ல வேண்டியதில்லே. ஆனுல் 'கடலுக்கப்பாலிருந்து' என்ற இந்த விவரந்தான்'' அவருடைய குரல் தழுதழுத்தது. அவர் உளநெகிழ்ச்சி அடைந்தது ரீடின் கடிதம் காரணமாக இருக்கலாம் அல்லது அந்தக் கடிதத்தால் தூண்டிவிடப்பட்ட எதேனும் சொந்த நினைவு காரணமாகவும் இருக்கலாம். உறுதியான குரலில் அவர் மேலே சொன்னுர்: ''முக்கியமான விஷயத்தைப் புரிந்துகொண்டதற்காக ரீட் எப்போதும் நமது அன்புக்கு உரியவராக விளங்குவார் என்று நான் நினைக்கிறேன். எல்லாவற்றிலும் முக்கியமான விஷயத்தைப் புரிந்து கொண்டதற்காக. இது அவருக்கு எளிதாக இல்லவே இல்லே. கவனியுங்கள், எளிதாக இல்லே.''

லெனினது சுபாவத்தின் ஒரு புதிய தன்மையை அன்று மாலை நான் கண்டேன். ரீட் மீது அவர் கொண்டிருந்த பற்றுதலை விளக்குவதற்கு முயல்கையில் ஒருவர் சொன்னார்: ''அமெரிக்க விவகாரங்களில் அவர் லெனினுடைய ஆலோசகராக இருந்தார், அல்லவா?'' ரீட் லெனினுடைய ஆலோசகராக இருந்ததில்லை. அதற்குத் தேவையும் இல்லை. நண்பராகவும் உரையாடல் துணைவராகவும் இருந்திருக்கலாம். இந்த மனிதர்பால் லெனினை ஈர்த்தது எது? புதிய ருஷ்யாமீது ரீட் கொண்டிருந்த அன்பும், இந்த நாட்டைப் புரிந்துகொள்ளும் திறனுமா? சந்தேகமின்றி. புரட்சிக் கொள்கைகள்பால் அவருக்கிருந்த பற்றுறுதியா? ஆம். அவருடைய அறிவா? ஒருவேளை இதுவும் இருக்கலாம். ஆனால் இவற்றோடுகூட வேறொன்றும் இருந்தது. செயல்முறை உளத்திண்மை வாய்ந்த லெனின் ஒரு மனிதனிடம் விசாலமான இதயத்தைக் கண்டால் அதன்பால் ஈர்க்கப்பட்டார். மனித நேயம், பரிவு, கவர்ச்சி ஆகியவையும் மனிதனுடைய உதிரத்தில் அன்பு வெப்பம் தணியாதவாறு வைத்திருக்கும் எல்லாப் பண்புகளும் அவரைக் கவர்ந்து இழுத்தன.

லெனினிடம் விடை பெற்றுக்கொண்டு நான் என் காரில் ஏறிக் கொண்டேன். இப்போது கார் இரவு நேர மாஸ்கோ வழியே சென்றது. வரலாற்றுப் பொருட்காட்சிக் கட்டிடத்தின் சிவப்புக் கற்கள் இருளில் அடர்ந்து ஒண்டிக் கொண்டிருப்பவைபோலக் காணப்பட்டன. அவை புகைபடிந்தவை போன்று மங்கலாயிருந்தன எனினும் நட்சத்திரங்கள் அற்ற இரவின் கருமையில் கூட அந்தச் சிவப்புக் கற்களை என்னால் காண முடிந்தது. உயரே, முடிவற்று ஆழ்ந்த வானில், விண்மீன்களை எல்லாம் மறைத்தவாறு மிதந்துகொண்டிருந்தன கருமுகில்கள். இந்தச் சிவப்புக் கற்களின் பக்கத்திலும் அந்த முகில்களின் அருகேயும் ''அபாய நிலை'' என்ற ஒரே சொல் எனக்குத் தென்பட்டது. கார் குஸ்னேத்ஸ்க்கிய் சாலையின் சமமற்ற பாவுகற்கள்மீது சென்று கொண்டிருந்தது. எனது உணர்விலோ

ஒரே சொல்தான் ஒலித்துக் கொண்டிருந்தது: ''அபாய நிலை, அபாயநிலை, அபாயநிலை....'' இந்த விசாலமான வானத்தின் கீழ் எங்கோ ஒரு மனிதன் மரணத்தை எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்தான். இந்தப் போராட்டம் எங்கோ அதற்குள் எல்லாம் பின்வாங்கிவிட்டன, உணர்வு கூட. இருதயம் மட்டுமே இன்னும் துடித்துக் கொண்டிருந்தது (அது எல்லாவற்றுக்கும் கடைசியில் தான் போகும்). அவன் வாழ்நாளில் உச்சரித்த எல்லாச் சொற்களும் அன்று இரவு அவனது தலையணைக்குத் திரண்டு வந்தன: ''இப்போது நான் ஜான் ஹில் எழுதியவற்றைப் படிக்கப் போகிறேன். கேளுங்கள்: 'நான் படைவீரன் ஆனல், செங்கொடியின் கீழ் நடப்பேன்....' இந்த ருஷ்யப்பாட்டு எப்படித் தொடங்குகிறது? கொஞ்சம் நினைவுபடுத்துங்களேன். எனக்கு மறந்துபோய்விட்டது, எல்லாம் மறந்துபோய்விட்டது....'' உண்மையிலேயே அன்றிரவு எல்லாச் சொற்களும் தலையணைஅருகே ஒன்று திரண்டன போலும், ஆனல் அவற்றை நினைவு படுத்திக்கொள்ளச் சக்தி இல்லை.... எனது கார் குஸ்னேத்ஸ்க்கிய் சாலையில் மேலே மேலே சென்றது. நான் விண்ணை நோக்கினேன். மேகங்கள் விலகின, பின்பு ஒன்று சேர்ந்துவிட்டன. ஒளி பளிச்சிட்டு மறைந்துவிட்டது. அதன் ஒரு துளி கூடத் தரையை எட்டவில்லை.

மூன்று நாட்களுக்குப் பிறகு நான் கிரெம்ளினுக்கு அழைக்கப்பட்டு, ஸெவ்ர் உடன்படிக்கை சம்பந்தமான தகவல்கள் அடங்கிய புதிய காகித அடுக்குடன் போய்ச் சேர்ந்தேன். மக்கள் கமிஸார்கள் சபைக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. இரவு மணி பத்துக்கு மேல் ஆகிவிட்டது. எதிர்பார்ப்பு அறை வெறுமையாயிருந்தது. வந்திருந்தவர்களில் கடைசியானவர் அப்போதுதான் அலுவலறைக்குள் அழைக்கப்பட்டார் போலும். சாம்பல் தட்டில் கிடந்த அவருடைய சிகரெட்டு லேசாகப் புகைந்துகொண்டிருந்தது. கூட்டம் நடந்து கொண்டிருந்த அறையில் நாற்காலிகள் பின்னே நகர்த்தப்படும் சத்தத்தை அப்புறம்

கேட்டேன். கதவு திறந்தது, நான் லெனினைக் கண்டேன். செயலாளர்களுக்குக் கடைசி உத்தரவுகள் கொடுப்பதற்காகவும், திடீரென்று கிளம்பும் கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்காகவும், சற்றுமுன் கடுமையாக விளாசப்பட்ட ஒரு தோழரை வேடிக்கைப் பேச்சால் உற்சாகப்படுத்துவதற்காகவும் லெனின் கூட்டம் முடிந்தபின் சில கணங்கள் இவ்வாறு தாமதிப்பது வழக்கம். வழக்கமாக இந்த நேரம் ஒரே கூச்சலும் கொம்மாளமுமாக இருக்கும். ஆனால் இப்போதோ நிசப்தம், வழக்கத்துக்கு மாறான நிசப்தம் திடீரென ஹாலில் குடிகொண்டது. பேச்செல்லாம் நட்ட நடுவில் நின்று விட்டது. லெனின் பெரிய மேஜை அருகே நின்று கொண்டு, தமக்கு எதிரே கிடந்த துண்டுக் காகிதம் ஒன்றைப் பார்த்துக்கொண்டிருந்தார். அவர் வெளியே போகப் புறப்படுகையில் ஒருவர் இந்த காகிதத்தை அவரிடம் கொடுத்து என்னவோ சொன்னார். சொல்லிவிட்டு லெனின் மனம் புண்படுமோ, இதயம் வேதனைப் படுமோ என்று அஞ்சினார்.

தெளிவாக, எப்போதையும் விடச் சற்று உரக்க லெனின் கூறினார்: ''ஜான் ரீட் காலமாகிவிட்டார்....''

ஹாலில் முன்னிலும் ஆழ்ந்த மௌனம் குடிகொண்டது. அந்த ஹாலில் எனக்குப் புலப்பட்ட எல்லாப் பொருள்களும், ஜன்னல்களுக்கு வெளியே தென்பட்ட மேகங்களின் மங்கிய வரைகள்கூட கணப்போது மரத்துப் போயின.

நள்ளிரவுத் தறுவாயில்தான் லெனின் என்னை வரவேற்றார். அவர் தமது மேஜையருகே அமர்ந்திருந்தார். அவருடைய முகம் சாம்பல் போலிருந்தது. அன்று அவர் மிகவும் களைத்திருந்தார்.

நான் கொண்டுவந்திருந்த காகிதங்களைப் படித்துப் பார்த்துவிட்டு, ''எப்பேர்ப்பட்ட புயலை ஸெவ்ர் கிழக்கு நாடுகளில் கிளப்பிவிட்டிருக்கிறது பார்த்தீர்களா! இது தொடக்கம் மட்டுமே'' என்று கூறினார். சுவரில் தொங்கிய ஆசியாவின் பெரிய வரைப்படத்தில் கண்களை ஓட்டினார்.

''கண்டங்கள் எழுச்சி அடைய வேளை வந்துவிட்டது!'' என்று கூறி எழுந்திருந்து விரைவாக வரைப்படத்தை நெருங்கினர். தர்க்கத்தில் ஈடுபட்டிருக்கையில், சட்டெனக் கிடைத்த ஒரு சொல் விவாதத்துக்கு முடிவு கட்டி விடும் படியான சந்தர்ப்பத்தில் அவர் இவ்வாறு செய்வது வழக்கம். ''கிழக்கு நாடுகள்'' என்றவர் அப்படியே நிறுத்திவிட்டார். அவருடைய முகம் கணப்போதில் கடுகடுப்புற்றது. அவரது கை... கையை அவர் அகற்றவில்லை, அது காஸ்பியன் கடலைக் குறிக்கும் நீலப் பட்டைமேல் கிடந்தது. ''உயர்ந்த பண்புள்ள மனிதர்'' என்று தணிந்த குரலில் சொன்னர் லெனின். வெளிப் பார்வைக்குப் புலப் படாத ஏதோ சந்தர்ப்பச் சேர்க்கை காரணமாக அவர் மறுபடி ரீடை நினைவுபடுத்திக் கொண்டுவிட்டார். ''சில விதிகள் நிலவுகின்றன. அவற்றின் படியே மக்கள் புரட்சிக்கு வருகிருர்கள். இந்த விதிகளை ரீட் அறிந்திருந்தார்'' என்ருர்.

இரவு. நான் செஞ்சதுக்கத்தின் குறுக்கே நடந்தேன். மங்கிய வெளிச்சம் பாவு கற்கள்மீது தெளிவற்ற ஒளிவீசியது. ஆம். நானும் ரீடும் இதோ, இங்கேதான் நின்ருேம். அப்புறம் அவர் சதுக்கத்தின் நடுவரை சென்று, நின்று, மிக நீண்ட நேரம் சுற்றிலும் பார்த்துக் கொண்டிருந்தார். ''சில விதிகள் நிலவுகின்றன. அவற்றின்படியே மக்கள் புரட்சிக்கு வருகிருர்கள்.'' மக்களும் தனி மனிதர்களும் என்று நான் நினைத்துக்கொண்டேன். ஜான் ரீட் உலகம் முழுவதையும் சுற்றிப் பார்த்தவர். மாகடல்களைக் கடந்து அவர் நேரே இங்கு வந்தார்—கிரெம்ளின் மதிற் சுவரின் அருகே என்றென்றும் நிலைத்திருப்பதற்காக....

**அடுத்த பக்கங்களில்:**
**வி. இ. லெனினும் வி. தி. போன்ச்-புருயேவிச்சும் கிரெம்ளினில் மக்கள் கமிஸார்கள் சபை அலுவலக ஊழியர் களிடையே. மாஸ்கோ, 1918 அக்டோபர்**


ДЕКРЕТ



# யெ. திராப்கிஞ

இந்தக் கதையை எழுதியவர் மிகப் பழைய கம்யூனிஸ்டுகளில் ஒருவர். 1917ம் ஆண்டிலிருந்தே லெனினது கட்சியின் உறுப்பினர். இளமையில் யெலிஸவேத்தா திராப்கிஞ லெனினுடைய பல போராட்டத் தோழர்களுடன் சேர்ந்து பணியாற்றினர். லெனினின் மனைவியார் ந. கா. க்ருப்ஸ்க்காயாவும் அவர்களில் ஒருவர். விளாதீமிர் இல்யீச் லெனினை யெ. திராப்கிஞ நேரில் அறிந்திருந்தார், அவரது வாழ்க்கையின் பல நிகழ்ச்சிகளைக் கண்ணெதிரே கண்டிருந்தார். ''கறுப்பு ரஸ்க்குகள்'' என்னும் தமது நூலில் இந்நிகழ்ச்சிகளை அவர் விவரித்துள்ளார். இந்நூலில் அடங்கிய ஒரு கதை இங்கே பிரசுரிக்கப்படுகிறது.

# அல்யோஷா கலியோனவின் படங்கள்

அக்டோபர்ப் புரட்சிக்குச் சற்று முன்னர் நிகழ்ந்தது இது. கேரென்ஸ்க்கியின் தாற்காலிக அரசாங்கம் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருந்தது. ஆனால் அதன்பால் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை வர வரக் குறைந்து ஏமாற்றமாக மாறிக் கொண்டிருந்தது. வட்டார டூமாக்களுக்கான* தேர்தலில் நமது கட்சிக்கு வீபர்க் வட்டாரத்தில் பெரும்பான்மை வாக்குகள் கிடைத்தன. வி. இ. லெனினது மனைவியார் நதேஜ்தா கான்ஸ்தாந்தீனவ்னா க்ரூப்ஸ்க்காயா அந்த வட்டார டூமாவின் பண்பாடு-கல்விப் பிரிவின் தலைவர் ஆனார். பிரிவு அலுவலகம் ஒரே அறை கொண்டது. இரண்டு பழைய கோணல் மேஜைகளும் சில நாற்காலிகளும் மட்டுமே அதில் இருந்தன.

ஊழியர்கள் மிக மிகத் தேவைப்படுவதாகக் கூறி, குழந்தைகள் விளையாட்டு இடம் ஒன்றை ஏற்படுத்தும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார் நதேஜ்தா கான்ஸ்தாந்தீனவ்னா.

எனக்கு உண்டான சள்ளைக்கு எல்லையே கிடையாது. எப்படி இருக்கிறது சேதி? நானோ தடையரண்கள் நிறுவிப் புரட்சி நடத்த அனேகமாகத் தயாராகிக் கொண்டிருந்தேன், இவர் என்னடாவென்றால் குழந்தைகளின் மூக்குக்களைத் துடைக்கும்படி என்னிடம் சொல்லுகிறார்.

''புரட்சி நடத்துவதற்காகவேதான், போல்ஷெவிக்குகள் யார் என்று பாட்டாளி மக்கள் அறிந்து கொள்ளுமாறு புரிவதற்குத்தான், நானும் நீயும் பல விதக் காரியங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கும். குழந்தைகளின் மூக்குக்களைத் துடைப்பதும் அவற்றில் ஒன்று'' என்றார் நதேஜ்தா கான்ஸ்தாந்தீனவ்னா. ''நமது நாட்டில் நம்முடைய கட்சியின் செல்வாக்கின்கீழ் இருக்கும் ஒரே வட்டார டூமா தற்போது வீபர்க் டூமா மட்டுமே. பாட்டாளி

---

* **வட்டார டூமாக்கள்**—முனிசிபாலிட்டிகள் போன்ற சபைகள்.—(மொ-ர்.)

மக்கள் தங்கள் கைகளில் ஆட்சி அதிகாரத்தை எடுத்துக் கொண்டதும் போல்ஷெவிக்குகள் எப்படி வேலே செய்யப் போகிருர்கள் என்பதைப் பெத்ரோகிராத் தொழிலாளி களுக்கும் நாடு முழுவதிலுமுள்ள தொழிலாளர்களுக்கும் நாம் காட்ட வேண்டும்'' என அவர் விளக்கினுர்.

அன்றைய உடனடி வேலேகளே முடித்தபின் நதேஜ்தா கான்ஸ்தாந்தீனவ்ஞ விளேயாட்டு இடத்துக்கு ஏற்ற இடத் தைத் தேடும் பொருட்டு என்னுடன் புறப்பட்டார். நெடு நேரம் நடந்தபின் ரெயில்வே பாலத்தின் அருகே பெரிய வெற்றிடம் ஒன்றைக் கண்டோம். அதில் வளர்ந்திருந்த புல் வாடியிருந்தது. வெற்றிடத்தைச் சுற்றி வேலி போடப் பட்டிருந்தது. அதற்குள் பலகைக் கூறை வேய்ந்த சவுக் கை ஒன்றும் இருந்தது. எனவே அங்கேயே விளேயாட்டு இடம் ஏற்படுத்தத் தீர்மானித்தோம்.

வீபர்க் தொழிலாளி இளேஞர்கள் சிலரது உதவியுடன் மைதானத்தில் இருந்த களேகளேயும் குப்பை கூளங்களே யும் அகற்றித் துப்புரவு செய்தோம், மணல் கொண்டு கொட்டினேம், மரத் துடுப்புக்களேயும் அள்ளு பலகைகளே யும் சேகரித்தோம், ஒரு பந்து, நான்கு துள்ளு கயிறுகள், சில தஸ்தாக்கள் வெள்ளேக் காகிதங்கள், நீர் வண்ணக் கட்டிகள், வண்ணப் பென்சில்கள் ஆகியவற்றைக் கொண்டு வைத்தோம். விளேயாட்டு இடத்துக்கு வரும்படி குழந்தை களே அழைக்கும் விளம்பரங்கள் வட்டாரம் முழுவதிலும் ஆங்காங்கு ஒட்டப்பட்டன.

திறப்புவிழா காலே பத்து மணிக்கு நடக்கவிருந்தது. ஆனல் எட்டு மணி அடிப்பதற்கு முன்பே குழந்தைகள் வேலியைச் சுற்றி மொய்த்து விட்டார்கள்—உள்ளே இருக்கும் அற்புதத்தை விரைவில் காணும் ஆர்வத்துடன்.

ஆனல் நான் வேலிக் கதவைத் திறந்ததும் உள்ளே புகுவதற்கு எல்லாக் குழந்தைகளும் துணிந்துவிடவில்லே. ஒரு முப்பது பெயர் மட்டுமே உள்ளே வந்தார்கள். இவர் களுங்கூட, எங்கே யாரேனும் அதட்டுவார்களோ, தடை

சொல்லுவார்களோ என்ற அச்சத்துடன் தயங்கித் தயங்கித் தான் அடி எடுத்து வைத்தார்கள்.

நான் அவர்களுக்கு விளையாட்டுச் சாமான்களை வழங்கினேன். சின்னஞ்சிறு குழந்தைகளை மணலில் உட்கார்த்தினேன். பிள்ளைப் பருவத்திலேயே முதிர்ந்துவிட்ட இந்தக் குழந்தைகள் கொஞ்சங் கொஞ்சமாகக் கூச்சம் தெளிந்து குதூகலம் அடைந்தார்கள். மேலோட்டமாகப் பார்ப்பதற்கு அவர்கள் விளையாடும் சாதாரணக் குழந்தைகள் போலவே காணப்பட்டார்கள். ஆனால் கந்தை சுற்றிய மரத்துண்டு ஒன்றைத் தாலாட்டிக் கொண்டிருக்கும் சின்னஞ் சிறு தாய் ஒருத்தியின் பக்கத்தில் போனால் அவள் பின்வருமாறு முணுமுணுப்பதைக் கேட்கலாம்:

''வார்யா, அலறாதே! என் நெஞ்சை வகிராதே! இதோ சம்பளம் கிடைக்கட்டும், உருளைக் கிழங்கு வாங்கி, வெந்து, தட்டு நிறைய உனக்குத் தருகிறேன், ராணிபோலத் தின்பதற்கு!''

மழை தூற்றத் தொடங்கியது. நான் குழந்தைகளைச் சவுக்கைக்கு வரச் சொல்லி, படம் போடுவதற்கு உட்கார்த்தினேன். காகிதங்களும் தூரிகைகளுமோ எங்களிடம் போதிய அளவு இருந்தன.

மழை விட்டதும் நான் படங்களைச் சேகரித்தேன். பல படங்கள் என்ன என்று தலைகால் தெரியவில்லை. சிலவற்றில் வீடுகளும், புகை போக்கிகளிலிருந்து சுருள் சுருளாகக் கிளம்பும் புகையும், விரித்த கைகால்கள் கொண்ட தட்டை மனிதர்களும் தீட்டப்பட்டிருந்தார்கள். ஆனால் அல்யோஷா கலியோனவ் என்ற பையன் தீட்டியிருந்த இரண்டு படங்கள் என்னை வியப்பில் ஆழ்த்திவிட்டன.

அவற்றில் ஒரே விஷயம் பல முறை மறுபடி மறுபடி சித்திரிக்கப் பட்டிருந்தது: கீழே பளிச்சிடும் வண்ணப் பூச்சுக்கள். அவற்றின் பல நிறங்களும் விந்தை வடிவங்களும் கதைகளில் வரும் பறவைகளை நினைப்பூட்டின. அவற்றுக்கு உயரே, திருத்தமாக அமைந்த அழுக்கு நீலச் சதுரம் காற்றில் தொங்கிற்று. இது எல்லாப் படங்களிலும்

ஒரே மாதிரித் தீட்டப்பட்டிருந்தது. இவை எல்லாம் குழந்தைத் தன்மை அற்ற, ஆச்சரியம் உண்டாக்கும் உணர்ச்சி வெளியீட்டுடன் தீட்டப்பட்டிருந்தன.

அவை பூக்களின் படங்கள் என்பதை நான் அறிந்து கொண்டேன். அல்யோஷா தானே எனக்கு இதைச் சொன்ஞன். ஆனுல் இந்தப் பூக்கள் இப்படி விசித்திரமாகக் காணப்படுவதேன்? தவிர, இந்த மர்மமான சதுரத்தின் பொருள் என்ன?

பையனிடம் இதைக் கேட்க நான் விரும்பவில்லே. அவன் மிகவும் மிரண்டு போயிருந்தான். என் கேள்வி அவனுக்குத் திகில் உண்டாக்கிவிடும். நதேஜ்தா கான்ஸ்தாந்தீனவ்ஞ விடம் இதைப் பற்றி ஆலோசனே கேட்பது என்று தீர்மானித்தேன்.

அல்யோஷாவின் படங்களால் அவரும் கிளர்ச்சி அடைந்தார். பையனேப் பற்றி விவரமாக விசாரித்தார். எனக்கு அவனேப் பற்றி ஒன்றும் தெரியவில்லே. ஆனுல் குழந்தைகளின் பதிவுப் புத்தகம் என்னிடம் இருந்தது. அதிலிருந்து அவனுடைய முகவரியைத் தெரிந்துகொண்டேன்.

''அவன் வீட்டுக்குப் போ. எப்படி வாழ்கிருன் என்று பார். ஒருவேளே அப்போது நமக்குப் பல விஷயங்கள் தெளிவுபடலாம்'' என்ருர் நதேஜ்தா கான்ஸ்தாந்தீனவ்ஞ.

ஆக நான் வீபர்க் வட்டாரத்தின் ஏக்கம்பிடித்த தெருக்களில் மறுபடி நடந்தேன். எங்கும் வெறிச் சென்று இருந்தது. மரமோ செடியோ ஒன்றுகூடக் காணப்படவில்லே. முடிவில் பழங்கால ஆறுமாடி வீடு ஒன்றை அடைந்தேன். தஸ்தாயேவ்ஸ்க்கியின் நவீனங்களில் வருணிக்கப்படுவது போன்ற, நொய்ந்துபோன வீடு அது. அல்யோஷா கலியோனவ் அதில்தான் ஒரு பகுதியில் வசித்தான். முகப்பு வெளி கிணறு போன்றிருந்தது. நிலவறைக்கு இட்டுச் செல்லும் லொடலொடத்த படிக்கட்டு அதன் உள் ஓரத்தில் இருந்தது. படிக்கட்டின் முடிவில் இருளடைந்த நீண்ட ஆளோடி. அதன் கோடியில் ஒரு கதவு.

நான் கதவைத் தட்டினேன். அது தானே திறந்து கொண்டது. ஒரே ஜன்னல் கொண்ட குறுகிய அறையை முன்னே கண்டேன். கிழிந்த, ஒட்டுப்போட்ட போர்வையைப் போர்த்துக் கொண்டு மூன்று குழந்தைகள் கட்டிலில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தார்கள். அல்யோஷா கலியோனவ் ஜன்னல் அருகே உட்கார்ந்திருந்தான். நான் அவன் பக்கத்தில் போய், முகமன் கூறிவிட்டு, கிட்டே உட்கார்ந்து ஜன்னலுக்கு வெளியே பார்த்தேன். வெகு உயரத்தில் எனக்குத் தென்பட்டது அழுக்கு நீலச் சதுர்வடிவான ஆகாயம் — அல்யோஷா கலியோனவ் தனது படங்களில் தீட்டியிருந்தது இதுவேதான்.

பத்து வயதிருக்கும் என்று நான் மதிப்பிட்டிருந்த அந்தப் பையனுக்கு அதற்குள் பதின்மூன்றுவது வயது நடந்து கொண்டிருந்தது. வீபர்க் வட்டாரத்துக்கு வெளியே அவன் போனதே கிடையாது. மலர்களை அவன் பார்த்ததே இல்லை. மலர்கள் வருணனைக்கு எட்டாத அழகுள்ளவை என்ற எண்ணம் அவன் கருத்தில் பதிந்திருந்தது. பூக்கள் பாடும் என்று கூட அவன் எண்ணியிருந்தான்....

யுத்தம் தொடங்கிய முதல் நாள் அன்றே அவனுடைய தகப்பன் படையில் சேர்க்கப்பட்டான். இதற்குச் சிறிது காலத்திற்கெல்லாம் அவனுடைய மரணச் செய்தி வந்துவிட்டது. அல்யோஷாவின் தாய் வண்ணாத்தி. நான்கு குழந்தைகளைப் பராமரிப்பதற்காக அவள் காலைமுதல் இரவுவரை உழைத்தாள். அல்யோஷா பள்ளிக்கூடம் போகாமல் குழந்தைகளைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

நதேஜ்தா கான்ஸ்தாந்தீனவ்னுவுக்கு நான் இந்த விவரங்களை எல்லாம் தெரிவித்தேன். அவர் பேசாமல் கவனமாகக் கேட்டார். மேஜைமேல் கிடத்தப்பட்டிருந்த அவரது அழகிய கைகள் நடுங்கின. பெருந்துளிகளாகக் கண்ணீர் பெருகிக் கன்னங்களில் வழிந்தோடிற்று. மறுநாள் அவரிடமிருந்து எனக்குச் செய்தி கிடைத்தது. க்ஷெஸீன்ஸ்க்காயா மாளிகையில் விளாதீமிர் இல்யீச் லெனினை

அன்று மாலை கட்டாயம் சென்று காணும்படியும் அல்யோஷாவின் படங்களையும் உடன் கொண்டு செல்லும்படியும் என்னைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

க்ஷெஸின்ஸ்க்காயா மாளிகையை நான் அடைவதற்குள் மாலை வெகு நேரமாகிவிட்டது. மாளிகையிலும் அதைச் சுற்றிலும் பெருந்திரளான கூட்டம் கொந்தளித்துக் கொண்டிருந்தது. கேரென்ஸ்க்கியின் விருப்பப்படி மேற்கொள்ளப் பட்ட தாக்குதல் வெட்கக் கேடான முறையில் முறியடிக்கப்பட்டதையும் ஏராளமான படை வீரர்கள் அதில் மாண்டுபோனதையும் பற்றிய தகவல் அப்போது தான் கிடைத்திருந்தது. பெத்ரோகிராத் தொழிலாளர்கள் தாற்காலிக அரசாங்கத்தின் மீது வெறுப்பால் சீறிப் பொங்கிக் கொண்டிருந்தார்கள்.

இரண்டாவது மாடியின் மூலையிலிருந்த அறை ஒன்றில் விளாதீமிர் இல்யீச் என்னை எதிர்கொண்டார். அறையின் ஒரு பக்கத்து ஜன்னல்கள் நெவா ஆற்றை நோக்கியிருந்தன. மற்ற ஜன்னல்கள் பெத்ரோப்பாவ்லவ்ஸ்காயா கோட்டையை நோக்கியிருந்தன.

நான் அறைக்குள் புகுந்தபோது விளாதீமிர் இல்யீச் செய்தித்தாள்களும் புத்தகங்களும் குவிந்துகிடந்த மேஜை அருகே அமர்ந்து ஏதோ எழுதிக்கொண்டிருந்தார். ஜன்னல்கள் திறந்திருந்தன. கூட்டத்தின் ஆரவாரம் அலையோசை போன்று அவற்றின் வழியே வந்துகொண்டிருந்தது.

பேச்சைத் தொடங்குவதற்கு முன் அவர் மூலையிலிருந்த நீல எனமல் தேக்கெண்டியிலிருந்து எனக்கும் தமக்கும் இரண்டு கோப்பைகளில் தேநீர் ஊற்றினர். மணல் சர்க்கரைத் தட்டையும் ரை ரொட்டித் துண்டுகள் உள்ள தட்டையும் மேஜைமேல் வைத்தார். சர்க்கரை கொஞ்சந்தான் இருந்தது. நாங்கள் அதை ரொட்டித் துண்டுகள் மேல் தூவிக்கொண்டு தின்றவாறு தேநீர் பருகினோம். இந்த ரொட்டித் துண்டுகளை ''சர்க்கரை ரொட்டிப் பணியாரம்'' என்று அழைத்தார் விளாதீமிர் இல்யீச்.

அப்புறம் நான் அல்யோஷாவின் படங்களைக் காட்டினேன். விளாதீமிர் இல்யீச் வெகுநேரம் அவற்றைக் கவனமாகப் பார்வையிட்டார்.

அறையின் ரோஜா நிறப் பட்டுச் சுவர்த் திரைகளையும் பளிங்கு விட்டத்தையும் கை வீச்சால் குறித்து, ''இதோ! ஜாரின் வைப்பாட்டி இந்த மாதிரி ஆடம்பரத்தில் வாழ்வதற்காக அல்யோஷாவின் குழந்தைப் பருவம் பறிக்கப்பட்டுவிட்டது'' என்று கோபம் பொங்கக் கூறினார்.

ஒரு காகிதத்தை எடுத்து, எனது விளையாட்டு இடத்துக்கு வரும் குழந்தைகளுக்காகச் செய்ய வேண்டியவற்றை எல்லாம் குறிக்கலானார்: கட்டாயமாக (இந்தச் சொல்லை இரண்டு அடிக்கோடுகளால் அவர் வலியுறுத்தினார்) ஒரு தடவையாவது அவர்கள் நகருக்கு வெளியே அழைத்துச் செல்லப்பட வேண்டும். கட்டாயமாக (மறுபடி இரட்டை அடிக்கோடு) அவர்கள் கோடைகாலப் பூங்காவுக்கு அழைத்துச் செல்லப்பட வேண்டும் (''பணக்காரப் பிள்ளைகள் அவர்களுக்குக் கொஞ்சம் இடம் கொடுத்து விலகிக் கொள்ளட்டும்''). விளையாட்டுச் சாமான்களும் பந்துகளும் அவர்களுக்குச் சேகரித்துத் தரப்பட வேண்டும். குழந்தைப் புத்தகங்கள் பற்றி கோர்க்கியிடம் பேச வேண்டும். விளையாட்டு மைதானத்தில் பாத்திகள் வெட்டிப் பூச்செடிகள் நடமுடியாதா என்று வீபர்க் ஆட்களிடம் கேட்க வேண்டும்.

மறுநாள் காலை விளாதீமிர் இல்யீச் ஒரு வாரத்துக்கு பின்லாந்து சென்றுவிட்டார். அல்யோஷாவின் படங்களையும் தமது குறிப்புக் காகிதத்தையும் உடன் எடுத்துச் சென்றார். திரும்பியபின் அந்தப் பையனைக் கட்டாயமாகக் காண விரும்புவதாகக் கூறினார்.

இதற்குச் சில நாட்களுக்கெல்லாம் ஜூலை 3-5 தேதிகளின் நிகழ்ச்சிகள் நடந்துவிட்டன. விளாதீமிர் இல்யீச் அவசரமாகப் பெத்ரோகிராத் திரும்பினார். ஆனால் தாற்காலிக அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டுத் துன்புறுத்தப்படும் அபாயத்தைத் தவிர்ப்பதற்காக அவர் தலை

மறைவாக இருக்க நேர்ந்தது. அல்யோஷா கலியோனவின் படங்கள் உட்பட அவரிடம் இருந்த காகிதங்கள் தவறிவிட்டன.

மறைவிடங்களைப் பல முறை மாற்றிக்கொண்ட பிறகு விளாதீமிர் இல்யீச் முடிவில் ஸெஸ்த்ரொரரேத்ஸ்க் என்னும் ஊரைச் சேர்ந்த தொழிலாளி போல்ஷெவிக் நிக்கொலாய் அலெக்ஸேயெவிச் யெமெல்யானவின் தீனிப்புல் வயலை அடைந்து அங்கிருந்த குடிசையில் வசிக்கலானர். சங்கடம் நிறைந்த இந்த மாதங்களில் நதேஜ்தா கான்ஸ்தாந்தீனவ்ன முன்போலவே வீபர்க் வட்டார தூமாவில் தொடர்ந்து பணியாற்றிவந்தார். எப்போதும் போலவே அவர் அமைதியாகக் காணப்பட்டார். எனினும் வெளிக்கு இந்த அமைதியைக் காட்டுவதற்கு அவர் எவ்வளவு அரும்பாடு பட வேண்டியிருந்தது என்பது எனது அனுபவமற்ற கண்களுக்குக்கூடத் தெரிந்தது.

எங்களைப் பற்றி நினைப்பதற்கே விளாதீமிர் இல்யீச்சுக்கு நேரமில்லை என்றும் எனது விளையாட்டு இடக் குழந்தைகளுக்காகத் தாம் செய்ய விரும்பியவற்றை எல்லாம் அவர் மறந்துவிட்டார் என்றும் நான் எண்ணினேன். எனவே, ஞாயிற்றுக் கிழமையன்று எல்லாக் குழந்தைகளையும் திரட்டும்படியும், குழந்தைகளும் நாங்களும் முஸ்தம்யாக்கி என்னும் இடத்துக்குப் பயணம் போவோம் என்றும் நதேஜ்தா கான்ஸ்தாந்தீனவ்ன என்னிடம் சொன்னபோது நான் அடைந்த ஆச்சரியத்துக்கு அளவே இல்லை.

‘‘டிக்கெட்டுகளுக்குப் பணம்?’’

‘‘தேவைப்படாது. எல்லாம் தயாராயிருக்கும்.’’

உண்மையாகவே பின்லாந்து செல்வதற்கான ரெயில் நிலையத்தில் எங்களை எதிர்பார்த்து நின்றது வெற்று ரெயில் பெட்டி. ரெயில்வே தொழிலாளித் தோழர்கள் அதை எங்களுக்காக ஏற்பாடு செய்திருந்தார்கள். முதலாவதாகப் புறப்பட்ட ரெயில் வண்டியுடன் அவர்கள் அதை இணைத்துவிட்டார்கள். ஒரே கூச்சலும் கொம்மாளமுமாக எங்கள் பயணம் தொடங்கியது.

முஸ்தம்யாக்கியில் எங்களை எதிர்கொண்டார் பழைய கட்சி ஊழியர் அலெக்ஸாந்தர் மிகாய்லவிச் இக்னுத்தியேவ். சிறுவர்கள் நான்கு நான்கு பெயராக வரிசைப்படுத்தப்பட்டார்கள். ஒரு பையனிடம் (தற்செயலாக அல்ல என்று சொல்ல வேண்டியதில்லை) சிவப்புத் துணித் துண்டு ஒன்று இருந்தது. அவன் அதை ஒரு கம்பின் நுனியில் கட்டினன். செங்கொடி பறக்க, பெருமிதமாக அணி நடை நடந்து, எங்களுக்காக அமர்த்தப்பட்டிருந்த வீட்டை அடைந்தோம். அருமையான தினைக் களியும், பால் கலந்த இனிப்புத் தேநீரும் ஓட் பணியாரங்களும் அங்கே எங்களுக்காகக் காத்திருந்தன.

இவை எல்லாம் எங்களுக்காகச் செய்யப்பட்டது விளாதீமிர் இல்யீச்சின் தயவினால்தான்! அவர் அப்போது எந்த நிலைமையில் இருந்தார் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும்: அற்றலைந்த குடிசை ஒன்றில் தன்னந்தனியாக இருந்தார் அவர். எந்த நிமிடமும் பகைவர்கள் தம்மைக் கைது செய்து துண்டு துண்டாகப் பிய்த்துப் போட்டுவிட முடியும் என்பதை அவர் அறிந்திருந்தார். காலைமுதல் மாலைவரை கட்டுரைகளும் புத்தகங்களும் பிரசுரங்களும் எழுதுவதில் அவர் மும்முரமாக முனைந்திருந்தார். ருஷ்யாவினுடையவும் சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தினுடையவும் வருங்காலத்தைப் பற்றியே இடைவிடாது சிந்தித்துக் கொண்டிருந்தார். அப்பேர்ப்பட்ட சமயத்தில், ஒரு ஐம்பது பாட்டாளிக் குழந்தைகளுக்கு ஒரு நாள் இன்பத்தைப் பரிசளிக்க அவர் கவலை எடுத்துக் கொண்டார்!

மகிழ்ச்சி நிறைந்த அந்த நாள் முழுவதும் நாங்கள் நீந்திக் குளித்தோம், காட்டில் சுற்றி உலாவினேம், பாட்டுக்கள் பாடினேம். குழந்தைகள் கீச்சிட்டார்கள், அறுக்கப்படாத உயர்ந்த புல்லில் புரண்டார்கள். சிறுமிகள் பூமாலைகள் தொடுத்தார்கள்.

அல்யோஷா கலியோனவ் மட்டுமே மந்திரத்தால் மயங்கியவன் போல வளைய வந்தான். அவன் ஒன்றும் பேசாமல் மலர்களின் அருகே சென்றான், அவற்றை உற்று

நோக்கினுன், விரல் நுனிகளால் இதழ்களை ஜாக்கிரதை யாக வருடினுன்.

கட்டாயமாக மறுபடி வருவதாக நாங்கள் இக்குத் தியேவுடன் ஒப்பந்தம் செய்துகொண்டோம். ஆனுல் அரசியல் புயல் நிகழ்ச்சிகள் இவ்வாறு செய்யவிடாது தடுத்து விட்டன. நாட்டில் நிலைமை நாளுக்கு நாள் அதிக இறுக்கம் நிறைந்ததாகிக் கொண்டு போயிற்று. சிவப்பு வட்டாரமான வீபர்குக்கு எதிராக வெளிப்படைத் தாக்குதல் தொடங்கிவிட்டது. இந்த போல்ஷெவிக் மையத்தை ஒழித்துக்கட்டும்படி பூர்ஷ்வாச் செய்தித்தாள்கள் அறைகூவல்கள் விடுத்தன. விளையாட்டு இடத்தின் தேவைகள் பற்றி நான் தோழர்களுக்கு நினைவுபடுத்திய போது அவர்கள் தொண்டையைக் கனைத்துக்கொண்டார்கள், பிடரியைச் சொறிந்தார்கள், குற்றப் பான்மையுடன் என்னைப் பார்த்தார்கள், ஆனுல் அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை.

செப்டெம்பர் நெருங்கியது. விளையாட்டு இடத்தை ஏதேனும் கட்டிடத்துக்கு மாற்றுவது அவசியமாயிருந்தது. ஆனுல் கட்டிடமோ பணமோ இல்லை. தவிர, எங்கள் எண்ணங்கள் வேறு விஷயங்களில் ஈடுபட்டிருந்தன. அக்டோபர்ப் புரட்சிக்கு ஆயத்தங்கள் செய்வதில் கட்சிக்குத் தங்களால் இயன்றவரை பாடுபட்டு உதவிக் கொண்டிருந்தார்கள் பாட்டாளி இளைஞர்கள் அனைவரும்.

சொல்லவே எனக்கு வெட்கமாயிருக்கிறது, ஆனுல் அந்த நாட்களில் நான் அல்யோஷா கலியோனவை அறவே மறந்துவிட்டேன். அக்டோபர்ப் புரட்சிக்குப் பின்னர் ஸ்மோல்னியில் நான் விளாதீமிர் இல்யீச்சைத் தற்செயலாக எதிர்ப்பட்டதுமே அவர் அல்யோஷா கலியோனவைப் பற்றி என்னிடம் விசாரித்த போது எனக்கு ஒரே எக்கச் சக்கமாகப் போய்விட்டது. அவனைப் பற்றி அவருக்கு எதுவும் சொல்ல என்னுல் முடியவில்லை.

‘‘அது எப்படி? இந்தக் குடும்பத்தின் விதி, ஒரு வகையில் சொன்னுல் உன் கைகளில் இருக்கிறது. நீ அதை மறந்து விட்டாயே!’’ என்ருர் விளாதீமிர் இல்யீச்.

''ஆனுல் எனக்கு... நான்....''

''ஸ்மோல்னிய் கமாண்டன்டின் அலுவலகத்துக்குப் போ. கலியோனவ் குடும்பத்தை நல்ல வீடு ஒன்றில் குடியேற்றும்படி நான் கேட்டுக் கொண்டதாகச் சொல்லு.''

சில நாட்களுக்குப் பிறகு நான் கலியோனவ் குடும்பத்தாரை அவர்களுடைய புதிய வீட்டில் சென்று கண்டேன். அது கனிய எண்ணெய்த் தொழிலதிபன் குக்காஸவின் படிப்பறையாக இருந்த இடம். அவன் புரட்சிக்குப்பின் வெளிநாடுகளுக்கு ஓடிவிட்டான். மரீயா வஸீலியெவ்ன கலியோனவா (அல்யோஷாவின் தாய்) தனது அதிர்ஷ்டத்தை நம்ப முடியாதவளாக அந்த ஆடம்பரமான அறையில் அங்குமிங்கும் நடமாடியவாறு நுட்ப வேலைப்பாடுள்ள பீங்கான் சாமான்களை வெந்நீரிலும் சவர்க்காரத்திலும் ஓயாமல் துணி துவைத்ததால் வீங்கியிருந்த தன் விரல்களால் பதபாகமாக எடுத்து வேறு இடத்தில் வைத்துக்கொண்டிருந்தாள். அல்யோஷாவோ, சுற்றிலும் இருந்தவை எவற்றையும் பொருட்படுத்தாமல், சுவரில் தொங்கிய, வ்ரூபெல் தீட்டிய ''அரக்கன்'' என்னும் வரைப் படத்தையே வைத்தகண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

குழந்தைகள் கிளப்புக்கான இடம் நவம்பர் மாத இறுதியில் எங்களுக்கு எப்படியோ கிடைத்துவிட்டது. ஒரு பங்களாவில் மூன்று அறைகள் எங்களுக்கு ஒழித்து விடப் பட்டன. ருஷ்ய மகாகவி நெக்ராஸவ் ''பிரதான வாயில்'' என்று தொடங்கும் கவிதையில் வருணித்திருக்கும் அதே பங்களா இது.

ஆனுல் இப்போது இந்தப் ''பிரதான வாயிலுக்கு'' வந்தவர்கள், திமிர்பிடித்த காவலாளியால் விரட்டப் பட்ட கிராமவாசிகள் அல்ல, பெத்ரோகிராத் தொழிலாளிகளும் அவர்களுடைய குழந்தைகளுமே. வேலை மும்முரமாக நடந்தது. விறகு கொண்டு வரப்பட்டது, தரை மெழுகித் துப்புரவாக்கப்பட்டது, மேஜை நாற்காலிகள்

எங்கள் சௌகரியத்துக்கு ஏற்ப மாற்றி அமைக்கப் பட்டன. முன்னுள் ஜார் அரசாங்கத்தின் ஆதரவாளன் ஒரு வனுடைய இந்த மாளிகை பெத்ரோகிராதின் முதலாவது குழந்தைகள் கிளப்பாக மாற்றப்பட்டது. ''தொழிலாளி களின் குழந்தைகளுக்கான உலகப் புரட்சிக் கிளப்'' என்று அது அழைக்கப்பட்டது. இடத்தைத் துப்புரவாக வைத்துக் கொள்வது, விறகு பிளப்பது, அடுப்பு மூட்டு வது, எல்லா வேலைகளும் கிளப்பில் சிறுவர்களாலேயே செய்யப்பட்டன.

1918 மார்ச்சில் நான் மாஸ்கோ சென்றேன், ஆனுல் மேதினத்துக்குப் பெத்ரோகிராத் திரும்பி விட்டேன். ''புரட்சிக்குப் பலியானவர்கள்'' என்ற சதுக்கத்தில் மேடை அருகே நின்று, எங்கள் குழந்தைகள் கிளப் சிறு வர்கள் அணிவகுத்துச் செல்வதைக் கண்டேன். அவர்கள் பெரிய போஸ்டர் ஒன்றை எடுத்துச் சென்ருர்கள். சிவப் புச் சட்டை அணிந்த ஒரு தொழிலாளியின் உருவம் அதில் தீட்டப்பட்டிருந்தது. ஒரு கையைக் குடியானவன் பக்கம் நீட்டியவாறு மற்ருெரு கையில் பிடித்திருந்த சம்மட்டி யால் அவன் உலக உருண்டையைப் பிணித்திருந்த முதலாளித்துவச் சங்கிலித் தளைகளை உடைத்துக் கொண் டிருந்தான். ''ஜாக்கிரதை, உலக பூர்ஷ்வா வர்க்கமே, நாங்கள் காவல் புரிகிருேம்!'' என்ற வாசகம் அடியில் பொறிக்கப்பட்டிருந்தது. அல்யோஷா கலியோனவ் என் னிடம் ஓடிவந்து, இந்தப் போஸ்டரைத் தானே தீட்டிய தாகக் களிப்புடன் அறிவித்தான்.

1920ம் ஆண்டுக் கோடைகாலத்தில் நான் மறுமுறை பெத்ரோகிராத் வந்தபோது, இளங் கம்யூனிஸ்டு அல்யோ ஷா கலியோனவ், போர்முனை சென்ற படைப்பிரிவில் ஆர்வத் தொண்டனுகச் சேர்ந்து பூல்க்கவோ என்னும் இடத்தின் அருகே யூதேனிச் கொள்ளைக் கூட்டங்களை எதிர்த்துப் போரிட்டு வீர மரணம் அடைந்துவிட்டான் என்று அறிந்தேன்.

**வி. இ. லெனின், ந. கா. க்ரூப்ஸ்க் காயா, ம. இ. உல்யாஞெவா மூவரும் மோட்டாரில் (ஓட்டுபவர் ஸ்தெபான் கில்). மாஸ்கோ, 1918 மே 1**



# ஸ்தெபான் கில்

வி. இ. லெனினைப் பற்றிய கதைகளில் ஸ்தெபான் கில்லின் (1888-1966) நினைவுக்குறிப்புக்கள் தனிச் சிறப்புள்ள இடம் பெற்றுள்ளன. ஆறு ஆண்டுக் காலத்தில் (1917 முதல் 1924 வரை) ஸ்தெபான் கில், புரட்சியின் பெருந்தலைவருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். லெனினது வாழ்க்கையின் பல நிகழ்ச்சிகள் அவர் கண் முன்னே நடந்தன.

''வி. இ. லெனினுடன் ஆறு ஆண்டுகள்'' என்றும் நூலை அவர் எழுதியிருக்கிறார். இதன் ஒரு பகுதி இந்தத் திரட்டில் பிரசுரிக்கப்படுகிறது.

# லெனினைக் கொல்ல முயற்சி

சோவியத் ருஷ்யாவுக்கு மிகவும் கவலையூட்டுவதாக இருந்த 1918ம் ஆண்டு நடந்துகொண்டிருந்தது. உலகிலேயே மிகப் பெரிய புரட்சிக்குப் பிந்திய முதல் ஆண்டு அது. சுரப் படபடப்பும் மட்டுமீறிய இறுக்கமும் நிறைந்த வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தது சோவியத் ருஷ்யா.

அந்த நாட்களில் விளாதீமிர் இல்யீச் பெருந்தொகையான மக்கள் நிறைந்த திறந்த பொதுக்கூட்டங்களுக்கு அனேகமாக தினந்தோறும் போவது வழக்கம். இந்தப் பொதுக்கூட்டங்கள் தொழிற்சாலைகளிலும் மைதானங்களிலும் படைப்பிரிவுகள் இருந்த இடங்களிலும் நிகழ்ந்தன. ஒரே நாளில் லெனின் இரண்டு, மூன்று பொதுக் கூட்டங்களில் கலந்து கொண்டதும் உண்டு.

இவை சொற்பொருளிலும் திறந்த பொதுக்கூட்டங்களாகவே விளங்கின. அவை நிகழ்ந்த தொழில் நிலையங்களின் கதவுகள் விரியத் திறந்திருக்கும். யார் வேண்டுமானலும் கூட்டத்துக்கு வரலாம். அது மட்டுமல்ல. பொதுக் கூட்டத்தில் லெனின் பேசப் போவதாக அறிவித்து, எல்லா மக்களையும் அதில் கலந்துகொள்ள வருமாறு தாராளமாக அழைக்கும் பிரமாண்டமான விளம்பரங்கள் தொழில் நிலைய வாயில்களில் தொங்கவிடப் பட்டிருக்கும்.

விளாதீமிர் இல்யீச்சின் உயிர் தினந்தோறும் பலமுறை கடும் அபாயத்துக்கு உள்ளாகி வந்தது. எந்த விதமான காப்பாளர்களையும் வைத்துக்கொள்ள விளாதீமிர் இல்யீச் கண்டிப்பாக மறுத்துவிட்டமையால் இந்த அபாயம் இன்னும் வலுத்தது. தம்மிடம் அவர் ஆயுதமே வைத்துக் கொள்வதில்லை (ஒரு சிறு பிரௌனிங் கைத்துப்பாக்கி இதற்கு விலக்கு. ஆனல் அது ஒரு தடவைகூடச் சுடப்படவில்லை). என்னையும் ஆயுதம் வைத்துக்கொள்ள வேண்டாம் என்று அவர் கேட்டுக் கொண்டிருந்தார். ஒரு நாள் என் இடைவாரில் தோல் உறைக்குள் இருந்த ரிவால்வரை அவர் பார்த்துவிட்டார்.

“உங்களுக்கு இது எதற்காக, தோழர் கில்? இதைக் கண்காணுத தொலேவில் வையுங்கள்'' என்று நளினமாக வும் அதே சமயம் போதிய கண்டிப்புடனும் சொன்ஞர்.

விளாதீமிர் இல்யீச்சின் பார்வையில் படாதவாறு ரிவால் வரை ஜாக்கிரதையாக மறைத்துவிட்டேன் எனினும் நான் அதைத் தொடர்ந்து என்னிடம் வைத்துக்கொண்டு தான் இருந்தேன். உறையற்ற ரிவால்வர் என் சட்டைக்கு உள்ளே இடையில் செருகப்பட்டிருக்கும்.

கெடுவிதிவசமான அந்த நாளில்—1918 ஆகஸ்டு 30ந் தேதி—விளாதீமிர் இல்யீச்சும் நானும் பல இடங் களுக்குக் காரில் போய் வந்தோம். தானியப் பரிவர்த்தனே நிலேயத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் கலந்துகொண் டோம்.

ஆறு மணி சுமாருக்குத் தானியப் பரிவர்த்தனே நிலே யத்தை விட்டு அகன்று ஸெர்ப்புகோவ்ஸ்க்காயா வீதியில் இருந்த முன்ஞள் மிகெல்ஸோன் தொழிற்சாலேக்குப் போனேம். முன்பும் இந்தத் தொழிற்சாலேக்கு நாங்கள் அனேகத் தடவை போனது உண்டு.

நாங்கள் தொழிற்சாலே முகப்புவெளியை அடைந்த போது கூட்டம் இன்னும் தொடங்கவில்லே. எல்லோரும் லெனினே எதிர்பார்த்திருந்தார்கள். விசாலமான கைக் குண்டுத் தொழிற்கூடத்தில் சில ஆயிரம் பேர் குழுமியிருந் தார்கள். என்ன காரணத்திஞலோ ஒருவரும் எங்களே எதிர்கொள்ளவில்லே. தொழிற்சாலேக் கமிட்டி உறுப்பினர் களோ வேறு எவரேனுமோ ஒருவருமே வெளியே வந்து எங்களே வரவேற்கவில்லே.

விளாதீமிர் இல்யீச் காரிலிருந்து இறங்கி விரைவாகத் தொழிற்கூடம் சென்ருர். நான் காரைத் திருப்பி முகப் பிலிருந்து வெளிச் செல்லும் வாயிலே நோக்கி, தொழிற் கூட வாயிலிலிருந்து ஒரு பத்து தாவடித் தொலேவில் நிறுத்தினேன்.

சில நிமிடங்கள் கழித்து ஒரு மாது என்னே நெருங்கி ஞள். அவள் குட்டை ஜாக்கெட் அணிந்திருந்தாள்,

கையில் தோல் பை வைத்திருந்தாள். காரின் மிக அருகே வந்து அவள் நின்ருள். எனவே என்னல் அவளை நன்ருகப் பார்க்க முடிந்தது. அவள் இளம் பிராயத்தினள். ஒடிச லான மேனியும் கிளர்ச்சியுற்ற கருங்கண்களும் கொண்ட அவளைப் பார்த்தால் முற்றிலும் புத்தி நிதானம் உள்ள வளாகத் தோன்றவில்லை. அவளுடைய முகம் வெளிறியிருந் தது. அவள் பேசிய போது அவளது குரல் நடுங்கியது ஓரளவு புலப்பட்டது.

''என்ன, தோழரே, லெனின் வந்துவிட்டார் போலிருக் கிறதே?'' என்று வினவினுள்.

''யார் வந்திருக்கிருரோ, அறியேன்'' என்று நான் பதிலளித்தேன்.

அவள் பதற்றத்துடன் கெக்கலித்தாள்.

''நல்ல வேடிக்கைதான். நீங்கள் காரோட்டி, யாரை ஏற்றிக்கொண்டு வருகிருேம் என்று உங்களுக்கே தெரிய வில்லையோ?'' என்ருள்.

''எனக்குத் தெரிவது எப்படி? யாரோ பேச்சாளர். கொஞ்சம் பேரா இந்தக் காரில் சவாரி செய்கிருர்கள்? எல்லாரையும் தெரிந்துகொள்ள முடியுமா என்ன?'' என்று நான் அமைதியாக விடையிறுத்தேன்.

யார் வந்திருக்கிருர்கள், எங்கிருந்து, மேற்கொண்டு எங்கே போகப் போகிருேம் என்பதை ஒருவருக்கும் ஒரு போதும் சொல்வதில்லை என்ற விதியை நான் மிகக் கண்டிப்பாகக் கடைப் பிடித்துவந்தேன்.

அவள் வாயைக் கோணிக்கொண்டு அங்கிருந்து அகன் ருள். தொழிற்சாலைக் கட்டிடத்துக்குள் அவள் புகுவதை நான் கண்டேன்.

''இவள் எதற்காக என்னை நச்சரித்தாள்? இவ்வளவு விடாப்பிடியாக?'' என்று எண்ணமிட்டேன். ஆனல் வந்தது யார் என்று அறிந்துகொள்ள ஆவல் காட்டுபவர்கள் எப்போதுமே மிக அதிகம். சில வேளைகளில் அவர்கள் காரை நாற்புறமும் சூழ்ந்து மொய்ப்பதுகூட உண்டு.

எனவே இந்த மாதின் நடத்தையையும் சொற்களையும் நான் வெகுவாகப் பொருட்படுத்தவில்லை.

சுமார் ஒரு மணி நேரத்துக்குப் பின் தொழிற்சாலையிலிருந்து முதலாவது பெருங்கும்பல் வெளியே வந்தது. அதில் பெரும்பாலும் தொழிலாளர்களே இருந்தார்கள். கூட்டம் அனேகமாக முகப்பு வெளி முழுவதையும் நிறைத்துவிட்டது. பொதுக்கூட்டம் முடிந்துவிட்டது என்று புரிந்துகொண்டு விரைவாக எஞ்சினை முடுக்கினேன. விளாதீமிர் இல்யீச் இன்னும் வெளியே வரவில்லை.

சில நிமிடங்கள் கழித்து இன்னொரு பெருங்கூட்டம் முகப்புக்கு வந்தது. அதன் முன்னே நடந்தார் விளாதீமிர் இல்யீச். நான் இயக்கு சக்கரத்தைப் பிடித்துக்கொண்டு எந்தக் கணத்திலும் காரை முன்னே செலுத்துவதற்கு வாய்ப்பாக கியரை வைத்துக்கொண்டேன்.

காரை நோக்கி நடந்தவாறு லெனின் தொழிலாளர்களுடன் உற்சாகமாகப் பேசிக்கொண்டு வந்தார். அவர்கள் கேள்விமழை பொழிந்தார்கள். அவர் இன்முகத்துடன் விவரமாக அவற்றுக்குப் பதிலளித்தார், தாமும் ஏதோ கேள்விகள் கேட்டார். மிக மெதுவாக அவர் காரை நெருங்கினர். காருக்கு இரண்டு மூன்று தாவடி தொலைவில் விளாதீமிர் இல்யீச் நின்றுர். கூட்டத்தில் எவனே காரின் கதவைத் திறந்திருந்தான்.

பேச்சு இரண்டு மூன்று நிமிடங்கள் நீடித்தது. விளாதீமிர் இல்யீச்சின் இரு மருங்கிலும் சற்று முன்னுக நின்றுர்கள் இரண்டு மாதர்கள். காரின் ஏறுபடியை நோக்கி விளாதீமிர் இல்யீச் கடைசி அடி எடுத்து வைத்த போது குண்டு வெடித்த ஒலி கேட்டது.

அப்போது நான் விளாதீமிர் இல்யீச்சைப் பார்த்துக் கொண்டிருந்தேன். குண்டுவந்த திசையை நோக்கி சட்டெனத் தலையைத் திருப்பியவன் அதே மாதை—ஒரு மணிக்கு முன் லெனினைப் பற்றி என்னிடம் விசாரித்த அதே பெண்பிள்ளையை—கண்டேன். அவள் காரின் இடப்புறம், முன் முகட்டின் அருகே நின்று கொண்டு விளாதீமிர் இல்யீச்சின் மார்புக்குக் குறிவைத்தாள்.

இன்னொரு குண்டு வெடித்தது. நான் உடனே எஞ்சினை நிறுத்திவிட்டு இடுப்பில் செருகியிருந்த ரிவால்வரை எடுத்துக்கொண்டு, சுட்டவள் மீது பாய்ந்தேன். அடுத்த குண்டைச் சுடுவதற்குத் தயாராக அவளுடைய கை நீட்டியிருந்தது. நான் என் ரிவால்வரை அவளது தலைக்குக் குறி வைத்தேன். அவள் இதைப் பார்த்து விட்டாள். அவளுடைய கை நடுங்கிற்று. அதே கணம் மூன்றாவது குண்டு வெடித்தது. மூன்றாவது குண்டு அங்கே நின்று கொண்டிருந்த ஒரு மாதின் தோளில் பட்டது என்பது அப்புறம் தெரிய வந்தது.

மறு கணம் நான் சுட்டிருப்பேன். ஆனால் லெனினைச் சுட்ட கொலைகாரி தன் ரிவால்வரை என் காலடியில் கடாசி விட்டு சட்டெனத் திரும்பி வாயிலை நோக்கிக் கூட்டத்துக்குள் பாய்ந்து புகுந்தாள். சுற்றிலும் ஏராளமான ஆட்கள் இருந்தார்கள். எனவே ஓடும்போது அவளைச் சுட நான் தயங்கினேன். தொழிலாளர்களில் யாரையேனும் நான் கொன்றுவிடக் கூடுமே.

நான் அவள் பின்னே தாவிப் பாய்ந்து சில தாவடிகள் ஓடினேன். அதற்குள் ''விளாதீமிர் இல்யீச் என்ன ஆனார்?'' என்ற எண்ணம் எழுந்தது. நான் நின்றேன். சில கணங்கள் பயங்கரமான அவல நிசப்தம் நிலவியது. அப்புறம், ''கொன்றுவிட்டார்கள்! லெனினைக் கொன்றுவிட்டார்கள்!'' என்ற குரல்கள் நாலாபக்கமும் ஒலித்தன. கூட்டம் முழுவதும் கொலைகாரியை எட்டிப் பிடிப்பதற்காக முகப்பிலிருந்து பாய்ந்தோடியது. பயங்கரமான நசுக்கல் ஏற்பட்டது. நான் காரைத் திரும்பிப் பார்த்தவன், பேயறைந்தவன் போலத் திகைத்துப் போனேன். காரிலிருந்து இரண்டு தாவடி தொலைவில் தரையில் விழுந்து கிடந்தார் விளாதீமிர் இல்யீச். நான் தாவி அவர் அருகே சென்றேன். பிதுங்கப் பிதுங்க நிறைந்திருந்த முகப்புவெளி இந்தச் சில கணங்களில் வெறுமையாகிவிட்டது. சுட்டவள் கூட்டத்தில் பதுங்கி மறைந்துவிட்டாள்.

நான் விளாதீமிர் இல்யீச்சின் முன் மண்டியிட்டு அவர்

புறம் குனிந்தேன். என்ன அதிர்ஷ்டம்! லெனின் உயிரோடு இருந்தார். அவர் ஸ்மரணைகூட இழக்கவில்லை.

''அவனைப் பிடித்தார்களா இல்லையா?'' என்று தணிந்த குரலில் கேட்டார். தம்மைச் சுட்டது ஆண் என்பது அவர் நினைப்பு.

விளாதீமிர் இல்யீச் சிரமத்துடன் பேசினார். அவர் குரல் மாறி, விந்தையாகக் கரகரத்தது.

''பேசாதீர்கள். உங்களுக்குச் சிரமம்'' என்றேன்.

அந்தக் கணத்தில் நான் தலையை நிமிர்த்தினேன். தொழிற்கூடத்திலிருந்து ஒருவன் எங்களை நோக்கி ஓடி வரக் கண்டேன். அவன் மாலுமித் தொப்பி அணிந்திருந்தான். இடது கையை வெறியுடன் வீசியாட்டினான், வலது கையைப் பைக்குள் வைத்திருந்தான். நேராக விளாதீமிர் இல்யீச்சிடம் தலைதெறிக்க ஓடி வந்தான்.

அவனுடைய தோற்றம் முழுவதுமே எனக்கு மிகவும் சந்தேகத்துக்கிடமாகத் தோன்றியது. நான் என் உடலால் விளாதீமிர் இல்யீச்சை, முக்கியமாக அவரது தலையை மூடி மறைத்தேன். அனேகமாக அவர்மேல் படுத்துக் கொண்டேன்.

ஓடி வருபவன் பக்கம் ரிவால்வரைத் திருப்பி, ''நில்!'' என்று பலங்கொண்ட மட்டும் உரக்கக் கத்தினேன்.

அவன் தொடர்ந்து ஓடி எங்களை நெருங்கினான். அப்போது நான் இன்னொரு முறை கத்தினேன்:

''நில்! சுட்டுவிடுவேன்!''

விளாதீமிர் இல்யீச் கிடந்த இடத்திலிருந்து சில தாவடிகளுக்கு அப்பால் அவன் சட்டென இடப் புறம் திரும்பி வாயிலை நோக்கி ஓட்டமெடுத்தான். அப்போதும் அவன் பைக்குள்ளிருந்து கையை எடுக்கவில்லை.

அந்தச் சமயத்தில் என் பின்னாலிருந்து ஒரு மாது, ''என்ன செய்கிறீர்கள்? சுடாதீர்கள்!'' என்று கத்திக் கொண்டே ஓடிவந்தாள்.

நான் விளாதீமிர் இல்யீச்சைச் சுட விரும்புவதாக அவள் நினைத்தாள் போலிருக்கிறது.

அவளுக்கு நான் பதில் சொல்வதற்குள், ''இவன் நம் ஆள், நம் ஆள்!'' என்ற கூச்சல் தொழிற்கூடத்திலிருந்து வந்தது.

கைகளில் ரிவால்வர்களுடன் மூன்று ஆடவர்கள் என்னை நோக்கி ஓடிவரக் கண்டேன்.

''நில்லுங்கள்! நீங்கள் யார்? சுட்டுவிடுவேன்!'' என்று நான் மறுபடி கத்தினேன்.

''நாங்கள் தொழிற்சாலைக் கமிட்டியினர், தோழரே. நம்மவர்கள்'' என்று அவர்கள் உடனே பதிலளித்தார்கள்.

கூர்ந்து பார்த்து அவர்களில் ஒருவனை நான் அடையாளம் கண்டுகொண்டேன். முன்பு நாங்கள் இந்தத் தொழிற்சாலைக்கு வந்திருந்தபோது நான் அவனைப் பார்த்திருந்தேன். அவர்கள் விளாதீமிர் இல்யீச்சிடம் வந்திருந்தார்கள். இவை எல்லாம் வெகு விரைவில், ஓரிரு நிமிடங்களில் நடந்துவிட்டன.

பக்கத்திலிருந்த ஆஸ்பத்திரிக்கு விளாதீமிர் இல்யீச்சைக் கொண்டு செல்லும்படி அவர்களில் ஒருவன் என்னை வற்புறுத்தினன். நான் பிடிவாதமாக மறுத்துவிட்டேன்.

''எந்த ஆஸ்பத்திரிக்கும் நான் கொண்டு போக மாட்டேன். வீட்டுக்கு எடுத்துப் போவேன்'' என்று கண்டிப்பாகச் சொன்னேன்.

விளாதீமிர் இல்யீச் எங்கள் பேச்சைக் கேட்டுவிட்டார்.

''வீட்டுக்கு, வீட்டுக்கு'' என்ருர் அவர்.

தொழிற்சாலைக் கமிட்டியினரும் (அவர்களில் ஒருவன் இராணுவக் கமிஸார் அலுவலகத்தைச் சேர்ந்தவன்) நானும் விளாதீமிர் இலியீச் எழுந்து நிற்க உதவினேம். எங்கள் ஒத்தாசையுடன் அவர் சில தாவடி தூரத்தில் இருந்த கார் வரை தாமே நடந்தார். காரின் படிச்சட்டத்தில் ஏறுவதற்கு நாங்கள் அவருக்கு உதவி செய்தோம். அவர் பின் இருக்கையில் தமது வழக்கமான இடத்தில் அமர்ந்தார்.

ஒட்டும் இடத்தில் உட்காரு முன்பு நான் நின்று விளாதீமிர் இல்யீச்சை உற்றுப் பார்த்தேன். அவர் முகம் வெளிறியிருந்தது. விழிகள் பாதி மூடியிருந்தன. அவர்

ஒரேயடியாக அடங்கிவிட்டார். என் நெஞ்சு உடம்பு வலியால் போலச் சுரீரென்றது. தொண்டையில் ஏதோ அடைத்துக்கொண்டது. அந்தக் கணம் முதல் அவர் எனக்கு மிக மிக வேண்டியவர், அன்புக்கு உரியவர் ஆகி விட்டார் — நாம் என்றென்றைக்கும் இழந்துவிடப் போகிற சொந்தக்காரர்கள் நமக்கு அன்புக்கு உரியவர்கள் ஆகிவிடுவதுபோல.

ஆனால் எண்ணமிடுவதற்குப் போதில்லை. உடனடியாகச் செயல் புரிவது அவசியமாக இருந்தது. விளாதீமிர் இல்யீச்சின் உயிரைக் காப்பாற்ற வேண்டியிருந்தது.

இரண்டு தோழர்கள் காரில் ஏறி அமர்ந்தார்கள்: ஒருவர் என் பக்கத்திலும் மற்றவர் விளாதீமிர் இல்யீச் அருகிலும். நான் காரை முடிந்தவரை வேகமாகக் கிரெம்ளினுக்கு ஓட்டிச் சென்றேன்.

வழியில் பல தடவை நான் விளாதீமிர் இல்யீச்சைத் திரும்பிப் பார்த்தேன். பாதி வழியில் அவர் உடல் இருக்கைமீது ஒரேயடியாகச் சாய்ந்தது. ஆனால் அவர் முனகவில்லை. அவரிடமிருந்து எவ்வித ஒலியும் கிளம்பவில்லை. அவருடைய முகம் மேலும் மேலும் வெளிறிக் கொண்டு போயிற்று. பக்கத்திலிருந்த தோழர் அவரைச் சற்று தாங்கிக் கொண்டார். த்ரோயித்ஸ்கிய் வாயிலுக்குள் புகுகையில் நான் காரை நிறுத்தவில்லை. ''லெனின்!'' என்று காவலனைப் பார்த்துக் கத்தமட்டும் செய்துவிட்டு நேரே விளாதீமிர் இல்யீச்சின் இருப்பிடத்துக்கு விரைந்தேன்.

லெனின் வசித்த வீட்டின் பிரதான வாயில் அருகே போய்வந்து கொண்டிருந்தவர்கள், நின்று கொண்டிருந்தவர்கள் ஆகியோரின் கவனத்தை ஈர்க்காதிருக்கும் பொருட்டு நான் காரைக் கமான் வளைவுக்கு இப்பால், பக்கத்து வாயிலெதிரே நிறுத்தினேன்.

இங்கே நாங்கள் மூவரும் விளாதீமிர் இல்யீச் காரிலிருந்து இறங்க உதவினோம். எங்கள் கைத்தாங்கலாக அவர் இறங்கினார். வலியால் அவர் துடிப்பது தெரிந்தது.

‘‘நாங்கள் உங்களைத் தூக்கிச் செல்கிறோமே, விளாதீமிர் இல்யீச்’’ என்றேன்.

அவர் திட்டமாக மறுத்துவிட்டார்.

நடப்பது, அதிலும் மாடிப்படி ஏறுவது அவருக்குச் சிரமமாயிருக்கும், கெடுதல் என்று நாங்கள் எவ்வளவோ சொல்லிப் பார்த்தோம். ஆனால் எங்கள் வற்புறுத்தல்கள் ஒன்றும் பலிக்கவில்லை.

‘‘நானே போய்க்கொள்கிறேன்’’ என்று அவர் கண்டிப்பாகக் கூறிவிட்டார்.

பிறகு என்னைப் பார்த்து, ‘‘என் கோட்டைக் கழற்றி விடுங்கள். அப்போது எனக்குச் சுளுவாக இருக்கும்’’ என்றார்.

நான் ஜாக்கிரதையாக அவருடைய கோட்டைக் கழற்றினேன். எங்கள் மேல் சாய்ந்தவாறு அவர் செங்குத்தான மாடிப்படி ஏறி மூன்றாவது மெத்தைவரை நடந்தார். ஏறும்போது அவர் ஒன்றுமே பேசவில்லை. பெருமூச்சு கூட என் காதில் படவில்லை. மேல் மாடியில் மரீயா இல்யீனிச்னா எங்களை எதிர்கொண்டார். நாங்கள் விளாதீமிர் இல்யீச்சை நேரே படுக்கையறைக்கு இட்டுப்போய்க் கட்டிலில் கிடத்தினோம்.

மரீயா இல்யீனிச்னா ஓரேயடியாக ஆலை பாய்ந்தார். ‘‘டெலிபோன் பண்ணுங்கள்! சீக்கிரம், சீக்கிரம்!’’ என்று என்னைத் துரிதப்படுத்தினார்.

விளாதீமிர் இல்யீச் கண்களைப் பாதி திறந்து, ‘‘கலவரப்படாதே, நிதானத்துக்கு வா. ஒன்றும் பிரமாதமில்லை.... கொஞ்சம் காயம் பட்டிருக்கிறது கையில்’’ என்று அமைதியாகக் கூறினார்.

மக்கள் கமிஸார்கள் சபை நிர்வாக அதிகாரி போன்ச்-புருயேவிச்சுக்குப் பக்கத்து அறையிலிருந்து போன் செய்து நடந்ததை அவருக்கு விவரிக்கலானேன். அவர் என் சொற்களை முடிவுவரை கேட்பதற்குள் பரபரப்பு அடைந்தார். ஒரு வினாடி கூடத் தாமதிக்காமல் நடவடிக்கை எடுப்பது அவசியமாயிருந்தது.

மக்கள் கமிஸார்கள் சபைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக வந்த சமூக இன்ஷுரன்ஸ் மக்கள் கமிஸார் லெனினது இருப்பிடத்துக்கு வந்தார். விரைவிலேயே போன்ச்-புருயேவிச்சும் ஓடிவந்தார்.

விளாதீமிர் இல்யீச் வலது விலாப் புறமாக ஒருக்களித்துப் படுத்து, மிக மெதுவாக முனகிக் கொண்டிருந்தார். அவருடைய மார்பும் இடது கையும் வெளித் தெரியும் படியாக அவருடைய சட்டை கத்தரித்துக் கிழிக்கப்பட்டது. லெனினது முழங்கைக்கு மேலே இரண்டு காயங்கள் தென்பட்டன. வினக்கூரவ் காயங்களின் மேல் அயோடின் தடவினுர்.

விளாதீமிர் இல்யீச் கண்களைத் திறந்தார். வேதனை தோன்றச் சுற்றுமுற்றும் பார்த்தார்.

''வலிக்கிறது, இருதயம் வலிக்கிறது'' என்ருர்.

வினக்கூரவும் போன்ச்-புருயேவிச்சும் இல்யீச்சைத் தேற்ற முயன்ருர்கள்.

''உங்கள் இருதயம் தீண்டவே படவில்லை. காயங்கள் கையில்மட்டுமே தென்படுகின்றன. இது நரம்புப் பதற்றம் காரணமாகப் பிரதிபலிக்கும் வலி'' என்ருர்கள்.

''காயங்கள் தெரிகின்றனவா? கையிலா?''

''ஆமாம்.''

அவர் பேசாமல் கண்களை மூடிக்கொண்டார். நிமிட நேரத்துக்கெல்லாம் அவர் மிக மெதுவாக, யாருக்கேனும் தொந்தரவு ஏற்படுமோ என்று அஞ்சுபவர் போல வாய்க்குள்ளாக முனகலானுர்.

அவர் முகம் முன்னிலும் அதிகமாக வெளிறிவிட்டது. நெற்றிமீது மெழுகுபோன்ற மஞ்சள் நிறம் வந்துவிட்டது. அருகே இருந்தவர்களைத் திகில் பற்றிக் கொண்டது: விளாதீமிர் இல்யீச் நம்மை என்றென்றைக்கும் விட்டுப் பிரிந்து விடுவாரா என்ன? இதுதான் முடிவா?

போன்ச்-புருயேவிச் மாஸ்கோ நகர சோவியத்துக்கு போன் செய்து அலுவலிலிருந்த சோவியத் உறுப்பினரையும் அங்கே இருந்த மற்ற தோழர்களையும் உடனே மருத்து

வர்களை அழைக்கப் போகும்படி கேட்டுக்கொண்டார். மருத்துவர்கள் ஒபுஹ், வெய்ஸ்ப்ரோத் இருவரும் ஒரு அறுவை மருத்துவரும் தாமதமின்றித் தேவை என்று கூறினர். மாஸ்கோ மருந்துக் கடைகளில் தேடி ஆக்ஸிஜன் பைகள் கொண்டுவரும் பணி ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டது. கிரெம்ளினில் அப்போது மருத்துவ உதவி நிலையம் இன்னும் அமைக்கப்படவில்லை. மருந்துக் கடையோ மருத்துவமனையோ இல்லை. எல்லாவற்றுக்கும் நகரத்துக்கு ஆளனுப்ப வேண்டியிருந்தது.

விளாதீமிர் இல்யீச் காயமடைந்த செய்தியை அப்போதுதான் அறிந்த யா. மி. ஸ்வெர்திலோவ் போன் செய்தார். போன்ச்-புருயேவிச் நிகழ்ந்தவற்றை அவருக்குச் சில சொற்களில் விவரித்துவிட்டு அனுபவசாலியான அறுவை மருத்துவர் ஒருவரை உடனே அழைத்துவரும்படி கூறினர். புரொபசர் மீன்த்ஸ் என்பவருக்கு உடனே ஆளனுப்புவதாக ஸ்வெர்திலோவ் தெரிவித்தார். விரைவில் தாமும் வந்து சேர்ந்தார்.

மரீயா இல்யீனிச்ன என்னை அருகழைத்து, நடந்த விபத்தைப் பற்றிய செய்தியை நதேஜ்தா கான்ஸ்தாந்தீனவ்னவுக்கு முடிந்தவரை ஜாக்கிர்தையாகத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொண்டார்ர். நதேஜ்தா கான்ஸ்தாந்தீனவ்ன மக்கள் கல்விக் கமிஸாரகத்தில் இருந்தார். அவருக்கு இன்னும் ஒன்றும் தெரியாது. நான் புறப்பட்டேன். ஆனல் நான் வெளியே வந்ததுமே மக்கள் கமிஸார்கள் சபையைச் சேர்ந்த ஒருவர் நதேஜ்தா கான்ஸ்தாந்தீனவ்னவுக்குத் தகவல் தெரிவிப்பதில் எனக்கு உதவுவதற்காக என்னுடன் சேர்ந்துகொண்டார்.

வெளிமுகப்பில் நாங்கள் நதேஜ்தா கான்ஸ்தாந்தீனவ்னவுக்காகக் காத்திருந்தோம். விரைவில் அவர் வந்து சேர்ந்தார். நான் அவரை அணுகினேன். அதற்குள் எனது பதற்றமுற்ற முகத்தைக் கண்டு ஏதோ பயங்கரம் நிகழ்ந்துவிட்டது என்று அவராகவே ஊகித்துக்கொண்டு நின்று, என் விழிகளை உறுத்து நோக்கி, ''எதுவும் பேசாதீர்கள். ஒன்று

மட்டும் சொல்லுங்கள்: உயிரோடு இருக்கிருரா, இல்லை யா?'' என்று கேட்டார்.

''சத்தியமாகச் சொல்லுகிறேன். விளாதீமிர் இல்யீச் லேசாகக் காயம் அடைந்திருக்கிருர்'' என்று நான் விடை யளித்தேன்.

அவர் கணப்போது நின்றுவிட்டு மாடிக்குச் சென்ருர். நாங்கள் பேசாமல் அவருடன் விளாதீமிர் இல்யீச்சின் கட் டில்வரை போனேம். அவர் உணர்விழந்து கிடந்தார்.

போன்ச்-புருயேவிச்சின் மனைவியும் மருத்துவருமான வேரா மிகாய்லவ்ன வெலீச்கின வந்தார். இல்யீச்சின் நாடியைப் பிடித்துப் பார்த்தார், மோர்பியா இஞ்செக் ஷன் கொடுத்தார். அறுவை மருத்துவர்கள் வரும்வரை அவரைத் தொட வேண்டாம் என்றும் காலணிகளையும் முடிந்தவரை உடையையும் மட்டும் கழற்றும்படியும் கூறினர்.

அந்தச் சந்தர்ப்பத்தில் ஒருவரிடமிருந்து மற்றவர் கைக்குக் கொடுக்கப்பட்ட அமோனியா திரவக் குப்பி தற்செயலாகத் தவறி விழுந்து உடைந்துவிட்டது. அமோ னியாவின் சுள்ளென்ற நெடி அறையில் விரைவிலேயே நிறைந்துவிட்டது. விளாதீமிர் இல்யீச் சட்டென்று விழித் துக்கொண்டார்.

''இது நன்ருயிருக்கிறது...'' என்று சொல்லிப் பெரு மூச்சுவிட்டார், மறுபடியும் அரைத்தூக்கத்தில் ஆழ்ந்தார். அமோனியா அவருக்குத் தெளிவூட்டியது, மோர்பியா வலி தெரியாதவாறு செய்தது போலும்.

புரொபஸர் மீன்த்ஸ் வந்தார். யாருக்கும் முகமன் கூருமல், ஒரு விஞடி கூட வீணுக்காமல் நேரே விளாதீமிர் இல்யீச்சை அணுகி அவர் முகத்தைப் பார்த்துவிட்டு, ''மோர்பியா!'' என்று வெடுக்கெனக் கூறினர்.

''கொடுத்தாகிவிட்டது'' என்று பதிலளித்தார் வேரா மிகாய்லவ்ன.

வெள்ளை மருத்துவ அங்கி அணிந்துகொண்டு புரொ பஸர் மீன்த்ஸ் தமது இரு சுட்டுவிரல்களாலும் லெனினது

கைமேலிருந்த காயங்களின் இடைவெளியை அளந்தார். பின்பு சற்று யோசித்துவிட்டு விரைந்தியங்கும் லாகவமான விரல்களால் லெனினுடைய கையையும் மார்பையும் தடவிப்பார்த்தார். அவர் முகம் விளங்காமையைக் காட்டியது.

அறையில் ஒரே நிசப்தம் நிலவியது. இருந்தவர்கள் மூச்சுவிடக்கூடத் தயங்கினுர்கள். புரொபஸர் என்ன சொல்லப் போகிருர் என்று அறிய எல்லோரும் காத்திருந்தார்கள். மீன்த்ஸ் தமக்குள் முணுமுணுத்தார்:

''ஒன்று கையில்.... இன்னென்று எங்கே? பெரிய இரத்தக் குழாய்கள் தொடப்படவில்லை. இரண்டாவதைக் காணேமே. எங்கே இரண்டாவது?''

திடீரென அவரது விழிகள் நிலைக்குத்திட்டு நின்றன. முகம் விறைத்துப் போயிற்று. அவர் கால்கள் தள்ளாடின. வெளிறிப் போனுர். பரபரப்புடன் விளாதீமிர் இல்யீச்சின் கழுத்தைத் தடவிப் பார்த்தார்.

''இதோ இருக்கிறது!''

கழுத்தின் வலப் பக்கத்தை அவர் சுட்டிக்காட்டினுர். அறையிலிருந்த மற்ற மருத்துவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள். அவர்களுக்குப் பல விஷயங்கள் தெளிவாகி விட்டன. சகிக்க முடியாத மௌனம் அறையில் குடிகொண்டிருந்தது. மிகப் பயங்கரமானது, ஒருவேளை சரிப்படுத்த முடியாதது ஏதோ நிகழ்ந்துவிட்டது என்பதை ஒரு பேச்சின்றி எல்லோரும் புரிந்து கொண்டார்கள். முதலில் சுதாரித்துக்கொண்டவர் மீன்த்ஸ்தாம்.

''கையை அட்டைமேல் போடுங்கள்! அட்டை இல்லையா என்ன?''

ஓர் அட்டைத் துண்டு தேடிக் கொண்டுவரப்பட்டது. மீன்த்ஸ் அதை வேண்டிய வடிவில் கத்தரித்து, காயமடைந்த கையை அதன் மேல் வைத்தார்.

''இப்படி இருந்தால் அதிகச் சௌகரியமாக இருக்கும்'' என்று விளக்கினுர்.

சற்று நேரத்தில் நான் லெனினுடைய வீட்டை விட்டு வெளியேறினேன். காயம் பலமானது, லெனினுடைய

நிலைமை அபாயமானது என்றாலும் மருத்துவர்கள் உதவி செய்வார்கள், விளாதீமிர் இல்யீச்சின் உடல் வலிமை வாய்ந்தது, இருதயம் எதையும் தாங்கக்கூடியது என்ற எண்ணங்களால் என்னையே தேற்றிக்கொள்ள முயன்றேன். லெனினது மரணம் பற்றிய எண்ணத்துக்கே இடங் கொடுக்க நான் விரும்பவில்லை.

விளாதீமிர் இல்யீச் பிழைத்துவிடுவார் என்பது இரண்டு மூன்று நாட்களுக்குள் நிச்சயமாகத் தெரிந்துவிட்டது.

நடந்த நிகழ்ச்சி பற்றிய சில விவரங்கள் முதல் நாள் இரவே தெரிந்துவிட்டன.

லெனினை ரிவால்வரால் சுட்ட பான்னி கப்ளான் என்பவள் சோஷலிஸ்ட்-புரட்சிவாதப் பயங்கரவாதிகளின் ஒரு கும்பலைச் சேர்ந்தவள். இதே கொலைகாரக் கும்பல் தான் பெத்ரோகிராதில் உரீத்ஸ்கியையும் வொலதார்ஸ்க் கியையும் கொலை செய்தது.

விளாதீமிர் இல்யீச்சைச் சுட்டபின்பு தாக்கியவள் கூட்டத்தோடு கூட்டமாகத் தொழிற்சாலை வாயில் வழியே வெளியே ஓடினாள். விளாதீமிர் இல்யீச்சைச் சுட்டது யார் என்று தெரியாமல் முதலில் ஆட்கள் ஓடினார்கள். கூட்டத்தில் கலந்துகொண்டு யாரும் காணாதபடி மறைந்து விடலாம் என்று கப்ளான் நினைத்தாள். தொழிற்சாலை யிலிருந்து சிறிது தூரத்தில் குதிரை பூட்டிய வண்டி ஒன்று அவளுக்காகக் காத்திருந்தது. ஆனால் வண்டியில் ஏறிக் கொள்ள அவளுக்கு வாய்க்கவில்லை. கொலை முயற்சி நடந்தபோது தொழிற்சாலை முகப்பில் இருந்த சிறுவர்கள் திரளாக அவளை விரட்டிச் சென்று, ''அதோ அவள்! அதோ அவள்!'' என்று கத்தியவாறு அவளைச் சுட்டிக் காட்டினார்கள்.

சிறுவர்களின் கெட்டிக்காரத்தனம் காரணமாகக் கொலைகாரியைப் பிடிப்பது முடிந்தது. சில மனிதர்கள் அவளைத் துரத்திச் சென்று டிராம் பாதை விசையின் அருகே அவளைப் பிடித்துத் தொழிற்சாலை முகப்புக்கு இழுத்து வந்தார்கள். கூட்டம் கோபாவேசம் கொண்டுவிட்டது.

அச்சுறுத்தும் பார்வையுடன் பலர் அவளை நோக்கிப் பாய்ந்தார்கள். அவர்கள் அங்கேயே அவளைக் கண்ட துண்டம் ஆக்கியிருப்பார்கள். ஆனால் தொழிலாளர்கள் சிலர் தாக்குதலைத் தடுத்துவிட்டார்கள்.

''நீங்கள் என்ன செய்கிறீர்கள், தோழர்களே? இவளை விசாரிக்க வேண்டுமே!'' என்று ஒருவன் விடாது கத்தினன்.

ஒரு மணி நேரத்திற்கெல்லாம் பயங்கரக் கூட்டக் காரி கப்ளான்ச் செக்காவின் பொறுப்பில் ஒப்படைக்கப் பட்டுவிட்டாள்.

விளாதீமிர் இல்யீச் கப்ளானால் சுடப்பட்ட பின்பு அவரை நோக்கி ஓடிவந்த மாலுமித் தொப்பி அணிந்த ஆளும் விரைவில் கைது செய்யப்பட்டான். அவன் கப்ளானின் துணையாள் என்பது தெரியவந்தது.

லெனினுடைய வலிய உடற்கட்டும் சிகிச்சைக் காலத்தில் அவருக்குச் செய்யப்பட்ட அசாதாரணமான பணிவிடையும் நல்ல பயன் அளித்தன. இரண்டு, மூன்று வாரங்களுக்கெல்லாம் லெனின் மக்கள் கமிஸார்கள் சபைக் கூட்டங்களுக்கு மறுபடி தலைமைவகிக்கலானார்.

சில மாதங்களுக்குப் பிறகு, பூரண ஆரோக்கியமும் உற்சாகமும் பெற்றுவிட்ட விளாதீமிர் இல்யீச், அதே முன்னாள் மிகெல்ஸோன் தொழிற்சாலையில் தொழிலாளிகளின் கூட்டத்தில் மறுபடி சொற்பொழிவாற்றினார். தொழிலாளர்களின் மகிழ்ச்சிக்குக் கங்கு கரையில்லை.

''உங்கள் செளக்கியம் எப்படி, விளாதீமிர் இல்யீச்?'' என்பதே அவர்கள் கேட்ட முதல் கேள்வி.

''மிக நன்றாயிருக்கிறது, நன்றி'' என்று புன்னகையுடன் பதிலளித்தார் லெனின்.

அப்புறம் கூட்டம் தொடங்கிற்று.

# இவான் அராமிலெவ்

இவான் அராமிலெவ் (1896-1951) பிரபல சோவியத் எழுத்தாளர். வடக்கு உரால் பிரதேசத்தில் பரம்பரை வேட்டைக்காரர்கள் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர். ''வேட்டைக்காரனின் பாதையில்'' என்ற மகுடமிட்ட அவரது நூல் மிகப் பிரசித்தமானது. இ. வ. அல்யாபியேவ் என்ற வேட்டைக்காரர் தமது வாழ்க்கையின் மிகச் சிறந்த நிகழ்ச்சியை, வி. இ. லெனினுடன் தாம் வேட்டைக்குச் சென்றதை, அராமிலெவுக்கு விவரித்தார். அந்த முதிய வேட்டைக்காரரது சொற்படி அராமிலெவ் எழுதிய ''பொழுதுபோக்கு'' என்னும் கதை இங்கே வெளியிடப்படுகிறது.

# பொழுதுபோக்கு

வேட்டைக்காரன் இவான் வஸீலியெவிச் அல்யாபியேவுக்கு இரவில் அந்த அழைப் பாணை கிடைத்தது. மாவட்ட நிர்வாகக் கமிட்டி அலுவலகத்துக்கு அந்த முதியவன் அழைக்கப் பட்டிருந்தான். அஞ்சல்காரன் போனபிறகு வேட்டைக் காரனின் மனைவி மரீயா பெத்ரோவ்ளு மிரண்ட விழி களால் கணவனை நோக்கினுள்.

''என்ன காரியம், இவான்?''

''ஏதோ காரியம் இருக்கும். அதனுல்தானே கூப்பிடு கிருர்கள்.''

அல்யாபியேவின் குரல் அமைதியாக ஒலித்தது. எனி னும், எதற்காகவோ தெரியவில்லை, அவன் விளக்கைப் பொருத்தினுன், சிடுக்குப்பிடித்த நரைத் தாடியைச் சீப்பால் வாரிக் கொள்ளலானுன். கிழவி கட்டிலில் நிம்மதியின்றிப் புரண்டவாறு பெருமூச்சு விட்டாள்.

மண்ணெண்ணெய் மோசமானது ஆகையால் விளக்கு புகைந்தது. இவான் அதைச் சின்னதாக்கிவிட்டுக் கட்டி லில் படுத்துக்கொண்டான். ஆனுல் வெகுநேரம்வரை அவனுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை.

மறு நாள் காலை, நல்ல பூட்சுகளையும் பளிச்சிடும் புதிய வண்ணச் சட்டையையும் அணிந்துகொன்டு வேட் டைக்காரன் கால்நடையாக நகரத்துக்குப் புறப்பட்டான். குளிர்நிழலில் நடக்க இன்பமாயிருந்தது. தானிய வயலில் காடை சீழ்க்கை அடித்தது. பிர்ச் மரங்களுக்கிடையே ரூக் பறவைக் குஞ்சுகள் கத்தின. அவற்றின் அரவத்தைக் கேட்டு மகிழ்வின்றி முறுவலித்தான் இவான்.

''இதுதான் பறவை வாழ்க்கை. விதைப்பதில்லை, அறுப்பதில்லை. வருடம் பூராவும் வயிறு நிரம்பத் தீனி. ஒரு கவலை கிடையாது. நமக்கோ, கழுத்தறுப்பு, கூப்பிட்டு அனுப்பியிருக்கிருர்கள்!'' என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டான்.

நிர்வாகக் கமிட்டித் தலைவரின் அறையை அடுத்த எதிர்பார்ப்பு அறையில் நீண்ட வரிசையாக ஆட்கள் காத்திருந்தார்கள். தொலைதூரக் கிராமங்களிலிருந்து வந்த குடியானவர்கள், நகரவாசிகள், நகர்ப்புறக் காய்கறித் தோட்டக்காரர்கள், அண்மையில் இராணுவ சேவை முடிந்து வந்திருந்த செஞ்சேனை வீரர்கள் (முன்னே நட்சத்திரம் பொறித்த கூர் முகட்டுத் தொப்பிகள் அணிந்திருந்தார்கள் இவர்கள்) ஆகியோர் அவர்களில் இருந்தார்கள். யார் யார் என்னென்ன காரியமாக வந்திருக்கிறுர்கள் என்று செக்ரெட்டரி வினவினுள்.

இவான் அல்யாபியேவ் தன் பெயரைச் சொல்லி, தனக்குக் கிடைத்த கடிதத்தை நீட்டினுன். அந்த யுவதி அவனை நிலைத்து நோக்கினுள்.

மறு நிமிடம் தலைவரின் அறைக் கதவு விரியத் திறந்தது. ஏதோ கனவில்போலக் கிழவனின் காதுகளில் யுவதியின் கணீரென்ற குரல் ஒலித்தது:

''உள்ளே வாருங்கள், தோழர் அல்யாபியேவ்.''

தலைவர் மழித்த தலையுள்ள வயதான மனிதர். அவர் இவானுடன் கைகுலுக்கிவிட்டு, அமரும்படி நாற்காலியைக் காட்டினுர். வேட்டைக்காரன் ஜாக்கிரதையாக உட்கார்ந்தான்.

''முன்போலவே வேட்டையாடிக் கொண்டிருக்கிருயா?''

''ஆமாம், எப்போதாவது. வயதாகிவிட்டதல்லவா?'' என்ருன் வேட்டைக்காரன். தன்னிடம் என்ன கோரப்படுமோ என்று அறியாமையால், எதற்கும் பணிவாகவே இருப்போம் என்று தீர்மானித்து அவன் மேலே சொன்னுன்: ''கண் பார்வை மங்கிவிட்டது. கால்கள் வாதத்தால் வலுக்குறைந்து விட்டன. காட்டுக்குள் போவதைச் சீக்கிரம் நிறுத்த வேண்டியிருக்கும்....''

''அப்படியா'' என்று மழுப்பலாகச் சொல்லிவிட்டு அறிவு சுடரும் கூரிய விழிகளால் கிழவனை ஏற இறங்கப் பார்த்தார் தலைவர். ''வயதாகிவிட்டது என்ரு சொல்கிருய்?

எனக்கென்னவோ நீ ஒன்றும் கிழவனல்ல, வலுவான ஆள் என்று தோன்றுகிறது. விஷயம் என்ன தெரியுமா? ஒருவர் வேட்டையாட வருகிருர். உன்னை அவருக்கு வழிகாட்டியாக நியமித்திருக்கிருேம். நாளைக்கு வீட்டிலேயே இரு. அவர் வந்ததும் நல்ல இடங்களுக்கு அவரை அழைத்துப் போ'' என்ருர்.

''தாராளமாகச் செய்கிறேன். வேலை பழக்கமானதுதான்'' என்று இசைந்தான் வேட்டைக்காரன். ''தயவு செய்து ஒன்று சொல்லுங்கள். வரப்போகிறவர் யார் அப்படி?'' என்று கேட்டான்.

தலைவர் கண்களைச் சுருக்கிக் கொண்டு முறுவல் செய்தார்.

''வருவார், நீயே கண்டுகொள்வாய். ஆனுல் ஒன்று கேள். ஊரிலே இந்தச் சேதியைப் பரப்பிவிடாதே.''

அல்யாபியேவ் எச்சரிக்கை அடைந்தான்.

''இரகசியமோ?''

''இரகசியமோ இல்லையோ, இதைப் பற்றிச் சளசளப்பது தேவையில்லை. ஆட்கள் மொய்த்துக் கொண்டு கேள்விமேல் கேள்வி போட்டுத் துளைப்பார்கள் அவரை. அவருக்கோ இளைப்பாற வேண்டும்.''

''புரிந்து கொண்டேன், புரிந்து கொண்டேன்'' என்று தலையை ஆட்டினுன் வேட்டைக்காரன்.

அதற்குள் டெலிபோன் மணியடித்தது. தலைவர் பேசு குழாயை எடுத்துக்கொண்டு யாருடனே உரையாடத் தொடங்கினுர்.

குதூகலம் அடைந்த இவான் தான் ஒரு காலத்தில் பிரதேசம் முழுவதிலும் பெயர்பெற்றவனுக விளங்கியதை நினைவுபடுத்திக் கொண்டான். அதிகாரிகள் தங்கள் நாய்களைப் பழக்கும் வேலையை அவனிடம் ஒப்படைப்பார்கள், அவனேடு வேட்டையாடுவதற்குப் போவார்கள். அவனுடைய குறி தவருமல் சுடும் திறமை, காடுகளையும் பறவைகள், விலங்குகளின் நடத்தையையும் பற்றிய அவனுடைய அறிவு ஆகியவற்ருல் எல்லோரும் அதிசயப்படுவார்கள்.

சில வேளைகளில் உயர் பதவி வகிக்கும் அதிகாரிகள்கூட இவானிடம் வந்து, ''காட்டுக்கு அழைத்துக் கொண்டு போ. கொஞ்சம் வேட்டையாட விருப்பமாயிருக்கிறது!'' என்பார்கள்.

அவன் அழைத்துக்கொண்டு போவான். இந்த அதிகாரிகள் பெருத்த இறுமாப்புடன் நடந்து கொள்வார்கள், அவனுடைய உழைப்புக்கு அற்பக் கூலியே கொடுப்பார்கள். ஆயினும் அவனது மகிழ்ச்சி குறையாது. செல்வச் செழிப்பைக் காட்டும் உடைகள் அணிந்து, விலையுயர்ந்த துப்பாக்கிகளும் உயர்ந்த ஜாதி நாய்களுமாக விளங்கும் மனிதர்கள் வேட்டையாடுவதற்குத் தன்னோடு செல்கிறார்கள் என்பதில் அவனுக்குப் பெருமை. அண்டை வீட்டான் நிக்கீத்தா பன்கோவ் கொடு நாக்கு உள்ளவன், கெட்டவன், இவானை உதவாக்கரை என்று எண்ணுபவன். ஆனால் அவன்கூட இம்மாதிரி நாட்களில் இவான்மீது பொறாமைப்படுவான்.

ஒரு தடவை, வேட்டையில் நேர்ந்த அற்பப் பிசகுக்காக ஸ்தலத் தலைமை அதிகாரி மிலாற்றினால் இவானின் முகத்தில் அடித்தான் என்பது உண்மையே. வேறு எவனோ ஒரு ராணுவ அதிகாரி, தன்னுடைய வேடிக்கைக்காக அரை காலன் வோத்காவை ஒரே தடவையில் குடிக்கும்படி அவனுக்குக் கட்டளையிட்டான். இவான் உணர்வு இழக்கும் அளவுக்கும் குடித்தான். இருதயம் வெடித்து அனேகமாகச் சாகத் தெரிந்தான். அண்டை அயலாருக்கு இந்தச் சேதி தெரியாது. இம்மாதிரி விஷயங்களைப் பற்றி ஒருவன் பெருமை பீற்றிக் கொள்வதில்லையே.

போர் தொடங்கிற்று. புரட்சி நடந்தேறியது. வெடிமருந்தும் ரவைகளும் விலைக்குக் கிடைக்கவில்லை. இனிமேல் வேட்டை வழிகாட்டியாகத் தான் போவது நடவாது என்றும் தான் ஒருவருக்கும் தேவையில்லை என்றும் இவான் அல்யாபியேவ் நினைக்கத் தொடங்கிவிட்டான். ஆனால் ஜனங்கள் தன்னை இன்னும் நினைவு வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது இப்போது தெரிந்தது.

தனது பெருமகிழ்ச்சியை அவன் சிரமத்துடன் மறைத்துக் கொண்டான்.

இதற்கிடையே தலைவர் டெலிபோன் உரையாடலை முடித்துவிட்டு இவானை நோக்கித் திரும்பினார்.

''அப்படியானால், சம்மதந் தானே? துப்பாக்கியை உடன் எடுத்துப்போ. ஆனால் நீயே சுட மட்டும் செய்யாதே, வேட்டைப் பிராணி எங்கிருந்து வந்தாலும் சரி. ஒருகாலும் சுடாதே! உன்னுடைய வேலை பறவைகள் அவருக்குக் கிடைக்கும்படி பார்த்துக் கொள்வதுதான். வேட்டைக்காரன் ஏதேனும் பிராணியைக் கொன்று தமது தொங்குபைக்குள் நுழைப்பது அவருக்குக் கட்டோடு பிடிக்காது. வேண்டியவரை தாமே சுடுவார். வேட்டை ஒன்றும் கிடைக்காவிட்டாலும் மனத்தாங்கல் கொள்ள மாட்டார்'' என்றார்.

''கவலைப் படாதீர்கள். துளி பிசகாமல் நீங்கள் சொன்ன படியே செய்கிறேன். வேட்டைப் பறவைகள் தங்கும் இடங்கள் எல்லாம் எனக்கு அத்துபடி'' என்றான் இவான்.

வீடு திரும்புகையில் இவான் உவகை பொங்க நாற் புறமும் மண்ணோட்டினான். அணைந்து அணைந்து போன சுங்கானை மறுபடி பற்றவைத்துக் கொள்வதற்காக அடிக்கடி நின்றான்.

''யார் வருகிறார் தெரியவில்லையே? அதிலும் நேரே மாஸ்கோவிலிருந்தேயாமே!''

கனம்பொருந்திய விருந்தாளி வரப்போகிறார் என்பதைக் கணவனிடமிருந்து அறிந்து மரீயா பெத்ரோவ்னாவும் களிப்புற்றாள். தரையை மெழுகி, சுவரிலிருந்து நூலாம்படைகளை அகற்றி, குடிசையைத் துப்புரவு செய்வதில் முனைந்தாள்.

2

தூசி படிந்த கார் சாயங்காலமாக வேட்டைக்காரனின் குடிசை வாயிலுக்கு வந்தது. காரோட்டி ஹாரனை

அடித்ததுமே அல்யாபியேவ் வாசலுக்கு ஓடி வந்து மகிழ்ச்சி யுடன் புன்னகை செய்தான்.

''வாருங்கள், அன்புள்ள விருந்தினரே! உள்ளே வர வேண்டும்!''

பழுப்புக் கோட்டும் டாப் பூட்சுகளும் அணிந்த கட்டுக் குட்டான மனிதர் ஒருவர் காரிலிருந்து இறங்கினர். அவரது வலது கையில் துப்பாக்கி வைத்த தோல் பெட்டி இருந்தது.

''வணக்கம்'' என்று கனிவுடன் முகமன் தெரிவித்து இவான் அருகே வந்தார் அவர்.

இவான் அல்யாபியேவ் ஆரம்பத்தில் குழப்பம் அடைந் தான். முன்பெல்லாம் அதிகாரிகளை எப்படி எதிர்கொள் வானே அப்படியே தொண்டு செய்யத் தயார் என்பதைக் காட்டும் முகபாவத்தை இப்போதும் மேற்கொண்டான். ஆனல் வந்தவரோ நட்பு மிளிரும் புன்னகை புரிந்தார். இந்தப் புன்னகை இருவரையும் நெருங்கியவர்கள் ஆக்கி விட்டது.

காரோட்டி காரை வீட்டு முகப்புக்கு உள்ளே கொண்டு நிறுத்தினர். விருந்தாளி திண்ணையில் உட் கார்ந்து கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டார். அல்யாபியேவ் அவர்மீது பதித்த பார்வை யை அகற்றவே இல்லை. தெருவில் மாட்டு மந்தை போ யிற்று. மேய்ப்பன் நீண்ட சவுக்கைச் சொடுக்கினன். கால் நடைகள் நன்ருக உண்டு கொழுத்திருந்தன. பசுக்களை யும் நேர்த்தியான கிராம வீடுகளையும் பளிச்சிடும் நீல வானத்தையும் விருந்தாளி மாறி மாறிப் பார்த்தார்.

இவான் இன்னெரு முறை விருந்தாளியை நோட்ட மிட்டான். ''அவரே தாம்!'' அன்பு ததும்பும் இந்த முகத்தையும் துருத்திய, விசாலமான நெற்றியையும் அவன் செய்தித்தாள்களில் வெளியான புகைப்படங்களில் பார்த்திருந்தான். ''அதுதான் தெரிகிறதே, அவரே தாம்!''

''நீங்கள் தோழர் லெனின் அல்லவா?''

''ஆம், ஆம். நீங்கள் நினைத்தது சரியே. உங்கள்

பெயர் இவான் வஸீலியெவிச் என்று நினைக்கிறேன். அப்படித்தானே?'' எனக் கேட்டார் லெனின்.

''ஆமாம், விளாதீமிர் இல்யீச்!'' என்று சந்தோஷத்துடன் கூவினன் கிழ வேட்டைக்காரன். குடிசைக்குள் பாய்ந்தவன் தன் மனைவியைக் காலேவாரி விடத் தெரிந்தான்.

''துரிதப்படுத்து, அம்மா! வந்திருப்பவர் சாட்சாத் லெனினேதாம். மக்கள் கமிஸார்கள் சபைத் தலைவர். தெரிகிறதா?''

''ஊம்?'' என்று குழப்பத்துடன் விழித்தாள் மரீயா பெத்ரோவ்ன.

''நான் சொன்னல் சொன்னபடி இருக்கும். இதோ பார். நாக்கைக் கொஞ்சம் அடக்கியே வைத்துக்கொள். ஏதேனும் உளறிவிடாதே'' என்முன் கிழவன்.

அல்யாபியேவ் சட்டென்று திரும்பி வாசலுக்கு ஓடினன்.

''தேநீர் தயாரிக்கட்டுமா, விளாதீமிர் இல்யீச், அல்லது புதிதாகக் கறந்த பால் கொண்டுவரட்டுமா?''

''நன்றி. தேநீரை வேண்டாம் என்க மாட்டேன்'' என்முர் லெனின்.

தேநீர் பருகும்போது லெனின் கொஞ்சந்தான் பேசினர். காரில் நீண்ட பயணம் செய்து களைத்துப் போய்விட்டார் என்பது தெரிந்தது. இங்கே உள்ள வேட்டையிடங்களில் எந்த மாதிரி வேட்டைப் பிராணிகள் உள்ளன என்று மட்டும் வினவினர். அல்யாபியேவின் பதிலைக் காது கொடுத்துக் கேட்டார். பின்பு, தீனிப்புல் கொட்டகையில் தமக்குப் படுக்கை போடும்படி கூறினர்.

புத்தறுப்புத் தீனிப்புல் நிறைந்த கொட்டகைக்கு விருந்தாளியை அழைத்துக் கொண்டுவிட்டபின் அல்யாபியேவ் தன் கட்டிலுக்குத் திரும்பினன். மறுநாள் கடுமையாக வேலை செய்ய வேண்டியிருக்கும். எனவே நன்முக உறங்குவது அவசியம் என்று நினைத்தான். ஆனல் அவனுக்குத் தூக்கம் வரவில்லை. எண்ணங்கள் அவனை

உலப்பின. வரப்போகும் வேட்டையைப் பற்றி எண்ண மிட்டான். ஏதேனும் கவனப்பிசகு நேர்ந்து விடுமோ என்று அஞ்சினன். இப்போது சில நாட்களாக அவன் காட்டுக்குப் போகவில்லை. பறவைகள் எங்கே குழுமி யிருக்கும் என்பது அவனுக்கு நிச்சயப்படவில்லை.

3

பொழுது புலர்ந்தது. ஊர் இன்னும் உறங்கியது. தெருவில் நிசப்தம் குடிகொண்டிருந்தது. அந்தோனவ்க்கா ஆப்பிள்களின் நறுமணம் காற்றில் கமழ்ந்தது. லெனினும் இவானும் அரிதாகவே கண்ணுக்குப் புலப்பட்ட ஒற்றையடிப் பாதை வழியாக வயலில் பிரவேசித்தார் கள். இவான் முன்னே நடந்தான். லெனின் சற்றைக்கு ஒரு தரம் நின்று தானியப் பயிரைப் பார்வையிடுவார், பின்பு இவானை எட்டிப்பிடிப்பார்.

சிறிது தூரத்தில் இரண்டு அன்னங்கள் பறந்து சென்றன. அவற்றின் வெண்கலக் குரல்கள் அவர்களுக்குக் கேட்டன. அன்னங்களின் விறல்மிக்க சிறகுகள் அடிக்கும் ஓசை விளாதீமிர் இல்யீச்சின் செவிக்கு எட்டியது. அவ ருடைய கை தானகவே துப்பாக்கியைப் பற்றியது. இவான் இந்த அசைவைக் கண்டு கொண்டான்.

''அவை வெகு தூரத்தில் இருக்கின்றன, தோழர் லெனின்'' என்ருன்.

''ஆமாம், சுட முடியாது. தவிரவும் சுடுவதற்கு வருத்தமாயிருக்கிறது. பாவம், நல்ல பறவைகள்'' என்று முறுவலித்தார் லெனின்.

செம்பழுப்பு வேட்டைநாய் அக்ஸாய் முன்னே பாய்ந்தது. இவான் தணிந்த குரலில் அதை அதட்டினன். நாய்பணிவுடன் திரும்பி வந்து ''காலடியில்'' ஒதுங்கியது. வெதுவெதுப்பான நறிய காற்று வீசியது. வயல்களின் மீது கவிந்திருந்த இருள் வெளிறித் திடீரெனக் கரைந்து போயிற்று. வலப்புறம் பிர்ச் மரத்தோப்பு பச்செனத்

திகழ்ந்தது. இடப்புறம் ஆழமான வெள்ளப் படுகையில் பளிச்சிட்டது ஆறு. எங்கோ துப்பாக்கிக்குண்டு வெடித்தது.

இவான் திடுக்கிட்டான்.

''ஆற்றிலே படகில் போவோமா, விளாதீமிர் இல்யீச்? இப்போது வாத்துக்கள் ஏராளம். என்னிடம் படகும் இருக்கிறது'' என்ருன்.

''அப்படியும் செய்யலாம்'' என்று ஒத்துக்கொண்டார் விளாதீமிர் இல்யீச்.

செங்குத்துச் சரிவுப் பக்கம் திரும்பினுர்கள். பனி பெய்து நனைந்த புல் மேல் நடப்பது இன்பமாகவே இருந்தது. எனினும் பாதை மிக நீண்டதாகத் தோன்றியது. ஏனெனில் இருவரும் வேட்டையாடுவதற்கு ஆவல் கொண்டு துடித்தார்கள்....

கீழே துப்பாக்கிக் குண்டுகள் ஒன்றன்பின் ஒன்ருக வெடித்தன. கலவரமடைந்த பறவைகள் வெள்ளப் படுகைக்கு உயரே கிளம்பிப் பறந்தன.

''எங்கள் ஊர்க்காரர்கள் சுடுகிருர்கள். இன்றுதான் வேட்டை தொடங்கும் நாள். இந்த நாளில் எப்போதுமே விடியற் கருக்கலில் சுட ஆரம்பித்து விடுவார்கள். ஒரு வேட்டைக்காரன்கூட வீட்டில் குந்தியிருக்க மாட்டான். நொண்டிகளும் ஊனக் கண்ணர்களுங்கூட வேட்டைக்குக் கிளம்பி விடுவார்கள்!'' என்று விளக்கினுன் இவான்.

ஆற்ருேரத்தை அடைந்ததும் தட்டையான அடிப் பக்கம் கொண்ட படகை இவான் கட்டு வளையத்திலிருந்து அவிழ்த்து, துடுப்புக்களை அவற்றின் கொக்கிகளில் மாட்டினுன். பின்பு விசித்திரமாக மூக்கை உறிஞ்சி மோப்பம் பிடித்தான்.

''சாயங்காலத்துக்குள் மழை பெய்யும்'' என்ருன்.

வேட்டை நாய் படகுக்குள் தாவி, சகஜமாக அடித் தளத்தின் மேல் படுத்துக் கொண்டது. லெனின் பின்புறம் உட்கார்ந்தார். இவான் படகைக் கரையிலிருந்து நெட்டித் தள்ளினுன். படகு மெதுவாக நகர்ந்தது. சுக்கானுக்குப்

பின்னே நுரைத்த நீரோட்டம் சுழித்துச் சென்றது. கொழுகொழுவென்றிருந்த நீரில் சளப்பிட்டன துடுப்புக்கள். லெனின் சுற்றிலும் கண்ணேட்டினர். வலது கரை மீதிருந்த குன்றுகள் இளஞ் சூரியனின் கதிர்களால் ரோஜா நிறத்துடன் பொலிந்தன. வெள்ளிய மென் மூடுபனியில் உறைந்துவிட்டது போன்று தோற்றம் அளித்தது ஆறு.

''துப்பாக்கியைக் கெட்டித்துத் தயாராக வைத்துக் கொள்ளுங்கள், விளாதீமிர் இல்யீச். வாத்துக்கள் எங்கும் கிளம்பிவிட்டன. எந்தக் கணத்திலும் அவை நமக்கு மேலாகப் பறக்கக் கூடும். படகு ஆட்டங்கொடுக்காது. ஆகவே நிதானமாக இலக்குப் பார்த்துச் சுடுங்கள்'' என்ருன் இவான்.

லெனின் துப்பாக்கிக் கொண்டியைக் கழற்றித் தோட்டாக்களேப் போட்டார். நீரோட்டம் வளேந்து நெளிந்து சென்றது. அதன் நடுவில் நாணல்கள் மண்டியிருந்தன. இவான் படகை நாணல் புதர்களுக்குள் செலுத்திக் கட்டிப் போட்டான். படகுகளோ நாய்களோ இல்லாத ஊர் வேட்டைக்காரர்கள் இரு கரைகளிலும் பசிய புதர்களுக்கிடையே நின்று கொண்டிருந்தார்கள்.

அன்று ஞாயிறு ஆனபடியாலும் வேட்டைப் பருவத்தின் முதல் நாள் ஆகையாலும் வேட்டைக்காரர்கள் குடித்திருந்தார்கள். பல குரல்களின் ஆரவாரம் ஆறு மீது ஒலித்தது. வாத்துக்கள் பறந்ததுமே சந்தடி அடங்கிவிட்டது. அப்புறம் புதர்களிலிருந்து சடபட வென்று வெடிச் சத்தம் அதிர்ந்தது. சுடுகைக்குப் பின் ஓரிரு பறவைகள் விழுந்தன. அரண்டு போன பறவைக் கூட்டம் படபடவெனச் சிறகுகளே அடித்து ஒரு புறம் ஒதுங்கி உயரே எழும்பிற்று. நீலச் சாம்பல் நிற மார்பு கொண்ட வெள்ளேப் பறவை ஒன்று மட்டுமே குண்டுகளுக்கு அஞ்சாமல் தொடர்ந்து மீன் பிடித்துக்கொண்டிருந்தது. அது நீரோட்டத்துக்கு மேலே உயரக் கிளம்பும், இரு கவராகப் பிரிந்த வாலேச் சுக்கான் போன்று அசைத்தவாறு இரைமீது சளப்பென்று

விழும். தண்ணீர் அதற்கடியே வெடித்துச் சிதறி வட்டங்களிட்டுச் செல்லும்.

இன்னொரு வாத்துக் கூட்டம் சுடு தொலைக்குப் பறந்து வந்தது. லெனின் இரட்டைக் குழல்களாலும் சுட்டார். ஒரு வாத்து படகின் அருகே விழுந்தது. இன்னொன்று கூட்டத்திலிருந்து விலகி, மேலும் மேலும் கீழே வரலாயிற்று.

''அதுவும் தொலைந்தது! சரியான தொடக்கம், விளாதீமிர் இல்யீச்!'' என்றான் இவான்.

புதர்களுக்கு மேலாக ஒரு குண்டு வெடித்த சத்தம் கேட்டது. லெனினுடைய அடிபட்ட வாத்து கரணம் அடித்து விழுந்தது. இவானின் அண்டை வீட்டான் நிக்கீத்தா பன்கோவ் புதர்களுக்கு இடையிலிருந்து வெளியே ஓடிவந்து இன்னொரு குண்டால் பறவையின் உயிரைப் போக்கிவிட்டு அதைக் கையில் எடுத்துக்கொண்டு நிதானமாக மறைவிடத்துக்குப் போனான்.

''என்ன செய்கிறாய் நீ? பிறத்தியாருடைய வாத்தை எங்கே எடுத்துப் போகிறாய்?'' என்று கத்தினான் இவான்.

''உங்களுடையதாக இருந்தால் நீங்கள் எடுத்துக் கொண்டிருப்பீர்களே. இவர்களும் வேட்டைக்காரர்களாம்!'' என்று ஏளனமாகச் சிரித்தான் நிக்கீத்தா.

விளாதீமிர் இல்யீச் இந்த விவாதத்தைப் புன்னகையுடன் கேட்டுக்கொண்டிருந்தார்.

''இந்த வாத்து யாருடையது, தெரியுமா?'' என்று பொறிபறக்கக் கேட்டான் இவான். ''இந்த வாத்து....''

லெனின் இவானுடைய கோட்டைப் பிடித்து இழுத்தார். அவர் உதடுகளில் முறுவல் தவழ்ந்தது, கண்கள் சுடர்ந்தன.

''ஆத்திரப்படாதீர்கள், இவான் வஸீலியெவிச். நான் காயப்படுத்தினேன், அவர்தான் கொன்றார். எடுத்துக் கொள்ளட்டும். இன்னும் சுடுவோம்'' என்றார்.

கடந்த கால நிகழ்ச்சிகளை இவான் நினைவுபடுத்திக் கொண்டான்: நிலப்பிரபு வோல்கவ் என்பவனின் நிலம் பங்கிடப்படுகையில் இந்தக் கெடுமதியன் நிக்கீத்தா

கத்தினுன்: ''அல்யாபியேவ் அதிகாரிகளுடன் குலாவியவன். இப்போது நிலத்தில் பங்கு கேட்கிருன்! நாங்கள் இதற்கு ஒப்ப மாட்டோம்!'' என்று. சில குடியானவர்கள் நிக்கீத்தாவுடன் ஒத்துப் பாடினுர்கள். இவான் ஆவேசத்து டன் திட்டி நொறுக்கினுன், நேரே லெனினிடம் புகார் செய்வதாக அச்சுறுத்தினுன். ஸ்தல அதிகாரிகளுடன் வேட்டையாடியதற்காக இவானுக்கு நிலம் கிடையாது என்று சொல்ல கிராமத்தார் ஒருப்படவில்லை. அண்டை வீட்டாரும் கத்துவதெல்லாம் கத்தினுர்களே தவிர நிக்கீத்தாவை ஆதரிக்கவில்லை. இப்போது இதை எல்லாம் எண்ணிப்பார்க்கையில் இவானின் பழைய மனப்புண் மீண் டும் கொடிய வேதனை அளித்தது. அவன் முகம் விகாரம் அடைந்தது, புருவங்கள் சிலிர்த்தன.

''ஆனுல் இது ஒழுங்கீனம், தோழர் லெனின்! பிறத்தி யாருடைய வேட்டையை அவர்கள் கண்முன்பே பறித்துக் கொள்வது எந்த விதத்தில் சரியாகும்? இதோ நான் அவனை'' என்று உறுமினுன்.

''சத்தம் செய்யாதீர்கள்! வாத்துக்கள் திரும்பு கின்றன'' என்ருர் விளாதீமிர் இல்யீச்.

இவான் தாழ்வாகக் குனிந்து கொண்டான். லெனின் வாத்துக் கூட்டத்தைக் குறிவைத்துத் துப்பாக்கியை உயர்த்திச் சுட்டார். ஒரு வாத்து கறங்கி நீரில் விழுந்தது.

''அக்ஸாய்!'' என்று ஏவினுன் இவான்.

நாய் நீரில் பாய்ந்து நீந்திற்று. விளாதீமிர் இல்யீச்சின் கண்கள் களி மின்னின. ஆற்றில் இந்தக் காலை அற்புத மானதாகத் தோன்றிற்று அவருக்கு. பிள்ளைப்பருவமும் இளமையும் நினைவுக்கு வந்தன. கஸான் நகருக்கு அருகில் இருந்த கொக்கூஷ்க்கினே என்னும் இடத்தை நினைவு படுத்திக் கொண்டார். அங்கே அண்ணன் திமீத்ரியுடன் அவர் வேட்டையாடப் போவது வழக்கம். அடிக்கடி அவர் கள் வெறுங்கையாக, களைப்பினுல் உடலெல்லாம் ஒரே யடியாகச் சோர்ந்து வீடு திரும்புவார்கள். ஆயினும் அவர் களுக்கு மகிழ்ச்சி பொங்கும். எதைக் கொன்றீர்கள் என்ற

கேள்விக்கு த்மீத்ரிய், ''நேரத்தை'' என்று சிரிப்புடன் பதில் அளிப்பான்.

வாத்தைப் பற்களால் கவ்விக்கொண்டு படகை நோக்கி நீந்திவந்தது நாய். இவான் அதன் கழுத்துப்பட்டியைப் பற்றி, வாத்தை ஜாக்கிரதையாக அதன் வாயிலிருந்து எடுத்துக் கொண்டான். நாய் படகுக்குள் தொற்றி ஏறி யது. அதன் பொன் பழுப்பு விலாக்களிலிருந்து தண்ணீர் தாரைதாரையாகப் பெருகிற்று.

''பறப்பு முடிந்துவிட்டது, விளாதீமிர் இல்யீச். காட்டுக்குள் வேட்டை தேடுவோமா?'' என்முன் இவான்.

''ஆமாம். நேரம் ஆகிவிட்டது'' என்று ஒப்புக்கொண் டார் விளாதீமிர் இல்யீச்.

4

பிர்ச் மரச் சோலையின் ஓரமாக நடந்தார்கள். வலப் புறம் பாசிபடிந்த சதுப்பு நிலம் பரவியிருந்தது. அதன் மேடுகளில் ரோஜா நிறம் ஆகத் தொடங்கியிருந்த கிரான் பெரிப் புதர்கள் அடர்ந்திருந்தன. இவான் நாயைக் கட்ட விழ்த்து விட்டான். நாய் மோப்பம் கண்டவாறு சென்று இரண்டு சிறு பிர்ச் மரக் கன்றுகளுக்கு முன் விறைத்து நின்றது.

விளாதீமிர் இல்யீச் துப்பாக்கியைத் தோள்வரை உயர்த்திப் பிடித்துக்கொண்டார்.

''சூ!'' என்று நாயை உசுப்பினுன் இவான்.

வேட்டைநாய் இடது முன்காலைச் சற்று உயர்த்தி அசையாமல் நின்றது. பட்சிகள் வெகு அருகில் இருந்தன போலும். இவான் விளாதீமிர் இல்யீச்சைப் பார்த்துத் தலையை அசைத்தான். ''விழிப்புடன் இருங்கள்!'' என்று அந்தச் சைகை உணர்த்தியது.

வேட்டைக்காரர்களுக்குப் பழக்கமான நடுக்கம் கால் களில் ஏற்படுவதை லெனின் உணர்ந்தார். நிறுத்தி நிறுத்தி மூச்சுவிட்டார். புதர்கள் காற்றில் சலசலத்தன. கயவாய்க்

குஞ்சுகள் பிர்ச் மரங்கள் மீது கீச்சிட்டன. லெனின் துப்பாக்கியைத் தயாராகப் பிடித்துக்கொண்டு நின்றார். தமது இதயத் துடிப்பு தவிர வேறு எதுவும் அவர் காதில் படவில்லை.

சூரியன் வெகு உயரே இருந்தது. வானம் மெல்லொளி திகழ்ந்தது. மரங்கள் தூக்கமயக்கத்தில் ஆழ்ந்து வெறும் வெளியில் தொங்குபவைபோலக் காணப்படும் அளவுக்குக் காற்று தெள்ளியதாக மிளிர்ந்தது.

இவான் நாயை உசுப்பிவிட்டு, பிர்ச் மரங்களை நோக்கி நடந்தான். கனவு மயக்கம் கலைந்துவிட்டது. பறவைக் கூட்டம் ஆரவாரத்துடன் வெளியே பறந்து பாசியடர்ந்த உலர் சதுப்பு நிலத்தின் மேலாகச் சிதறிற்று.

விளாதீமிர் இல்யீச் துப்பாக்கியைத் தொங்கவிட்டு, நகைக்கும் கண்களால் இவானைச் சிறக்கணித்து நோக்கிப் பெருமூச்சு விட்டார். பின்பு கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக்கொண்டார்.

''தவறவிட்டு விட்டீர்களே, விளாதீமிர் இல்யீச்! திறந்த வெளியில் இரட்டைக் குழல்களாலும் சுட்டு இரண்டு பறவைகளை வீழ்த்தியிருக்கலாமே'' என்று அங்கலாய்த்தான் இவான்.

லெனின் குற்றப் பார்வையுடன் முறுவலித்தார்.

''இவை வெள்ளைக் கவுதாரிகள்!'' என்றார்.

இவான் முகஞ்சுளித்தான்.

''அட என் ஆண்டவனே! யார் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் இங்கே, விளாதீமிர் இல்யீச்?'

இவான் அல்யாபியேவின் தாடிமீசைகள் படபடத்தன. வருத்தமும் விளங்காமையும் ததும்பும் விழிகளால் அவன் விளாதீமிர் இல்யீச்சை நோக்கினான். லெனினோ, காப்பு விசையை மாட்டி விட்டு துப்பாக்கியைத் தோளில் தொங்கவிட்டுக் கொண்டார்.

''போல்ஷெவிக்குகள் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக நடந்துகொள்ள வேண்டும். நீங்களோ சட்டவிரோதமான காரியம் செய்ய என்னைத் தூண்டுகிறீர்கள். சேச் சே! இது நன்றாயில்லை, இவான் வஸீலியெவிச்!'' என்றார்.

லெனின் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார். அவருடைய கண்களில் தந்திரம் சுடர்விட்டது. இவான் குழப்பம் அடைந்தான். இந்த லெனின் என்ன மாதிரி ஆள்? முந்திய அதிகாரிகள் என்றால் காட்டுக்குள் புகுந்ததும் சரி, தப்பு என்று சீர்தூக்காமல் கண்ணில் கண்டதை எல்லாம் சுட்டுத் தள்ளுவார்கள். லெனினோ சட்டத்தால் காப்பு அளிக்கப் பட்ட கவுதாரியைச் சுட மாட்டேன் என்கிறார்.

கஷ்ட காலங்களில் இவானும் மற்ற வேட்டைக்காரர் கள் போலவே தடைசெய்யப்பட்ட பிராணிகளையும் பறவை களையும் கொல்வது உண்டுதான். ஆனால் இவ்வாறு செய் கையில் அவன் மனச்சான்று உறுத்தும், ஏனெனில் சட்ட விரோதமான நடத்தையை அவன் உள்ளம் ஒப்புவதில்லை. வேட்டை ஆர்வம் கொஞ்சம் அடங்கியதும் அவன் மனதுக்குள் லெனினின் நடத்தையை ஆதரித்தான். ''நியாயவான்'' என்று நினைத்துக் கொண்டான்.

அவர்கள் காட்டுக்கு இன்னும் உள்ளே சென்றார்கள். நிழலில் பெரணிச் செடிகள் மீதும் ஜூனிப்பர் புதர்கள் மேலும் பனித்துளிகள் இன்னும் உலராதிருந்தன. புற்கள் தேன்மணம் கமழ்ந்தன. சிவப்பு பில்பெரிகள் ஆங்காங்கு மெல்லிய செம்மை பொலிந்து திகழ்ந்தன ஆதலால் அவற் றின் மேல் அடி வைக்கவே வருத்தமாயிருந்தது. லெனின் இவானின் பின்னே நடந்தார். நிசப்தமும் துலக்கமான கோடைகால வண்ணங்களுமாகக் காடு இன்பத்தில் திளைத்தது.

விளாதீமிர் இல்யீச் தமது வாழ்க்கையின் பெரும் பகுதியை நகரங்களில் கழித்திருந்தார். அவர் நகர வாழ்க் கையை விரும்பினார், எனினும் காடுகளும் ஆறுகளும் அவரை எப்போதும் கவர்ந்து இழுத்தன. சில சமயங் களில் தமது அலுவலறையில் மேஜையருகே அமர்ந்திருக் கையில், மங்கிய நிலவு வீசும் இரவுகள், குங்கிலிய நெடி வீசும் கிளைகள் எரியும் நெகிடி, தோளில் தொங்கும் துப்பாக்கியுடன் காட்டில் சுற்றுதல் ஆகியவற்றை அவர் நினைத்துப் பார்ப்பார்.

''களைத்துப் போனீர்களோ, விளாதீமிர் இல்யீச்? ஒரு மணி நேரம் போல இளைப்பாறுகிறீர்களா?'' என்று கேட்டான் இவான்.

''இல்லை. நாள் முழுதும் நடக்க நான் தயார்!'' என்று அழுத்திக் கூறினார் லெனின்.

இன்னும் அடர்ந்த காட்டின் ஊடாகச் சென்று முட்புதர்களும் ஜூனிப்பர் புதர்களும் மண்டிய இடத்தை அடைந்தார்கள். பறவைக் கூட்டங்கள் ஏராளமாக இருந்தன. நாய் அக்ஸாய் புதிய மோப்பத்தைக் கண்டுகொண்டு ஒரு புறம் சுட்டியவாறு விறைத்து நின்றுவிட்டது. கருங்காடைகள் மீது சுடப்பட்ட முதல் குண்டுகள் இலக்குத் தப்பிவிட்டன. லெனினைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த இவான் அவர் அருகே வந்தான்.

''பறவைகளைக் கொஞ்ச தூரம் அப்பால் போக விடுங்கள், விளாதீமிர் இல்யீச். அவற்றுக்குப் போக்கிடம் கிடையாது. கிட்டத்தில் சுடும்போது ரவைகள் குண்டு போல மொத்தையாகப் பாய்கின்றன. அப்படிச் சுட்டுப் பறவைகளைக் கொல்லமுடியுமா எங்காவது?'' என்றான்.

நாய் ஒரு பறவைக் கூட்டத்தை வெருட்டிப் பறக்கடித்தது. இவான் லாகவமாகத் திரும்பி, துப்பாக்கியை உயர்த்தினான். கவுதாரிகள் இலக்குக்குள் வரும்வரை நிதானித்து, குறிபார்த்துச் சுட்டான். இரண்டு பறவைகள் அடிபட்டு விழுந்தன.

''இந்த மாதிரியே சுடுங்கள்!''

லெனின் சிரித்து, கைகளைத் தேய்த்துக் கொண்டார். ''எனக்கு எல்லாம் புரிகிறது, இவான் வஸீலியெவிச். ஆனால் பறவைகள் எழுகையில் எனக்குக் கிளர்ச்சி உண்டாகிறது. நான் மட்டுமீறிப் பதற்றம் அடைகிறேன். வெகு காலமாக நான் வேட்டையாடவில்லையல்லவா, அதனால்'' என்றார்.

வேட்டைக்காரனின் இந்தப் போதனைக்குப் பின் விளாதீமிர் இல்யீச் அதிகத் துல்லியமாகக் குறிவைத்துச் சுட்டார். பல பறவைகள் அவரால் சுட்டு வீழ்த்தப்பட்டன.

அக்ஸாய் அவற்றைத் தூக்கி வந்தது. பின்பு புதிய மோப்பம் பிடித்துக் கொண்டு பாய்ந்தது.

நாய் நன்ருக உழைத்தது. அதற்குக் கூர்மையான மோப்ப உணர்வு இருந்தது. அடிபட்டு விழுந்த பறவைகளை அது விரைவாகவும் அனுயாசமாகவும் தேடிக் கொணர்ந்தது. வேட்டைக்காரர்களின் பார்வையிலிருந்து அது ஒரு தரங்கூட மறையவில்லை. வேட்டை கிடைக்காத இடத்தை ஒரு தடவைகூட அது சுட்டிக்காட்டவில்லை. விளாதீமிர் இல்யீச் அதைப் புகழ்ந்தார்.

''மோசமான நாய்களை நான் வைத்துக் கொள்வதே இல்லை'' என்று பெருமிதத்துடன் கூறினுன் இவான். ''நாயைப் பழக்கும்போது நான் சிரமத்தைப் பார்ப்பதே கிடையாது, விளாதீமிர் இல்யீச். மோசமான நாயை வைத்துக்கொண்டு வேட்டையாடுவதில் என்ன நன்மை? வேட்டைகளை எல்லாம் தப்பவிடுவதுதான் கண்ட பலன்'' என்ருன்.

அக்ஸாய் இப்போது புதிதாக எதையோ மோப்பம் பிடிப்பதில் தீவிரமாக முனைந்திருந்தது. பறவை உயர்ந்து அடர்ந்த பிர் மரத்தை நோக்கித் தத்திப் பாய்ந்தது.

''இது பெருங் கவுதாரி. ரொம்பத் தந்திரமான பிராணி. தப்பிவிடலாம் என்று பார்க்கிறது. நான் எதிர்ப்புற மாக அதை மடக்குகிறேன். நீங்கள் நாயை விட்டு விலகாதீர்கள்'' என்று கிசுகிசுத்தான் இவான்.

இவான் ஒரு பக்கமாகப் பய்ந்தோடினுன், மஞ்சள் பூக்கள் மலர்ந்த திறப்பிடத்துக்கு வந்தான், கொஞ்சம் இருமினுன், பின்பு திரும்பினுன். அக்ஸாய் சுட்டுவதற்காக மூக்கை நீட்டுவதற்குள் பெருங் கவுதாரி சிறகுகளைச் சிரமத்துடன் அடித்துப் பறந்தது.

லெனின் சுட்ட முதல் குண்டு பறவையை உராய்ந்து சென்றது. அது தள்ளாடிற்று. அதன் வாலிலிருந்து உதிர்ந்த இறகுகள் சுழன்று விழுந்தன. எனினும் சிறகுகளால் வலிவாகக் காற்றை அடித்தவாறு அது புதர்களை நோக்கிப் பறந்தது.

‘‘தப்பிவிடும்! தப்பிவிடும்!’’ என்று பறவையையே பார்த்துக்கொண்டு கிசுகிசுத்தார் விளாதீமிர் இல்யீச்.

இரண்டாவது குண்டு பட்டுப் பெருங் கவுதாரி புல் மீது குப்புற விழுந்ததும் இரு வேட்டைக்காரர்களும் அதன் அருகே ஓடினுர்கள்.

‘‘எனக்கு ஒரே பயமாய்ப் போயிற்று! எங்கே குறிதவறிவிடுவீர்களோ என்று நினைத்தேன். வெயில் கண்ணிலே படும்போது இலக்குத் தப்பாமல் சுடுவது லேசல்லவே’’ என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினுன் இவான்.

5

பைன் மரச் சுள்ளிகளை அடுக்கித் தீமூட்டினுன் இவான். பின்பு ஒரு பாத்திரத்தில் தண்ணீர் கொண்டுவந்து நெருப்புக்கு மேலே தொங்கவிட்டான். நீர் கொதிப்பதற்காகக் காத்திருக்கையில் இவான் தன் வேட்டை அனுபவங்களை விவரித்தான். அப்புறம் நிலத்தைப் பற்றி உரையாடினுர்கள். விளாதீமிர் இல்யீச் விவரமாக, உற்சாகத்துடன் கேள்விகள் கேட்டார். லெனினிடம் நேர்மையின்றிப் பேசுவது நடவாது, பொய் சொல்லுவது இயலாது என இவான் உணர்ந்தான்.

லெனினுடைய துப்பாக்கியை எடுத்து உள்ளங்கையில் வைத்து எடை பார்த்துவிட்டுத் தோளில் சாய்த்துக் கொண்டான்.

‘‘நல்ல துப்பாக்கி. சட்டென்று சுடுகிறது, ரவைகளும் ஒன்ருகப் பாய்கின்றன’’ என்ருன்.

பூட்டைக் கழற்றி, குந்தாவை ஒடித்துத்திறந்து, துணி சுற்றிய குச்சி ஒன்ருல் குழாய்களைத் துடைத்துவிட்டு அவற்றின் ஊடாகச் சூரியனை நோக்கினுன்.

‘‘ஆகா, எப்பேர்ப்பட்ட எஃகு! முகம்பார்க்கும் கண்ணுடி போல மின்னுகிறது. ஒரு கீறல் இல்லை, இப்போது தான் கடையிலிருந்து வாங்கியதுபோல’’ என்று வியந்தான்.

''எப்போதாவதுதான் சுடுகிறேன். நேரம் கிடைப்பதில்லை'' என்றார் லெனின்.

இவான் துப்பாக்கியையே பார்த்தவாறு பேசாதிருந்தான்.

''கொஞ்சம் ஊத அனுமதிப்பீர்களா, தோழர் லெனின்?''

லெனினுக்குப் புரியவில்லை.

''ஊதவா? எதை?''

''இந்தக் குழாய்களைத்தான்.''

''முடியுமா என்ன?'' என்று நம்பிக்கையின்றி முகத்தைச் சுளித்தார் லெனின். ''துப்பாக்கி இசைக் கருவியாகப் பயன்படும் என்று இதுவரை எனக்குத் தெரியாதே. எங்கே, ஊதுங்கள் கேட்போம்.''

கிழவன் துப்பாக்கிக் குழாய்களை உதடுகளோடு சேர்த்து வைத்துக்கொண்டான். அவன் கன்னங்கள் உப்பின. முதலில் இரண்டு மூன்று நடுக்கொலிகளை மாதிரிக்காகக் கிளப்பினான். இனந்தெரியாத தெளிவற்ற ஒலிகள் காட்டில் சிதறின. பிறகு குழாய்கள் சீராக இசைத்தன. இவானின் முகம் சிரமத்தால் குப்பென்று சிவந்தது. முக்குதிரை ஸ்லெட்ஜ் வண்டி நுகத்தடியிலிருந்து வரும் மணியொலிகளை அவனுடைய இசை நினைப்பூட்டியது. மழமழப்பான பனிக்காலச் சாலைமீது காற்றாய்ப் பறக்கின்றன குதிரைகள். மணிகளின் கணகணப்புடன் சேர்ந்தொலிக்கின்றன காற்றின் சீழ்க்கையும் சறுக்குப் பலகைகளின் கிறீச்சொலியும் பாட்டின் நீட்டிய இசையும்.

முக்குதிரை ஸ்லெட்ஜ் மேலும் மேலும் தொலைவில் செல்லுகிறது. மணியொலி வரவரத் தணிகிறது. கடைசி ஒலிகள் வெண்பனி அடர்ந்த சமவெளியின் நிசப்தத்தில் மிக மெல்லெனக் கேட்கின்றன.

''அருமை, இவான் வஸீலியெவிச்! நீங்கள் நல்ல கலைஞர். இந்த மாதிரியானது எதையும் நான் கேட்டதே இல்லை. எங்கே கற்றுக்கொண்டீர்கள்?'' என்று வினவினார் லெனின்.

''இது எங்கள் வீட்டாருக்குப் பிறவியிலேயே வாய்த்தது. என் தகப்பனுர் துப்பாக்கிக் குழாய்களில் என்னை விட நன்ருக என்னென்னவெல்லாமோ வாசிப்பார். எனக்கும் இப்படி வாசிப்பதில் ஆசையுண்டு. சில சமயங்களில் காட்டில் ஏதேனும் துண்டுக் கட்டைமேல் உட்கார்ந்து கொண்டு வாசிப்பேன். என் கண்களில் நீர் நிறைந்து விடும்'' என்று பதிலளித்தான் இவான்.

வெயில் சுள்ளென்று அடித்தது. புல் உலர்ந்துவிட்டது. தரை சூடேறிற்று.

''எவ்வளவு குதூகலமான நாள், விளாதீமிர் இல்யீச்! கொஞ்சம் படுத்து உறங்குவோமா?'' என்று கேட்டான் இவான் அல்யாபியேவ்.

''படுத்துக்கொள்ளுங்கள், நான் உட்கார்ந்திருக்கிறேன்'' என்று சொன்னுர் லெனின்.

இவான் ஒரு புதர் அடியே படுத்து, பல இரவுகள் உறங்காதவன்போல உடனே கண்ணயர்ந்தான்.

விளாதீமிர் இல்யீச் மரத்தில் சாய்ந்து கொண்டார். சூரியன் புலப்படும் வகையில் மேற்கே சென்றுவிட்டது. காடு புதிய வண்ணங்களுடன் பொலிந்தது. பறவைகள் அடங்கிவிட்டன.

விளாதீமிர் இல்யீச்சுக்கு நீந்திக்குளிக்க ஆசை உண்டாயிற்று. ஓடைக் கரைவழியே நடந்து ஆழமான இடம் எங்கேனும் இருக்கிறதா என்று பார்த்துக்கொண்டு போனுர். திடீரென அவர் முன்னே கிண்ணம்போலத் தென்பட்டது ஏரி. உடை களைந்துவிட்டு உயரமான கரையிலிருந்து நீரில் குதித்தார். தண்ணீர் கலங்கலாக, இனிய ருசியுள்ளதாக இருந்தது.

விளாதீமிர் இல்யீச் மேல் மட்டத்துக்கு வந்தார், ஆழ்ந்து மூச்சிழுத்தார், மறுபடி முக்குளித்து இளமையில் ஸ்வியாகா ஆற்றில் நீந்தியது போலவே அனுயாசமாக நீந்தி ஏரியின் நடுவரை சென்ருர்.

பிறகு மணலில் நீண்ட நேரம் உட்கார்ந்து வெயில் காய்ந்தார். கரிய முதுகுகள் கொண்ட மீன்கள் கரைவரை

நீந்திவந்து பளிச்சிடும் உருண்டை விழிகளால் நோக்கின. கரையோரத்தில் விரைவின்றி வளைந்து நெளிந்து சென்றன. அவற்றின் பொன் விலாக்கள் ஒன்றோடொன்று உராய்ந்தன. காற்றின் சரசரப்பால் மீன்கள் அரண்டு போயின. நீரைக் கலக்கியவாறு அவை ஆழத்தில் மூழ்கி மறைந்துவிட்டன.

6

குரல்களின் அரவம் இவானை எழுப்பிவிட்டது. மெதுவாகக் கண்களைத் திறந்து ஒருக்களித்துக் கொண்டான். விளாதீமிர் இல்யீச் ஒரு மேட்டின் மேல் உட்கார்ந்திருந்தார். அவர் அருகே, மிதிபட்ட புல்மேல் பெர்ரிப் பழங்கள் நிறைந்த கூடைகளுடன் அமர்ந்திருந்தார்கள் சிறுவர் சிறுமியர். கொஞ்சம் தூரத்தில் விழுந்து கிடந்த மரத்தின் மேல் வீற்றிருந்தார்கள் காளான் சேகரிக்க வந்த நரைத்தாடிக் கிழவர்கள். இவர்கள் இவானின் அண்டை வீட்டாரான பெதோத் ரீப்னிக்கோவும் பெயக்தீஸ்த் ஷத்ரோவும் ஆவர். லெனின் குழந்தைகளுடன் பேசிக் கொண்டிருந்தார்.

''ஏன் மாமா, நீங்களும் எப்போதாவது சின்னவர்களாக இருந்தீர்களோ?'' என்று கேட்டான் பச்சைச் சட்டையணிந்த ஒரு கொழுத்த தொப்பைக்காரப் பையன்.

''ஆமாம். நான் ஸிம்பீர்ஸ்க் நகரத்தில் வசித்தேன். தாராக்களை அடிக்கடி சீண்டுவேன். அங்கேயுள்ள தாராக்களோ, ரொம்பப் பெரியவை, படு கோபங்கொண்டவை. அவை என்னை விரட்டிக்கொண்டு வரும்வரை அவற்றைச் சீண்டுவேன். என்ன செய்வது? மல்லாக்கத் தரையில் படுத்துக் கால்களால் அவைகளை உதைத்து விரட்டுவேன். அப்படித்தான் தப்புவேன். தாராக்களிடம் வேடிக்கை செய்வது ஆபத்து, தெரியுமா?'' என்றார் லெனின்.

சிறுவர்கள் சிரித்தார்கள், லெனினும் குழந்தை போலக் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார்.

''இவர்கள் எங்கிருந்து வந்து சேர்ந்தார்கள்? மனிதனைத் தூங்க விடவில்லை சனியன்கள்'' என்று எரிச்சலுடன் நினைத்தான் இவான்.

கண்களை உருட்டி விழித்துக் கையை ஆட்டினான். குழந்தைகள் சைகையைப் புரிந்துகொண்டு புதியவரிடம் விடைபெற்றுக்கொண்டு அப்பால் சென்றார்கள். கிழவர்களோ போவதைப் பற்றி எண்ணவே இல்லை.

''நீ இந்தப் பக்கத்துக்காரன் இல்லை போலிருக்கிறதே?'' என்று லெனினையே உற்றுப் பார்த்தவாறு கேட்டான் பெதோத் ரீப்னிக்கோவ்.

''மாஸ்கோவிலிருந்து வந்திருக்கிறேன்'' என்றார் லெனின்.

''எப்படி இருக்கிறது மாஸ்கோ? எல்லாம் அதே இடத்தில்தானே இருக்கிறது இன்னும்?''

விளாதீமிர் இல்யீச் அவர்களுக்கு விவரிக்கலானார். கிழவர்கள் கவனமாகக் கேட்டார்கள். போல்ஷெவிக்குகள் நாடுமுழுவதிலும் மின்னுக்க நிலையங்களின் வலைப் பின்னலைப் பரப்பி, தொழிற்சாலைகளுக்கும் புது நகர்களுக்கும் மின்சாரம் சப்ளை செய்யத் திட்டமிட்டிருக்கிறார்கள் என்று அவர் விளக்கினார். கிழவர்கள் ஊம் கொட்டி ஆதரவு தெரிவித்தார்கள்.

இந்த உரையாடல் இவானுக்குப் பிடிக்கவில்லை. மாவட்ட நிர்வாகக் கமிட்டித் தலைவர் எது கூடாது என்று எச்சரித்திருந்தாரோ அதுவே தொடங்கிவிட்டது. ''நகரத்துக்குச் செய்தி எட்டியதும் எனக்குக் கிடைக்கும் செம்மையாக! ஆனால் இது என் தவறு அல்ல! நான் யாரையாவது அழைத்தேனா? இன்று ஞாயிற்றுக்கிழமை. ஆகையால் எல்லோரும் காட்டுக்கு வந்திருக்கிறார்கள். இதிலிருந்து தப்ப வழி ஏது?'' இவ்வாறு எண்ணமிட்டான் இவான்.

அவன் எழுந்தான், இன்னும் கொஞ்சம் சுள்ளிகள் பொறுக்கிவந்து, நெகிடியை மறுபடி எரியவிட்டு, தண்ணீர்ப் பாத்திரத்தை நெருப்புக்கு மேலே தொங்கவிட்டான்.

''ஆமாம் பெரியவர்களே, நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்?'' என்று கிழவர்களிடம் கேட்டார் லெனின்.

''தற்போதைக்கு ரொம்ப நன்ருக இருக்கிறது என்று சொல்வதற்கில்லே. ஆனுல் குடியானவர்களின் வாழ்க்கை சீர்படும் போலத்தான் காண்கிறது. நான், தம்பீ, மூன்று ஜார்களேப் பார்த்து விட்டேன், இனிப்பையும் கசப்பையும் அனுபவித்துவிட்டேன். ஆகவே என்னுல் புரிந்துகொள்ள முடியும். இப்போது ஆட்சிக்கு வந்திருக்கிற அரசாங்கம் மக்களுக்காகப் பாடுபடுகிறது. குடியானவர்கள் சந்தோஷமாக இருக்கிருர்கள். ஆனுல் இன்னமும் குழப்பம் நிறைய இருக்கிறது. கடைகளில் உப்பு கிடைப்பதில்லே, மண்ணெண்ணெய் இல்லே'' என்ருன் பெதோத்.

விளாதீமிர் இல்யீச்சுக்கு உற்சாகம் பிறந்துவிட்டது. உள்ளங்கைகளால் தலேயைத் தடவிவிட்டுக்கொண்டு பள்ளிக்கூடத்தையும் வோலஸ்த் கூட்டுறவு நிலேயத்தையும் சிற்றூர் சோவியத்தின் வேலேயையும் பற்றி விவரமாகக் கேள்விகள் கேட்டார். கிழவர்கள் வார்த்தைகளேச் சீர்தூக்கிப் பார்த்து, தக்க உதாரணங்களுடன் விஸ்தாரமாகப் பதில் அளித்தார்கள்.

''மாஸ்கோ வேட்டைக்காரத் தம்பீ, லெனின்-உல்யானவ் ஒரு பெண்ணுக்கு எப்படி உதவினுர் என்று சொல்லுகிறேன் கேள்'' என்று ஆரம்பித்தான் பெயக்தீஸ்த்ஷத்ரோவ்.

''அப்படியா? உண்மையாகவா?'' என்று புன்னகையுடன் கேட்டார் லெனின்.

''ஆண்டவன் ஆணே! நீ கேள். எங்கள் ஊரிலே அபோன்யா தெலேகின் என்ற ஒருவன் இருக்கிருன். அப்படி மோசமானவன் அல்ல, விவேகிதான். ஆனுல் குடித்துவிட்டானே, பெண்டாட்டியைப் போட்டு நொறுக்கிவிடுவான். லுக்கேரியா என்கிற இவளே இந்த மாதிரிப் பத்து வருஷம் அடித்துக்கொண்டிருந்தான், அவளும் பொறுத்து வந்தாள். சோவியத் ஆட்சி நிலேபெற்றதுமே லுக்கேரியாவும் கொஞ்சம் புரிந்துகொண்டு விட்டாள். 'இனிமேல்

தாறுமாருக நடக்கத் துணியாதே. நடந்தாயோ லெனின்-உல்யாஞெவிடம் முறையிடுவேன்!' என்று புருஷனிடம் சொல்லிவிட்டாள். விஷயம் தெரியுமோ? அபோன்யாவின் புத்தி நிதானத்துக்கு வந்துவிட்டது!''

''லெனினிடம் பயமோ ஜனங்களுக்கு?'' என்று வினவிஞர் லெனின்.

''சிலருக்கும் பயம், மற்றவர்களுக்கு மரியாதை. உலகம் பலவிதம். எல்லாரையும் திருப்தி செய்வது நடவாது. ஒருவனுக்குக் கண்ஜாடை காட்டிஞல் போதும், எல்லாம் செய்வான். இன்ஞெருவனையோ, சுவர்க்கத்துக்குப் போவதற்குக்கூடச் சவுக்கால் அடித்து விரட்டியாக வேண்டும்'' என்ருன் பெதோத் ரீப்னிக்கோவ்.

பெயக்தீஸ்த் வட்டார மருத்துவரைக் குறைசொல்லத் தொடங்கிஞன்:

''சைக்கிளில் சுற்றுகிருன், ஏரிகளில் மீன் பிடிக்கிருன். ஆஞல் நோயாளிகளேக் கவனிக்க அவனுக்கு நேரம் இல்லே. எதற்காகத்தான் அந்தக் கழப்புணிக்குச் சம்பளம் கொடுக்கிருர்களோ!''

லெனின் முகஞ்சுளித்தார்.

''மாவட்ட சோவியத்தில் புகார் செய்தீர்களா?'' என்று கேட்டார்.

''ரொம்பக் கெட்டிக்காரன்தான் போ!'' என்று கெக்கலித்தான் கிழவன். ''அவனே வேண்டுமாஞல் நீக்கிவிடுவார்கள். ஆஞல் வேருெருவனே அமர்த்த மாட்டார்களே! அப்போது என்ன செய்வதாம்? ஷ்சுக்லோவோ கிராமத்திலுந்தான் வைத்தியன் உருப்படாக்கட்டையாய் இருந்தான். மதுப்புட்டி இல்லாமல் மருத்துவ நிலேயத்துக்கு வராதே என்று விடுவான். குடியானவர்கள் புகார் செய்தார்கள். டாக்டருக்கு மறுகணமே சீட்டுக் கிழித்து விட்டார்கள், ஆஞல் பதிலுக்கு ஒருவரையும் அமர்த்தவில்லே. மருத்துவர்கள் போதவில்லே என்கிருர்கள். இந்த விஷயத்தில் சோவியத் ஆட்சி கவனக்குறைவாக நடந்து கொள்கிறது'' என்ருன்.

''இந்த விஷயத்தை இன்னும் அது கவனிக்க முற்பட வில்லே. இது பெரிய பிரச்சினே. மருத்துவர்கள், பள்ளி ஆசிரியர்கள், விவசாய நிபுணர்கள் ஆகியோர் உண்மை யிலேயே குறைவாயிருக்கிருர்கள். ஒரு வருஷத்தில் அவர் களுக்குப் பயிற்சி அளித்துத் தயார் செய்வது முடியாது. அதற்கு நேரம் வேண்டும். குடியானவர்களின், தொழிலா ளர்களின் மக்களேயே பயிற்றி கிராமங்களுக்கு வேண்டிய நிபுணர்களேத் தயார் செய்வோம்'' என்று சொன்ஞர் லெனின்.

''அப்படிச் செய்தால் நன்ருய்தான் இருக்கும்'' என்று ஒப்புக்கொண்டான் ஷத்ரோவ்.

தண்ணீர் கொதித்ததும் இவான் தன் மழைக்கோட் டைப் புல்மேல் விரித்து, தன் மனேவி தயாரித்த உணவுப் பண்டங்கள் உள்ள கூடையை அதன் மேல் வைத்தான். கிழவர்களேயும் சாப்பிட வரும்படி லெனின் அழைத்தார். அவர்கள் சந்தோஷமாக இசைந்தார்கள்.

திடீரென்று பெதோத் கேட்டான்:

''ஏன் அப்பனே, நீ மாஸ்கோவில் உல்யாஞெவ்-லெனினேப் பார்ப்பது உண்டா?''

''சில வேளேகளில் பார்ப்பது உண்டு'' என்று பதிலளித்தார் லெனின்.

''இந்தக் காளான்களே அவருக்குப் பரிசாகக் கொண்டு போவது உனக்குக் கஷ்டமாயிராதே? வஹோனிஞெ கிராமத்தைச் சேர்ந்த பெதோத் என்ற கிழவன் கொடுத் தனுப்பியதாகச் சொல்லு.''

''அப்படியே செய்கிறேன், ஆஞல் இது வீண் என்று நினேக்கிறேன். வழியில் எல்லாம் நசுங்கி வேறு போகும்'' என்று குழப்பத்துடன் சொன்ஞர் லெனின்.

''நசுகிப் போக மாட்டா. இந்தப் பக்கத்துக் காளான் கள் உறுதியானவை. சைபீரியாவுக்குக் கூட நசுங்காமல் கொண்டுபோகலாம்'' என்று தீர்மானமாகக் கூறினுன் கிழவன்.

‘‘என்னுடையதையும் எடுத்துப் போ. உனக்கு இது ஒன்றும் பெரிதல்ல. தோளிலேயா தூக்கிக்கொண்டு போகப்போகிருய்! காரில் கொண்டு போவாய். யாரோ கிழவர்கள் தம்மை நினைவு வைத்துக்கொண்டிருப்பதை அறிந்து லெனினுக்குச் சந்தோஷமாக இருக்கும். இவை ரொம்ப நல்ல காளான்கள். சாப்பிடட்டும் திருப்தியாக!’’ என்றான் பெயக்தீஸ்த்.

‘‘இவ்வளவுக்குப் பிறகு உங்கள் பேச்சை எப்படித் தட்டுவது?’’ என்று விளாதீமிர் இல்யீச் சிரித்து, காளான்களை வலைப்பையில் போட்டுக்கொண்டார்.

இதற்கிடையே பெயக்தீஸ்த் இவானை ஒரு புறம் அழைத்துச் சென்று, ‘‘இந்த வேட்டைக்காரன் யார், இவான்?’’ என்று கேட்டான்.

‘‘இப்படித்தான் ஒருவர். முன்பு பழக்கமான ஆள். ஏதோ ஆபீசிலே வேலை பார்க்கிறாராம்’’ என்று வறட்சியாகப் பதில் சொன்னான் இவான்.

‘‘நல்ல மூளைக்கார ஆள். வாரம் பூராவும் இவனோடு பேசிக் கொண்டிருந்தாலும் சலிக்காது. இந்த ஆளை எங்கோ பார்த்திருக்கிறேன் போலிருக்கிறது. எங்கே என்பதுதான் நினைவில்லை’’ என்றான் பெயக்தீஸ்த்.

‘‘உனக்கு வீண் பிரமை ஏற்பட்டிருக்கிறது. இவர் இந்தப் பக்கத்துக்கு இப்போதுதான் முதல் தடவை வந்திருக்கிறார்’’ என்று எரிச்சலுடன் கூறினான் இவான்.

கிழவர்கள் போய்விட்டார்கள்.

விளாதீமிர் இல்யீச் எழுந்து திறப்புவெளியில் மெதுவாக உலாவத் தொடங்கினார். அவர் முகத்தில் குதூகலமும் உற்சாகமும் ததும்பின.

## 7

இவான் முன்னுரைத்தது மாலையாகும் போது உண்மை ஆயிற்று. வானம் இருண்டது. வெப்பக் காற்று குப்குப் பென்று காட்டுக்கு மேலே வீசியது. பைன் மரங்கள் வளைந்

தன, இரைந்தன. இடி அதிர்ந்தது. மழை சோவெனப் பெய்யலாயிற்று.

லெனினும் இவானும் பைன் மரத்தடியில் ஒண்டிக் கொண்டார்கள். மரங்கள்மீது அடைமழை இரைவதை அவர்கள் கேட்டார்கள். குன்றுகளிலிருந்து கலங்கல் நீரோடைகள் வழிந்தோடின. மட்கல் இலைகளும் ஊசி யிலைகளும் அவற்றில் அடித்துச்செல்லப்பட்டன. இவான் சுங்கானைப் பற்றவைத்துப் புகைத்தவாறே வேட்டை யில் தனக்கு ஏற்பட்ட வேடிக்கையான அனுபவங்களை விவரித்தான். மழையின் ஓசையில் அவனுடைய குரல் கம்மலாகக் கேட்டது. இடிப்புயல் மேற்கே நகர்ந்தது. சோனுமாரியால் கழுவப்பட்ட மரங்கள் அற்புத நறுமணம் கமழ்ந்தன. தரையில் எல்லாம் நிசப்தமாகவும் ஈரமாக வும் இருந்தன. தொங்கும் கிளைகளிலிருந்து லயத்துடன் சொட்டின நீர்த்துளிகள்.

வானம் வெளிவாங்கிவிட்டது. மறையும் கதிரவனின் மங்கிய கிரணம் மரங்களுக்கு இடையே நழுவியது. ஊதா மணிப்பூக்களும் வெண்சாமந்திகளும் திறப்பு வெளியில் எழில் காட்டின. காட்டுக்கு உள்ளிருந்து புலப் படா வகையில் ஊர்ந்து வந்தது இரவு. ஆனால் நனைந்த பைன் மரங்கள்மீதோ பகலொளி இன்னும் சிலிர்த்துக் கொண்டிருந்தது.

லெனின் குனிந்து ஒரு சிவப்புக் கார்னேஷன் மலரைக் கொய்து முகர்ந்தார். பின்பு இடைவாரை இறுக்கிக் கொண்டு, ''வீடு திரும்புவோம், இவான் வஸீலியெவிச்'' என்றார்.

புல்லிலிருந்து வெளியே பறந்த காடைகளையும் பழுப்புக் கவுதாரிகளையும் பொருட்படுத்தாமல் இருவரும் நேரே கிராமத்துக்கு நடந்தார்கள்.

காளான்களையும் வேட்டைப் பறவைகளையும் இவான் காரில் வைத்தான். மரீயா பெத்ரோவ்னு ஒரு பாட்டில் பாலும் சூடான வளைய அப்பங்களும் கொண்டுவந்தாள்.

''இவற்றை எடுத்துப் போங்கள். நீங்கள் நீண்ட பயணம் செய்தாக வேண்டும். வழியில் பசியெடுக்கும்'' என்ருள்.

விளாதீமிர் இல்யீச் கிழவிக்கு நன்றி தெரிவித்தார். பின்பு தோட்டாப்பையில் எஞ்சியிருந்த தோட்டாக்களை வெளியே கொட்டினூர்.

''இவற்றை எடுத்துக்கொள்ளுங்கள், இவான் வஸீலியெவிச். உபயோகப்படும். நமது துப்பாக்கிகளின் குழல் விட்டம் ஒன்றுதான்'' என்ருர்.

தோட்டாக்கள் நிறைய இருந்தன. வேட்டைக்கார இவானுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. ஆயினும் அவற்றை எடுத்துக் கொள்ளத் தயங்கினன்.

''என்ன நீங்கள், என்ன நீங்கள், தோழர் லெனின்! இவை இல்லாமலே நான் சமாளித்துக் கொள்வேன். புதிதாகத் தோட்டாக்கள் தயாரிக்க உங்களுக்கு நேரம் ஏது?'' என்ருன்.

''தயவு செய்து எடுத்துக்கொள்ளுங்கள்'' என்ருர் லெனின்.

தனது தொண்டுக்கு லெனினிடம் பணம் வாங்கிக்கொள்வதில்லை என்று காட்டில் இருக்கும்போதே முடிவு செய்திருந்தான் இவான். இப்பேர்ப்பட்ட மனிதரிடம் பணம் வாங்குவதா? லெனின் பக்கத்தில் நடப்பது, அவரோடு ஒரே நெகிடி அருகே உட்காருவது, துப்பாக்கிக் குழாய்களில் அவருக்குப் பாட்டு இசைத்துக் காட்டுவது, அவருடன் சகஜமாக வேடிக்கை பேசுவது, உரையாடுவது— இது எல்லாம் எவ்வளவு பெரிய பாக்கியம்! எல்லாருக்கும் கிடைக்கக் கூடியதா? அதே சமயம் லெனின் பணம் கொடுத்தால் வாங்கிக்கொள்ள மறுப்பது சங்கடமாயிருக்குமே என்று கிழவன் எண்ணித் தொல்லைப்பட்டான். இப்போது லெனின் இதை ஊகித்து அறிந்து கொண்டவர் போல சகஜமாக எளிய வழியைக் கண்டுபிடித்துவிட்டார். இந்தத் தோட்டாக்கள் பரிசாகக் கொடுக்கப்படுபவை, இவற்றை வேண்டாமென்று சொல்ல முடியாது.

இவானை மாஸ்கோ வரும்படி அழைத்தார் லெனின்.

வேட்டைக்காரக் கிழவன் உள்ளம் இந்த அழைப்பினுல் உருகிவிட்டது.

''நன்றி, தோழர் லெனின். சந்தர்ப்பம் கிடைத்தால் உங்களைக் காணவும் மாஸ்கோவைச் சுற்றிப் பார்க்கவும் கட்டாயம் வருவேன். ஆனுல் நீங்கள் வாருங்கள் மறுபடி, இலையுதிர் காலத்தில், முதல் வெண்பனி பெய்யும் வேளையில். முயல்களையும் நரிகளையும் வேட்டையாடுவோம். என்னிடம் காஸ்த்ரோமா வேட்டைநாய் ஒன்று இருக்கிறது. எந்தப் பிராணியையும் விடாது துரத்தக் கூடியது'' என்ருன்.

''பிழைத்துக் கிடந்தால் வருகிறேன்'' என விடையளித்தார் விளாதீமிர் இல்யீச்.

காரோட்டி எஞ்சினை முடுக்கினுன், கார் குலுங்காமல் தெருவழியே பாய்ந்து சென்றது.

அது கண்ணுக்கு மறையும்வரை இவான் நின்று பார்த்துக்கொண்டிருந்தான்.

பெதோத் ரீப்னிக்கோவும் பெயக்தீஸ்த் ஷத்ரோவும் வந்து சேர்ந்தார்கள்.

''இதென்ன இந்த ஆள் இவ்வளவு கொஞ்ச நேரம் தங்கிவிட்டுப் போய்விட்டான், இவான்? தூரத்து ஏரிகளில் வாத்துக்கள் ஏராளமாயிற்றே. நாளைக்கு அங்கே அழைத்துப் போயிருக்கலாமே'' என்று கேட்டான் ஷத்ரோவ்.

''அவருக்கு நேரமில்லை. ஆணைப் பத்திரங்களில் கையெழுத்துப் போட வேண்டுமே'' என்று எங்கோ நினைவாகச் சொன்னுன் இவான்.

கிழவர்கள் திடுக்கிட்டார்கள்.

''எந்த மாதிரி ஆணைப் பத்திரங்களில்?''

''வழக்கமான ஆணைப் பத்திரங்களில்தான். இவர் யார், லெனின்-உல்யானுேவ் ஆயிற்றே.''

''லெனினு?'' என்று வியப்பு மேலிடக் கூவினுன் பெதோத் ரீப்னிக்கோவ். ''நீ பொய் சொல்லவில்லையே, இவான்?''

''இல்லே, அவரேதாம், அவரேதாம்! யாரையோ போலிருக்கிருரே இந்த வேட்டைக்காரர் என்று காட்டி லேயே நினைத்துக்கொண்டேன். யாரைப் போல என்பது தான் நினைவு வரமாட்டேன் என்றுவிட்டது. இப்போது ஞாபகம் வந்துவிட்டது. படங்களில் பார்த்திருக்கிறேன் இந்த முகத்தை. அவரேதான், சாட்சாத்!'' என்று ஆனந்த மிகுதியில் கத்தினுன் ஷத்ரோவ்.

''அப்படியானுல் நீ எங்களை ஏமாற்றிவிட்டாய் என்று ஆகிறது. இல்லையா இவான்? நானுந்தான் நினைத்தேன். இவர் சாதாரண மனிதர் அல்ல என்று. அவரிடம் எல்லாமே ஏதோ தனிப்பட்டதாக இருந்தது'' என்ருன் பெதோத்.

நிக்கீத்தா பன்கோவ் இரண்டு வாத்துக்களைக் கையில் பிடித்துக்கொண்டு பக்கத்துச் சந்திலிருந்து ஓடிவந்தான்.

''அந்த மாஸ்கோக்காரர் எங்கே, இவான்?''

''இப்போதுதான் போனுர். உனக்காகக் காத்திருந்தார். நீ வரக் காணும். வணக்கம் தெரிவிக்கச் சொன்னுர். 'உங்கள் நிக்கீத்தா மற்றவர்களுடைய வாத்துக்களைப் பறித்துக்கொள்வதில் கைதேர்ந்தவன்' என்று சொன்னுர்'' எனக் கேலி செய்தான் இவான்.

''மோசம்! உன்னேடு படகில் இருந்தவர் யார் என்பது தெரிந்திருந்தால் நான் அப்படி....'' என்று வருத்தத் துடன் சொல்லத் தொடங்கினுன் பன்கோவ்.

பெதோத் ரீப்னிக்கவும் பெயக்தீஸ்த் ஷத்ரோவும் அவன் வாக்கியத்தை முடிக்கு முன்பே கெக்கலிகொட்டி நகைத்தார்கள். நிக்கீத்தாவின் பொருமைபிடித்த கெட்ட சுபாவம் காரணமாக அவர்களும் அவனை வெறுத்தார்கள். அவனுடைய தவிப்பு அவர்களுக்கு மகிழ்ச்சி அளித்தது.

''இது உனக்குப் படிப்பினையாக இருக்கட்டும். இனி மேல் இப்படிப் பேராசைப்படாதே''. என்று கடிந்து கூறி விட்டு, ''ஆமாம், இவர் லெனின்-உல்யானெவ் என்பது உனக்கு எப்படித் தெரிந்தது?'' என்று கேட்டான் இவான்.

''உன் பெண்சாதி என் வீட்டுக்காரியிடம் இரகசிய மாகச் சொன்னுளாம். நான் வேட்டையிலிருந்து திரும்பி யதும் இதைத் தெரிந்துகொண்டேன். எனக்கு நெஞ்சுத் துடிப்பே நின்றுவிட்டதுபோல் இருந்தது.''

காளான் சேகரித்த கிழவர்கள் மறுபடி விழுந்து விழுந்து சிரித்தார்கள். இவான் அல்யாபியேவோ, மனைவி மீது பாய்ந்தான்.

''நான் உன்னிடம் என்ன சொல்லியிருந்தேன்? ஊர் முழுக்கப் பறையறைந்து விட்டாயே செய்தியை!'' என்று சீறினன்.

வி. இ. லெனின் கோர்க்கி என்னும் இடத்தில் இளைப்பாறுகையில். 1922

அடுத்த பக்கங்களில்:
வி. இ. லெனின், ந. கா. க்ருப்ஸ்க் காயா, அ. இ. உல்யாெனாவா-யெலிஸா ரோவா ஆகியோர். குழந்தைகளாவர்: வி. இ. லெனினின் மருமகன் வீக்த ரும் தொழிலாளி ஒருவரின் மகள் வேராவும். கோர்க்கி, 1922





# லெனினைப் பற்றித் தொழிலாளர்களின் குறிப்புக்கள்

சாதாரண ஆண், பெண் தொழிலாளிகள், விவசாயிச் செய்தியாளர்கள், கல்லூரி மாணவர்கள், போர்முனையிலிருந்து திரும்பிய படைவீரர்கள் ஆகியோரின்—லெனினது வாழ்க்கையை நேரில் கண்டவர்களின்—நினைவுக்குறிப்புக்கள் கவனமாக, அக்கறையுடன் தொகுக்கப்பட்டுள்ள நூல்கள் பல சோவியத் யூனியனில் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பகுதியில் இம்மாதிரி நினைவுக்குறிப்புக்கள் சில வெளியிடப்படுகின்றன. லெனினைக் காணவும் அவருடன் பேசவும் பேறு பெற்ற மனிதர்களின் சொற்படி எழுதப்பட்டவை இவை.

# அடுப்பு செய்பவன்

எங்கள் கூட்டாளி ஒருவன் இருந்தான். பெந்தேரின் என்பது அவன் குலப்பெயர். அவனுக்குத் தெரியாத வேலை இல்லை. அடுப்பு செய்வான், அலமாரிகள், பனிச் சறுக்கு வண்டிகள், எது வேண்டுமானுலும் தயாரித்து விடுவான்.

ஒரு தடவை தோப்புக்குப் போய் மாப்பிள் மரம் ஒன்றை ரம்பத்தால் அறுத்தான்.

அறுத்துக்கொண்டு இருக்கும்போதே, ''வணக்கம்!'' என்று யாரோ சொன்னது அவன் காதில் பட்டது.

திரும்பிப்பார்த்தான். யாரோ ஒருவன் நின்றதைக் கண்டான்.

''மன்னிக்க வேண்டும், கனவானே, நான் உங்களைக் கவனிக்கவில்லை'' என்றுன்.

''நான் ஒன்றும் கனவான் அல்ல. நான்தான் தோழன் லெனின்'' என்று அந்த ஆள் பதில் சொன்னுர்.

''மன்னிக்க வேண்டும், தோழர் லெனின்'' என்று பெந்தேரின் மறுபடி கூறினுன்.

''நல்லது, அறுவையை நடத்து!'' என்றுர் லெனின்.

அவர் கொஞ்சம் அப்பால் போய் நின்றுகொண்டார். அடுத்தபடி பெந்தேரின் என்ன செய்யப் போகிறுன் என்று பார்த்தார். மரமோ ரொம்பப் பெரியது. குதிரைகள் இல்லாமல் இதை கிராமத்துக்கு இவன் எப்படி எடுத்துப் போவான்?

தனக்குத் தேவையான கட்டையை ரம்பத்தால் அளந்தான் பெந்தேரின். அதை அறுத்து மலைச் சரிவில் உருட்டிவிட்டான். பின்பு திரும்பி மறு பகுதியை அறுக்கத் தலைப்பட்டான்.

''உனக்கு ஒருவேளை உதவி தேவையோ?'' என்று அவனிடம் கேட்டார் லெனின்.

''வேண்டாம், நீங்கள் ஒன்று! நானே சமாளித்துக் கொள்வேன்'' என்ருன் அவன்.

இன்னொரு சந்தர்ப்பம் வந்தது. தீனிப்புல் அறுவடை மும்முரமாக நடந்துகொண்டிருந்த காலம் அது. அதே பெந்தேரின் இன்னும் கட்டை வெட்டி வருவதற்காகத் தோப்புக்குப் போனுன்.

மாப்பிள் மரமோ பிர்ச் மரமோ ஒன்றை அறுத்துப் போட்டுவிட்டு ஓடையைத் தாண்டி இளைப்பாற உட்கார்ந்தான். அப்போது மாலை ஆகிவிட்டது.

உட்கார்ந்திருந்தவன், மூன்று பேர் தீனிப்புல் வழியாக வரக் கண்டான்.

இந்த பெந்தேரின் பெரிய துடுக்கான பேர்வழி.

''எதற்காகப் புல்லை மிதித்துக்கொண்டு வருகிறீர்கள்? புல் இப்போது என்ன விலை தெரியுமா?'' என்று கத்தி அவர்களைத் திட்டி அப்பால் நகரச் செய்துவிட்டான்....

அவர்கள் பக்கத்தில் வந்தார்கள்.

''அடேயப்பா, பெரியமனிதா, நீதான் எவ்வளவு அருமையாகத் திட்டுகிருய்!'' என்ருர் அவர்களில் ஒருவர்.

உடனே பெந்தேரின் அவரை அடையாளம் கண்டு கொண்டான்.

''மன்னிக்க வேண்டும், தோழர் லெனின்'' என்ருன்.

பனிக்காலம் தொடங்கிற்று. அடுப்பு செய்பவர்கள் மிக ஏராளமாகத் தேவைப்பட்டார்கள்.

விளாதீமிர் இல்யீச் வீட்டில் உட்கார்ந்திருந்தார்.

''வீட்டுக்குள் இப்படிப் புகையாதபடி அடுப்பைச் சரி பண்ணுபவன் ஒருவனும் இந்த ஊரில் இல்லையா?'' என்று ஒரு நாள் அவர் கேட்டார்.

ஊர்க்காரர்களுக்குத் தெரியும், பெந்தேரின் அடுப்பு செய்பவன் என்று.

''அடுப்பு செய்பவன் ஒருவன் இங்கே இருக்கிருன்'' என்று சொல்லி அவனுக்கு ஆள் அனுப்பினுர்கள்.

இரட்டைக் குதிரை வண்டியில் இரண்டு சிப்பாய்கள் அவன் வீட்டுக்கு வந்தார்கள்.

''அடுப்பு செய்பவன் நீதானே?'' என்று கேட்டார்கள.

அவன் அப்போது அடுப்புப் பரண்மேல் படுத்துக் கொண்டிருந்தான். அங்கிருந்து தலையைத் தொங்க விட்டு, ''ஆமாம்'' என்றான்.

''தயாராகு. அரசாங்கப் பண்ணைக்குப் போவோம்!''

இதைக் கேட்டதும் பெந்தேரினுக்குக் குலை பதறிற்று.

''நல்லது காத்யா, விடை கொடு! நாம் இனி ஒரு போதும் ஒருவரையொருவர் பார்க்க மாட்டோம். போன கோடையிலே நான் திட்டியதை லெனின் நினைவு படுத்திக்கொண்டார் போலிருக்கிறது'' என்று மனைவி யிடம் சொன்னான்.

சிப்பாய்களோடு வண்டியில் உட்கார்ந்து அரசாங்கப் பண்ணைக்குப் புறப்பட்டான்.

அவர்கள் அங்கே போய்ச் சேர்ந்ததும் லெனின் அவனிடம் வந்தார்.

''உன்னை எனக்கு நினைவிருக்கிறது, பெரிய மனிதா! நீ தானே தோப்பில் மாப்பிள் மரத்தை அறுத்துத் தள்ளினாய், அப்புறம் தீனிப்புல் வயலில் என்னைத் திட்டினாய்?'' என்று கேட்டார்.

கிலியினால் பெந்தேரினுக்கு நாடி தளர்ந்து போயிற்று.

''மன்னிக்க வேண்டும்!'' என்றான்.

லெனின் அவனைத் தேற்றினார்.

''அது அற்ப விஷயம்! தீனிப்புல் வயலில் நீ என்னைத் திட்டியது சரியே. நான் புல்மேல் நடந்தது தவறு. இப் போது நான் உன்னை அழைத்த காரியம் பற்றிப் பேசு வோம்.... உன்னிடம் ஒரு பெரிய வேண்டுகோள். நான் என்ன நிலைமையில் வசிக்கிறேன், பார்த்தாயா? என் வீட்டுச் சுவர்கள் எல்லாம் புகையால் கரியேறிக் கிடக்கின்றன. புகைபோக்கியை உன்னால் சரி பண்ண முடியுமா?'' என்று கேட்டார்.

''முடியும்'' என்றான் அவன்.

கொஞ்சம் களிமண்ணும் சில செங்கல்களும் கேட்டு வாங்கிக்கொண்டு வேலையில் முனைந்தான்.

அவன் வேலையை முடித்ததும் விளாதீமிர் இல்யீச் அவனுக்கு நன்றி தெரிவித்தார், தகுந்த கூலி கொடுத்தார், பின்பு தன்னோடு தேநீர் சாப்பிடச் சொன்னார்.

பெந்தேரின் அதே வண்டியில் ஏறிக் கொண்டு வீடு சேர்ந்தான்.

''காத்யா, நான் தோழர் லெனின் வீட்டு அடுப்பைச் சரி பண்ணினேன், அப்புறம் அவரோடு தேநீர் சாப்பிட்டேன்'' என்று மனைவியிடம் பெருமை அடித்துக்கொண்டான்.

மாஸ்கோ பிரதேசம்,
பொதோல்ஸ்க் வட்டாரத்தைச் சேர்ந்த
கோர்க்கி என்னும் கிராமத்தில்
அலெக்ஸேய் மிகாய்லவிச் ஷுரீகின்
சொன்னபடி 1937ல் எழுதப்பட்டது

# இருபது ரேஷன்கள்

சோவியத் ஆட்சியின் உதய காலத்தில், உணவுக்கான போராட்டம் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்துக்கான போராட்டமாக விளங்கிய சமயத்தில், லெனினது மிக நெருங்கிய போராட்டத் தோழர்களில் ஒருவரும் நீண்டகால போல்ஷெவிக்கும் ஆன அலெக்ஸாந்தர் த்ஸூர்யூப்பா உணவுப் போர்முனை ஊழியர்களான எங்களுக்கு ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியை விவரித்தார். விளாதீமிர் இல்யீச்சின் தன்மையைச் சித்திரிப்பது அந்த நிகழ்ச்சி.

''எனக்கு நினைவிருக்கிறது, நான் குறிப்பிடும் அந்த நாள் காலை, விளாதீமிர் இல்யீச்சின் அலுவலறைக்கு நான் அழைக்கப்பட்டிருந்தேன்'' என்று தொடங்கினார் த்ஸூர்யூப்பா. ''நான் அறைக்குள் போன போது பின்வரும் காட்சியைக் கண்டேன்: சாய்வு நாற்காலியில் அமர்ந்திருந்த த்ஸெர்ஷீன்ஸ்க்கிய்க்கு லெனின் எதையோ விளக்கிக் கொண்டிருந்தார். அவரோ புருவங்களைச் சுளித்தவாறு கேட்டுக் கொண்டிருந்தார். லெனின் திரும்பிப் பார்த்து, என்னுடன் கைகுலுக்கினார். பின்பு கவலை தோய்ந்த முகத்துடன் சொன்னார்:

''தோழர் த்ஸெர்ஷீன்ஸ்க்கிய் உங்களைப் பற்றிக் குறை கூறுகிறார். ஆமாம் நண்பரே, 'ச்செக்காவால்' கைது செய்யப்பட்டிருக்கும் பூர்ஷ்வாக்களுக்கு நாம் முழுதாக இருபது ரொட்டி ரேஷன்கள் குறைவாகக் கொடுக்கிறோமாமே? இது எப்படி? ஊம்?''

''விளாதீமிர் இல்யீச்! போர்முனைக்காக ஆயுதங்கள் தயார் செய்யும் தொழிலாளர்களுக்குக் கூடப் போதுமான ரொட்டி நம்மிடம் இல்லை என்பதை நீங்களே அறிவீர்கள். ''ச்செக்கா'' கைதிகளான புரட்சிவிரோதிகளுக்கு அதிகப்படியாக இருபது ரேஷன்களுக்கு நாம் எங்கே போவது?'' என்றேன் நான்.

விளாதீமிர் இல்யீச் த்ஸெர்ஷீன்ஸ்க்கிய் பக்கத்தில் போய் நின்றார்.

''பார்த்தீர்களா, உங்கள் பொறுப்பில் இருப்பவர்களுக்கு என்ன நடக்கிறது என்று?''

''எனக்குப் புரிகிறது, விளாதீமிர் இல்யீச். எல்லாம் புரிகிறது. ஆனுல் அதனுல் பயன் என்ன? நாம் அவர்களேக் கைது செய்திருக்கிருேம், நாமே தான் அவர்களுக்கு உணவு அளிப்பதற்கும் பொறுப்பாளிகள்'' என்ருர் த்ஸெர்ஷீன்ஸ்க்கிய்.

''உண்மைதான். இது நியாயமானது!'' என்று உறுதிப் படுத்திஞர் லெனின். பிறகு மறுபடி என்னேப் பார்த்து, ''கேளுங்கள்! உணவுக்கிட்டங்கிகளில் அரித்துப் பொறுக்கிஞல் ஒரு இருபது ரேஷன்கள் எப்படியும் கிடைக்காமலா போய்விடும்?'' என்ருர்.

லெனினுக்கு மறுபடி வருத்தம் உண்டாக்க எனக்கு விருப்பமில்லேதான். ஆஞலும் மாஸ்கோவிலும் பெத்ரோகிராதிலும் நிலேமை எவ்வளவு ஆபத்தாக இருக்கிறது என்பதை அவருக்கு நான் நிஊவுபடுத்த வேண்டியதாயிற்று. லெனின் மறுபடி த்ஸெர்ஷீன்ஸ்க்கிய் பக்கம் திரும்பிஞர். அவரோ தோள்களேக் குலுக்க மட்டுமே செய்தார். அப்போது விளாதீமிர் இல்யீச் ஆழ்ந்து சிந்தித்தார். பின்பு சொன்ஞர்:

''இருபது பாவ ஜன்மங்களுக்கு மட்டுமே உணவு ரேஷன் போதவில்லே என்கிறீர்களாக்கும். அப்படியாஞல் மற்றவர்கள் நிலேமை அவ்வளவு மோசமில்லே என்று ஆகிறது, அல்லவா? ஒன்று சொல்லட்டுமா, தோழர்களே! மிகவும் வெகுளித்தனமானது என்ருலும் ஒரு வழி இருக்கிறது. தோழர் த்ஸெர்ஷீன்ஸ்க்கிய்! அவ்வளவு மூர்க்கம் அல்லாத இருபது பூர்ஷ்வாக்களேப் பொறுக்கி எடுங்கள். சோவியத் ஆட்சிக்கு எதிராக விஷமச் சூழ்ச்சிகள் ஒன்றும் செய்வதில்ல என்று அவர்களேச் சத்தியம் செய்யச் சொல்லி ஜாமீனில் விடுவித்துவிடுங்கள்! ஆட்கள் பட்டினி கிடக்கிருர்கள் ஆகையால் இந்த வேலேயைத் தாமதமின்றிக் கவனியுங்கள்!''

வி. திமொபேயெவ்,
1914லிருந்து சோவியத் யூனியன்
கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்,
நகீன்ஸ்க் நகரம்

# கிரெம்ளின் முடிதிருத்தகத்தில் லெனினைச் சந்தித்த தொழிலாளி

மாஸ்கோ கிரெம்ளினில் ஒரு முடிதிருத்தகம் இருக்கிறது. 1921ல் கூட அது நன்றாகவே இருந்தது.

பெத்ரோப்பாவ்லவ்ஸ்காயா கோட்டையிலிருந்து துப்பாக்கிகள், வாள்கள், பலவிதச் சுடுகருவிகள் முதலிய ஆயுதங்களைக் கிரெம்ளின் ஆயுதசாலையில் கொண்டு சேர்க்கும் வேலை எனக்குத் தரப்பட்டபோதுதான், ஒரே ஒரு தடவை அந்த முடிதிருத்தகத்துக்கு நான் போனேன்.

நான் மாஸ்கோ கிரெம்ளினுக்குப் போனதே அது தான் முதல் தடவை. முகம் மழித்துக் கொள்வதற்காக முடிதிருத்தகத்துக்குள் நுழைந்தேன். என்னையும் சேர்த்து நாங்கள் ஆறு பெயர் முறை வருவதற்காகக் காத்திருந்தோம்.

திடீரென்று முடிதிருத்தகத்துக்கு வந்தார் லெனின், முகம் மழித்துக்கொள்ள. நாங்கள் எல்லாரும் எழுந்திருந்து அவருக்கு முகமன் தெரிவித்தோம்.

''வணக்கம், விளாதீமிர் இல்யீச்!''

''வணக்கம், தோழர்களே!'' என்று அவரும் முகமன் சொன்னார்.

பையிலிருந்து ஏதோ சஞ்சிகையை எடுத்துப் படிக்கத் தொடங்கினார். நாங்கள் உட்கார்ந்து கொண்டு ஒரே பார்வையாக அவரையே பார்த்துக் கொண்டிருந்தோம்.

சற்று நேரத்திற்கெல்லாம் ஒரு நாற்காலி காலி ஆயிற்று. முறைக்காகக் காத்திராமல் அதில் உட்காரும்படி நாங்கள் லெனினிடம் சொன்னோம்.

''நன்றி! வரிசையையும் ஒழுங்கையும் நாம் கடைப் பிடிக்க வேண்டும். சட்டங்களை நாம்தாமே ஏற்படுத்து

கிறோம்!'' என்று கூறி விளாதீமிர் இல்யீச் உட்கார மறுத்து விட்டார்.

''உங்களுக்கு வேலை நெருக்கடி நிறைய. நாங்கள் பொறுத்திருக்க முடியும்'' என்று மன்றாடிக் கேட்டுக்கொண்டோம்.

நாங்களும் இடத்தைவிட்டு அசையவில்லை.

அப்போது அவர் எங்களுக்கு நன்றி தெரிவித்துவிட்டு மழித்துக்கொள்ள உட்கார்ந்தார். எங்கள் மனத்தைப் புண்படுத்த அவர் விரும்பவில்லை.

மழித்துக்கொண்டபின், ''போய்வருகிறேன், தோழர்களே!'' என்று விடைபெற்றுக்கொண்டு போனார்.

அந்த ஒரு தரந்தான் நான் லெனினைச் சந்தித்தேன்.

நேரம் சுருக்கக் கழிந்துவிட்டது. நாவிதன் லெனின் முகத்தைச் சீக்கிரமாக மழித்து முடித்துவிட்டான், ஆகவே நான் அவரை வேண்டிய அளவு பார்க்க முடியவில்லை.

ஆனால் விளாதீமிர் இல்யீச் என் எதிரே உட்கார்ந்து முகம் மழித்துக்கொள்ளும் காட்சி இப்போதும் என் கண் முன்னே நிற்கிறது.

கிரிகோரிய் இவானவிச் இவனோவ்,
லெனின்கிராத், ''கிராஸ்னிய் வீபொர்ஷெத்ஸ்''
தொழிற்சாலை பிட்டர்

# ஸுபோத்னிக்கில் லெனின்

ருஷ்யக் கம்யூனிஸ்ட் (போல்ஷெவிக்) கட்சியின் மத்தியக் கமிட்டி 1920, மே 1ந் தேதி அகில ருஷ்ய ஸுபோத்னிக் ஏற்பாடு செய்தது. அன்று மக்கள் ஒன்று திரண்டு வேலை செய்யாத ஒரு இடங்கூட ருஷ்யாவில் இல்லை. நான் கிரெம்ளினில் பயிற்சி பெற்றுக்கொண்டிருந்த மாணவர்களுடன் வேலை செய்வதற்காகக் கிரெம்ளின் மைதானத்துக்கு வந்தேன். மைதானத்தின் ஒரு பகுதியில் கண்ட குப்பை கூளங்களும் கட்டுமானப் பொருள்களும் குவிந்துகிடந்தன. வழக்கமான இராணுவப் பயிற்சிக்கு இவை இடைஞ்சலாக இருந்தன.

பயிற்சிக் கமிஸார் என்ற முறையில் நான் வலது சாரியில் இருந்தேன். அப்போது கிரெம்ளின் காவலர் தலைவர் தோழர் பெத்தர்ஸோன் என்னை அணுகி, ''ஸுபோத்னிக்கில் பங்காற்றத் தோழர் லெனின் வந்திருக்கிறார்'' என்றார்.

நான் லெனினைப் பார்த்தேன். நைந்த பழைய உடையும் பூட்சுக்களும் அணிந்து, உத்தரவை எதிர்பார்த்து எங்களுக்குச் சில தாவடிகளுக்கு அப்பால் அவர் நின்றுகொண்டிருந்தார்.

எங்களில் பெரியவர் என்ற முறையில் எனக்கு வலப்புறம் வந்து நிற்கும்படி நான் அவரிடம் கூறினேன். அவர் சட்டென்று அப்படியே செய்தார்.

''நான் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள்'' என்றார்.

''வரிசைகள் ஒழுங்காக நிற்கட்டும்! வலது பக்கம் திரும்புக!'' என்று ஸுபோத்னிக் தலைவன் கட்டளையிட்டான்.

குறிப்பிடப்பட்ட வேலையைச் செய்ய நாங்கள் முற்பட்டோம். இரண்டிரண்டு பேராக ஜோடி சேர்ந்து வேலை செய்ய வேண்டியிருந்தது. விளாதீமிர் இல்யீச்சும் நானும் நீண்ட கம்பங்களைத் தூக்கி அப்புறப்படுத்தலானோம்.

கம்பத்தின் மெல்லிய நுனிப்பக்கத்தை விட்டுவிட்டுப் பருத்த அடிப்பக்கத்தை தாம் தூக்கிக்கொள்ள லெனின் ஓயாது முயன்றார். நானோ அவருக்கு கனம் குறைந்த மெல்லிய நுனிப்பக்கத்தைக் கொடுக்க விரும்பினேன். இதனால் எங்களுக்குள் விவாதம் தொடங்கிவிட்டது.

''நீங்கள் என்னைவிட அதிகக் கனத்தைத் தூக்க வேண்டி வருகிறது'' என்றார் லெனின்.

''நான் செய்வதுதான் சரி. ஏனெனில் உங்களுக்கு ஐம்பது வயதாகிறது, எனக்கோ, இருபத்தெட்டுதான்'' என்று நான் சமாதானம் கூறினேன்.

அவர் அற்புதமாக வேலை செய்தார். அவர் நடக்கவில்லை, ஓடினார், மற்றவர்களை முந்தினார், பரபரப்புடன் வேலை செய்தார்—வேகமாக வேலை செய்வது அவசியம் என்று மற்றவர்களுக்குக் காட்டுபவர் போல. நான் களைத்துப் போனேன். மற்றவர்களும் வேலையை இடைநிறுத்திவிட்டு இளைப்பாறுவதற்காக உட்கார்ந்தார்கள். தோழர் லெனின் பயிற்சி மாணவர்களின் அருகே உட்கார்ந்தார்.

வெயில் பளிச்சென்று அடித்தது. சங்கீதம் வேலை செய்பவர்களுக்கு உற்சாகம் ஊட்டியது. உடலுழைப்பைக் காட்டிலும் இன்பம் அளிப்பது எதுவும் இல்லை என்று அப்போது எல்லோருக்கும் தோன்றியது. குழுவில் இருந்த ஒருவன் தோழர் லெனினுக்கு ஒரு சிகரெட்டு கொடுக்க வந்தான்.

''வேண்டாம், நான் புகை பிடிப்பதில்லை. நான் பள்ளி மாணவனாக இருந்தபோது ஒரு தரம் மற்றவர்களோடு சேர்ந்து மட்டுமீறிப் புகை குடித்துவிட்டு மிகவும் சங்கடப்பட்டுப் போனேன். அப்போது முதல் புகை குடித்ததே இல்லை'' என்றார் லெனின்.

ஓய்வெடுத்துக்கொண்ட பிறகு நாங்கள் மிகப் பார மான ஓக் கட்டைகளை வேறு இடத்தில் கொண்டு வைக்க வேண்டியிருந்தது. ஒவ்வொரு கட்டையையும் நீண்ட கோலில் கட்டி ஆறு பெயர் சேர்ந்து தூக்க நேர்ந்தது. வைக்க வேண்டிய இடத்தை அடைவதற்குள் ஓரிரு தடவை இளைப்பாறுவது அவசியம் ஆயிற்று.

விளாதீமிர் இல்யீச் பயிற்சி மாணவர்களுடன் நான்கு மணி நேரம் வேலை செய்தார்.

கடினமான உடலுழைப்பில் விளாதீமிர் இல்யீச்சுடன் நான் கழித்த இந்த நான்கு மணி நேரம் வாழ்நாள் முழுவதும் என் நினைவில் நிலைத்திருக்கும்.

இ. பொரீஸவ்

# பொத்தான்

லெனின் எங்கள் தொழிற்சாலைக்கு வந்தார். ‘‘நத்தோரவா, இந்தக் கோட்டை எடுத்து மாட்டு!’’ என்று என்னைப் பார்த்துக் கத்தினார் ஒருவர்.

கிளப் ஹாலில் வெக்கையாக இருந்தது. லெனின் பேசத் தொடங்கினார். மேல்கோட்டைக் கழற்றி நாற்காலி மேல் போட்டார். நான் அதை எடுத்து மேலுடை மாட்டும் அறைக்குக் கொண்டுபோனேன். பார்க்கிறேனோ, இடது பக்கம் நடுப் பொத்தானைக் காணவில்லை. என் கோட்டிலிருந்து ஒரு பொத்தானைப் பிய்த்து எடுத்து அதை லெனினுடைய மேல்கோட்டில் உறுதியான நூலால் தைத்தேன், நெடுநாள் இருப்பதற்காக. அவர் தொழிற்சாலையிலிருந்து போகும்போது இதைக் கவனிக்கவில்லை. எனது பொத்தான் லெனினுடைய மற்றப் பொத்தான்களிலிருந்து வேறானது. எனக்கோ ஒரே பெருமை. என்னுடைய இந்த இரகசியத்தை நான் ஒருவரிடமும் சொல்லவில்லை.

வெகு காலம் கழிந்தது. ஒரு நாள் லித்தேய்னிய் வீதி வழியாகப் போகும் போது ‘‘பேனிக்ஸ்’’ நிழற்பட ஸ்டூடியோவில் லெனினுடைய பெரிதாக்கப்பட்ட படம் ஒன்றைக் கண்டேன். அவர் அதே மேல்கோட்டு அணிந்திருந்தார். கூர்ந்து கவனித்தேன். பொத்தான் அதே தான்—என்னுடையதேதான்.

அந்தப் பனிக்காலத்தில் லெனின் காலமானார்.

லித்தேய்னிய் வீதிக்குப் போய் அந்தப் நிழற்படத்தை வாங்கிவந்தேன். என் வீட்டில் முகம் பார்க்கும் கண்ணுடிக்குப் பக்கத்தில் அதைச் சட்டம் போட்டு மாட்டியிருக்கிறேன். தினந்தோறும் அருகே போய் அதைப் பார்க்கிறேன், கண்ணீர் பெருக்குகிறேன்.

என் பொத்தான் தைத்தபடியே இருக்கிறது.

அர்காங்கேல்ஸ்க்கில் குடும்பத் தலைவி
நத்தோரவா சொன்னபடி
எழுதப்பட்டது

வி. இ. லெனின் பெத்ரோகிராத்,
1918, ஜனவரி





# லெ. ரதீஷ்சேவ்

லெஓனீத் ரதீஷ்சேவ் லெனின்கிராத்வாசி. அவருடைய ஆரம்பப் படைப்புக்கள் 1926ல் வெளியிடப்பட்டன. வி. இ. லெனினைப் பற்றிய அவரது கதைத் திரட்டு 1939ல் பிரசுரமாயிற்று. ''ஸ்வெஸ்தா'', ''நெவா'' முதலிய பத்திரிகைகளில் லெனினைப் பற்றிய அவருடைய புதிய கதைகள் அண்மை ஆண்டுகளில் வெளியாயின. ''வெற்றுக் காமிரா'' என்னும் கதை 1960ல் அந்த ஆண்டின் சிறந்த சிறுகதைகளின் தொகுப்பில் முதன் முறை பதிப்பிக்கப்பட்டது.

வி. இ. லெனினும் யா. மி. ஸ்வெர்திலோவும் கார்ல் மார்க்ஸ், பிரெடெரிக் எங்கெல்ஸ் தாற்காலிக நினைவுச் சின்னத்தைப் பார்வையிடுகின்றனர்.

# வெற்றுக் காமிரா
# (கதை)

இளவேனிற்கால மாஸ்கோ வீதிகள் வழியே, நீல நீர்க் குட்டங்களிலிருந்து ஜாக்கிரதையாக விலகியவாறு நடந்தான் ஒருவன். அவன்வாய் சீழ்க்கை அடித்துக்கொண்டிருந்தது. ''ஆகா, இந்தச் சூரியன்தான் எவ்வளவு நல்ல வஸ்து! எவ்வளவு வெளிச்சம்! தவிர அவ்வளவும் இலவசம்! ஒரு தொல்லே கிடையாது, மாக்னிஷியத் திடீரொளி வேண்டாம்! இன்று முதல் நான் நிச்சயமாகச் சூரிய பக்தன்! சந்தேகம் இல்லாமல்!'' இவ்வாறு களிபொங்க எண்ணமிட்டான் அவன்.

மாஸ்கோவின் தொடக்க இளவேனில் அளிக்கும் நன்மைகளே எல்லாம் அந்த மனிதன் தன் சொந்த நோக்கிலேயே மதிப்பிட்டான். அவன் நிழற்படக் கலேஞன். வெறும் நிழற்படக் கலேஞன் மட்டுமல்ல, ''நமது நிழற்பட நிருபர்''—அவன் எடுத்த நிழற்படங்களுக்கு அடியில் செய்தித்தாள்கள் அப்படித்தான் குறித்தன.

பகட்டான மேலங்கிகள் அணிந்து, அழகிய தோல் உறைகள் மூடிய காமிராக்களேத் தோள்களில் தொங்கவிட்டுக்கொண்டு வளேயவரும் தற்கால நிழற்பட நிருபர்கள் அவனுடைய உடையையும் அதைவிடச் சிறப்பாக அவனுடைய காமிராவையும் கண்டு ஏளனப் புன்னகை புரிவார்கள். அவனது உடை சாயம் போன ஊதாத் திரைத்துணியில் தைக்கப்பட்டிருந்தது. சிவப்பு ரப்பர் அடி வைத்த பிரமாண்டமான நமுதா ஜோடுகள் அவன் கால்களே மூடியிருந்தன. அவனுடைய காமிராவோ சராசரி அளவுள்ள அக்கார்டியன் வாத்தியம் போன்று இருந்தது.

இப்படி எல்லாம் இருப்பினும் அவன் அவர்களுடன் தன் இடத்தை மாற்றிக்கொள்ள இசைந்திருக்கவே மாட்டான். இதே ''அக்கார்டியன்'' காமிராவால்தான் அவன் முதலாவது சோவியத் மேதின விழாவையும், முதலாவது ஸுபோத்னிக்கையும், முதலாவது ஒய்வு விடுதித் திறப்புவிழாவையும், வெண்படையினரிடமிருந்து கைப்

பற்றப்பட்ட முதலாவது டாங்கியையும் இன்னும் பல நிகழ்ச்சிகளையும் படம் பிடித்திருந்தான்.

கிராமங்களுக்குச் செல்லவிருந்த கட்சி ஊழியர்களின் கூட்டம் இன்று ஸ்வெர்திலோவ்ஸ்க் பல்கலைக்கழகத்தில் நடந்தது. அதைப் படங்கள் எடுக்கும் வேலை நமது நிழற் படக் கலைஞனுக்கு அவனது செய்தித்தாளால் கொடுக்கப் பட்டிருந்தது. ஸ்வெர்திலோவ்ஸ்க் பல்கலைக்கழகத்தின் விசாலமான ஹாலில் கைச்சுருட்டுச் சிகரெட்டுப் புகை பரவியிருந்தது. அண்மையில்தான் வெண்பனி உருகித் தெளிவாகியிருந்த ஜன்னல் கண்ணாடிகள் வழியே அகன்ற பெருக்காகப் பெருகிவந்தது பகல் ஒளி. மேடைமீது சிவப்புத் துணி விரித்த மேஜை போடப்பட்டிருந்தது. சுவரில் தொங்கியது முன்னாள் ருஷ்யப் பேரரசின் பெரிய வரைப்படம். அதில் வண்ணக் கொடிகள் செருகப் பட்டிருந்தன.

கூட்ட நிகழ்ச்சி நிரல் மிகவும் அமைதி நிறைந்ததாக வே காணப்பட்டது. ''கிராமங்களில் செய்யவேண்டிய வேலை பற்றி'' என்று அதில் குறித்திருந்தது. ஆனால் அங்கு கூடியிருந்தவர்கள், குலாக்குகளின்* கலகத்துக்கு உள்ளாகி யிருந்த கிராமங்களுக்கு அன்றே புறப்பட்டுப் போக வேண் டியிருந்தது. ரெயில்வே நிலையங்களில் நெரிந்த பெருங் கூட்டங்களில் இடித்துப் புகுந்து, ரெயில்வேயில் நிலவிய தாறுமாறான நிலைமையைச் சமாளித்துக் கொண்டு அவர்கள் செல்ல வேண்டியிருந்தது....

நமது நிழற்பட நிருபன் இங்கும் அங்கும் பலிந்தாடி னான், ஜன்னல் குறட்டில் ஏறி, முதல் வரிசையினரைப் படம் பிடித்தான் (''சொற்பொழிவைக் கேட்டுக் கொண் டிருப்பவர்கள்'').

---

*குலாக்குகள்—மற்றவர்களின் உழைப்பைச் சுரண்டிக் கொழுத்துள்ள பணக்கார விவசாயிகள்.

காமிராவை இன்னும் கொஞ்சம் உயர்த்தி இன்னொரு முறை 'கிளிக்' செய்தான் (''ஹாலின் பொதுத் தோற்றம்'').

வழக்கமாக ''நமது நிருபர்'' செய்வதைவிட ஓரளவு அதிகமாகவே அவன் ஆலோசித்தான். ஆனால் அதற்குக் காரணம் அவனுடைய இளமைதான். அவனுக்கு இருபது வயது கூட ஆகியிருப்பது சந்தேகமே.

இரண்டு மூன்று படங்கள் எடுத்த பிறகு வரைப்படத்தின் அருகே கையில் சுட்டுகோலுடன் நின்ற சொற்பொழிவாளரைப் படம் பிடிப்பதற்கு ஏற்ற நிலையை அவன் தேடலானான். அதற்குள் முன் வரிசைகளில் எங்கோ தயக்கம் நிறைந்த கைதட்டல் திடீரென்று கிளம்பியது. அப்புறம் கரகோஷம் தடதடவென்று பெரு முழக்கத்துடன் அதிர்ந்தது.

''நமது நிருபன்'' வெளிறிய இமைகளை அசடு வழியக் கொட்டினான். தான் எதையோ கவனிக்காமல் விட்டுவிட்டதாக நினைத்தான். எல்லோரும் இருக்கைவிட்டு எழுந்து நின்றதை மட்டுமே அவன் கண்டான். அவன் நுனிக்கால்களில் எம்பி நிற்க வேண்டியதாயிற்று. அதே சமயம் பாங்கற்ற ''அக்கார்டியனையும்'' அதன் முக்கால்களையும் வேறு சமநிலை குலைந்துவிடாதபடி பிடித்துக்கொள்ள வேண்டியிருந்தது. விட்டாற்றியாயிருந்த ஒரு கையால் கூட்டத்தை விலக்கி வழி செய்துகொண்டு விடாப்பிடியாக முன்னே நகரத் தொடங்கினான்.

பழுப்புக் கோட்டு அணிந்த ஒருவர் மேடையை நோக்கி அவசரமாக நடந்தார். உயரமற்ற, கட்டுக்குட்டான ஆள் அவர்.

''நமது நிருபனின்'' இதயத் துடிப்பு நின்றுவிட்டது. கைகள் காமிராவின் முக்கால்களை இறுக்கின. ''அட இவர் லெனின் அல்லவா!'' என்று அவன் வாய்விட்டுக் கூவாதது தான் குறை.

லெனின் அவனுக்குப் பத்து தாவடி தூரத்தில் உட்கார்ந்து, கண்களைச் சுருக்கியபடி விசாலமான நெற்றியைத்

துடைத்துக்கொண்டே ஆரவாரிக்கும் ஹாலைப் பார்வை யிட்டார்.

''அட என் கடவுளே! இவர் உண்மையான லெனின்! விளாதீமிர் இல்யீச்.... எப்பேர்ப்பட்ட படம் எடுக்க லாம்! எத்தகைய வெளிச்சம்! எவ்வளவு அற்புதமான வாய்ப்பு!'' என்று தடுமாற்றத்துடன் எண்ணமிட்டான் நிழற்படக் கலைஞன்.

ஆனால் இந்த வாய்ப்பு கஷ்டமானதாக, பயன்படுத்த மிகக் கடியதாக இருந்தது.

விளாதீமிர் இல்யீச் தன்னைப் படம் பிடிப்பதை விரும்பவில்லை. படம் எடுக்க வெகு அரிதாகவே அவர் அனுமதித்தார். எத்தனையோ பெயர் இந்தத் தடையில் மோதிப் பின்வாங்க நேர்ந்திருந்தது.

முந்திய இளவேனில் காலத்தில்—''நமது நிழற்பட நிருபனுக்கு'' இது நன்கு தெரியும்—கிரெம்ளினில் நடந்த மேதின ஸுபோத்னிக்கின் போது தம்மைப் படம் பிடிக்க விரும்பியவர்களிடம் லெனின், ''இது என்ன வேடிக்கை? நான் இங்கே வேலை செய்ய வந்திருக்கிறேன், படம் பிடித் துக்கொள்ள அல்ல!'' என்று கடுமையாகக் கூறினார்.

ஏமாற்று வழியைக் கடைப்பிடிக்க வேண்டியதாயிற்று. லெனினுடன் ஜோடி சேர்ந்து வேலை செய்த கிரெம்ளின் பயிற்சிப் பள்ளிக் கமிஸார் சற்று ஓய்வுகொள்ள விரும்பும் பாவனையில் நிமிட நேரம் தாமதித்தார். யாரோ நிழற்படக் கலைஞர் அப்போது விளாதீமிர் இல்யீச்சை அவருக் குத் தெரியாமல் ஜாக்கிரதையாகப் படம் எடுத்துவிட் டார். கிரெம்ளின் ஸுபோத்னிக்கில் வேலை செய்யும் லெனினது நிழற்படம் உலகுக்குக் கிடைத்தது இவ்வாறு தான்.

''இப்போது தோழர் லெனின் பேசுவார்'' என்று அறிவித்தார் கூட்டத் தலைவர்.

* * *

ஒரு மணி நேரத்துக்குப் பின் லெனின் ஹாலிலிருந்து புறப்பட்டார். கூட்டத்துக்குத் தலைமை வகித்த உயரமான இராணுவ அதிகாரியும் தலைமைக் குழு உறுப்பினர்களும் அவருடன் நடந்தார்கள். உரையாடலைத் தொடர்ந்த வாறே விளாதீமிர் இல்யீச் தொப்பியை அணிந்து கொண்டு தோல்பையைக் கையில் எடுத்துக்கொண்டார். சற்று தூரத்தில் நின்று கொண்டிருந்த மனிதன்மீது தற்செயலாக அவரது பார்வை விழுந்தது. இந்த ஆள் தயக்கத்துடனும் கூச்சத்துடனும் கைகளை அசைத்துக் கொண்டிருந்தான். பெரிய கறுப்புப் பெட்டியையும் அதன் முக்கால்களையும் பார்வையில் படாமல் மறைக்க அவன் முயல்வது போலத் தோன்றியது.

லெனின் கண்களை இடுக்கிக்கொண்டு கறுப்புப் பெட்டியை நோட்டமிட்டார். பிறகு வெளிப்படையான அதிருப்தியுடன், ''ஆகா, வாழ்த்துக்கள்! இங்கேயும் படம் பிடிக்க வந்துவிட்டீர்களா? வேண்டாம் இப்போது. தயவு செய்து ஆளை விடுங்கள்!'' என்றார்.

அவ்வளவுதான்! இப்போது அவன் போகலாம்!

ஆனல் ''நமது நிருபன்'' போகவில்லை. ஒருவரும் எதிர் பார்க்காத விதமாக அவன் நடுக்கத்துடன், ஜலதோஷம் பிடித்தவன் போன்ற கட்டைக் குரலில் சொன்னன்:

''தோழர் லெனின்! உங்கள் நிழற்படம் நமது குடியரசு முழுவதற்குமே வேண்டும்.... எனக்குமட்டுமே அல்ல!''

''ஹ்ம்... அப்படியா சேதி?'' என்று கிண்டலாகக் கூறினர் விளாதீமிர் இல்யீச்.

ஆனல் அதற்குள் ''நமது நிருபனுக்கு'' ஆதரவாளர் கள் கிடைத்துவிட்டார்கள். தங்களுடன் சேர்ந்து படம் பிடித்துக்கொள்ளும் படி எல்லோரும் லெனினிடம் மன்றுடலானர்கள்.

''சேர்ந்து என்றல்... ஒருவேளை!'' என நிச்சயமின்றிச் சொன்னர் லெனின்.

''நமது நிருபன்'' ஆலைபாய்ந்தான். முக்கால்களை

நிறுத்திக் காமிராவை அதன்மேல் பொருத்தி விட்டு அவன் தேவையற்ற பல அங்க அசைவுகள் செய்தான்.

''ஒரு விஞடி பொறுங்கள்! இதோ.... ஒரே ஒரு விஞடி!'' என்று முணுமுணுத்தான்.

கூட்டத்தை ஒழுங்காக நிறுத்துவது லேசான காரிய மாயில்லை. ஒவ்வொருவருக்கும் லெனினுடன் படம் எடுத் துக்கொள்ள ஆசையாயிருந்தது. தங்கள் பக்கத்திலிருந் தவர்களை அப்பால் இடித்துத்தள்ள எல்லோரும் இரகசிய மாக முயன்ருர்கள். விளாதீமிர் இல்யீச் பொறுமையுடன் காத்திருந்தார்.

முடிவில் படம் பிடிப்பதற்கு எல்லாம் தயாராகி விட்டது. கறுப்புத் துணியைத் தலைக்கு மேல் போட்டுக் கொண்டு லென்ஸைச் சரிப்படுத்தலாஞன் நிழற்படக் கலை ஞன். ''ஒரே விஞடி! இதோ படத் தகட்டைப் பொருத்தி விடுகிறேன்... மறு கணமே படம் எடுத்துவிடுகிறேன்!'' என்று அவன் வாய் முணுமுணுத்தது.

காமிராவுக்கு எதிரே இருந்தவர்களின் முகங்கள் பெரு மிதத் தோற்றத்துடன் அசைவற்றிருந்தன. விளாதீமிர் இல்யீச் ஒருவரது விழிகளில் மட்டுமே கேலிச் சிரிப்பு ஒளிர்ந்தது.

நிழற்படக் கலைஞனுக்கு ஏதோ தகாதது நேர்ந்து விட்டதைத் திடீரென எல்லோரும் கவனித்தார்கள். பதற்றத்துடன் போர்வையை வெடுக்கென அகற்றிஞன், ஏதோ தகர டப்பா போன்றதைத் தரையில் நழுவ விட்டான், தலையைப் பிடித்துக்கொண்டான். எல்லோரும் வியப்புடனும் கலவரத்துடனும் அவனைப் பார்த்தார்கள். லெனின் விரைவாக அவன் அருகே சென்ருர்.

''உங்களுக்கு என்ன நேர்ந்தது? உடம்பு சரியாயில்லை யா?'' என்று கேட்டார்.

''மோசம்!'' என்று சிதைந்த குரலில் விடையளித் தான் நிழற்படக் கலைஞன். ''படத் தகடுகளைத் தாங்கி களில் செருக நேரமில்லை எனக்கு! தகடு செருகிய தாங்கி என்னிடம் இல்லை!'' என்று அங்கலாய்த்தான்.

கைகள் செயலற்றுத் தொங்க ஏக்கமே வடிவாய்த் தன் ''அக்கார்டியனின்'' அருகே நின்றுன் அவன். தேர்ச்சி யற்ற மழித்தலால் கீறல்கள் விழுந்த அவனது மோவாய் நடுங்கிற்று. தனக்கு மன்னிப்பே கிடையாது என்பதை அவன் உணர்ந்தான். ஆக்கங்கெட்ட, பரிதபிக்கத்தக்க மனிதன் அவன். இவ்வளவு அற்புதமான, மறுபடி கிடைத் தற்கரிய வாய்ப்பை இப்படிக் கெடுத்துக் கொண்டு விட்டானே!

நெடிய இராணுவ அதிகாரி பெரிய செந்நட்சத்திரம் பொறித்த தொப்பியை அணிந்துகொண்டார். ''நல்லது, என்ன செய்வது, தோழர்களே! பத்திரிகைக்காரர்கள் சொல்வதுபோல, ஆசிரியர் குழாத்தின் பொறுப்புக்கு அப்பாற்பட்ட சூழ்நிலைமைகளின் காரணமாக வருந்தத் தக்க அச்சுப்பிழை புகுந்துகொண்டுவிட்டது.... விளாதீமிர் இல்யீச்சை இன்னும் காக்க வைப்பதில் பயனில்லை!'' என்றுர்.

லெனினே, நிழற்படக் கலைஞனையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தார். நடந்தது எதை யும் அவர் கவனிக்கவே இல்லை போலத் தோன்றியது. கோட்டுப் பையிலிருந்து வாரில் கட்டிய கடிகாரத்தை எடுத்து அதைச் சட்டெனு நோக்கி விட்டு, ''படத் தகட்டைச் செருகுவதற்கு எவ்வளவு நேரம் ஆகும் உங்களுக்கு?'' என்று கேட்டார்.

''எனக்கா? ஒரு... பத்து நிமிடங்கள் ஆகும்'' என்று குழறினுன் ''நமது நிருபன்''. அவனது மஞ்சள் பாரித்த வெளிறிய முகம் சிவப்புப் புள்ளிகளால் நிறைந்தது.

''இன்னும் பத்து நிமிடங்களுக்கு நான் தோழர் களுடன் உரையாடுகிறேன்'' என்று நிதானமாகக் கூறினுர் லெனின்.

நிழற்படக் கலைஞன் வெற்றுத் தாங்கிகளையும் படத் தகடுகள் கொண்ட பெட்டியையும் எடுத்துக்கொண்டு, பிரமாண்டமான நமுதா ஜோடுகள் அணிந்த கால்களைத் தத்தக்க பித்தக்கவென்று வைத்தவாறு ஓடினுன்.

கட்டு அறுத்துக்கொண்ட குதிரைபோலப் பாய்ந்து ஓடினுன் அவன். நீண்ட நடைபாதை வழியே ஓடி, ஹால் கதவுகளைத் திறக்க முயன்ருன். அவனுக்குத் தேவையா யிருந்தது இருண்ட அறை, கும்மிருட்டான அறை. ஆனுல் எந்தச் சூரியனுக்கு அவன் அன்றுதான் பக்தன் ஆகியிருந் தானே, அது கண்களைக் கூசச் செய்யும் அற்புத ஒளியை அள்ளி வீசிக்கொண்டிருந்தது.

படிகளில் ஏறி அவன் மாடிக்குச் சென்ருன். வெப்பக் காற்றில் அவனுக்கு மூச்சு திணறியது. ஆனுல் சூரிய கிரணங்கள் அவனை எங்கும் விடாது தொடர்ந்தன.

கடைசி மாடியை அடைந்தபோது அவனுடைய இரு தயம் தொண்டைக்குழிக்கு வந்துவிட்டது போலிருந்தது. அங்கே படிமேடைமீது பெரிய மரப்பெட்டி ஒன்று அவன் கண்களில் பட்டது.

கணப்போது கூடச் சிந்திக்காமல் ''நமது நிருபன்'' மூடியைத் திறந்தான். மண்டலித்த மலைப்பாம்புகள் போலப் பெட்டிக்குள் கிடந்தன ஏதோ பருத்த குழாய் கள். ரப்பர் நாற்றம் மூக்கைத் துளைத்தது.

அவன் பெட்டிக்குள் குதித்தான். அப்போது அதன் மூடி மடாரென்று அவன் தலையில் அடித்தது. ஆனுல் அவன் வலியைப் பொருட்படுத்தவில்லை.

மூன்று மடிப்புக்களாக வளைந்து படத் தகட்டுப்பெட் டியின் முத்திரையை உடைத்து, ஒரு தாங்கியை எடுத் தான். அதற்குள் அவன் முகம் கோணியது, தகட்டுப்பெட் டியைச் சட்டெனக் கோட்டுக்கு உள்ளே செருகிக்கொண் டான். மெல்லிய ஒளிக்கீற்று பெட்டிக்குள்ளும் புகுந்து விட்டது. ஏதோ இடுக்கு கிடைத்துவிட்டது போலும்.

துடைப்பமும் கையுமாக அருகாக நடந்தாள் ஒருத்தி, பெருக்குபவள் போலிருக்கிறது. திடீரென்று அவள் வீரிட்டு, துடைப்பத்தை நழுவவிட்டாள். பெட்டிக்குள் ளிருந்து திடுமென வெளிப்பட்டான் ஒரு மனிதன். அவன் தும்மினுன், உதடுகளை நக்கிக் கொண்டான், பின்பு கம்மிய குரலில் சொன்னுன்:

''அம்மா, இது நான்தான்! ஒரு நிமிஷம் இப்படி வாருங்களேன்! தயவு செய்யுங்கள்... இந்தப் பெட்டி மூடி மேல் உட்கார்ந்துகொள்ளுங்கள்... இதில் இடுக்கு இருக்கிறது, அதன் வழியாக வெளிச்சம் உள்ளே வருகிறது!''

அவள் மலங்க மலங்க விழித்தாள்.

''அம்மா, உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன், உட்காருங்கள்!''

பெட்டி மூடிக்கொண்டது. அவள் அதன்மேல் உட்கார்ந்து கொண்டு, இதன் அர்த்தம் என்ன, பெட்டித் தாழ்ப்பாளைப் போட்டுவிட்டுக் காவல் தலைவரிடம் விஷயத்தைத் தெரிவிக்க வேண்டுமா என்று சிந்தித்தாள்.

பெட்டிக்குள் ஏதோ கடமுடப்பும் செருமலும் கேட்டன. பின்பு நெரிந்த குரல் வந்தது:

''அம்மா, பெட்டியைத் திறவுங்கள். எனக்கு மூச்சு முட்டுகிறது!''

அவள் எழுந்திருந்தாள்.

சுருள் வில்கம்பி வைத்த விளையாட்டுச் சாமான் போலப் பெட்டியிலிருந்து சடக்கென வெளியே குதித்தான் அவன், உடம்பெல்லாம் வியர்வையும் தூசியுமாக, மகிழ் பொங்கும் முகத்துடன்.

''முழு இருட்டு! நன்றி, அம்மா!'' என்று ஆர்ப்பரித்தான்.

மும்மூன்று படிகளாகத் தாவிக்குதித்துக் தடதடவென்று இறங்கி ஓடினான்.

* * *

இன்னும் வெப்பம் ஏறாத வெற்றுப் பழுப்புக் கைகளைக் கதிரவனை நோக்கி உயர்த்தி நின்றன மரங்கள். கடற்பஞ்சு போன்று சாம்பல் நிறமாக, துளைகளிட்டிருந்த வெண் பனி உருவற்ற குவைகளாக மரச்சாலைகளில் கிடந்தது. சுவர்களில் உரிந்து தொங்கிய விளம்பரக் காகிதங்கள் காற்றில் உப்பிப் படபடத்தன. நீர்க் குழாய்கள் வழியே

வெளியே விழுந்தன பசுமை படிந்த பனிக்கட்டித் துண்டுகள்.

இளவேனில்கால மாஸ்கோ வீதிகள் வழியே நடந்தான் இளைஞன். அவனது கன்னங்களில் இளஞ்சிவப்பு ஒளிர்ந்தது. நடு நடுவே அவன் நின்று கைகளைப் பரப்பிய வாறு புன்னகை செய்தான். வழிநடந்த ஒரு சிலர் அவனை ஆச்சரியத்துடன் நோக்கினார்கள்.

வீட்டுக்குள் வெளியிலிருந்ததைவிட அதிகக் குளிரா யிருந்தது. மரப் பலகைகளால் இறுக மூடப்பட்ட ஒரே ஜன்னல் கொண்ட குளிர்ந்த சிறு சமயலறை இளகும் காரை நெடியடித்தது. அந்த நெடி ஒன்றுதான் இங்கே வசந்தத்தின் அறிகுறியாக விளங்கியது.

சுவரிலிருந்த ஸ்விச்சைத் தட்டித் தடவிப் போட்டான் இளைஞன். இரத்தினச் சிவப்பு நிறமாக இருளில் சுடர்ந்தது விளக்கு. இதுதான் இளைஞனின் ஆய்வுக்கூடம்.

பகட்டான மேலங்கிகள் அணிந்து, அழகிய தோலுறை கள் மூடிய காமிராக்களைத் தோள்களில் தொங்கவிட்டுக் கொண்டு வளையவரும் நிழற்பட நிருபர்கள் இம்மாதிரி ஆய்வுக்கூடத்தைக் கண்டு மறுபடி புன்னகை புரியக்கூடும். ஆனால் அவனோ, அவர்களுடன் தன் இடத்தை மாற்றிக் கொள்ள மாட்டவே மாட்டான், உலகிலுள்ள செல்வங் களை எல்லாம் கொடுத்தாலுங்கூட மாட்டான்!

உருத்துலக்கியுள்ள பாத்திரத்தை முக்காலிமேல் வைத்து அதைக் கொஞ்சமாவது சூடுபடுத்துவதற்காக நெடுநேரம் அதன்மேல் மூச்சுவிட்டான். தகட்டைத் திரவத்தில் அமிழ்த்துகையில் அவன் கைகள் நடுங்கின. முக்காலிக்கு எதிரே குத்திட்டு அமர்ந்து பாத்திரத்தை ஜாக்கிரதையாக ஆட்டினான். திரவத்தின் மேற்பரப் பில் இரத்தினச் செவ்வலைகள் மெல்லென அசைந்தன. பால்வெண்மைப் பூச்சுமீது துலக்கமான கறுப்புப் படம் மெதுவாகப் புலப்படலாயிற்று. பெரிய நெற்றியின் பழக் கமான வரையுருவையும் சுருங்கிய கண்களுக்கு மேலே வளைந்த புருவங்களையும் நிழற்படக் கலைஞன் கண்டான்.

தடிமல் பிடித்த கம்மிய கட்டைக் குரலில் திடீரெனப் பாடத் தொடங்கினான்....

பதித்த நிழற்படங்களில் மிகச் சிறந்தவற்றை, கறைகளோ கோடுகளோ இல்லாதவற்றை, மறு நாள் காலை வெகு நேரம் முயன்று தேர்ந்தெடுத்தான். முடிவில் ஆகச் சிறந்த இரண்டு படங்களைப் பொறுக்கினான். மெதுவாக, மிகுந்த ஜாக்கிரதையுடன் அவற்றை உறையில் இட்டான். உறையைச் சிரத்தையுடன் மூடி ஒட்டினான். இவ்வாறு செய்கையில் அவனுக்குப் பெருமை பொங்கியது.

இப்போது முகவரி எழுத வேண்டியதுதான் பாக்கி.

நெருப்புக் குச்சியைப் பல தடவை கிழித்து, உறைந்த மைப்புட்டியை அதன் நெருப்பால் சூடுபடுத்தினான். பேனாவை மையில் தோய்த்தான். உறையையே பார்த்தவாறு திடீரெனச் சிந்தனையில் ஆழ்ந்தான். பின்பு தன் எண்ணத்தால் மகிழ்ந்து முறுவல் செய்து, கொட்டையான அச்செழுத்துக்களில் எழுதினான்:

''லெனினுக்கு!''

அவ்வளவேதான்! முகவரி எழுதியாயிற்று!

இந்த முகவரி எழுதிய கடிதத்தை உலகின் எந்தப் பகுதியில் வேண்டுமானாலும்—கல்கத்தாவிலோ, கிரீன்லாந்திலோ, ஸைப்ரஸ்ஸிலோ, எங்கு வேண்டுமானாலும்—தபாலில் சேர்த்துவிட்டால் போதும், அது முகவரியாளருக்குக் கட்டாயமாகக் கிடைத்துவிடும்!

சிறிது காலம் கழிந்தபின் ''நமது நிழற்பட நிருபருக்குப்'' பின்வரும் நிகழ்ச்சியை யாரோ சொன்னார்கள்:

மக்கள் கமிஸார்கள் சபை அலுவலக அறையில் லெனினுடைய உருவத்தைத் தீட்டும் பேறுபெற்ற பிரபல ஓவியர் ஒருவர் விளாதீமிர் இல்யீச்சிடம் அவரது நிழற்படங்கள் உள்ளனவா என்று ஒரு முறை வினவினர். தமது படங்களை வழக்கமாக வைத்துக்கொள்வதில்லை என்றும், ஆயினும் ஒரு படம் இருக்கிறது என்றும் லெனின் பதிலளித்தார்....

மேஜைச் செருகறையைத் திறந்து, பிசிரின்றிப் பிரிக்கப்பட்ட ஒரு உறையை ஓவியரிடம் நீட்டினர்.

''ஸ்வெர்திலோவ்ஸ்க் பல்கலைக்கழகத்தில் ஒரு இளம் தோழர் எடுத்த படம் இது!'' என்றார்.

இவ்வாறு சொல்லி அவர் முறுவலித்தார். வெற்றுக் காமிரா அவருக்கு நினைவு வந்திருக்கும்.

வி. இ. லெனின் கம்யூனிஸ்ட் இன்டர் நேஷனலின் இரண்டாவது காங்கிரஸினது பிரிவுக் கூட்டத்தில். 1920, ஜூலை-ஆகஸ்டு



# வினகிராத்ஸ்காயா

புரட்சியின் ஆரம்ப ஆண்டுகளில் ஸோபியா வினகிராத்ஸ்காயா ''பிராவ்தா'' செய்தித்தாளின் ஆசிரியர் குழுச் செயலாளராக இருந்த லெனினது சகோதரி ம. இ. உல்யானெவாவின் உதவியாளராக வேலை செய்தார். வி. இ. லெனினையும் அவருடைய உறவினர்களையும் நண்பர்களையும் வினகிராத்ஸ்காயா சந்தித்தார். '' 'பிராவ்தா' பைல்'', ''இரண்டு மாலைகள்'', ''முதல் சீமாட்டி'', ''ஹீல் தோல் கோட்டு'', ''ஷல்யாப்பினின் இசை நிகழ்ச்சி'' முதலிய கதைகளில் இந்தச் சந்திப்புக்களை அவர் விவரித்துள்ளார். அவருடைய கதைகள் பல தொகுப்புக்களில் வெளியாகியிருக்கின்றன.

# ஆண்டுவிழா

புரட்சியின் மூன்ருவது வசந்தமும் லெனினது வாழ்வின் ஐம்பத்து ஒன்ருவது வசந்தமும் ஒன்ருக நிகழ்ந்தன. மாஸ்கோ கம்யூனிஸ்ட் கட்சி ஸ்தாபனத்தின் உறுப்பினர் தொகை அந்தக்காலத்துக்குள் முப்பத்து ஐயாயிரம் ஆகியிருந்தது. இவர்கள் எல்லோரும் கட்சியில் சேர்ந்தது மிக நெருக்கடியான சமயத்தில் — கட்சி மறைமுக வேலை செய்த காலத்திலும், 1905ம் ஆண்டில், பிற்போக்கு தலைவிரித்தாடிய ஆண்டுகளிலும் அக்டோபர் புரட்சிப் புயலுக்கு முன்பும், பாட்டாளிக் குடியரசின் வாழ்வுக்கு மிக அபாயம் நிறைந்த மாதங்களிலும்.

தலைநகர்க் கட்சி ஸ்தாபனத்தில் தலை நரைத்த முதியவர்கள் இருந்தார்கள், சோவியத் ஆட்சி அதிகாரத்தின் பொருட்டுப் போராடுபவர்களின் அணிகளில் சேர்வதற்காகப் பள்ளிக்கூடங்களை விட்டு வெளியேறிய புத்திளைஞர்களும் இருந்தார்கள். கம்யூனிஸச் சித்தாந்தவாதிகளும் அதில் இருந்தார்கள், முன்னர் நசுக்கி ஒடுக்கப்பட்ட, ருஷ்ய மொழியின் அகர வரிசையையும் கம்யூனிஸத்தின் அரிச்சுவடியையும் ஒருங்கே கற்றுக்கொள்ளத் தொடங்கியிருந்த உழைப்பாளிகளும் இருந்தார்கள்.

விளாதீமிர் இல்யீச் லெனின் போல்ஷெவிக்குகளின் மாஸ்கோ கட்சி ஸ்தாபனத்தின் உறுப்பினராக இருந்தார்.

அவருடைய ஐம்பதாவது பிறந்த நாள் மாலையை அவருடன் கழிக்கத் தோழர்கள் மிக விரும்பினுர்கள். நிக்கீத்ஸ்க்கிய் மரச்சாலையில் இருந்த பத்திரிகை மாளிகையில் விழாக் கொண்டாட்டம் ஏற்பாடு செய்ய எண்ணினுர்கள். அந்தக் காலத்தில் எல்லோருக்கும் மிகப் பிடித்ததும் நிறைய அதிக மக்கள் கூடுவதுமான பொதுக் கழகமாக விளங்கியது இந்த மாளிகை. ஆனுல் அதற்குப் போக விழைந்த தோழர்கள் மிகப் பலர். ஹாலோ பெரியதல்ல....

ஆகவே, பல்ஷாயா திமீத்ரோவ்க்கா வீதியிலிருந்த கட்சியின் மாஸ்கோ கமிட்டிக் கட்டிடத்துக்குக் கொண்

டாட்டத்தை மாற்றுவது என்று நிச்சயிக்கப்பட்டது. திடீரென இந்த முயற்சி முழுவதுமே எதிர்பாராத் தடை ஒன்றை எதிர்ப்பட்டது. விழாக்காரரர் கொண்டாட்டத் துக்கு வர மறுத்துவிட்டார்.

''விளாதீமிர் முடியவே முடியாது என்கிறுன். ஆமாம் ஆன்ஞ, முடியவே முடியாதாம்! கட்சிக் காங்கிரஸில் தோழர்கள் புகழ்மாலே பாடித் தீர்த்துவிட்டார்களாம். தெவிட்டி விட்டதாம், சொல்லுகிறுன்'' என்று லெனின் தங்கை மரீயா இல்யீனிச்ஞ தன் தமக்கையிடம் கூறினுர்.

மரீயா இல்யீனிச்ஞவுக்கும் அவருடைய தமக்கைக் கும் டெலிபோன் மூலம் நடந்த இந்த சம்பாஷணேயைக் கேட்டு, ''பிராவ்தா'' செய்தித்தாளின் ஊழியர்களும் ஆசிரியர்களும் வேடிக்கையாகக் கிசுகிசுத்துக்கொண் டார்கள்:

'''விளாதீமிர் முடியவே முடியாது' என்று எப்போது சொல்லிவிட்டாரோ, லெனினுடைய பிறந்த நாள் கொண் டாட்டம் நடக்காது!''

இதற்கிடையே லெனினது பிறந்த நாள் விழாவை யொட்டிய மாலேக் கொண்டாட்ட நிகழ்ச்சிகள் மாஸ் கோவில் அடிக்கடி தாமாகவே நடந்தன. ஆனுல் அவற்றில் லெனின் கலந்துகொள்ளவில்லே.

ஏப்ரல் 17ந் தேதி, லெனினுடைய பிறந்த நாளுக்கு முந்திய சனிக்கிழமையன்று, விந்தாவ்ஸ்க்காயா ரெயில் வேயின் கட்சி உப வட்டாரமும் ரெயில்வே அரசியல் இலாக்காவும் ''லெனின்மீது வழக்கு விசாரணே'' நடத்தின. இது தனிவகை நாடக மன்றத் தருக்கம். இம்மாதிரி ''வழக்கு விசாரணேகள் அந்தக் காலத்தில் மக்களுக்கு மிகவும் பிடித்திருந்தன, பொது ஜனங்களிடையே அரசி யல் வேலேயின் மிக உவப்பான வடிவமாக விளங்கின.

''வழக்கு விசாரணே'' தொடங்கியவர்கள் பின்வரு மாறு வாதித்தார்கள்: ''லெனின் ருஷ்யாவில் முதலாளி களேயும் நிலப்பிரபுக்களேயும் ஆட்சியிலிருந்து அகற்றி

விட்டார், தனியார் சொத்துரிமையை ஒழித்துவிட்டார், உலகப் புரட்சிக்கு அறைகூவி அழைக்கிறுர் என்பதனுல் முதலாளித்துவ உலகம் அவருக்கு எதிராக ஒன்று திரண்டிருக்கிறது. இப்போது லெனின் ஆட்சிக்கு வந்து இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டன. வாருங்கள், அவருடைய செயல்களைப் பற்றி விசாரித்துத் தீர்ப்பு அளிப்போம்.''

இந்தக் கருத்து எல்லோருக்கும் பிடித்திருந்தது. விந்தாவ்ஸ்க்காயா ரெயில்வேயின் எல்லாப் பகுதிகளிலிருந் தும் தொழிலாளர்கள் ''வழக்கு விசாரணைக்கு'' வந்திருந் தார்கள். வாதி தரப்புச் சாட்சிகளாக ஒரு பூர்ஷ்வா, ஒரு குலாக், ஒரு சோம்பேறி, போர்முனையிலிருந்து ஓடிவந் தவன் ஒருவன், ஒரு மென்ஷெவிக் ஆகியோர் வந்தார்கள். பிரதிவாதி தரப்பில் சாட்சியங்கூற வந்தார்கள் ஒரு ஜெர்மானியப் பாட்டாளியும், ஏகாதிபத்திய யுத்தத்தில் காயமடைந்த ஒரு படைவீரனும், ருஷ்யத் தொழிலாளன் ஒருவனும், ஒரு உழைப்பாளிப் பெண்ணும், ஏழைக் குடியானவன் ஒருவனும். வாதி தரப்பு வக்கீல் ருஷ்ய, உலக பூர்ஷ்வாக்களின் சார்பில் லெனின் மீது குற்றம் சாட்டினுர். கட்சிச் செயல்திட்டத்தை நன்கு அறிந்த ஒரு கம்யூனிஸ்ட் பிரதிவாதி தரப்பில் ஆஜரானுர்.

தொழிலாளர்களும் குடியானவர்களும் அடங்கிய ''ஜூரர் குழு'' சாட்சிகளின் வாக்குமூலங்களையும் இரு தரப்பாரின் வாதங்களையும் கேட்ட பின், லெனின் ''குற்றம் அற்றவர்'' என்று தீர்ப்பு அளித்தது.

வழக்கு விவரம் ''பிராவ்தா'' பத்திரிகைக்கு அனுப்பப் பட்டது.

''இதைக் கட்டாயம் பிரசுரிப்போம்!'' என்று கூறி, ''இல்யீச்சுக்குக் காட்டுவதற்காக'' வீட்டுக்கு எடுத்துச் சென்றுர் மரீயா இல்யீனிச்னு.

மாலையில் அவர் அந்த விவரத்தைத் திருப்பிக் கொடுத்து, ''அச்சுக் கோக்க அனுப்புங்கள். விளாதீமிர்

இல்யீச்சுக்குப் படித்துக் காட்டினேன். அவருக்குத் திருப்தி தான்'' என்ருர்.

''தீர்ப்பிலா?'' என்று துணைச் செயலாளி ஸாஷா தந்திரப் புன்னகையுடன் கேட்டாள்.

''இல்லை, அவர்கள் அவருடைய பிறந்தநாளை அவர் இல்லாமலே கொண்டாடினுர்கள், அவரை நீதி மன்றத்துக்கு அழைக்கவில்லை என்பதில்!''

''மாஸ்கோ கமிட்டிக் கொண்டாட்டத்துக்கு விளாதீமிர் இல்யீச் வருவாரா, மாட்டாரா?'' என்று கேட்டார்கள் ''பிராவ்தா'' ஊழியர்கள்.

மரீயா இல்யீனிச்ஞ தலையை அசைத்தார். ''இல்யீச்சின் விழா எதிர்ப்பு மனநிலையைப் பார்க்கும் போது அவர் வருவார் என்று எனக்குத் தோன்றவில்லை'' என்ருர்.

''நாம் ஒரு இயக்கம் நடத்த வேண்டும், 'இல்யீச் வற்புறுத்தல் வாரம்' கொண்டாட வேண்டும் போலிருக்கிறது'' என்று வேடிக்கை செய்தார்கள் ஊழியர்கள்.

''ஊம், நடவுங்கள் பார்க்கலாம்!'' என்று கைகளை ஆட்டி அவர்களைத் தம் அலுவலறையிலிருந்து விரட்டினுர் மரீயா இல்யீனிச்ஞ.

''என்னதான் இருந்தாலும் விளாதீமிர் இல்யீச் தோழர்களைப் புரிந்துகொள்ள வேண்டும். அவரோடு ஒரே நகரில் வசித்துக்கொண்டு இப்பேர்ப்பட்ட நாளில் அவரைச் சந்திக்காமல் இருப்பதென்ருல் நன்ருயிருக்குமா? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் மரீயா இல்யீனிச்ஞ?'' என்று மற்றவர்கள் போன பிறகு கேட்டாள் ஸாஷா.

''வந்துவிட்டாளப்பா என் இதயத்தைப் பிழிந்தெடுக்க!''

''மரீயா இல்யீனிச்ஞ, நான் உண்மையாகவேதான் கேட்கிறேன். இப்போது எல்லோரும் குதூகலமாக இருக்கிருர்கள். போர்முனைகளில் வெற்றிமேல் வெற்றி....''

''எனக்குப் புரிகிறது குழந்தாய்! ஆனுல் இல்யீச்சால் இந்த மாதிரி எதையும் சகிக்கவே முடியாது....'' மரீயா இல்யீனிச்ஞ முகம் சுளித்தார், ஏதோ பிடிக்காத ஒன்றைக்

கிள்ளி எறிவதுபோல விரல் நுனிகளைச் சேர்த்துக் காற்றில் உதறினர். ''வெகுமான விழாக்கள், கொண்டாட்டங்கள் எவையுமே அவருடைய இயல்புக்குப் புறம்பானவை. அவற்றால் அவருக்குச் சலிப்புதான் உண்டாகிறது. தோழர்கள் இதைக் கருத்தில் கொள்ள வேண்டும். மனிதரைக் கட்டாயப்படுத்துவது எதற்காக?'' என்றார்.

''விளாதீமிர் இல்யீச் அடிக்கடி சலிப்பு அடைகிறாரோ?'' என்று கேட்டாள் ஸாஷா.

''பொதுவாக, சலிப்படைவதற்கு அவருக்கு நேரமில்லை'' என்று ஆசிரியக் குழு அலுவலகச் செயலாளர் மரீயா இல்யீனிச்னா தமது துணையாளியின் குழந்தைத்தனமான கேள்விக்குத் தயையுடன் புன்னகை செய்து விடையளித்தார். ''ஆனால் 'எந்த நோக்கமும் அற்றவை', 'எதற்கும் உதவாதவை' 'அதையும் இதையும் பற்றியவை' என்று விளாதீமிர் இல்யீச் குறிப்பிடும் வெட்டிப் பேச்சுக்கள் அவருக்கு ஒரேயடியாகச் சலிப்பூட்டுகின்றன. புதியவற்றில் எல்லாம் அவருக்கு ஆர்வம் உண்டு. தாம் அறியாத விஷயங்களை மற்றவர்கள் சொல்ல வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.''

பின்பு ஜன்னல் புறம் தலையைத் திருப்பி, தமக்கு மட்டுமே புலப்பட்ட அல்லது நிலவவே இல்லாத ஒன்றின்மீது வழக்கம்போலப் பார்வையைப் பதித்தவாறு நினைவுகளில் ஆழ்ந்தார் மரீயா இல்யீனிச்னா. அவரது குரல் கம்மலாக ஒலித்தது.

''எப்போதுமே இப்படித்தான். வீட்டிலே கூட என் தமையன்மாருக்குப் பயனற்ற வெறும் பேச்சு பிடிக்காது'' என்றார்.

ஸாஷாவின் நெஞ்சுத் துடிப்பு நின்றுவிட்டது. மரீயா இல்யீனிச்னா தமது அண்ணன்மாரைப் பற்றி இப்போது இரண்டாவது தடவை நினைவு கூர்ந்தார். ஒவ்வொரு தடவையும் ஸாஷாவுக்கு மூச்சு நின்றது போலிருந்தது. இந்த விஷயத்தைப் பற்றிப் பேச்செடுப்பதே கூடாது என்று

அவளுக்குத் தோன்றியது. அண்ணன்மார். அலெக்ஸாந்தர்... விளாதீமிர்....

மரீயா இல்யீனிச்னுவுக்கு மிகப் பிரியமானது தமையன் மாரைப் பற்றிய விஷயம். அதை அவர் தொடங்கிவிட்டதால் தனக்கு ஏற்பட்ட உள்ளக் கிளர்ச்சியை வெளிக் காட்ட ஸாஷா அஞ்சினுள். அதே சமயம் அறையில் திடீரெனக் குடிகொண்ட நிசப்தம் அவளுக்குப் பொறுக்க முடியாததாகப் பட்டது. இதை எப்படியாவது குலைக்க வேண்டும் என்பதற்காக அவள் தன் மேஜை மேல் இருந்த பொருள்களை இங்குமங்கும் நகர்த்தத் தொடங்கினுள். இதற்கிடையே மரீயா இல்யீனிச்னுவும் தம்மை மறந்த உள நிலையிலிருந்து விடுபட்டுவிட்டார். அம்மாதிரி நிலையில் அவர் குறிப்பாக யாருடனும் இன்றி, தமக்குத் தாமே போலப் பேசுவது வழக்கம். ஸாஷா பக்கம் முகத்தைத் திருப்பியவர், திடீரென ஏதோ நினைவுக்கு வந்தது போல, "'வெட்டி வம்பு அளப்பதை விட நான் வேட்டைக்குப் போகிறேன்!' என்று இல்யீச் அடிக்கடி சொல்வதுண்டு" என்ருர்.

ஸாஷா இதைக் கேட்டுத் திடுக்கிட்டாள்.

"ஆனுல், மரீயா இல்யீனிச்னு, எனக்கு வெறுமே இப்படிப் பேசிக்கொண்டிருப்பதில் பிரியம். இதெல்லாம் மிகவும் சுவையானவை ஆயிற்றே" என்று ஒளிக்காமல் ஒப்புக்கொண்டாள்.

"சந்தேகமில்லாமல் சுவையானவைதாம்!" என்று மரீயா இல்யீனிச்னு தலையை ஆட்டினுர். "கோர்க்கியோடு பேசுவதில் இல்யீச்சுக்குச் சலிப்பே ஏற்படுவதில்லை. அவரோடு இருக்கும்போது இல்யீச் நேரம் வீணுவதாக வருந்த மாட்டார்" என்ருர்.

"லெனினும் கோர்க்கியும்! நினைக்கவே இன்பமாயிருக்கிறது!" என்று குழந்தைபோன்ற எளிமையுடன் கனவு காண்பவள் போலப் பெருமூச்சுடன் சொன்னுள் ஸாஷா. "அடேயப்பா, அவர்கள் எதைப் பற்றிப் பேசுகிருர்கள் என்று ஒரு தரமாவது கேட்க எனக்கு எவ்வளவு ஆசை

யாயிருக்கிறது! இலக்கியத்தை மட்டுமே சர்ச்சை செய்வார்களோ ஒரு வேளை?'' என்று வினவினுள்.

''இலக்கியத்தைப் பற்றியும் பேசுவார்கள். ஆனுல் அதைப் பற்றி மட்டுமே அல்ல'' என்ருர் மரீயா இல்யீனிச்னு.

பணிப்பெண் தேநீர் கொண்டுவந்தாள். மரீயா இல்யீனிச்னு தம்ளரை இரு கைகளாலும் பிடித்து உள்ளங்கைகளுக்குச் சூடேற்றிக் கொண்டார்.

''அவர்களுடைய பேச்சை அப்படியே பதிவு செய்து கொண்டால் எவ்வளவு நன்ருயிருக்கும்! இல்லையா, மரீயா இல்யீனிச்னு? எல்லாவற்றையும் ஒன்று விடாமல்!''

மரீயா இல்யீனிச்னு தோள்களைக் குலுக்கினுர்.

''நல்ல யோசனைதான் செய்தாய் போ! வீட்டிலே நாங்கள் அவர்கள் இருவரையும் தனித்திருக்க விட்டு விடுவோம், ஆசைதீரப் பேசிக்கொள்ளட்டும் என்று. அவர்களைத் தொந்தரவு செய்வானேன்? கோர்க்கிய் எப்போதுமே எத்தனை எத்தனையோ விஷயங்களை இல்யீச்சுக்குச் சொல்லுவார். வெளிநாடுகளில் சென்று வசிக்கும் ருஷ்யர்கள் நம்மைப்பற்றி என்ன எழுதுகிருர்கள், நம் நாட்டில் விஞ்ஞானிகள் என்ன செய்து கொண்டிருக்கிருர்கள் என்பதை எல்லாம். அவர் எங்கள் வீட்டுக்குள் வந்ததும் வராததுமாக, அவர் மேல் கோட்டைக் கழற்றுவதற்கு முன்பே இல்யீச் அவரை எதிர்கொண்டு, 'நல்லது அலெக்ஸேய் மக்ஸீமவிச், ஆட்சியிலிருந்து அகற்றப்பட்ட வர்க்கத்தார் நம்மைப்பற்றி என்ன சொல்லுகிருர்கள்?' என்று குதூகலமாகக் கேட்பார்.''

''கோர்க்கிய் என்ன பதில் சொல்லுவார்?''

''அவர் சிரித்துக்கொண்டே, 'இதோ அறிக்கை செய்து கொள்கிறேன், விளாதீமிர் இல்யீச். இந்த ரப்பர் மேல் ஜோடுகளை மட்டும் கழற்றிவிடுகிறேன்' என்பார்.''

''ஹஹ்-ஹஹ்-ஹா!'' என்று கடகடவென வாய் விட்டுச் சிரித்தாள் ஸாஷா.

''சிரிக்கிற அழகைத்தான் பாரேன், தையல்

இயந்திரம் கடகடப்பது போல!'' என்று நொடித்தார் மரீயா இல்யீனிச்ஞ. பின்பு, ''என் வாயைக் கிண்டி இதயத்தைப் பிழிந்தெடுத்துவிட்டாய் போ'' என்ருர்.

பாதி குடித்த தேநீர்த் தம்ளரை ஜன்னல் குறட்டில் வைத்துவிட்டு, தொழிலாளி நிருபர்களின் குறிப்புக்கள் அடங்கிய பைலைப் பிரித்தார். இந்தக் குறிப்புக்களை இரவு பகல் இடைவிடாமல் கவனமாகப் படிக்க லெனினது சகோதரி தயாராயிருந்தார். ''தொழிலாளர் வாழ்க்கை'' என்ற பத்திக்காக அனுப்பப்பட்டிருந்த நிருபங்களை அவர் படிக்க முற்பட்டார். ஆனல் தாம் எவரைப் பற்றிச் சற்று முன்பு பேசிக்கொண்டிருந்தாரோ அவர்பால் அன்பும் மென்மையும் வழக்கமாக வறண்ட, ஓரளவு எச்சரிக்கை யுள்ள அவரது முகத்திலிருந்து அகலவில்லை.

* * *

ஸாஷா மறு நாள் காலைத் தபாலைப் பிரித்தபோது ருஷ்யக் கம்யூனிஸ்ட் (போல்ஷெவிக்) கட்சியின் மாஸ்கோ கமிட்டியினது பழைய முத்திரை இடப்பட்ட பெரிய வெள்ளை உறை ஒன்றைக் கண்டாள். அழைப்புக் கடிதக் கட்டு அதனுள் திணித்து வைக்கப்பட்டிருந்தது. விளாதீமிர் இல்யீச் லெனினுடைய ஐம்பதாவது பிறந்த நாளை ஒட்டி நடக்கும் மாலைக் கூட்டத்துக்கு வருமாறு கட்சியின் மாஸ்கோ கமிட்டி அழைப்பு விடுத்திருந்தது.

''மரீயா இல்யீனிச்ஞ! அப்படியாஞல் கொண்டாட்டம் நடக்கப் போகிறதா? பின்னே நீங்கள் என்னவோ ஆன்ஞ இல்யீனிச்ஞவிடம் சொன்னீர்களே விளாதீமிர் இல்யீச் முடியவே முடியாது என்கிருர் என்று! இதோ பாருங்கள்! அழைப்புக் கடிதங்கள் வந்திருக்கின்றன!'' என்று குதூகலித்தாள் ஸாஷா.

லெனினுடைய சகோதரி அழைப்புக் கடிதங்களை எடுத்து இப்படியும் அப்படியும் திருப்பிப் பார்த்தார். ஒன்றும் பேசாமல் உதடுகளை மென்ருர். இலையுதிர் காலத்

துக்குப் பின் கழுவப்படாத மங்கிய ஜன்னல் கண்ணுடி வழியே வழக்கம் போல வெளியே நோக்கினுர். புறங்கையில் மோவாயை ஊன்றியவாறு எதையோ சிந்தித்து மனதுக்குள் சீர்தூக்கிப் பார்த்தபடி சற்று நேரம் அசையாமல் உட்கார்ந்திருந்தார்.

''ஒருவேளை இசைந்துவிட்டானு கடைசியில்?'' என்று தமக்குள் விவாதிப்பவர் போல நிச்சயமின்றிச் சொன்னுர். அழைப்புக் கடிதங்களை எண்ணிப் பார்த்துவிட்டு மர அடிப் பலகை வைத்த மேஜைக் காலண்டரில் ஆசிரியர் குழுவினர் சிலருடைய பெயர்களைக் குறித்தார். ஒரு அழைப்புக் கடிதத்தை ஸாஷாவிடம் நீட்டினுர்.

மாலை நான்கு மணிக்கு மரீயா இல்யீனிச்னு பகலுணவு கொள்வதற்காகத் தமது பழைய மோஸ்தர் ''டிலோனே பெல்வில்'' காரில் வழக்கம்போல வீட்டுக்குக் கிளம்பினுர். வழக்கத்துக்கு மாருக அவர் நெடுநேரமாகியும் திரும்பி வரவில்லை. அலுவலகத்தில் தன்னந்தனியாக உட்கார்ந்திருந்த ஸாஷா, மாஸ்கோ கமிட்டிக்குப் போவதா வேண்டாமா, லெனின் அங்கு வருவாரா மாட்டாரா என்று சிந்தித்துக்கொண்டிருந்தாள்.

மரீயா இல்யீனிச்னு மாலையில், கொண்டாட்டக் கூட்டம் தொடங்குவதற்குச் சற்று முன்பு கிரெம்ளினிலிருந்து திரும்பினுர். விளங்காமையும் கேள்விக்குறியும் கொண்ட ஸாஷாவின் விழிகளை அவர் கவனித்துவிட்டார். ஒன்றுமே பேசாமல் வாயிலை நோக்கி அவளைத் தள்ளினுர். சொற்களற்ற இந்த நம்பிக்கையூட்டும் சைகை ''நீ போகலாம்!'' என்று உணர்த்தியது.

தனது மேலதிகாரியின் உயிரோட்டம் வாய்ந்த, பளிச்சிடும் விழிகளின் குறிப்பைப் புரிந்துகொள்ள ஸாஷா பழகியிருந்தாள். எனவே, அவள் ஒரு கேள்வி கூடக் கேட்காமல், மாட்டலிலிருந்து மேல்கோட்டையும் தொப்பியையும் பறட்டென்று உருவிக்கொண்டு, விடைபெறும் பாவனையில் கையை ஆட்டிவிட்டு வெளியே ஓடினுள். அவள் நெஞ்சு பேருவகையால் படபடத்தது. கால் தரையில் பாவாமல்

வராந்தாவில் விரைந்து, தடதடவென்று மாடிப்படி இறங்கினாள். வண்டிகளும் லாரிகளும் நெரிந்த, குறுகிய, நீண்ட அச்சக முகப்பு வெளியை அனேகமாக ஓடிக் கடந்தாள். வாயிலுக்கு வெளியே போனதும் அவளுடைய நடை இன்னும் வேகமாயிற்று. வளைந்து நெளிந்து சென்ற பழைய, குறுகிய த்வேர்ஸ்க்காயா வீதியில் உயரமற்ற வீடுகள் நெருக்கமாகச் செறிந்திருந்தன. துருவேறிய பழைய இரும்பு விளம்பரத் தகடுகள் காற்றில் அடித்துக் கொண்டு தொங்கின. குண்டுங்குழியுமான நடைபாதையில் பெருகியிருந்த நீர்க்குட்டங்களில் துளிகள் சிதற பூட்சுக் குதிகளை அடித்தவாறு விரைந்து நடந்தாள் ஸாஷா.

மூலை வீட்டின் மேல்மாடியில் ஸாஷா பெரிதும் மதித்த கலைஞர் நாடகமன்றத்தின் முதல் ஸ்டூடியோ இருந்தது. அதுவரை சென்றதும் அவள் சட்டென நின்றுவிட்டாள். கீழ்க்கட்டில் மருந்துக்கடைக் காட்சி ஜன்னலில் பளிச்சிடும் பச்சைத் திரவம் நிறைந்த பிரமாண்டமான கண்ணாடி உருண்டை வைத்திருந்தது. அதில் ஸாஷாவின் விசித்திரமாக விகாரமாக்கப்பட்ட பிரதிபிம்பம் தெரிந்தது. அதைக் கண்டதும் தான் உடைமாற்றிக் கொள்ளவில்லை என்பது ஸாஷாவுக்கு நினைவு வந்தது. ஆனால் இப்போது வீட்டுக்குப் போனால் திரும்புவதற்குள் கொண்டாட்ட நிகழ்ச்சிகள் தொடங்கி விடுமே. லெனின் ஏற்கனவே அங்கு இருந்தாரானால் என்ன ஆவது?

மேல்கோட்டை இறுகப் போர்த்துக் கொண்டு நடைபாதையிலிருந்து இறங்கி வீதியின் குறுக்காக சோவியத் சதுக்கத்துக்கு விரைந்தாள்.

அரசியல் சட்ட மும்முகப்புத் தூண் அவள் சென்ற பாதைக்கு நேர் எதிரே இருந்தது. மாஸ்கோ சோவியத்தை நோக்கியிருந்த தூண்முகப்பின்மீது சாய்ந்தவாறு நின்றது ஒரு பெண்ணின் கற்சிலை. பிரிகியத் தொப்பியும் தொன்மைக் காலச் சொக்காயும் அணிந்திருந்தாள். புரட்சியின் வடிவம் அவள். அவளுடைய கரம் மாஸ்கோ

சோவியத் கட்டிட ஜன்னல்களின் பக்கம் நீட்டியிருந்தது. உள்ளிருந்த படிகச் சரவிளக்குகளின் ஒளியால் அப்போது பிரகாசமாயிருந்தன அவை. கல்லில் செதுக்கிய அந்தக் கையின் ஒயிலான வீச்சையும் அதன் கல் விரல்களின் நுட்பமான வளைவையும் அந்த வெளிச்சத்தில் ஸாஷா கண்டாள். தூணினது அடிப்பீடத்தின் மூன்று பக்கங்களில் சோவியத் அரசியல் சட்டப் பகுதிகள் அரைவட்ட வெண் கலப் பட்டயங்களில் பொறிக்கப்பட்டிருந்தன. அந்த ஏப் ரல் மாலையின் கருக்கலில் எழுத்துக்கள் துலக்கமாகத் தெரிய வில்லை. ஆனல் பகல் வெளிச்சத்திலோ, மேலும் மேலும் அதிகமாகத் தலைநகருக்கு வரும் வெளியூர்க்காரர்கள் தூணைச் சூழ்ந்து மொய்த்து, ருஷ்ய பூமியில் மனித உறவுகள் பற்றிய புதிய சட்டங்கள் உருவாகியிருப்பதை அறிவிக்கும் அரசியல் சட்டத்தின் வெண்கல வரிகளை ஆர்வத்துடன் படிப்பார்கள்.

அக்டோபர்ப் புரட்சியின் இரண்டாவது ஆண்டுவிழா வின் போது நிறுவப்பட்டது இந்த மும்முகப்புத் தூண். லெனின் பெரிதும் முக்கியமானதாக மதித்த கல்வெட்டுப் பிரசாரத்துக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்கியது இது. இதன் அடிப்பீட விளிம்பு மேலிருந்து விளாதீமிர் இல்யீச்சே அப்போது உரையாற்றினர்....

இந்த நினைவுச்சின்னம் திறந்து வைக்கப்பட்ட கோடைகால ஞாயிற்றுக்கிழமை ஸாஷாவுக்கு நன்ருக நினைவு இருந்தது. நரைமுடிக் கிழவர் ஸ்மிதோவிச் நீலக் கண்ணுடியணிந்து கைப்பிடிச் சுவரில் விரலால் தட்டிய வாறு பேசினர்:

''நமது அரசியல் சட்டத்தை—தொழிலாளர்கள் அரசின் அடிப்படைச் சட்டத்தை—மக்கள் நினைவில் நிரந்தரமாக நிலைநாட்டுவதற்காக இந்த நினைவுச் சின்னத் தை நாம் நிறுவியுள்ளோம். 'வேலை செய்யாதவனுக்கு உணவும் கிடையாது....' ''

மாஸ்கோ வீடுகளையும் வீதிகளையும் இரு விதங்களில் —அவை புரட்சிக்கு முன் இருந்த விதத்திலும் இப்போது

இருக்கும் விதத்திலும்—நோக்குவது ஸாஷாவின் வழக்கம். நகரின் எல்லா மாறுதல்களும் அவளுக்கு நினைவிருந்தன. அவை அவள் கண்முன்பே நிகழ்ந்தன. மாஸ்கோவின் வீடுகளிலும் வீதிகளிலுமிருந்து புரட்சியினால் விரட்டப்பட்ட பழைமை, ஒரு பில்மில் பதிந்த முதல் படத்தின் எல்லைக்கோடுகள் அதன்மேல் பதிக்கப்பட்ட இரண்டாவது படத்தின் ஊடாகத் தென்படுவது போலப் புதுமையின் ஊடாக இப்போதும் புலப்பட்டது.

மாஸ்கோ சோவியத் கட்டிடத்தையும் அதன் ஒப்பளவின் இசைவு, ஜன்னல்களின் பரஸ்பரப் பொருத்தம், திருத்தமாக அமைந்த சிவப்பு, வெள்ளைச் சுவர்கள் ஆகியவற்றையும் இதே இரட்டை நோக்கில் ஸாஷா பார்த்தாள். ஸ்கோபெலெவ்ஸ்காயா சதுக்கத்தில் அமைந்த முன்னாள் மாஸ்கோ கவர்னர் ஜனரலின் இருப்பிடமாகவும், மாஸ்கோ எழுச்சியை இயக்கி நடத்திய புரட்சிகர இராணுவக் கமிட்டியின் தலைமை அலுவலகமாக 1917 அக்டோபரில் விளங்கிய வரலாற்றுச் சிறப்புள்ள கட்டிடமாகவும் அவளுக்கு அது ஏககாலத்தில் காட்சியளித்தது.

சோவியத் அரசியல் சட்ட மும்முகப்புத் தூண், அதற்கு முன்பு அங்கிருந்த, வாளைப் பயங்கரமாக ஓங்கியவாறு குதிரைச் சவாரி செய்யும் ஜெனரல் ஸ்கோபெலெவின் சிலையை அவளுக்கு எப்போதும் நினைவுபடுத்தியது.

வார்ப்பிரும்பில் வடிக்கப்பட்ட அந்தக் குதிரைவீரன் அக்டோபர்ப் புரட்சிக்குப் பின் அகழ்ந்து வீழ்த்தப்பட்டான். நெடுநாட்கள்வரை அவன் பக்கத்து வீட்டு முகப்பில்

**வி.இ.லெனின் கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலின் மூன்றாவது காங்கிரஸில் தலைமைக்குழு மேடைப் படிகளில் அமர்ந்தவாறு உரையாளர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறார். 1921, ஜூலை**



கேட்பாரற்றுக் கிடந்தான். அப்புறம் அவனை உருக்கு வதற்காக உலைக்களத்துக்கு அனுப்பிவிட்டார்கள்.

இதெல்லாம் ஸாஷாவுக்குக் குறியீடாகத் தோன்றி யது. பழைய அமைப்பு புரட்சி என்னும் உலைக்களத்தில் உருகிப் புது வடிவு பெற்றுவிட்டது என இது குறித்தது.

மும்முகப்புத் தூணைக் கடந்து ஸாஷா செங்குத்தான, ஸ்தலேஷ்னிக்கவ் தெரு வழியே விரைவாக இறங்கினாள். தீயணைக்கும் படையின் பழைய கோபுரத்தின் வளைவு வாயில் அருகாக நடக்கையில் அவளுடைய உயர ஜோடுகளின் குதிகள் பழைய பாவுகற்களில் டக்டக்கென ஒலித்தன.

திருப்பத்துக்கு அப்பால், மாஸ்கோ சோவியத்துக்குப் பக்கவாட்டில் அமைந்திருந்தது ஆடம்பரமான மாளிகை. அலங்கார வேலைப்பாடுள்ள வார்ப்பிரும்பு வேலியின் ஊடாக அதன் முன் முற்றம் தெரிந்தது. பழங்காலத்தில் இந்த மாளிகை புகழ்பெற்ற கலை இலக்கிய வட்டம் ஒன்றின் கூடுமிடமாகத் திகழ்ந்தது. மாலை வேளைகளில் இங்கே பிரமஞான சங்கத்தினர் விவாதங்கள் நிகழ்த் தினார்கள், கவிகளும் கலைஞர்களும் சொல்மழை பொழிந் தார்கள். சீட்டாட்டம் விடியும் வரை நீடித்தது....

லியோன்தியேவ்ஸ்க்கிய் தெருவில் இருந்த அலு வலகக் கட்டிடம் கடந்த இலையுதிர் காலத்தில் ஒரு வெடிகுண்டால் தகர்க்கப்பட்ட பிறகு கட்சியின்— மாஸ்கோ கமிட்டி இந்தக் கட்டிடத்தை இடமாக்கிக் கொண்டது.

அந்த ஏப்ரல் மாலையில் மாஸ்கோ போல்ஷெவிக்குகள் அந்த மாளிகைக்கு விரைந்தார்கள்.

நீண்டு குறுகிய அந்த ஹாலும், அதில் போடப்பட் டிருந்த கடினமான மடக்கு நாற்காலிகளும் ஸாஷாவுக்குப் பழக்கமானவைதாம். ஏனெனில் கட்சிப் பிரசாரகர்களின் கூட்டங்கள் அடிக்கடி இங்கே நடப்பதுண்டு. இப்போதோ ஹால் செம்மச் செம்ம ஆட்களால் நிறைந்திருந்தது. மேலும் மேலும் ஜனங்கள் வந்து கொண்டே இருந்தார்கள்.

ஒரு வரிசையின் முடிவில் சுவரையொட்டிப் போடப் பட்டிருந்த அதிகப்படி நாற்காலியை ஸாஷாவுக்காகக் காலி செய்தான் மாத்வேய் என்ற தையல்காரன். நகர வட்டாரக் கட்சிக் கமிட்டியில் அவளுக்கு அறிமுக மானவன்.

கல்லில் செதுக்கியது போன்ற சதுர முகத்தில் ஆழ்ந்த குழிகளில் அமைந்திருந்த பருத்த பெரிய விழிகளால் அவளைப் பார்த்து, ''உட்கார், உட்கார்! இந்த இடத்தில் அமர்ந்துகொள், வேறு இடம் கிடைக்காது!'' என்று வற்புறுத்தினன்.

ஸாஷா உட்கார்ந்து கொண்டாள். மேடைக்கு அவ் வளவு அருகே இடம் கிடைத்ததால் அவளுக்கு மனக்கலக் கமும் அதே சமயம் களிப்பும் உண்டாயின. மாத்வேயை நோக்கி நன்றியுடன் தலையசைத்தாள். சுவரில் சாய்ந்த வாறு ஹாலில் நடப்பதைக் கவனமாக நோக்கலானுள்.

பார்வையாளர் வரிசைகளிலோ மேடையிலோ லெனினைக் காணவில்லை. கூட்டம் தொடங்கிவிட்டதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டுவிட்டது. கட்சியின் பிரபல ஸ்தர்கள் பேசியாகி விட்டது. ஆனல் அவர்கள் எவரைப் பற்றிப் பேசினர்களோ, எவருக்காக எல்லோரும் இந்த ஹாலில் குழுமியிருந்தார்களோ, அவரைக் காணேம்....

''லெனின் வரமாட்டார் என்பது மரீயா இல்யீனிச்ன வுக்குத் தெரியாதா? அவர் என்னிடம் வேடிக்கை செய் திருக்கிறரா?'' இவ்வாறு வருத்தத்துடன் எண்ணினள் ஸாஷா.

மேடைக்கு வந்தார் கோர்க்கிய். ஒடிசலும் உயர முமான மேனி சற்றே கூனியிருந்தது, ஏதோ அவருக்குக் குளிர்வது போல. முடி ஒட்டக் கத்தரிக்கப்பட்டிருந்தது. வால்ரஸ் மீசை சிலிர்த்தது. கண்கள் நீல மணிகள் போன்று ஒளிர்ந்தன. ஒரு சமயம் நேர் எதிரேயும், மறு சமயம் உயரேயும், பின்பு பக்கவாட்டிலும் பார்வை செலுத்திய வாறு அவர் பேசத் தொடங்கினர். பேசும்போது அவர் நீண்ட விரல்கள் கொண்ட சதைப்பிடிப்பற்ற வலிய

கைகளை முன்னே வீசி வார்த்தைகளுக்கு அழுத்தங் கொடுத்தார்.

''சில மனிதர்களைப் பற்றிப் பேசுவது கடினம். அவர்களுடைய முக்கியத்துவத்தை வெறும் சொற்களால் விவரிப்பது இயலாது. அவர்கள்—நான் அதை எப்படிச் சொல்வது—பிரமாண்டமான நெம்புகோலை அசைத்து வரலாற்றின் போக்கைத் தாங்கள் விரும்பும் திசையில் திருப்பிவிடுகிருர்கள்.''

இவ்வாறு பேச்சைத் துவக்கிய கோர்க்கிய் சற்றே திரும்பிப் பின்னே பார்த்தார்—எவரைப் பற்றிப் பேசுவது கடினமோ, எவர் வரலாற்றின் போக்கை நெம்பு கோலால் திருப்பிவிடுகிருரோ அந்த மனிதர் தமக்குப் பின்னே உட்கார்ந்திருக்கிருரா என்று நோட்டமிடுபவர் போல.

''நான், வழக்கமாகச் சொல்லப்படுவது போல, சொல் ஓவியன். ஆயினும் அவருடைய உருவத்தைச் சித்திரிக்கத் தகுந்த சொற்கள் எனக்குக் கிடைக்கவில்லை என்று ஒப்புக்கொள்கிறேன்'' எனப் பேச்சைத் தொடர்ந்தார் கோர்க்கிய். தேவையான சொற்களைச் சிரமப்பட்டுத் தேடுபவர் போன்று மெதுவாக, தயங்கித் தயங்கிப் பேசினுர் அவர். ''... லெனின்—அது ஏதோ பிரமாண்டமானது, விறல் மிக்கது, உலகவியாபகமானது....''

உழைப்பால் உரம்பெற்ற, நீட்டிய விரல்கள் கொண்ட அவருடைய கைகள் வட்டமாக வீசிச் சுற்றிவந்தன. ''லெனின்'' என்ற சொல்லில் அடங்கிய பிரமாண்டமான, பெருவிறல் கொண்ட ஒன்றை ஒரே சைகையால் வடிவுறுத்தி விளக்கிக் காட்ட அவர் முயல்வது போலிருந்தது.

அவருடைய பேச்சின் மெதுவான போக்கை, அவருடைய கை அசைவுகளை எல்லோரும் கவனித்துக் கொண்டிருந்தார்கள். திடீரென கோர்க்கிய் தலையை நிமிர்த்திஞர். அவர் முகம் ஒளி சுடர்ந்தது—திடீரென ஏதோ அவர் மனத்தில் உதித்துவிட்டது போல. தமது நண்பரான மாபெரும் மனிதருடைய இயல்பிலிருந்த எளிய, சகஜ

மான, சர்வசாதாரணமான தன்மைகளை அவர் விவரமாக வருணித்தார்.

''லண்டனில், கட்சிக் காங்கிரஸ் நடந்த போது, லெனின் என் ஹோட்டல் அறைக்கு வந்தார். படுக்கை விரிப்பு ஈரமாயிருக்கிறதோ என்று தொட்டுப் பார்த்தார்.... லண்டன் மூடுபனி அடர்ந்த நகரம். எனக்குக் காய்ச்சல் வந்துவிடக் கூடாதே என்று கவலைப்பட்டார் அவர். இவர்தான் நான் அறிந்த லெனின்! முற்றிலும் எதிர்பாரா இயல்பு கொண்ட லெனின்!''

லெனினது உருவம் இவ்வாறு வடிவாக்கப்படுவதை ஹால் உன்னிப்பாகக் கவனித்தது. வரிசைகள் துடித்தன, வியந்தன.

கோர்க்கிய் தமது நினைவுகளில் மேலும் ஆழ்ந்தார்:

''விளாதீமிர் லெனின் காப்ரித் தீவில் என்னைக் காண வந்திருந்தபோது விரலில் தூண்டில் கயிற்றை மாட்டிக் கொண்டு மீன் பிடித்தார். சில வேளைகளில் வாய்விட்டுச் சிரித்தார். அப்படிச் சிரிக்க அவர் ஒருவரால்தான் முடியும்! 'அத்தை' ஆட்டத்தின் போதும்—இது ஒரு சீட்டாட்டம்—லெனின் சிரித்தார்... மனம்விட்டு.''

லெனினது சிரிப்புப் பொறிகள் பறந்து வந்துவிட்டன போல ஹால் முழுவதும் உயிர்த்து இயங்கிற்று. கைதட்டல் வெகுநேரம் வரை அடங்கவில்லை. இதற்கிடையே கோர்க்கிய் தமது நினைவுகள் இட்டுச் சென்ற அயல்நாட்டுத் தொலைக் காட்சிகளிலிருந்து அண்மை யதார்த்தத்துக்குத் திரும்பினார். ஒட்டக் கத்தரித்த தலையையும் ஒல்லியான கழுத்தையும் முடிந்தவரை முன்னே நீட்டி, கூடியிருந்த நம்பிக்கை கொண்ட போல்ஷெவிக்குகளிடம் முக்கியமான உண்மையை ஒப்புக்கொள்பவர் போலப் பின்வருமாறு அறிவித்தார்:

''விஷயம் என்னவென்றால் இப்போது அவர் உலக முக்கியத்துவம் வாய்ந்த செயலில் ஈடுபட்டிருக்கிறார். அவர் அருகே உட்கார எனக்கு ஒரே அச்சமாய் இருக்கிறது....''

கோர்க்கிய் மறுபடி திரும்பிப் பின்னே பார்த்தார்—எவர் அருகே உட்கார அச்சமாய் இருக்கிறதோ அவர் அங்கே இருக்கிருரா என்று.

இம்மாதிரி மனிதர் உலகில் வாழ்ந்திருக்கும் சமயத்தில் தான் வாழ்வது எத்தகைய பெரும் பேறு என்ற எண்ணத்தால் ஸாஷாவின் உள்ளத்தில் உவகைகலந்த அச்சம் உண்டாயிற்று.

ஆனுல் லெனின் ஹாலில் இல்லே. அவர் கிரெம்ளினில் தமது அலுவலறையில் உட்கார்ந்திருந்தார். எளிய, இனிய, உளமார்ந்த மனிதரை, அற்புதமாகச் சிரிக்கும் ருஷ்ய மனிதரை, அப்பேர்ப்பட்ட எழுத்தாளருக்குக் கூட அருகில் உட்கார அச்சமாயிருக்கும் அளவுக்குப் பேரறிவு படைத்தவரும் உலகமுக்கியத்துவம் வாய்ந்த செயலில் ஈடுபட்டிருப்பவருமான மனிதரைப் பற்றி கோர்க்கிய் கூறிய சொற்களே அவர் கேட்கவில்லே....

கோர்க்கியை அடுத்துப் பாட்டாளிக் கவிஞர்கள் மேடைக்கு வந்து பிறந்தநாள்காரரைப் பற்றிச் செய்யுள்கள் படித்தார்கள்.

''நமது விழா நாயகர் வரக்காணேமே இன்னும்!'' என்று முறையிட்டான் மாத்வேய்.

உயரமற்ற ஒடிசல் தேகமும் நல்லியல்புள்ள மெல்லிய முகமும் கொண்ட இளேஞன் அலெக்ஸாந்திரோவ்ஸ்க்கிய் பொன்மணிக் குரலில் செய்யுள் படித்தன்:

''மக்கள் கமிஸாரின் எஃகுப் பெயர்
எக்காலும் திக்கெட்டும் ஒலித்திடுமே!''

கழுக்குமொழுக்கான முகமும் உடலும் கொண்ட குட்டைக் கிழவன் மேடைக்கு வந்தான். மடித்த கழுத்துப் பட்டையுள்ள சட்டையைச் சிவப்புப் பட்டுக் கயிற்ருல் இடுப்பில் இறுக்கிக் கட்டியிருந்தான். ரோஜாச் சிவப்பான அவனுடைய குழந்தைமுகம் ஒளிவட்டம் போன்ற வெண்முடியாலும் தாடியாலும் விளிம்பு கட்டப்பட்டிருந்தது. முதுமையையும் பொருட்படுத்தாமல் தெளிவும் ஒளியும்

வீசின நீல விழிகள். அவன் ''பிராவ்தாவின்'' பழைய எழுத்தாளன், விமர்சகன். கட்சி இலக்கியத்தில் ''காலேர்க்கா'' என்னும் பெயரால் பிரசித்தமானவன். ஹாலில் அடக்கமாக அமர்ந்திருந்த ஒரு மாதுக்கு அவன் எதிர்பாராவிதமாக வணக்கம் தெரிவித்தான். அவளைப் பார்ப்பதற்காக எல்லோரும் எழுந்திருந்தார்கள். வணக்கக் குரல்களும் கரகோஷமும் ஒலித்தன. இந்தக் களிப்பு ஆரவாரம் லெனினது வாழ்க்கைத் துணைவியாருக்காக எழுந்தது.

அவர்—நதேஜ்தா கான்ஸ்தாந்தீனவ்ன—வழக்கத்துக்கு மாருக அன்று பாங்காக உடையணிந்திருந்தார். நடு வகிடு எடுத்து மிகக் கவனமாகத் தலைவாரிக்கொண்டிருந்தார், கொண்டாட்டத்திற்காக. கேசம் மிக ஒழுங்காக இருந்தது. ஒரு மயிர் கூடக் கலையவில்லை. விளக்கொளியால் கண்கள் கூசுவதுபோன்று முகத்தை நாணத்துடன் மறைத்துக்கொண்டார் நதேஜ்தா கான்ஸ்தாந்தீனவ்ன.

எதிர்பாராத இந்த வரவேற்பு ஆரவாரத்தால் அவர் குழப்பம் அடைந்தார். களி ததும்பும் புன்னகை, கனிவும் ஓரளவு ஆச்சரியமும் தோற்றுவிக்கும் அவரது உப்பிய பெரிய விழிகளுக்குப் பரவியது.

''எனக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? என்னைக் கௌரவிக்கத் தேவையே இல்லை!'' என்று அவர் முணுமுணுத்தார்.

தம்மை நோக்கி நீட்டப்பட்ட ஏராளமான கைகளிலிருந்து அவர் ஒதுங்கி விலகிக் கொண்டிருந்தார். அப்போது ஒரு தந்தி மேடையிலிருந்து படிக்கப்பட்டது.

''துர்க்கிஸ்தான் போர்முனையின் புரட்சிகர இராணுவ சபை லெனினுக்கு அவரது ஐம்பதாவது ஆண்டு நிறைவை ஒட்டி இருபது வாகன் கோதுமை அனுப்புகிறது. ஹலாத்தவ்.''

இந்தப் பரிசு பற்றி லெனினுடைய உத்தரவும் உடனே படிக்கப்பட்டது:

''இருபது வாகன் தானியமும் பெத்ரோகிராத், மாஸ்கோ, இவானெவோ-வஸ்னிஸேன்ஸ்க் ஆகிய நகரங்

களிலுள்ள குழந்தைகளுக்கும் முற்ற நிலக்கரித் தொழிலாளர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். லெனின்.''

அப்போதும் லெனின் வரக் காணேம்.

இடைவேளே அறிவிக்கப்பட்டது. எல்லோரும் சிற்றுண்டிச்சாலேக்கு அழைக்கப்பட்டார்கள். அங்கே ஆட்டுப் பால் கட்டித் துண்டுகள் இடையிட்ட ரொட்டித் துண்டுகள் பெரிய நீளத் தட்டுகளில் உயரமாக அடுக்கப்பட்டிருந்தன. உக்ரேய்னியப் பன்றிக்கொழுப்பு, ஆஸ்திரகான் ஸ்டர்ஜியன் மீன், ஆகியவற்றின் நறுக்குகள் வைத்த ரொட்டித் துண்டுகளும் குவியல் குவியலாக அடுக்கப்பட்டிருந்தன. பசியால் வாடிய பாட்டாளித் தலேநகருக்கு வெற்றிப் போர்முனேகள் அனுப்பியிருந்த எல்லா நல்ல பண்டங்களும் அங்கே காணப்பட்டன.

கரடுமுரடான முகப்புகள் கொண்ட பருத்த பச்சைக் கண்ணுடித் தம்ளர்களில் உண்மையான தேநீர் ஆவி விட்டுக் கொண்டிருந்தது. பயங்கர நிறங் கொண்ட பழக்கற்கண்டுகளுடன் தேநீர் பருகப்பட்டது.

மாத்வேய் ஸாஷாவிடம் வந்து தன் ரொட்டித் துண்டைக் காட்டி, ''நீ எதற்காக ஒதுங்கி நிற்கிருய், ஒன்றுமே சாப்பிடாமல்? இன்று இத்தகைய திருநாளேக் கருதி மாஸ்கோ கமிட்டி தோழர்களுக்கு விருந்தளிக்கிறது'' என்ருன்.

''மாஸ்கோ கமிட்டி மட்டும் அல்ல! கிரெம்ளினும் இன்று மாஸ்கோவுக்குச் சில பொருள்களே வழங்கியிருக்கிறது'' என்று முகமெல்லாம் புன்னகையாகச் சொன்ஞன் நல்லியல்பும் செம்பழுப்பு முடியும் கொண்ட மாவீரன் ஒருவன்.

''இரு தரப்புக்களும் வாதங்கள் தொடங்கிவிட்டன, ஸ்லாவியர்கள் தமக்குள் பூசலிடுகிருர்கள்!'' என்று நீட்டி முழக்கிஞன் உயரமும் ஒடிசலுமான ஒருவன். சித்திரத் தையல்வேலே செய்த சட்டை அணிந்து குஞ்சம் வைத்த நாடாவை இடுப்பில் கட்டிக் கொண்டிருந்தான். அவனது முடி விசித்திரமாகக் குத்திட்டு நின்றது. ஆண்களிடம்

எதிர்பார்க்க முடியாத மென்மை கொண்ட அவனது மோ வாயில் அழகிய குழிவு விழுந்திருந்தது. இதனுல் அவன் இன்னும் மெலிந்தவனுகத் தோற்றம் அளித்தான். இடுப்பு நாடாக் குஞ்சத்தைக் கையில் பிடித்தவாறு கூட்டத்தை முழங்கைகளால் இடித்து விலக்கி வழி செய்துகொண்டு நடந்தான் அவன். ஸாஷாவின் முன் சற்று நின்று அவளேக் கேலியாகப் பார்த்தான். ''ஸாஷா மற்றவர்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டிருக்கிருளே தவிர, ஒன்றும் தின்பதில்லே. அதனுல்தான் இவ்வளவு ஒல்லியாயிருக்கிருள்'' என்று சொல்லி, தன்னிடமிருந்த ரொட்டித்துண்டில் பாதியை விண்டு அவள் வாய்க்குள் திணித்தான்.

''அற்புதம்! எரிபொருள் டிப்போ தலேவர் மாஸ்கோ வாசிகளுக்கு விறகு மட்டுமல்ல, ரொட்டியும் சப்ளே செய் கிருர் போலிருக்கிறதே!'' என்று தனது பெரிய வெள்ளேக் கைகளே வீசியாட்டி முழங்கினுன் செந்தலே மாவீரன்.

இவர்களுடைய சிரிப்பால் ஈர்க்கப்பட்டு வந்து சேர்ந்து கொண்டான் பூதாகாரமான வலிய உடலும் புகழ் பெற்ற இசையமைப்பாளர் மூஸ்ஸொர்க்ஸ்கிய் போன்ற முகமும் கொண்ட ஒருவன். அவன்தான் சோவியத் மாஸ் கோவில் பிரசித்தமான விளாதீமிர் அலெக்ஸாந்திரவிச் ஒபுஹ். மாஸ்கோ சுகாதார இலாக்காத் தலேவன். லெனினின் அந்தரங்க நண்பன். கூடியிருந்தவர்களேத் தனது உயரத்திலிருந்து ஒரு பார்வை பார்த்துவிட்டு, முகமயிர்க் காட்டை மேலும் கீழும் விலக்கி ஒரு துண்டு ரொட்டியை யும் ஆட்டுப் பால் கட்டியையும் பின்பு ஒரு கற்கண்டுத் துண்டையும் வாய்க்குள் புகுத்தி ஒரு மடக்கு தேநீர்

**வி. இ. லெனின் கம்யூனிஸ்ட் இன்டர் நேஷனலின் மூன்ருவது காங்கிரஸில் தலேமைக் குழு மேடைப் படிகளில் அமர்ந்து சொற்பொழிவாளர்களின் பேச்சுக்களேக் குறித்துக்கொள்கிருர். 1921, ஜூலே**



உறிஞ்சினுன். மட்டரகமான பச்சைக் கண்ணுடித் தேநீர்த் தம்ளரை விலையுயர்ந்த மதுக்கிண்ணம் போன்று உயர்த்தி, பின்வரும் செய்யுள் வரிகளை உரக்கப் படித்தான்:

''லிம்பர்கர் பால் கட்டிக்கும்
தங்க அன்னுசிக்கும் இடையே
எங்கள் ஸ்டிராஸ்பர்க் பணியாரம்....''

எல்லோரும் சிரித்தார்கள். மற்றவர்களைவிட விழுந்து விழுந்து சிரித்தான் ஒபுஹ்.

டெலிபோன்மூலம் லெனினுடன் நடத்தப்படும் பேச்சு வார்த்தைகளின் முடிவை ஒருவன் சிற்றுண்டிச் சாலையில் அறிவித்தான். ''இல்யீச் இன்னும் பிடிவாதம் பிடிக்கிருர்!'' என்ருன் அவன்.

''சொற்பொழிவுகள் முடிந்துவிட்டன என்று நாம் சொல்வதை நம்ப மறுக்கிருர்....''

''நதேஜ்தா கான்ஸ்தாந்தீனவ்ன இல்யீச்சுக்கு போன் பண்ணப் போயிருக்கிருர்....''

''அவரை இல்யீச் நம்புவார்....''

''இடை வேளை நீண்டுகொண்டு போயிற்று. திடீ ரென்று எல்லோரும் ஆரவாரித்தார்கள், கிளர்ச்சி அடைந் தார்கள், இருந்த இடத்திலேயே சுற்றிச் சுழன்ருர்கள். அப்புறம் புயலால் உந்தப்பட்டவர்கள் போல, சிற்றுண் டிச் சாலையையும் தாழ்வாரத்தையும் காலி செய்துவிட் டார்கள். ஹாலில் நாற்காலிகளை இங்கும் அங்கும் நகர்த்து வதும், வரிசைகளைக் கலைப்பதும் நேராக்குவதும் மடக்கு நாற்காலிகளை டமார் டமார் என ஓசைப்படுத்துவதுமாக எல்லோரும் எப்படியோ இடம் பிடித்துக் கொண்டு உட்கார்ந்தார்கள். ஸாஷா மேடையிலிருந்து தொலைவில், ஹாலின் ஆழத்தில் எங்கேயோ இருந்தாள். இடத்திலிருந்து எழுந்து பார்த்தவள், வாயில்களில் நின்ற கூட்டம் சட்டென்று ஸ்தம்பித்து, அசைவற்று விட்டதைக் கண்டாள்.

மேடைமீது நின்ருர் லெனின்.

''வந்துவிட்டார்! வந்துவிட்டார்!'' என்று ஹால் முழுதும் ஆனந்த முழக்கம் செய்தது.

கோடைமழை எப்படி இலைகள் மேல் சடசடவென்று பலமாக, பேரோசையுடன் அடித்துப் பெய்துவிட்டுச் சட்டென ஓய்ந்து விடுமோ அப்படியே பலத்த கரகோஷம் ஹால் அதிரச் சடசடத்துவிட்டு மறு கணமே அடங்கி விட்டது.

அப்போது நிலவிய நிசப்தத்தில் தன் இதயம் மட்டு மல்ல, அருகிலிருந்த எல்லோருடைய இதயங்களும் அடித் துக்கொள்வது தனக்குக் கேட்பதுபோல ஸாஷாவுக்குத் தோன்றியது.

கிளர்ச்சி தணிந்துவிட்டது. லெனினது குரல் கடைசி வரிசையில் உள்ளவர்களுக்கும் கேட்கலாயிற்று. தமக்கு அனுப்பப்பட்ட வாழ்த்துக்களுக்காக அவர் நன்றி கூறி ஞர். கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலிலிருந்தும் லெனின் உறுப்பினராயிருந்த ஸக்கோல்னிக்கி சோவியத்திலிருந்தும் மட்டும் அல்ல, ''தொழிலாளர் வாழ்க்கை'' என்ற பகுதியின் சார்பாகவும் வாழ்த்துக்கள் அன்றைய ''பிராவ்தாவில்'' வெளியாகியுள்ளன என்பதால் ஸாஷா மகிழ்ச்சியால் பூரித்தாள்.

பின்வரும் சொற்கள் ஸாஷாவின் காதில் பட்டன:

''இன்னெரு விஷயத்திற்காகவும் நான் தோழர்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன். அவர்கள் பிறந்தநாள் வாழ்த் துரைகள் போன்ற முற்றிலும் தேவையற்ற விஷயங்களைக் கேட்கும் நிர்ப்பந்தத்திலிருந்து என்னைத் தப்புவித்ததற் காக நன்றி....''

மேற்கொண்டு அவர் கூறிய சொற்கள் உரத்த சிரிப் பிலும் கத்தல்களிலும் கைதட்டலிலும் பின்பு பெருங் கரகோஷ ஆரவாரத்திலும் அமிழ்ந்துவிட்டது. லெனின் கையை வீசியாட்டி இவற்றை இடைமுறிக்க முயன்ருர். அதனுல் ஆரவாரம் தீவிரமாயிற்றே தவிரக் குறையவில்லை.

லெனின் இதனுல் கலங்காமல் தொடர்ந்து பேசிக்கொண்டு போனுர். கூடியிருந்தவர்களும் தங்கள் கரகோஷத்தைத் தொடர்ந்தார்கள். எல்லோரும் எழுந்து நின்று கைகளைத் தட்டினுர்கள். லெனினுக்கும் கூடியிருந்தவர்களுக்கும் இடையே விசித்திரமான போராட்டம் தொடங்கிற்று. ஒருவரும் பின்வாங்கவில்லை.

''பிறந்தநாளை உரிய வகையில் கொண்டாட வழி வகுப்போம்'' என்ற லெனினின் சொற்கள் கூச்சலின் தடையைக் கடந்து ஸாஷாவின் காதுகளை எட்டின.

''இந்த மாதிரிக் கொண்டாட்டத்தின் கேலிச் சித்திரம் ஒன்று இதோ இருக்கிறது!'' என்று கூறினுர் லெனின். மேடை விளிம்புக்கு வந்து, சபையோரைத் தந்திரமான வெற்றிப் புன்னகையுடன் நோக்கியவாறு சித்திரத்தைத் தலைக்கு உயரே தூக்கிப் பிடித்தார்.

அவரே வென்றுர்! ஹால் அமைதி அடைந்தது. அவர் பேச்சில் குறுக்கிடவில்லை. கொண்டாட்டத்துக்கு உரியவரே காட்டும் விழாபற்றிய கேலிச் சித்திரத்தை நன்ருகப் பார்க்கும் பொருட்டு ஜனங்கள் எழுந்து நின்றுர்கள். சிரிப்பு மேடையிலிருந்து பின் வரிசைகளுக்குப் பரவியது.

தான் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து படத்தை ஸாஷாவால் பார்க்க முடியவில்லை. தன் கோட்டைக் கழற்றி விட்டு, அரைக்கோட்டின் கைத்துவாரத்தில் வழக்கம் போலக் கட்டைவிரலை மாட்டிக்கொண்டு, கேலிச்சித்திரத்தை ஆட்டியபடி மேடையில் முன்னும் பின்னும் நடைபோட்ட லெனினை மட்டுமே அவள் கண்டாள்.

''எனக்கு இது இன்றுதான் கிடைத்தது, மிகவும் நட்பு ஆர்ந்த கடிதத்துடன்'' என்று கூச்சலுக்கும் நகைப்பிற்கும் நடுவே பேச்சைத் தொடர்ந்தார் லெனின். ''தோழர்கள் கருணை கூர்ந்து பிறந்தநாள் பேச்சுக்களிலிருந்து எனக்கு விடுதலை அளித்தபடியால் இந்தக் கேலிச்சித்திரத்தை எல்லோருக்கும் பார்க்கக் கொடுக்கிறேன். வருங்காலத்தில் இம்மாதிரிக் கொண்டாட்டங்களிலிருந்து இது நமக்கு விமோசனம் அளிக்கும் என்று நம்புகிறேன்!''

இவ்வாறு கூறிப் படத்தை மறுபடி உயர்த்திப் பிடித்தார். லுனச்சார்ஸ்க்கிய் அதை எட்ட முயன்றபோது அவருடைய வில்பிடிப்பு மூக்குக் கண்ணுடி நழுவிவிட்டது. லெனினே, பிறந்த நாள் கொண்டாட்டம் பற்றிய தமது நடத்தைப் போக்கைத் தொடர்ந்தார். கட்சித் தோழர்களைக் கடிந்துகொண்டார், பிறந்தநாள் விழா கொண்டாடும் ஆசையைக் கேலிசெய்தார், புகழுரைகளையும் வாழ்த்துரைகளையும் எள்ளி நகையாடினர்.

ஜனங்கள் ஆரவாரித்தார்கள், கைதட்டினர்கள், சிரித்தார்கள். லெனினுடைய ஐம்பத்தோராவது வசந்தத்தின் மாலையில், குடியரசு அதிக வலிமை பெற்று, நீண்ட புதுப் பயணத்துக்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கையில் அவரை இதே மாதிரி, வரிசை வரிசையாக எம்பி நின்று பார்ப்பதே பேரின்பம் என்று தோன்றியது....

லெனின் பைக்குள் கையைவிட்டு ஒரு காகிதத்தை எடுத்தார். பின்பு எவ்விதப் பீடிகையும் இன்றித் திடீரென்று வேறெரு விஷயத்துக்குத் தாவிவிட்டார். அந்தக் கணத்தில் கட்சிக்கு முன்னிருந்த அரசியல் கடமைகள் பற்றி அவர் பேசத் தொடங்கினர். ''முக்கியமானது என்னவென்ருல் மண்டைக்கனம் கூடாது.'' இந்தச் சொற்கள் எல்லோருடைய உணர்விலும் சட்டென்று பதிந்துவிட்டன. வெற்றியால் கொதிப்பேறிய தலைகளில் லெனின் எச்சரிக்கைக் குளிர்நீரைக் கொட்டுவது போலிருந்தது.

''நமது கட்சி மிகவும் ஆபத்தான நிலைமையில்—மண்டைக்கனம் கொண்டுவிட்ட மனிதனுக்கு ஏற்படுவதே போன்ற நிலைமையில்—மாட்டிக்கொள்ளக் கூடும். இந்த நிலைமை மிகவும் மடத்தனமானது, வெட்கக்கேடானது, கேலிக்கிடமானதும் கூட'' என்று மீண்டும் வலியுறுத்தினர் அவர்.

இப்போது வரிசைகள் எம்பி நிற்கவில்லை. அடங்கி அமர்ந்துவிட்டன.

‘‘பிறந்தநாள் விழாப் பேச்சு என்றல் இதுதான்!’’

‘‘இல்யீச் அவர்களுக்கு நல்ல சூடு கொடுத்தார்!’’

‘‘ஆமாம், எல்லாருக்கும் சரியான சூடு!’’

* * *

அப்புறம் வந்தார்கள் இசைஞர்கள். தங்கள் வாத்தியங்களை முன்னே தூக்கிப் பிடித்தவாறு அவர்கள் மேடையின் மையத்துக்கு நடந்தார்கள். சதைப்பிடிப்பற்ற உயரமான பியோனே இசைஞரின் பின்னே அவசரமாக நடந்தான் பருத்துக் குட்டையான வயலின் இசைஞன். அவனுடைய வில் லெனின்மேல் தற்செயலாகப் பட்டுவிட்டது. அவன் இனிய புன்னகையுடன் மன்னிப்பு கேட்டான். இசைஞர்களுக்கு இடத்தை விட்டுவிட்டு லெனின் ஒரு பக்கம் ஒதுங்கினர்.

கச்சேரி தொடங்கிற்று. லெனின் இசைஞர்களின் இடப்புறம், பிரபல பியானே இசைஞர் தப்ரவைன் என்பவர் அருகில் உட்கார்ந்தார். நாற்காலி முதுகில் சாய்ந்தவாறு, கைகளை மார்பின்மேல் சேர்த்து வைத்துக் கொண்டு அவர் சைக்கோவ்ஸ்க்கியின் ‘‘த்ரியோ’’ என்னும் இசைப் படைப்பை மூன்று இசைஞர்கள் வயலின்களில் வாசிக்கக் கேட்டார். சபையினர் பக்கம் பாதி திரும்பி அமர்ந்திருந்தார் அவர். ஒரளவு ஏங்கிய ஆனல் உத்வேக மூட்டும் முகங்கொண்ட தப்ரவைனின் பக்கம் சற்று சாய்ந்திருந்தார். இடையிடையே லெனின் அவரிடம் ஏதோ கிசுகிசுப்பார், பியானே இசைஞர் பதிலளிப்பார். லெனினுடைய விழிகள், அவர் எதையோ மனதுக்குள் சீர்தூக்கிப் பார்ப்பதுபோல, சிந்தனைக்குறி காட்டின. அப்புறம் அவை அசைவற்றுவிட்டன. வில்களுக்கும் ஸ்வரங்களுக்கும் நடந்த அந்த உரையாடலில் எதையோ ஆழ்ந்து அறிய லெனின் முயல்வது . போலிருந்தது. கைகளைப் பிரித்து, களைப்பால் போன்று ஒரு கையை நாற்காலியின் பின்னே தொய்யவிட்டார். அவருடைய முகம் படிப்படியாக நிம்மதியடைந்தது. முகபாவங்களில் கடுமை போய்

விட்டது. ஸாஷா அவரது தோற்றத்தின் மென்மையைக் கண்ணுற்ருள். அவருடைய முகத்தையும் விழிகளேயும் லேசும் கனிவுமான ஒன்று மிகமிக மெல்ல வருடுவது மாதிரி ஸாஷாவுக்குத் தோன்றியது. அது சைக்கோவ்ஸ்க்கியின் இசையா அல்லது லெனினது சொந்த நினேவா?

லெனின் தலேயை மேலும் மேலும் பின்னே சாய்த்து. அனேகமாகப் பாதி படுத்துவிட்டார். புள்ளிகளிட்ட அவருடைய டை கலேந்திருந்தது. அதன் ஒரு நுனி கோட்டுத் தலேப்பின் மேல் கிடந்தது. அவருடைய உதடுகள் சற்றே அசைந்தன....

இவ்வாறு ஹாலின் பக்கம் பாதி திரும்பியபடி தனக்குப் பிடித்த பியானே இசைஞர் அருகே அமர்ந்து லெனின் முதலில் த்ரியோவையும் பின்பு ஸ்டிராடிவாரியஸின் குவார்ட்டெட்டையும் செவிமடுத்தார். இவ்வாறுதான் அவர் இசையை எப்போதுமே கேட்பது வழக்கம் போலும். குழந்தைப் பருவத்தில், வீட்டில் தாயார் வாசித்த போதும், கஸானிலும் பீட்டர்ஸ்பர்கிலும் ஆப்பெராக்களுக்குப் போகையிலும், வெளிநாடுகளில் கட்சித் தோழர்கள் இனேஸ்ஸா அர்மாந்தும் போத்தீயெவாவும் பியானே இசைத்தபோதும், காப்ரியில் இத்தாலிய மீனவர்கள் பாடிய போதும் பாரிஸில் நாடோடிப் பாட்டுக்களேக் கேட்கையிலும் அவர் இவ்வாறே செய்வார் போலும்.

வயலின் இசை முடிந்ததும் தப்ரவைன் பியானே வாசித்தார். அவருடைய வெண் கைகள் இரு பட்சிகள் போல மேலே எழும்பின. அவற்றின் அடியே ஒலித்தது பீத்ஹோவனின் இசை. இந்த இசையால் லெனின் எப்படிப் பரவசமடைந்துவிட்டார் என்பதைக் குறுகிய நீண்ட ஹாலில் இருந்தவர்கள் கண்டார்கள்.

இசை நிகழ்ச்சி முடிவடைந்தது. கார்வரை வந்து வழியனுப்பிய தோழர்களிடம் விடை பெறுகையில் லெனின் மறுபடி சொன்னுர்:

''அற்புதமான, அற்புதமான சங்கீதம். சொற்பொழிவுகள் எப்படி இருந்தனவோ, நான் கேட்கவில்லே. ஆனுல்

சங்கீதம் அற்புதம். இந்த ஸானெட்டை எத்தனை தடவை தான் கேட்டாலும் ஒவ்வொரு தரமும் உள்ளத்தைப் பரவசப்படுத்திவிடுகிறது.... நன்றி, தோழர்களே! அருமையான இசைஞர்கள். தப்ரவைனே எல்லோரிலும் சிறந்தவர்! அருமையானவைன். அற்புதமான வைன். அபூர்வமான, மிக அபூர்வமான வைன்!''

புரட்சியின் மூன்றுவது வசந்தத்தில் லெனினது ஐம்பது ஆண்டு நிறைவுவிழா மாஸ்கோவில் இவ்வாறு தான் கொண்டாடப்பட்டது.

அவருடைய கார் அலங்கார இரும்புக் கதவுகள் கொண்ட வெளிவாயிலைக் கடந்து வலப்புறம், கிரெம்ளினை நோக்கித் திரும்பியது.

வசந்தகால மாலை. ஏப்ரல் அனேகமாக முடிந்துவிட்டது. மே மாதம் பில்ஸுத்ஸ்க்கிய் தாக்கு நடத்தினன். இளம் குடியரசு இன்னொரு முதலாளித்துவத் தாக்குதலை முறியடித்தது.

வாசக நேயர்களுக்கு

இந்த மொழிபெயர்ப்பைப் பற்றி
யும் இந்தப் புத்தகத்தின் தயாரிப்
பைப் பற்றியும் வாசக நேயர்களின்
கருத்தை புரோகிரஸ் பதிப்பகம் மகிழ்
வுடன் வரவேற்கும்.

கடிதங்களைத் தயை செய்து
"Progress Publishers,
21, Zubovsky Boulevard, Moscow, USSR"
என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

281